# நினைக்கத் தெரிந்த மனமே!...

சுபஸ்ரீ கிருஷ்ணவேணி



இரு முனை கத்தி போன்றதே! யார் கையில் அந்தக் கத்தி சிக்குகிறதோ, அதைப் பொறுத்தே அதன் நன்மை தீமைகளும். இந்த மாதிரி ஒரு சூழ்நிலையில் தான் நமது நாயகனும் நாயகியும் பயணம் செய்கிறார்கள். எல்லோருக்கும் ராகவனைப் போன்ற நண்பன் அமைய மாட்டான். கடவுள் கொடுத்த அறிவைப் பயன் படுத்தி, எல்லாவற்றையும் சீர்தூக்கி ஆராய்ந்து பார்த்து உண்மை அறிவது நமது ஒவ்வொருவரின் கடமை.

எங்களுக்கு மேன்மேலும் ஊக்கமும் உற்சாகமும் அளித்து வரும் திரு. அருணோதயம் அருணன் அய்யாவிற்கு எங்களின் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக!

உங்களது கருத்துகளையும், விமர்சனங்களையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

உங்கள் ஆதரவை எதிர்நோக்கும்,

**சுபஸ்ரீ - கிருஷ்ணவேணி**



# நினைக்கத் தெரிந்த மனமே!...



## 1

**"மாலை சாத்தினாள்; கோதை மாலை மாற்றினாள்;**

**மாலடைந்து மதிலரங்கன் மாலை அவர்தான் மார்பிலே**

**பூமாலை சாத்தினாள்; கோதை மாலை மாற்றினாள்!"**

சமீபத்தில் உறவினரின் இல்லத்தில் நடந்த திருமணப் பதிவைப் பார்த்துக் கொண்டிருந்தார் வளர்மதி.

தன் கணவரிடம், "அங்கே மாப்பிள்ளைப் பையனுக்குப் பின்னாடி நின்னுட்டு இருக்கான் பாருங்க... அந்த ப்ளூ

கலர் ஷர்ட், அந்தப் பையனுக்குத்தான் நம்ம மைதி லியைக் கேட்கிறாங்க. நீங்க என்ன சொல்றீங்க?'' என்று தொலைக்காட்சிப் பெட்டியில் ஓடிக் கொண்டிருந்த காட்சியை நிறுத்தி வைத்து விளக்கிக் கொண்டிருந்தார் வளர்மதி.

''நான் சொல்றது இருக்கட்டும்மா. நம்ம பொண்ணு என்ன சொல்றா வளர்?'' தன் மனைவி குறிப்பிட்ட பையனை கூர்ந்து கவனித்தபடியே தன் முகக் கண்ணாடியைச் சரி செய்தார் அன்பழகன்.

முகத்தில் இருந்த மலர்ச்சி சற்றே குறைந்து, ''மைதிலி நம்ம யாரைப் பார்த்து வைச்சாலும் சரின்னு சொல்றாள்'' என்று சொன்ன பொழுது முன்பைவிட வளர்மதியின் குரலில் உற்சாகம் வடிந்தது போன்று இருந்தது.

''அதுக்காக நானும், நீயும் பார்த்தால் மட்டுமே சரி வராதே? அது உனக்கும் தெரியும் இல்லையா?'' அவரது குரலில் இருந்த தெளிவு பார்வையிலும் வெளிப்பட்டது.

தன் மனைவி ஆமோதிக்கும் விதமாகத் தலையசைப் புடன் மௌனமாய் இருக்கவும், ''பையன் என்னச் செய்ய றான்? நம்ம மைதிலிக்குப் பொருத்தமா இருக்கிற மாதிரி தான் இந்த வீடியோவில் தெரியுது'' என்று பேச்சை வளர்த்தார்.

''பையன் லண்டனில் சீனியர் இஞ்சினியரா வேலைப் பார்க்கிறான். இப்போ ரெண்டு வாரம் லீவுக்காக இங்கே சென்னை வந்திருக்கான். நல்ல குடும்பம். ரெண்டு அக்காக்கும் கல்யாணம் ஆயிடுச்சு. நமக்கும், மைதிலிக் கும் பிடிச்சு இருந்தால் மேலே இது விஷயமா பேசலாம்'' தேவையான விவரங்களை சுருக்கமாகச் சொன்னார் வளர்மதி.



ஆனால் அந்த விவரங்களே அன்பழகனின் முகத்தில் அதிருப்தியை வரவழைக்கப் போதுமானதாக இருந்தது.

அதற்கான விளக்கம் வளர்மதி கேட்பதற்குள், அங்கே அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்த மகள் மைதிலி யின் பக்கம் அவர்களின் கவனம் திரும்பியது.

அன்பழகன் - வளர்மதி தம்பதிகளுக்கு ஆசைக்கும், ஆஸ்திக்கும் ஒரே வாரிசு நம் கதையின் நாயகி மைதிலி தான். அவளது திருமணத்திற்கான வரன் தேடுவதில் சமீபமாக இருவருமே முனைப்பாக இருக்கின்றனர்.

மைதிலி மேலாண்மை படிப்பை இந்தியாவின் தலை சிறந்த நிறுவனம் ஒன்றில் முடித்துவிட்டு, இப்பொழுது தனியார் வங்கியில் துணை மேலாளராக பொறுப் பேற்றிருக்கிறாள்.

இத்தனை இளம் வயதில் துணைப் பொது மேலாளர் பதவிக்கான நேரிடை பரிந்துரைப் பட்டியலில் அவள் பெயர் இடம் பெறும் அளவிற்கான புத்திசாலித்தனமும், திறமையும் இருக்கப் பெற்றவள்.

இப்பொழுது அவளது பெற்றோர்களுக்குக் கவலையே அவளது திறமைக்கும், அழகுக்கும் பொருத்தமான வரனைத் தேர்ந்தெடுப்பது பற்றித்தான்.

அதற்கான மெனக்கெடல் அவசியமானதும் கூட அல்லவா?

தன்னுடைய அலுவலகப் பையை ஹால் டீபாயின் மேல் வைத்தபடியே, ''அம்மா! டிபன் எடுத்து வைங்கம்மா. என்ன காலையிலேயே அப்பா கூட டி.வி. முன்னாடி உட்கார்ந்துட்டீங்க?'' என்று வினவியபடி அவள்

அணிந்திருந்த பச்சை நிற காட்டன் புடவையிலிருந்த மடிப்பு கலையாமல் இருக்கிறதா என்று சரி பார்த்தாள்.

கண் முன் அழகு தேவதையாக ஜொலித்த மகளை ரசித்த வளர்மதி, ''எல்லாம் ரெடியா இருக்கு மைதிலி. இப்போ நாலு நாளைக்கு முன்னாடி கல்யாணி அத்தை பொண்ணு கல்யாணத்துக்குப் போயிருந்தேன் இல்லையா? அந்த டிவிடி தான் பார்த்துட்டு இருக்கோம். மாப்பிள்ளையோட சொந்தத்தில் ஏதோ வரன் இருக்குன்னு சொன்னாங்க'' என்று பதில் தந்தார்.

உணர்ச்சிகள் எதுவும் முகத்தில் காட்டாமல் தன் தட்டில் பொங்கலை எடுத்து வைப்பதில் கவனமாய் இருந்தாள் மைதிலி.

மகளின் முகத்தைக் கவனித்த வளர்மதிக்கு குழப்பமே எஞ்சியது.

தன் மகளின் முகத்தில் உணர்ச்சிகள் கவனத்துடன் துடைக்கப்பட்டிருந்ததா இல்லை தன்னுடையது தேவையற்ற பயமா என்பதை எண்ணி குழப்பம்.

தாய் அறியாத சூல் இல்லை என்றாலும் இந்த விஷயத்தில் மட்டும் மைதிலியின் மனதிலிருக்கும் எண்ணங்களை வளர்மதியால் படிக்க முடியவில்லை.

இத்தனைக்கும் தாயும், மகளும் தோழிகள் போன்று பேசிப் பழகிக் கொள்வார்கள்.

அதை அப்படியே விட்டு விடாமல் மகளிடம், ''என்ன மைதிலி நான் பேசிட்டே இருக்கேன்... நீ பதில் பேசாமல் இருக்கியே?'' என்று அவளது தட்டில் சட்னியை வைத்தபடி வினவினார்.



அன்னையின் கேள்விக்கான காரணம் மைதிலிக்குப் புரியாமல் இல்லை.

'உன் குழப்பம் தேவையற்றது!' என்பதுபோல புன்னகையை உதிர்த்தவள்,

''நான் தெளிவா தான் இருக்கேன். நீங்க பதில் சொல்ற அளவுக்கு எந்தக் கேள்வியும் கேட்கலையேம்மா?''

''ஹ்ம்ம்... சாமர்த்தியமா பேசறதா நினைப்பாடா உனக்கு? நீ எந்த ரெஸ்பான்ஸும் இல்லாமல் இருக்கிறதைத்தான் சொன்னேன்.''

தாய் - மகளிடையே நடக்கும் உரையாடலுக்கும், தனக்கும் சம்பந்தமே இல்லை என்பது போல அன்றைய தினசரியில் மூழ்கியிருந்தார் அன்பழகன்.

தன் மனைவி வீட்டில் இருக்கும் பொறுப்புகளைப் பார்த்துக் கொள்வாள் என்பதில் நம்பிக்கை!

அந்த நம்பிக்கையில் தான் வீட்டு உபயோகப் பொருட்களை ஷோ ரூமுக்கு சப்ளை செய்யும் மொத்த வியாபாரத்தை வெற்றிகரமாக நடத்தி வருகிறார்.

''நீங்க பிறந்த ஊர் சிவகாசின்னு இப்படி அடிக்கடி படபடன்னு வெடிச்சு நிரூபிக்கக் கூடாது'' கண் சிமிட்டிய மகளைப் பார்த்து சிரித்த வளர்மதி, அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தபடியே வாய் மேல் விரல் வைத்து இனிமேல் பேசாமல் இருப்பது போல் ஜாடை செய்தார்.

''நீங்க இப்படி பேசாமல் இருந்தால் இப்போ நான் கேட்கிற கேள்விக்கு எப்படிம்மா பதில் சொல்லுவீங்க?'' என்று தன் தாயின் கரத்தை எடுத்து விட்டவள்,

''திருவாளர் மாப்பிள்ளைப் பையன் என்ன செய்கிறார்?'' என்று தன் முதல் கேள்வியைத் தொடுத்தாள்.

மகளுக்கு ஈடு கொடுப்பது போல வளர்மதியும், ''திரு வாளர் மாப்பிள்ளைக்குப் பையன் எல்லாம் இல்லைம்மா. அவர் இன்னமும் பொடன்ஷியல் பேச்சிலர் தான்'' என்று பதில் தந்துவிட்டு சிரித்தார்.

''அம்மா! இந்த மாதிரி ஜோக் சொல்றதுக்கு, நீங்க இன்னமும் ரெண்டு கரண்டி பொங்கலை என் தட்டில் போட்டு தண்டனை கொடுத்திருக்கலாம்'' என்று பதில் தர தாய் - மகளிடம் சிரிப்பலை ஓயாமல் இருந்தது.

வீட்டுப் பெண்களின் சிரிப்பு சத்தத்தில் தலையை உயர்த்திப் பார்த்த அன்பழகன் மகளது கடைசி வச னத்தை மட்டும் கேட்டுவிட்டு,

''நீ தானா பாப்பா இந்த மாதிரி ஐடியா எல்லாம் அம் மாக்கு தர்றது? ஆனால் உங்கள் அம்மா எனக்கு இல்ல இந்த தண்டனை எல்லாத்தையும் நடைமுறைப் படுத் தறா?'' என்று அவரும் ஜோதியில் ஐக்கியமானார்.

''என்னப்பா நீங்க இதை இப்போ சொல்றீங்க? தண் டனை எனக்கு என்பதால் 'ரெண்டு கரண்டி பொங்கல்' என்று சொன்னேன்; உங்களுக்கு என்று கேட்டிருந்தால் 'ரெண்டு கரண்டி' என்பதோட நிறுத்தியிருந்து இருப் பேனே?'' என்று தந்தையையும் மைதிலி கிண்டல் செய் தாள்.

''அம்மாடி! உன் அப்பா என்னடா உனக்குக் குறை வைச்சேன்? இப்படி காலை வாரி விடறே?'' என்று கேட்டு விட்டு காலை உணவை உண்ணத் தொடங்கி னார்.

பொறுப்பான குடும்பத் தலைவியாக வளர்மதி, ''கேலி யெல்லாம் போதுமே! அந்தப் பையன் லண்டனில்



இருக்கான்டா. பேர்...'' என்று விவரங்களை அடுக்கத் தொடங்க அவரைக் குறுக்கிட்டாள் மைதிலி.

''என்னம்மா? நான் தான் வெளிநாட்டு வரன் எல் லாம் வேண்டாம்னு எத்தனையோ முறை க்ளியரா சொல்லிட்டேனே?'' என்று கேள்வியெழுப்பியபோது,

'என் முகத்தில் வெளிப்பட்ட அதிருப்திக்கும் இது தான் காரணம் வளர்மதி!' என்பது போல மனைவியின் புறம் திரும்பினார் அன்பழகன்.

வளர்மதியும் யோசனையுடன், ''என்னடா செய்யறது? வர்ற வரன் எல்லாம் வெளிநாடு என்று வருது; இங்கே இருக்கிறவங்கன்னு பார்த்தால் உன்னுடைய படிப் பையும், இந்த வயசில் இவ்வளவு பெரிய பதவியா என்பதையும் கண்டு பயப்படறாங்க; இல்லை... அவங்க பண பலத்தையும், பின்புலத்தையும் கண்டு நம்ம பயப்பட வேண்டியதா இருக்கு. என்ன செய்யறது?'' என்று அங்கலாய்த்தார்.

தாயின் புலம்பலுக்கு மகளிடத்தில் மௌனம் நிலவ, ''வெளிநாடு என்ற ஒரே காரணத்துக்காக வேண்டாம்னு சொல்லுவியாடா? உன் பேச்சில் கூட எல்லாரும் வெளி நாட்டில் தானே இருக்காங்க?'' என்று புரிய வைக்கும் முயற்சியில் இறங்கினார் வளர்மதி.

'நான் தெளிவாகத் தான் இருக்கிறேன்மா; நீங்கள்தான் புரிந்து கொள்ள வேண்டும்' என்பது போன்ற தொனி யில்,

''காலேஜில் வெளிநாட்டு கம்பெனி இன்டர்வ்யூ கூட நான் அட்டென்ட் செய்ய மாட்டேன்னு இருந் தவள்மா நான். உங்களுக்குத் தெரியாதா? எனக்கு நம்ம

ஊரில் இருக்கிறதுக்குத் தான் பிடிச்சிருக்கு; அப்போ தான் உங்ககூட பக்கத்திலேயே இருக்க முடியும்.''

மகளின் பதிலை எண்ணி அந்த அன்பான தாயால் பூரிப்படையாமல் இருக்க முடியவில்லை.

மைதிலி படிப்பை முடித்ததும் வளாக நேர்முகத் தேர்வின் போது எத்தனையோ பன்னாட்டு கம்பெனிகள் அணிவகுத்தாலும் அவர்களது வேலையோ, நிறு வனமோ வேண்டாம் என்று முடிவாகச் சொன்னவள் அவள்.

தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக நிர்வாகம் படித்தவர்களில் முதலிடம் பெற்ற மைதிலி என்ற பெண் இந்திய நிறுவனங்களுக்கு அளித்த முன்னுரிமைப் பற்றி ஒரு ஆங்கில செய்தித்தாள் அதன் தொகுப்பில் ஒன்றாக இந்தச் செய்தியையும் இணைத்து வெளியிட் டிருந்தது.

அப்பொழுது பெருமையாக உணர்ந்த தாயாருக்கு இப்பொழுது திருமணப் பேச்சில் மட்டும் மகளை அவளது விருப்பத்திற்கு எதிராக வற்புறுத்த முடியுமா?

அதற்குத்தான் அவரது உள்ளம் விரும்புமா?

பெருமூச்சை மட்டும் வெளியேற்றிய வளர்மதி, ''சரிடா! உன்னிஷ்டம்'' என்று முடித்தவர்,

''நீ இன்றைக்கு உன் பிரண்ட் ஷோபா கூட போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் போக வேண்டியதா இருக்குன்னு சொன்னே இல்ல? அதுக்குத்தான் அப்பாவும் காத்திட்டு இருக்காங்க'' எனத் தகவல் தந்தார்.

''ஆமாம்மா. ஷோபா அவளுக்குத் துணையா வரச் சொல்லி இருக்கான். நான் ஆபீசில் பெர்மிஷன் தான் சொல்லியிருக்கேன். நீங்க ஏன்பா காத்துட்டு இருக்கீங்க? நாங்க பாத்துக்கிறோம்'' என்று பரபரப்புடன் தன்னுடைய கைப்பையில் இருப்பவைகளை ஒரு முறை சரி பார்த்துக் கொண்டாள்.



அன்பழகன், ''ஏன்டா இன்றைக்கு லீவு போட்டிருக் கலாமே? பரவாயில்லை; நீங்க ரெண்டு பேர் மட்டும் தனியா போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் போக வேண் டாம். நானும் வர்றேன்'' என்று மகளுடன் கிளம்பி னார்.

தந்தை தங்களுடன் துணைக்கு வருவது பற்றி மறுப்பு எதுவும் தெரிவிக்காமல், தன் தாயிடம் விடைபெற்றுக் கொண்டு, நேரே ஷோபாவின் வீட்டிற்குத் தந்தையைப் பயணப்படச் சொன்னவள், போகும் வழியில் காவல் நிலையம் செல்லும் காரணத்தைப் பற்றி தந்தையிடம் விளக்கினாள்.

''ஷோபாவுடைய லேப்டாப் போன வாரம் மிஸ் ஆயிடுச்சுப்பா. கவனமாதான் எப்போதும் இருப்பாள்; இருந்தாலும் அவளுடைய நேரம்... என்ன செய்யறது?''

''ம்...''

''யாரோ திறமையா ட்ராவல் பண்ணும் போது அவ ளோட பையோட எடுத்துட்டாங்க. போலீஸ் கம்ப் ளைன்ட் அப்போவே கொடுத்துட்டாள். நேற்று நைட் அவளுக்கு ஸ்டேஷனில் இருந்து போன் வந்ததாம் - ''ஏதோ பஜாரில் ரெய்டு நடத்தினதில் திருட்டு லேப்டாப் எல்லாம் கிடைச்சிருக்கு'' என்று.''

''ஓ...''

''அவளுடைய லேப்டாப் குறியீட்டு எண் இருந்தால் இன்றைக்கு எடுத்துட்டு வாங்கன்னு சொன்னாங்களாம். அதான் என்னையும் கூட கூப்பிட்டாள்'' என்றாள் மைதிலி.

''குறியீட்டு எண் அப்படின்னா பார்கோடா? அது ஷோபாகிட்டே இருக்கா? பொதுவா அதை யாரும் கவனம் எடுத்துக்க மாட்டாங்களே மைதிலி?''

''பொதுவா அதை யாரும் கவனம் எடுத்துக்கிறது இல்லைதான்பா. ஆனால் அவள் வேலைப் பார்க்கும் இடத்தில் அவளுக்காக பெர்சனலா கொடுக்கிற லேப் டாப்பில் இருக்கிற பார்கோடை நோட் செய்து வைப் பாங்களாம்.''

''அது எதுக்கு?''

''திருப்பிக் கொடுக்கும்போது அதே கம்ப்யூட்டரைத் தான் திருப்பிக் கொடுக்கிறோம்னு குறிச்சு வைக்க. அந்த பழக்கத்தில் இவள் பெர்சனல் லேப்டாப் நம்பரையும் நோட் செய்திருக்கிறாள்.''

''இது ரொம்ப உபயோகமா தான் இருக்கு இல்ல? நம்ம வீடு, ஸ்டோர்ஸ் ரெண்டு இடத்திலும் இந்த மாதிரி நோட் செய்து வைக்கச் சொல்லணும்'' என்ற அன் பழகன் மகளது தோழி ஷோபாவையும் அழைத்துக் கொண்டு காவல் நிலையம் நோக்கி வண்டியைச் செலுத் தினார்.

இவர்களைப் போல உடைமைகளைத் தொலைத்த வேறு சிலரும் அங்கே குழுமியிருக்க இன்ஸ்பெக்டர் வரும் வரை அனைவரும் காத்திருக்க வேண்டியதாகி விட்டது.



அதிகாரி வந்ததும் குறியீட்டு எண் வைத்திருந்த வர்களிடம் சரிபார்த்துவிட்டு அவர்களது உடமையை ஒப்படைக்க, இல்லாதவர்களிடம் விசாரணை மேற் கொண்டிருந்தார்.

ஷோபா கொண்டு சென்றிருந்த குறியீட்டு எண் அங்கிருந்தவைகளோடு பொருந்தாமல் போகவே, அவள் கவலையுற, அன்பழகன் இன்ஸ்பெக்டரிடம், ''சார்! லேப்டாப் கிடைச்சுட்டதா எங்களுக்கு போன் வந்தது. ஆனால் இன்றைக்கு... இங்கே இல்லையே?'' என்று தோழமையுடன் வினவினார்.

அவரது கேள்விக்குத் தன்மையாக, ''நேற்றைக்கு சைபர் க்ரைம் டிவிஷனுடன் சேர்ந்துதான் சார் ரெய்டு நடத்தினோம். இந்த மாதிரி லேப்டாப் மிஸ்ஸிங் கேஸ் எல்லாத்துக்கும் கிடைச்சதாதான் தகவல் அனுப்பி யிருப்போம். பார்கோட் வைச்சு மேட்ச் பண்ணி பார்த் துட்டுக் கொடுப்போம். அப்படி பார்கோட் இல்லாதவங் களுக்கு அவங்க கொடுத்த விவரங்களின் அடிப்படை யில் மீதி க்ளைம் செய்யாமல் இருக்கிறதைத்தான் தர வேண்டிய நிர்பந்தம் இருக்கும்'' பதில் தந்தார்.

இப்பொழுது மேலும் கலக்கத்துடன் நின்றிருந்த ஷோபாவிற்கு ஆறுதலாய் அவளது கரத்தை மைதிலி பற்றிக்கொள்ள, அன்பழகன், ''பார்கோட் இல்லாதவங் களுக்குத் தானே மீதியைத் தர முடியும்? நாங்க அதை வைச்சிருக்கிறதால், நீங்க எங்க லேப்டாப்பைக் கண்டு பிடிக்க முடியலைன்னு கேசை க்ளோஸ் பண்ண வேண் டியதா ஆயிடுமா?'' என்றார் கவலையுடன்.

ஏதோ யோசனையுடன் இருந்த அதிகாரி, ''அந்த பார் கோடை கொடுங்க'' என்று வாங்கி வைத்துக் கொண்டு,

அங்கிருந்த தொலைபேசியில் எண்களை அழுத்தியவர் விவரங்களைச் சொல்லி, ''நேற்றைக்கு சார் சொன்னாங்கன்னு ரெண்டு லேப்டாப் தனியா வைச்சிருந்தீங்க இல்லையா? அதோட பார்கோட் உடன் இதையும் மேட்ச் செய்து பாருங்க'' என்று வினவினார்.

மறுமுனையில் கிடைத்த பதிலில் இவர்களிடம் முகமலர்ச்சியுடன் வந்த அதிகாரி, ''சார்! உங்களுக்கு அதிர்ஷ்டம்தான் கை கொடுத்திருக்கு போல... அங்கே சைபர் க்ரைம் டிவிஷனில் உங்க லேப்டாப் இருக்காம். அங்கே ரிப்போர்ட் செய்து வாங்கிக்குங்க'' என்றார்.

நன்றி தெரிவித்து பேசிய அன்பழகனிடம், அந்த அதிகாரி, ''நான் எதுவும் போனில் சொல்லணும்னு அவசியமே இல்லை சார். அங்கே அந்த டிவிஷனுக்கு அசிஸ்டென்ட் கமிஷனர் ஆஃப் போலீஸ் ஒருத்தர் இப்போதான் வந்திருக்கார். எல்லாமே ஒழுங்கா தான் அங்கே நடக்குது. அவசியம்னா மட்டும் என்னை வந்து பாருங்க சார்'' என்று விடை கொடுத்தார்.

மைதிலிக்குத் தன் தந்தை வந்தது பெரும் உதவியாகப்பட்டது.

"நீங்க வந்ததால் அவரிடம் ப்ரெண்ட்லியா பேசி மூவ் செய்தீங்க. உங்க அளவுக்கு அனுபவம் இல்லாத நாங்க கொஞ்சம் தயக்கமா தான் இருந்தோம்பா'' என்ற ஒப்புதலோடு தந்தையிடம் உரையாடினாள்.

ஷோபாவும் அதை ஆமோதிக்கும் விதமாகப் பேசிக் கொண்டு வர அவர்கள் சென்றடைய வேண்டிய சைபர் க்ரைம் பிரிவும் வந்தது.



அதுவும் காவல்துறையின் ஒரு பிரிவு தான் என்று நம்புவது கஷ்டமாக இருந்தது.

கைதிகளை அடைக்கும் சிறைகள் இல்லை. தூசு தட்ட வேண்டிய நிலையில் தேசத் தந்தையின் படமில்லை.

விறைப்பாக வளைய வரும் காவலாளிகளும் இல்லை!

இப்படி ஏகப்பட்ட 'இல்லைகள்' இருந்தால் காவல் துறைக்குத் தொடர்புடைய பிரிவு என்று எளிதில் நம்ப முடியுமா என்ன?

இவர்கள் சென்று விவரம் கூற, ''இதோ அஞ்சு நிமிஷத்தில் சார் வந்துடுவார்'' என்ற தகவலில் காத்திருந்தனர்.

சுற்றி குறுகுறுப்புடன் கண்களைச் சுழற்றிக் கொண்டு அமர்ந்திருந்த மைதிலிக்கு வாசலிலிருந்து அவசரமாக உள்ளே நுழைந்த நபரைப் பார்த்து கண்கள் வியப்பில் விரிய... இழுத்த மூச்சை வெளியிட மறந்து போய் சிலையாய் அமர்ந்திருந்தாள்.

அடர்த்தியான மீசைக்குப் பொருத்தமாக கம்பீரமான நடையுடன் உள்ளே வந்தவன், தன் கட்டுக்கோப்பான உடலுக்குக் கச்சிதமாய் அணிந்திருந்த வெள்ளை நிற டி-ஷர்ட்டில் தன்னுடைய குளிர் கண்ணாடியை ஸ்டைலாக வைத்தான்.

கூரியப் பார்வையை ஒரே ஒரு கணம் மைதிலியின் புறம் வீசியதும் தோன்றிய தடுமாற்றத்தை, தன் காவல் துறைப் பயிற்சி கைக்கொடுக்க கவனமாக, மிகக் கவனமாக அதை விலக்கினான்.

இமைக்க மறந்தவள் போல் தன்னருகில் இருந்த மைதிலியைப் பிடித்து உலுக்கிய ஷோபா, ''ஏய்! என்னாச்சு?'' என்றாள்.

அன்பழகன் வேகமாக நடந்து வருபவனிடம் விவரம் கேட்பது போல எழுந்து செல்ல, இவர்களைக் காத்திருக்கச் சொன்ன காவலாளி அவசரமாகக் குறுக்கிட்டு, ''சார்! இன்ஸ்பெக்டர் வந்ததும் அவரைப் பாருங்க. இவர் ஏ.சி.பி.'' என்றார்.

''ஓ!'' என்று சொன்ன அன்பழகனின் பார்வையில் முன்பை விட அந்த இளைஞனின் மேல் மரியாதை வெளிப்பட,

''என்ன விஷயம்? மே ஐ ஹெல்ப் யூ?'' என்று அவரை நோக்கி வினவினான் இளைஞன்.

உயர் அதிகாரியே இவர்களிடம் விசாரிக்கும்போது எதுவும் குறுக்கிட முடியாது என்பதை உணர்ந்த காவலாளி இவர்களது விவரம் கூறினார்.

கவனமாகக் கேட்டவன், ''அந்த கேஸ் ஃபைலையும், லேப்டாப்பையும் எடுத்துட்டு வாங்க'' என்று பணித்து விட்டு இயல்பாக அங்கிருந்த நாற்காலியில் அன்பழகனின் அருகில் அமர்ந்தான்.

''நீங்கதான் புதுசா வந்திருக்கிற ஏ.சி.பி.யா? ரொம்ப நல்லவிதமா கேள்விப்பட்டேன். உங்க பேர் என்ன?'' என்று விசாரித்தார் மைதிலியின் தந்தை.

புன்னகையை மட்டும் சிநேகமாய் உதிர்த்தவன், ''ராகவன்'' என்றான்.

எவ்வளவு நாட்கள்..? இல்லையில்லை... வருடங்கள்...



இத்தனை வருடங்களுக்குப் பிறகு இவ்வளவு அருகில் ராகவனைப் பார்ப்போம் என்று கனவு கூட கண்டிருக்க மாட்டாள் மைதிலி.

இப்பொழுது கண் முன் அமர்ந்திருப்பது அவனே தானா?

இன்னமும் வியப்பை ஒதுக்க முடியவில்லை அவளால்.

இதயம் தடதடக்கும் ஓசை வெளியில் கேட்கிறதோ என்ற அச்சத்தில் மேலும் இதயத்துடிப்பு மைதிலிக்கு அதிகரித்தது.

ஷோபா, ''சார்! இந்த லேப்டாப் மட்டும் எதுக்காக இங்கே வைச்சிருக்கீங்க? மற்றதெல்லாம் அங்கே இருந்ததே?'' என்று விசாரிக்கும் பொழுது, காவலாளி விவரங்களுடன் அந்த இடத்திற்கு வந்திருந்தார்.

துரிதமாக அந்த கோப்பில் கண்களை ஓட்டியவன், ''.... உங்க பேங்க் அக்கவுண்டை யாரோ ஹேக் செய்திருக்கிறதா பேங்க் மூலமா கம்ப்ளைன்ட் கொடுத்திருக்கீங்க போல...?'' என்று இயல்பாக வினவினான்.

அவனால் மட்டும் எப்படி இயல்பாக இருக்க முடிகிறது என்ற கேள்வி மைதிலிக்கு எழ, தன் முகத்தில் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளை மெல்ல கைக்குட்டையால் ஒற்றியெடுத்தாள்.

காவலாளி கொடுத்த லேப்டாப்பை ஷோபா வாங்கி சரி பார்க்க, ''உங்களுடைய டேட்டா எதுவும் அதிலிருக்க வாய்ப்பு இல்லை'' என்று தகவல் தந்தான் ராகவன்.

மறந்தும் கூட மைதிலியின் பக்கம் அவனுக்குக் கண் பார்வை செல்லவில்லை!

ஷோபாவின் முகம் கவலையுற, ''நீங்க கொஞ்சமாவது செக்யூரா வைச்சுக்க உங்க கம்ப்யூட்டருக்கு பாஸ்வோர்ட் போட்டு வைச்சிருக்கணும். அப்படி பாஸ்வோர்ட் வேண்டாம்னு நினைச்சால் பேங்க் டீடைல்ஸ் எல்லாம் உங்க கம்ப்யூட்டரில் ஸ்டோர் பண்ணி வைக்காதீங்க. உங்களுடைய தோழமையை எல்லாம் பாஸ்வோர்ட் பகிர்ந்து கொள்வதில் வைச்சுக்காதீங்க மிஸ்...'' என்று பெயர் தெரியாமல் நிறுத்தினான்.

அன்பழகனை ஷோபாவின் தந்தை என்று நினைத்துக்கொண்டு, ''உங்க பொண்ணுகிட்ட நீங்களும் சொல்லி வைங்க சார். இப்போ கம்ப்யூட்டர் கிடைச்சாலும் பேங்க்கில் இருந்து போன காசு போனது போனதுதான். அந்த ஆளை சீக்கிரமே கண்டு பிடிச்சுடுவோம்னு நினைக்கிறோம்'' என்றும் அறிவுறுத்தினான்.

ஆமோதிப்பதாகத் தலையசைத்த மூத்தவர், ''இவள் என் பொண்ணு மைதிலி! ஷோபா என் பெண்ணுடைய பிரண்ட்'' என்று அறிமுகப்படுத்தும் விதமாகச் சொன்னார்.

இப்பொழுது அன்பழகனைப் பார்த்த ராகவனின் பார்வையில் மரியாதைக் கூடினாலும் குரலில் கேலியை இழைத்து, ''இந்த லேப்டாப் ஷோபாவுடையது தானே?'' என்று வினவுவது போல் இழுக்க மைதிலியின் கண்களில் கவலை தேங்கி நின்றது.



# 2

மற்ற இருவருக்கும் அது சாதாரணமாகக் கேட்பது மாதிரி தோன்றினாலும், மைதிலிக்கு அவனுடைய குரலில் இருந்த கேலியும், குற்றம் சாட்டும் பார்வையும், இத்தனை வருடங்கள் கழித்தும் அவனது கோபத்தை அவளுக்குச் சொல்லாமல் சொல்லிக் காட்டியது.

ஷோபா தன்னுடைய மடி கணினியை மூடி வைக்க, ராகவனின் உத்தரவு பெயரில் ஷோபாவிடமும் அன்பழகனிடமும் காவலாளி சாட்சி கையெழுத்தும், விலாசமும் அந்த கேஸ் கோப்பில் இருந்த சீட்டில் எழுதித் தரச் சொன்னார்.

'இதுவரை அனுபவித்ததே போதும். இனியும் வார்த்தையால் என்னைக் கொல்லாதே!' என்பது போல் ராகவனிடம் பார்வையாலேயே மைதிலி இறைஞ்ச,

அந்த கெஞ்சல் பார்வை அவனை என்னச் செய்ததோ... அதற்கு மேல் மைதிலியின் புறம் தன் பார்வையையும் கவனத்தையும் செலுத்தாமலிருக்கவே முயன்றான் ராகவன்.

இருப்பினும் மூவரும் விடைபெறும்போது அவனையும் மீறியோ, இல்லை உள்ளிருந்த ஆர்வத்தின் விளைவாகவோ, ''நீங்க எங்கே வேலைப் பார்க்கறீங்க...?'' என்று கேட்டான்.

'தன்னிடமா... தன்னிடமா கேட்கிறான்?' என்று மகிழ்ச்சியில் திணறிய மைதிலிக்கு, ராகவனைப் பார்த்ததும் அந்த மகிழ்ச்சி வடிந்து, அங்கே நிராசை வந்து குடி கொண்டது.

ஏனெனில், அவன் அப்பொழுது ஷோபாவைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

ராகவன் கோபத்தை விடுத்து தன்னிடம் தான் பேசுகிறான் எனத் துள்ளிய மனம், அவன் ஷோபாவின் பதிலுக்காகக் காத்திருப்பதைக் கண்டதும் அடங்கி அமிழ்ந்தே போனது.

இரு பெண்களும் அமைதியாய் இருப்பதைப் பார்த்த அன்பழகன், ராகவனை ஏமாற்றாமல், ''அவங்க சாஃப்ட்வேர் கம்பெனியில் வொர்க் பண்றாங்க. என் மகள் பேங்க்கிங் செக்டாரில் இருக்காங்க'' என்று அவனுக்கு வேண்டிய பதிலைத் தந்தார்.

''ஓ! அப்படியா?''

''.......''

''சாஃப்ட்வேர் கம்பெனியில் வேலை செய்யறவங்க இன்னமும் கொஞ்சம் கவனாகவே இருக்கணும் மிஸ்...! ஆள் மாறாட்டமெல்லாம்... ஐ மீன்... ஐடென்டிட்டி தெஃப்ட் எல்லாம் ரொம்ப சுலபம் இல்லையா? அதுவும் பேங்க்கில் வேலை பார்க்கிறவங்களைத் தோழியா வைச்சுக்கிட்டு, நீங்க இத்தனை கேர்லெஸ்ஸா இருக்கலாமா?''

ராகவன் கூற, கை விரல்களின் நகத்தை சுவாரஸ்யமாய் உற்று நோக்கிக் கொண்டிருந்தாள் மைதிலி.



''நான் பாருங்க... உங்களுக்குத் தெரியாததைச் சொல்ற மாதிரி சொல்லிக்கிட்டு இருக்கேன். உங்களுக்கு அதைச் சொல்லவே வேண்டாம் இல்லையா?!''

உதட்டைக் கடித்துக் கொண்டு மறுபுறம் திரும்பிய மைதிலியின் கண்ணோரங்கள் கரித்ததோ?

விடைபெற்றுச் செல்பவர்களையே தன்னறையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தான் ராகவன்.

* * *

வீட்டிற்குத் திரும்பி வந்த மகளைப் பார்த்த வளர்மதி, ''என்ன மைதிலி? பேங்க் போகலையா? எதையாவது மறந்து வைச்சுட்டுப் போயிட்டியா?'' என்று மகளை விசாரித்தார்.

'மறந்துட்டதா நினைச்சதைத் தான்மா பார்த்தேன்...' எனச் சொல்ல முடியாமல்,

''ப்ச்! தலை வலிச்சதும்மா. அதான் அப்பாவைக் கடைக்குப் போகச் சொல்லிட்டு நான் ஆட்டோவில் வந்துட்டேன்.''

எங்கே வளர்மதி கேள்வி எதுவும் கேட்டு விடுவாரோ எனப் பயந்தவள் போன்று, ''கொஞ்சம் படுக்கப் போறேன்மா'' என்றபடியே தன்னறைக்கு விரைந்தாள்.

நடையில் தளர்ச்சியுடன் செல்லும் மகளை கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தவரை வீட்டுத் தொலைபேசி அழைத்தது.

அன்பழகன், ''ஹலோ வளர்! நான் தான். மைதிலி வீட்டுக்கு வந்துட்டாளான்னு கேட்கத் தான் போன் செய்தேன். தலைவலின்னு போலீஸ் ஸ்டேஷனில் இருந்தே

கிளம்பிட்டாள். இப்போ எப்படி இருக்கா?'' பெண்ணின் நலன் குறித்து விசாரிக்க,

வளர்மதி, ''ம்ம்... இப்போ தான் வந்தாள். வந்தவுடனே தலைவலின்னு சொல்லிட்டுப் படுத்துட்டாள். என்ன ஆச்சு போலீஸ் ஸ்டேஷனில்?'' என்றார்.

காவல் நிலையத்தில் நடந்த அனைத்தையும் விவரமாகக் கூறியவர், ''அப்புறம் அந்த சைபர் க்ரைம் டிவிஷனுக்கு நாங்க மூணு பேரும் போனோம். உள்ளுக்குள்ளே எப்படி இழுத்தடிக்கப் போறாங்களோன்னு பயம்தான். ஆனால் அங்கே புது ஆபீசர் வந்திருக்கார் போல? பேரு கூட... நல்ல பேரு தான்... ஹான்... ராகவன். ஐ.பீ.எஸ். ஆபீசராம். மூணு மாசத்துக்கு முன்னாடிதான் இங்கே மாற்றலாகி வந்திருக்கார் போல? பெரிய போலீஸ் ஆபீசர் என்ற பந்தா எதுவுமில்லாமல், ரொம்ப நல்ல படியா நடத்தினார். நான் பெண் பிள்ளைகளை எதுக்கு போலீஸ் ஸ்டேஷனுக்குத் தனியா அனுப்பறதுன்னு தான் துணைக்குப் போய் இருந்தேன். ஆனால் இந்த மாதிரியே எல்லா ஆபீசர்களும் இருந்துட்டாங்கன்னா பயப்படவே தேவையில்லை வளர்!'' என்றார்.

''என்ன பேரு சொன்னீங்க?''

''சொன்னேனே வளர்... ராகவன்!''

''ஓ! வயசானவரா இருக்கும். அதான் அத்தனைப் பக்குவமா நடந்துகிட்டு இருந்திருக்கிறார்.''

அன்பழகன், ''இல்லைம்மா. இருபத்தேழு அல்லது இருபத்தெட்டு... அவ்வளவுதான் இருக்கும்'' என்றவர்.

''என்ன நீ 'ஏசிபி'யைப் பற்றியே விசாரிச்சுட்டு இருக்கே? பொண்ணுக்கு மாப்பிள்ளையா ஏதும் பார்க்கப் போறியா?'' எனக் கேலியாகச் சிரித்தார்.



மேலும் சிறிது நேரம் பேசிவிட்டு தொலைபேசியை வைத்த வளர்மதியின் முகத்தில் யோசனையின் சாயலும், சிறிதே பரபரப்பும் தென்பட்டது.

கணவரிடம் சொல்லியிருந்த படி சிறிது நேரம் கழித்து பெண்ணைப் பார்க்கச் சொல்லலாம் எனச் சமையல் வேலையில் மூழ்கினார்.

மனம் மட்டும் விடாமல் 'அப்பா... நாராயணா!' என முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

உள்ளறையிலிருந்த மைதிலிக்கு தொலைபேசியில் மெதுவாகத் தான் என்றாலும் அவள் தாய் வளர்மதி, தந்தையிடம் விசாரித்தது கேட்கவே செய்தது.

இன்னமும் சிறிது நேரத்தில் தாயின் கேள்விகளை எதிர்பார்க்கலாம்.

அறிவாளி ஆயிற்றே? ஒன்றும் ஒன்றும் இரண்டு என அவர் எல்லாவற்றையும் புரிந்து கொள்வார்.

என்னால் தான் புரிந்து கொள்ள முடியாமல் போனது...

கட்டிலில் ஒருக்களித்து படுத்தபடி, அறையின் மூலையிலிருந்த கணினி மீது பார்வையைச் செலுத்திய மைதிலியின் விழியோரமிருந்து சூடான கண்ணீர் வடிந்து தலையணையை நனைத்தது.

இமைகளை இறுக மூடி கண்ணீர் ஓட்டத்தைத் தடுக்க முடிந்த அவளால், மூடிய விழிகளுக்குள் கோபமாகப் பார்த்த ராகவனின் உருவத்தைத் தடுக்க முடியவில்லை.

ஒருமுறை தான் அவனைப் பார்த்திருக்கிறாள் என்றாலும் அவன் உருவம் அப்படியே அவள் மனதில் பதிந்துப் போயிருந்தது.

முதலில் எதிர்பார்ப்பிலும் மகிழ்ச்சியிலும் பூரித்திருந்த முகமும்... பின்பு அதுவே கோபமாக மாறி வெறுப்பை உமிழ்ந்த முகமும்!

இப்போது அந்த முகத்தில் மேலோட்டமான ஆச்சரிய மும், அசட்டையும் தானே இருந்தது!

நான்கு வருடங்களுக்கு மேல் ஆயிற்றே அவனைப் பார்த்து!!

முன்பு பார்த்ததற்கு இப்பொழுது தான் எத்தனை மாற்றம் அவனிடம்?

முதன் முறை பார்த்தபோதே, விடாமல் செய்யும் உடற் பயிற்சியால் வந்த கட்டுக்கோப்பான உடலோடு தான் இருந்தான்.

இப்போது வயதும், வேலையும் தந்த மிடுக்கோடு மேலும் அட்டகாசமாக இருந்தான்.

முன்பைவிட இன்னமும் உயரமாக (தன் மனப் பிரமையோ இது? எப்படி முன்பிருந்ததைவிட உயரமாக முடியும்?) உயரத்துக்கேற்ற உடல் வாகோடு, திரண் டிருந்த புஜங்களுடன் காவல்துறை அதிகாரிகளுக்கே உரிய கம்பீரத்துடனும், திமிரோடும், கண்களில் கூர்மை யோடும் தெரிந்தான்.

காவல் நிலையத்தில் ராகவன் நுழைந்த போது அவ னின் பார்வையின் கூர்மையைத் தாளாமல், குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்க, அவள் தான் பார்வையைத் தழைக்க வேண்டியதாக இருந்தது.

இப்போதும் அவளுக்கு, தான் தவறு செய்தது போல் தோன்றவில்லையென்றாலும் அவனின் கோபமும் புரிந்தது.



ஆனால் புரிந்து என்ன செய்ய?

தன் பக்கம் நியாயமிருக்கும் அதே வேளையில் அவன் நிலையிலிருந்து பார்த்தால் அவன் பக்கமும் நியாய மிருக்கலாம்.

முதல் சில நாட்கள் எதையோ பறிக் கொடுத்தது போன்று தவித்தாலும், இந்த உறவிற்கு இவ்வளவு தான் ஆயுள்; இத்துடன் முடிந்தது என்று தன்னையே தேற்றிக் கொண்டு, மனதின் ஆழத்தில் போட்டு பூட்டி நாளடை வில் மறந்தே போனது என்று நினைத்ததெல்லாம் இன்று பொய்யாகப் போயிருந்தது.

தன் அன்றாடக் கடமைகளிலும், பொறுப்புகளிலும் மறந்து... மறைந்தே போன ரணமும் அதன் வலியும் இன்று புதிதாகப் பட்ட காயத்தால் எல்லா தளைகளையும் உடைத்துக் கொண்டு, 'நான் இன்னமும் இங்கே தான் இருக்கிறேன்' என மேலே எழும்பி அவளைத் திக்கு முக்காட வைத்தன.

மைதிலியின் மூடிய இமைகளுக்குள்ளே இங்கும் அங்கும் ஓடிய படியிருந்த விழிகளைப் பார்த்த வளர்மதி, மெதுவாக அவளருகில் உட்கார்ந்து மகளின் தலையைக் கோதியபடி, ''இப்ப தலைவலி பரவாயில்லையா மைதிலி? கொஞ்சம் காபி போட்டு எடுத்துட்டு வரவாடா?'' என் றார் வாஞ்சையாக.

கோதி விட்ட கரத்தை எடுத்து தன் கன்னத்தில் வைத்து அழுத்திக் கொண்ட மைதிலி, தாயின் மடியில் படுத்துக் கொண்டு, ''ம்ம். இப்ப தேவலாம்மா'' என்று கூறிவிட்டு அமைதியானாள்.

சிறிது நேரம் காத்தாடி ஓடும் சத்தத்தை தவிர வேறு சத்தமின்றி அங்கு அமைதி நிலவ வளர்மதி, ''ஆபீசுக்கு பெர்மிஷன் போட்டிருக்கியா மைதிலி? கிளம்பணுமா?'' என மெதுவாக விசாரணையை ஆரம்பித்தார்.

''ப்ச். போகலைம்மா'' என மகள் விட்டேற்றியாகக் கூறவும், வளர்மதி யோசனையுடன், அவள் முதுகைத் தடவிக் கொடுத்தவாறே அமைதியானார்.

தன் தாய் வேறு ஒன்றும் கேட்காமல் இருக்கவும், தன் முகத்தை நிமிர்த்தி அவர் முகத்தைப் பார்த்தவள், ''என்னம்மா? ஒண்ணும் பேச மாட்டேங்கறீங்க?'' என்றாள் தயக்கத்துடன்.

சிறு வயதிலிருந்தே தாயும், மகளும் தோழிகள் போல் பழகுவதால் மைதிலியின் அத்தனை நண்பர் கூட்டமும் வளர்மதிக்கு அத்துப்படி. எதை செய்தாலும் தாயிடம் வந்து கொட்டிவிட வேண்டும் மைதிலிக்கு.

சரி தவறு என வளர்மதி கூறினாலும், அது கருத்து தெரிவிப்பது மாதிரி இருக்குமேயன்றி கட்டளையிடுவது மாதிரி இருக்காது.

மைதிலியும் பொறுப்பான பெண் என்பதால் கூட அப்படியிருந்திருக்கலாம்.

மகளும் தாய் சொல்வதை மனதில் வைத்தே நடப்பாள்.

அப்படி அவர் சொல்லியும் செய்யாமல் விட்டது... அதன் பிறகு செய்தது ஒன்றே ஒன்றுதான்...

''ஆபீஸ் போக மனசில்லாமல் போகிற அளவிற்கு இன்றைக்கு போலீஸ் ஸ்டேஷனில் என்ன ஆச்சுன்னு



நீயா சொல்வேன்னு தான் காத்துக்கிட்டு இருக்கேன் மைதிலி'' என்றவரை ஆச்சரியமாகப் பார்த்தாள் மைதிலி.

அவளுடைய குழப்பங்கள் அப்போதைக்கு சற்றே பின்னுக்குத் தள்ளப்பட, ''நீங்க சி-பி-சி-ஐ-டி ஆபீசில் இருக்க வேண்டியவங்கம்மா. எம்.ஏ. இலக்கியம் படிச்ச உங்களைக் கல்யாணம் செய்து இந்த வீட்டோட அடைச்சு வைச்சுட்டார் எங்க அப்பா'' என்று போலியாக அலுத்துக் கொண்டாள்.

''ஒன்றும் பிரச்சனையில்லை. 'சேரிட்டி ஸ்டார்ட்ஸ் அட் ஹோம்' என்பது மாதிரி போலீஸ் வேலையையும் வீட்டிலிருந்தே ஆரம்பிக்கலாம்.''

'போலீஸ்' என்ற வார்த்தையில் மீண்டும் அவள் முகத்தைத் தாயின் மடியில் புதைத்துக் கொண்ட மைதிலி, ''ராகவனை நான் திரும்பப் பார்த்தேன்மா. ஏ.சி.பி. ராகவன் தான் நான் முதலில் சொல்லியிருந்த ராகவன்.'' எனக் குரலே எழும்பாமல் மெல்லக் கூறினாள்.

மகளின் மன நிலையை புரிந்தவராதலால், உள்ளே குடைந்து கொண்டிருந்த கேள்விக்கு விடை கிடைத்த நிம்மதியை அனுபவிக்க முடியவில்லை. குழப்பம் தான் மிஞ்சியது.

'இத்தனை வருடம் கழித்து எதற்கு இவள் கண்ணில் அவன் பட வேண்டும்?' என்று தான் அந்தத் தாய் மனம் கவலைப்பட்டது.

இது எங்கே போய் முடியுமோ?

ஆரம்பித்த வழி சரியில்லையென்றால்... அதன் பயணமும் சரியாக இருக்காதோ?!

''அதுக்கு எதுக்கு நீ இப்படி 'உம்முன்னு' இருக்கே? நடுவில் சில வருஷம் பார்க்காத எத்தனையோ பேரை நாம் அப்புறம் சந்திக்கிறது இல்லையா? அது மாதிரி தானே இதுவும்? 'ஹாய்-பை' என்று சொல்லிட்டு வந்துட வேண்டியதுதானே?''

அவளே மேலும் எதுவும் கூறுவாள் என இருந்தவர் மகள் வாய் திறக்கவில்லையென்றதும், மேலும் தூண்டித் துருவாமல், நடந்து வெறும் ஒரு சாதாரண நிகழ்வு மட்டுமே என்ற எண்ணத்தைத் தூண்டுமளவிற்கு பேச்சை திசைத் திருப்பினார்.

''சரி! வேலைக்கு போகலைன்னா எழுந்து வா மைதிலி. மொட்டை மாடியில் வடாம் பிழியலாம். வந்து கொஞ்சம் ஹெல்ப் செய்'' என மகளை வலுக்கட்டாயமாக அங்கிருந்து கிளப்பிக் கொண்டு போனார்.

பேச்சை அப்போதைக்கு முடித்தாலும் ராகவனைப் பற்றிய எண்ணம் இருவரின் மனதிலுமே இருந்தது என்னவோ உண்மை.

இவர்களின் பேச்சில் நடுநாயகமாகத் திகழ்ந்தவனும் அவனுடைய அலுவலகத்தில் புருவங்கள் முடிச்சிட, டேபிள் வெயிட்டை உருட்டிக் கொண்டிருந்தான்.

ஒரு நிலைக்கு மேல் உட்கார முடியாமல் எழுந்து நடை பழகியவன், அங்கிருந்த பதக்கங்களையும், ஷீல்டுகளையும் இங்கே வைப்பதும், இங்கிருப்பதை அங்கே மாற்றுவதுமாக இருந்தான்.

ராகவனின் எண்ண ஓட்டமும் 'பார்த்து எத்தனை வருடங்கள் ஆயிற்று?' என்ற மைதிலியின் எண்ண ஓட்டத்தைப் போன்றே தான் இருந்தது.



என்ன... அவனுடைய எண்ணத்தில் கோபமும் கலந்திருந்தது.

ஆனால் அதையும் அவளுடைய கெஞ்சும் கண்களைப் பார்த்த பிறகு அவனால் இழுத்துப் பிடிக்க முடியவில்லை.

காவல்துறை அதிகாரியாக இருந்து பார்க்கும்போது, அன்று மைதிலி செய்ததில் ஒரு சதவீதம்கூட தவறு இருப்பதாக இன்று அவனுக்குப் படவில்லை.

ஆனாலும் நடந்த சம்பவத்தினால் தோன்றிய வலி, வேதனை, கோபம் எல்லாமும் அப்படியே தான் இருக்கிறது.

இன்றைய வயதுக்குரிய மனமுதிர்ச்சியும், வேலை நிமித்தமாகப் பார்க்கும் விதவிதமான மனிதர்களும், அனுபவம் தந்த பக்குவமும் அன்று இவனுக்கு இல்லையே?

'ஹ்ம்ம்... அப்போ ஏன் அவளைத் திரும்ப இப்பப் பார்த்ததும் அந்த இரட்டை அர்த்தம் தொனிக்கும் குத்தல் பேச்சு?'

இனியும் அலுவலகத்திலிருந்து ஒன்றும் கிழிக்க முடியப் போவதில்லை என்று தெரிய, அங்கிருந்தவர்களிடம் சொல்லிக் கொண்டு நுங்கம்பாக்கத்தில் இருக்கும் அவனுடைய வீட்டிற்குக் கிளம்பினான்.

மதிய வேளையில் நேரங்கெட்ட நேரத்தில் அலுவலக ஜீப்பில் வராமல் பைக்கில் வந்திறங்கிய இளைய மகனைப் பார்த்த ராகவனின் தாய் ஜெயலஷ்மி, ''என்னடா ராகவா? இந்த நேரத்தில் வந்திருக்கே? உடம்புக்கு ஏதும் முடியலையா?'' என விசாரித்தார்.

''உடம்புக்கு முடியலைன்னாதான் வீட்டுக்கு வர ணுமா? இல்லாட்டி வர மாட்டாங்களா?''

சுள்ளென்று விழுந்தவனை மேலும் கடுப்பாக்க, ''சொந்தமா தொழில் செய்யற உங்க அப்பாவும், உன் அண் ணன் ராஜீவும் தான் எந்த நேரத்திற்கு வேணும்னாலும் வீட்டிற்கு வரலாம்பா. நீ ஒரு பப்ளிக் சொ்வன்ட்டா இருந் துட்டு ஒழங்கா வேலை செய்றதில்லையா? நாங்க கொடுக்கிற வரி பணமெல்லாம் இப்படி வீணா போகுதே? இதைக் கேட்பார் யாருமில்லையா?'' என்றார்.

''அம்மா! கொஞ்ச நேரம் சும்மா இருங்கம்மா. வந்த வுடனே 'நொச்சு... நொச்சுன்னு' எங்கே ராஜீவ்? வீட்டிலா இருக்கான்?''

''இப்ப நீ மட்டும் என்னிடம் கேள்வி கேட்கலாமா? நான் கேட்ட ஒரு ரெண்டு கேள்விக்கு நீ பதில் சொல் லலை. நானும் நீ கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல மாட்டேன். போ'' குளிர்ந்த நீரை மகனிடம் நீட்டிய படியே வம்பைத் தொடர்ந்தார் ஜெயலக்ஷ்மி.

தாயும், மகனும் ஏட்டிக்குப் போட்டியாக வம்பளப் பதைக் கேட்டபடியே வந்தார் ராகவனின் தந்தையும், ஓய்வு பெற்ற ராணுவத் துறை மேஜருமான நம்மாழ்வார்.

தன் மனைவி ஜெயலக்ஷ்மி, இரண்டு மகன்கள், மூத்த மருமகள் ரேகா என்ற சிறு குடும்பத்தின் சொந்தக்காரர்; குடும்பத் தலைவர்.

நாற்பது வருடங்களுக்கு முன்பே நுங்கம்பாக்கத்தில் இடம் வாங்கிப் போட்டு, சிறிது சிறிதாக வீடும் கட்டி முடித்திருந்தார்.



இப்போது இந்த இடத்திற்கு ஏக கிராக்கி. குதிரைக் கொம்பையும், யானைக் கொம்பையும் கொடுத்தாலும் கூட நடுத்தர வா்க்கத்தினா் அங்கே தனியிடம் வாங்க நினைத்துக்கூடப் பார்க்க முடியாது.

ராணுவத்திலிருந்து ஓய்வுப் பெற்ற பிறகு வங்கியில் சில காலம் பணியாற்றியவர், இப்பொழுது அவரது மூத்த மகன் ராஜீவுடன் சேர்ந்து பல்வேறு நிறுவனங் களுக்கும், வங்கிகளுக்கும் பாதுகாப்பு வழங்கும் 'ஜெயம் செக்யூரிட்டி சொ்வீசஸ் அன்ட் கன்சல்டன்சி' ஏற்று நடத்துகிறார்.

அலுவலகங்கள், வங்கிகளில் மறைத்தும் மறைக்காம லும் வைத்திருக்கும் கேமராக்கள் மூலம் பதிவு செய்த வீடியோக்கள், அலாரம் சர்வீஸ், வேறு பாதுகாப்பு சாத னங்கள் மூலம் அவர்களின் வாடிக்கையாளர்களின் தொழிலை, அலுவலகத்தைப் பாதுகாக்கும் பணி அவர் களுடையது.

நம்மாழ்வார், ''ஆரம்பிச்சுட்டீங்களா உங்கச் சண் டையை?'' எனக் கேட்டவாறே மகன் அமர்ந்திருந்த சோபாவில் தானும் வந்தமா்ந்தாா்.

''வெளியில் ஒழுங்கு, அமைதியை நிலை நாட்டும் உங்க மகனுக்கு, வீட்டுக்கு வந்து என்னைப் பார்த்தால் மட்டும் என்னாகுமோ தெரியலை?''

''வீட்டில் இருக்கிற மாதிரி வெளியில் இருக்க முடி யுமா? உன்னிடம்தான் உரிமை எடுத்துக்க முடியும் அவ னால?''

நான்கு வருடங்களுக்கு முன்பு வரையில் எல்லா இடத்திலும் ஒரே மாதிரி இருந்தவன் தான் இவனும்.

இப்பொழுது வெளியில் வேறு யாரிடமும் காட்ட முடியாத கோபத்தை, கடுப்பை எல்லாம் பாவம் அவன் அன்னை மீது இறக்குகிறான்.

தன் கைகளையே சில நொடிகள் பார்த்துக் கொண்டிருந்தவனின் மனமும் குரலும் சற்று அடங்க, ''ராஜீவ் எங்கேப்பா? ஆபீஸ்ல கிளம்பிப் போயிட்டானா? அண்ணி சத்தத்தையும் காணோம்?'' எனக் கேட்டான் ராகவன்.

''ரேகாவோட கூட படிச்ச பிரெண்டுக்கு இன்றைக்கு சாயந்தரம் ரிசெப்ஷன் இருக்காம். அதுக்காக உங்க அண்ணியை அங்கே கொண்டு போய் விட்டுட்டு வரப் போயிருக்கான் உங்க அண்ணன்.''

''ஏன்? இவன் போகலையா?''

''ரேகா அவள் பிரெண்ட்ஸோட கொஞ்சம் ஜாலியா இருப்பா. அங்கே இவன் என்ன செய்யப் போறான்? நைட் போவானா இருக்கும். இதெல்லாம் குடைஞ்சு குடைஞ்சு கேட்டுட்டு இருப்பாங்களாடா? கல்யாணமாகி பிள்ளைங்க, மனைவி குழந்தை என்று வந்துட்டால், பெரியவங்களும் கொஞ்சம் தொண தொணக்காமல் இருக்க கத்துக்கணும்'' என்றார் ஜெயலக்ஷ்மி.

''அதே மாதிரி கல்யாணமானப் பிள்ளைகளும் சரி, வீட்டுக்கு வந்த மருமகள்களும் சரி, புரிஞ்சு நடந்துக்கிற மாமனார் மாமியாரை, அவங்களும் புரிஞ்சு நடந்துக்கணும். அப்படி இருந்துட்டால் குடும்பத்தில் பிரச்சனைகளே வராது. நம்ம ரேகா மாதிரி.''

பெற்றோர்கள் இருவரும் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த ராகவனுக்கு புன்னகை மலர்ந்தது.



''என்ன ரெண்டு பேரும் ஒரே தத்துவமா சொல்லிக்கிட்டு இருக்கீங்க?''

''உஷ்ஷ்! தத்துவம் சொன்னால் அனுபவிக்கணும். ஆராயக்கூடாது!'' இன்னுமொரு அரிய பெரும் தத்துவத்தைச் சிரிப்போடு உதிர்த்தார் ஜெயலக்ஷ்மி.

''ஹா ஹா! அப்போ நானும் என் பங்குக்கு ஒன்றைச் சொல்லிக்கிறேன். கல்யாணமான பையனும் தன் அம்மாவையும் மனைவியையும் சும்மா சூப்பரா சமாளிக்கணும். எங்க அண்ணன் ராஜீவ் மாதிரி'' கண் சிமிட்டினான் ராகவன்.

கணவரை ஒரு முறை பார்த்துவிட்டு, ''ஹ்ம்ம்... மூத்த மருமகள் விஷயத்தில் நாம கொடுத்து வைச்சவங்க தான். சின்னவனுக்கு வர்றவள்தான் எப்படியிருப்பாளோ? அப்பா... தம்பி! நம்ம ரேகா மாதிரியே குணத்தில் தங்கமா அவங்க சித்தி பொண்ணு ஒண்ணு இருக்காம். திரும்பத் திரும்ப கேட்டுவிட்டுகிட்டே இருக்காங்க. என்ன சொல்றே?'' என்று மகன் முகத்தை ஆவலோடு பார்த்தார் ஜெயலக்ஷ்மி.

ராகவன் முகத்தில் சிரிப்பு சுத்தமாக மறைந்து போக, ''நினைச்சேன்! என்னடா சம்மந்தா சம்மந்தமில்லாமல் பேசிக்கிட்டு இருக்காங்களே ரெண்டு பேரும்-ன்னு. அண்ணி வேலையா இது?'' என்றான் கடுப்பாக.

''ராகவா! இப்ப எதுக்கு அண்ணியை இழுக்கிறே? கல்யாண வயசில் வீட்டில் ஆள் இருந்தால் எல்லோரும் தான் கேட்பாங்க. இதில் தப்பென்ன இருக்கு? நீ உன் னிஷ்டத்தை மட்டும் சொல்லு'' அழுத்தமாக ஒலித்தது நம்மாழ்வாரின் குரல்.

எதையோ நினைத்த ராகவன், ''ஹம்ம்! எல்லாம் என் இஷ்டப்படி நடக்கிற மாதிரி தான்!'' என வாய்க்குள் ளேயே முனங்கிக் கொண்டான்.

''இப்ப என்னடா உன்னிஷ்டப்படி நடக்கலை?''

''கொஞ்ச நேரம் சும்மா இரு ஜெயா! ரேகாவோட சித்தி பொண்ணு வேண்டாம்னா போகுது போ. ஆனால் வேற பொண்ணு வந்தால் அம்மா கேட்கத்தான் செய் வாங்க. உனக்கும் வேற ஏதாவது விருப்பமிருந்தால் சொல்லு'' என்றவரைச் சட்டையே செய்யாமல் எழுந்து உள்ளே செல்லும் மகனையே பெற்றவர்கள் இருவரும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

''என்னங்க ஒண்ணுமே சொல்லாமல் இவன் இப்படி போறான்?''

''சொல்லாமல் எங்கே போவான்? இப்ப என்ன இரு பத்தேழு தானே ஆகுது. பொறுமையா இரு ஜெயா.''

தன்னறைக்குள் சென்ற ராகவனை, அவன் கண் முன்பிருந்த கணினி காந்தம் போல இழுக்க, வலைய தளத்திற்குள் சென்றவன் நீண்ட நாட்களாக உபயோகத் திலில்லாத தன்னுடைய 'ஜெய் ஹோ' என்ற மின்னஞ் சல் முகவரியை மீண்டும் உயிர்ப்பித்து அதன் மூலம் 'சேட் ரூம்' என்றழைக்கக்கூடிய அரட்டை அறைக்குள் நுழைந்தான்.

திரையையே பார்த்துக் கொண்டிருந்தவனைப் பார்த்து கண் சிமிட்டிச் சிரித்தது மைதிலியின் 'வின் இந்தியா!' என்ற முகவரி.

முடிந்த கதை என நினைத்திருந்தது கதையா... இல்லை அது வெறும் ஒரு அத்தியாயம் மட்டுமேவா?



# 3



மைதிலி இளங்கலைப் பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருந்த காலக்கட்டம். சுற்றியிருக்கும் உலகைப் பற்றிய அனுபவ அறிவு மிகவும் குறைவாகக் கொண்ட தொரு பருவம்.

இளங்கன்று பயமறியாது என பொதுப்படையில் சொல்வதற்கேற்ப பதின் வயதினருக்குரிய அசட்டுத் தைரியத்தை மட்டுமில்லாது காண்போரை வசீகரிக்கும் அழகையும், உயர்ந்த லட்சியங்களை சாதிக்கக் கூடிய அறிவையும், திறமையையும் கொண்டிருந்தவள்.

அந்த காலக்கட்டத்தில் ஒரு நாள் -

அதி முக்கியமான கிரிக்கெட் விளையாட்டுப் போட் டியை ரசிக்கும் பொருட்டு கல்லூரி விடுமுறை நாளன்று வெளியே எங்கும் போகாமல் வீட்டிலிருந்த மைதிலி, வழக்கம் போல் தன் தாயையும் போட்டியைப் பார்க்க கட்டாயப்படுத்திக் கொண்டிருந்தாள்.

''அம்மா! இன்றைக்கு ரொம்ப ரொம்ப முக்கியமான கேம். என்கூட வந்து உட்கார்ந்து பாருங்க ப்ளீஸ்'' என்று பலமுறை மைதிலி கோரிக்கை வைத்தாலும் அதற்கு செவி மடுக்காமல் தன் பணியில் மூழ்கியிருந்தார் வளர்மதி.

விடாமல் மகள் தொந்தரவு செய்யவே, ''இல்லைடா. நான் வரலை. எத்தனை தடவை சொல்றது என்னை அந்த விளையாட்டைப் பார்க்கச் சொல்லி வற்புறுத்தாதேன்னு?'' என்றார் பொறுமையின் எல்லைக் கோட்டை கடக்கும் நிலையில்.

தன் அன்னை ஒரு காலத்தில் கிரிக்கெட் விளையாட்டிற்கு ரசிகை என்பது மைதிலி அறிந்ததே!

ஆனால் கிரிக்கெட் சூதாட்டம் என்றழைக்கப்படுகின்ற மேட்ச் ஃபிக்சிங் பற்றி வெட்ட வெளிச்சமாகத் தெரிய வந்ததில் இருந்து அந்த விளையாட்டை முற்றிலும் வெறுத்தார் வளர்மதி.

தாயை எப்படியும் சமாதானம் செய்து விடுவது என்று ஒவ்வொரு முறையும் முயன்று கொண்டிருந்தாள் மகள்.

''அம்மா! முன்னே மாதிரி எல்லாம் ஃபிக்சிங் நடக்கிறதில்லைம்மா. இப்போ ஐ.சி.சி. ரூல்ஸ் எல்லாம் ரொம்பக் கடுமையா இருக்கு. இந்தியன் டீம் எவ்வளவு சூப்பரா இந்தத் தொடரில் விளையாடறாங்க தெரியுமா?''

''எனக்கு எதுவும் தெரிய வேண்டாம் மைதிலி. நீயே அதை உட்கார்ந்து பார்'' என்று தன் மனதை மாற்றிக் கொள்ளாமல் மகளது வாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார் வளர்மதி.

''ம்ஹ்ம்ம்ம்.. நீங்க என்கூட விளையாட்டைப் பார்க்காட்டி போங்க. நான் என் காலேஜ் பிரெண்ட்ஸ் கூட நெட்டில் அரட்டை அடிச்சுட்டே பார்க்கப் போறேன்'' என்றுவிட்டு மடிகணினியுடனும், டி.வி. ரிமோட்டுடனும் ஐக்கியமானாள்.



கிரிக்கெட் போட்டி தொடங்கிய சிறிது நேரத்திற்கெல்லாம் இந்திய அணியின் நிலை ஆட்டம் காணத் தொடங்க, நம்பிக்கையுடன் இருந்த தோழிகளின் மத்தியில் அதிருப்தி நிலவத் தொடங்கியது.

இணைய தளத்தில் விளையாட்டுப் போட்டியைப் பற்றிய கருத்துக்களை பரிமாறியபடியே இருந்த மைதிலிக்கு இந்திய அணியின் மீது எழுந்த கோபத்தை விட, தனது நட்பு வட்டாரத்தின் மீது எழுந்த கோபம் தான் அதிகமாய் இருந்தது.

'இது முக்கியமான போட்டி தான். இல்லையென்று சொல்லவில்லை...! அதற்காக இப்படியா மட்ட ரகமாய் நம் அணியை நாமே விமர்சிப்பது?

'விளையாட்டில் வெற்றியும், தோல்வியும் சகஜம் தானே?'

எந்தவொரு விஷயத்திலும் நேர்மறையான எண்ணங்கள் வேண்டும் என்று பழக்கப்பட்டவளுக்கு குறை கூறும் விமர்சனங்களுக்கு மத்தியிலும், அவநம்பிக்கையான கருத்துக்களுக்கு மத்தியிலும் கருத்துப் பரிமாற்றத்தைத் தொடர முடியவில்லை.

இந்திய அணி வெற்றி பெற வேண்டும் என்று முழு மூச்சுடன் பார்த்துக் கொண்டிருந்தவளது மின்னஞ்சல் முகவரியில் அந்தத் தருணத்தில் ஃபேஸ் புக் என்று சொல்லக்கூடிய முகப்புத்தகத்தில் இணையுமாறு தோழி மலரிடமிருந்து அழைப்பு எட்டிப் பார்த்தது.

கிரிக்கெட் போட்டியில் முழு கவனத்தையும் கொண்டிருந்தவளுக்கு அந்த அழைப்பு எந்த உற்சாகத்தையும் ஏற்படுத்தவில்லையென்றாலும், அங்கே அரங்கத்தில்

அமர்ந்திருந்த கிரிக்கெட் ரசிகர் ஒருவர் கையில் இருந்த பேனரில் முகப்புத்தகம் தொடர்பாக இருந்த வாசகம் புருவத்தை உயர்த்த வைத்தது.

தன் கையில் வைத்திருந்த பேனரில் 'தோற்றாலும் ஜெயித்தாலும் இந்திய அணிக்குத் தான் என்னுடைய ஆதரவு இப்படிக்கு ''ஃபேஸ் புக் - இந்தியன் கிரிக்கெட் டீம்'' பக்கத்தின் உறுப்பினர் என்பதில் பெருமை கொள்ளும் ரசிகன்' என்ற வாசகம் எழுதப்பட்டு உயர்த்திப் பிடித்திருந்ததைத் தொலைக்காட்சியில் பார்த்த பிறகு மைதிலி புருவம் உயர்த்தாமல் இருந்தால் தானே ஆச்சரியம்?

தன் மடியில் இருந்த கணினியில் எட்டிப் பார்த்த அழைப்பை ஏற்று முகப் புத்தகத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டவள், அந்த ரசிகன் குறிப்பிட்டப் பக்கத்தில் தன்னையும் உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டாள்.

அந்தப் பக்கத்திலிருந்த மற்ற உறுப்பினர்களுக்கிடையே தற்போது நடந்து கொண்டிருந்த கிரிக்கெட் ஆட்டம் தொடர்பாக கார சாரமான விவாதம் நடந்து கொண்டிருக்க, மைதிலிக்குத் தன்னுடைய கல்லூரி நட்பு வட்டாரத்திற்கும், அங்கே அந்தப் பக்கத்தில் கருத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தவர்களுக்கும் இடையே பெரிய வித்தியாசம் எதுவுமிருப்பதாகப் படவில்லை.

விரக்தியுடன் இருந்தவளுக்கு அன்றைய ஆட்டத்தை விட அதைப் பற்றிய எதிர்மறைக் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருப்பவர்களின் மீது தான் எரிச்சலாய் வந்தது.



கல்லூரி வட்டாரமும் அப்படித்தான், இதோ இங்கே முன்பின் அறிமுகம் ஆகாதவர்களும் அப்படித்தான்!

அந்த பக்கத்திலிருந்து வெளியேற முயன்றபோது அங்கே புதிதாக ஒருவர், ''ஜீதேகா பாய் ஜீதேகா, இந்தியா ஜீதேகா!!'' என்று புதிதாக ஒரு உரையாடலை ஆரம்பித்தது புத்துணர்ச்சியாக இருந்தது.

''அடடா! நம்மைப் போல ஒரு ஜீவன்!' என்று வியந்தபடியே அதற்குப் பதில் வாசகமாக, ''வின் இந்தியா!'' என்று தன்னுடைய கருத்தைப் பரிமாறினாள்.

அடுத்த சில நொடிகளில் அவளுடைய கருத்துப் பிடித்திருப்பதாகவும், தன்னைப் போல ஒருவர் அணிக்கு ஆதரவு தெரிவிப்பது சந்தோஷம் அளிப்பதாகவும் தகவல் வந்தது.

இப்படியாக சில நிமிடங்கள் அங்கே ஒருமித்தக் கருத்துப் பரிமாற்றங்கள் அரங்கேற, மற்ற உறுப்பினர்களும் அந்த உரையாடலில் பங்கு பெறத் தொடங்கினார்கள்.

ஆனால் 'ஜீதேகா!' என்று தொடங்கிய நபர் அவளிடம் தனியாகப் பேச வருமாறு அழைப்பு விடுக்க, மைதிலியின் உள்ளுணர்வு எச்சரித்ததில் அந்த அழைப்பை அவள் ஏற்காமல் நிராகரித்தாள்.

அப்பொழுதும் விலகாமல் மைதிலிக்கு பிரத்யேகமாக அனுப்பப்பட்டத் தகவலில் அவள் மிகவும் அழகாக இருக்கிறாள் என்றும் கருத்தொருமித்த ஒருவருடன் நட்பு பாராட்ட விரும்புவதாகவும் செய்தி சொல்ல இவளுக்கோ, 'இதேதடா வம்பு?' என்பது போலத் தானிருந்தது நிலைமை.

'முன்பின் யோசனையின்றி உரையாடலைத் தொடங்கி இருக்கக்கூடாதோ?' என்று வருந்துவதால் எந்தப் பலனுமில்லை என்று கருதிய மைதிலி, அடுத்ததாகச் செய்த தலையாய காரியம் தன்னுடைய பெயர், புகைப் படம் மற்றும் இதர விவரங்களை முற்றிலுமாக நீக்கியது தான்.

மலரும், இவளும் இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒன்றாக கணினி வகுப்பில் பயின்றதால் ஏற்பட்ட பழக்கம் எனினும் இன்றுவரை எந்தவித பாதிப்புமின்றி தொடர்கிறது.

மலர் சற்றே ஆர்வத்துடன் எந்தவொரு விஷயத் திலும் ஈடுபடுவாள் என்றாலும் மைதிலிக்கு அவ ளுடைய வெகுளித்தனம் பிடித்தமான ஒன்றுதான்!

இதோ மலரின் குணத்தைப் பற்றி விவரிக்கும் முன், மைதிலிக்கு மலரிடமிருந்து ஆர்வத்துடன் ஒரு கேள்வி பிறந்திருந்தது.

''ஹேய்! என்ன!? இப்படி பேரைச் சொல்லாமல் 'வின் இந்தியா' என்று ஃப்ரோஃபைல் வைச்சிருக்கே? ஏற்கனவே என்னுடைய பிரண்ட்ஸ் லிஸ்டில் 'ஜெய் ஹோ!' அப்படின்னு ஒரு நண்பர் இருக்கார்?'' என்று கேட்டிருந்தாள் மலர்.

''நம்முடைய டீமுக்கு ஒரு சப்போர்ட் தரலாம்னு தான்!'' மைதிலியிடமிருந்து விளக்கம் வந்தது.

அடுத்த இரண்டு நிமிடங்களில் 'ஜெய் ஹோ!' நபரிடமிருந்து, ''மேட்ச் பார்க்கலாம்னு உட்கார்ந்தேன். எல்லாம் நம்ம டீமுக்கு எதிராக பேசிட்டு இருக்காங்க. இது எனக்குப் பிடிக்கலை மலர். நான் ஒத்துக்கறேன். இது



முக்கியமான மேட்ச் தான். ஆனால் அதுக்காக டீம் சரியா விளையாடலை என்பதால் நாமே நம்ம டீமைத் திட் டறதா?'' என்று மைதிலியின் எண்ண ஓட்டங்களைப் பிரதிபலிக்கும் கருத்து மலருக்கு வந்தது.

''அடடா! ரெண்டு பேருக்கும் என்ன ஒரு பற்று நம்ம டீம் மேல?! நம்ம டீம் ப்ளேயர்ஸ் கூட இந்த அளவுக்கு ரசிகர்கள் மேலே கோபப்பட மாட்டாங்க போல? நீங்க ரெண்டு பேரும் தான்...'' என்றாள் மலர்.

இப்படி மலர், 'ஜெய் ஹோ', 'வின் இந்தியா' இரு வரின் ஒற்றுமையையும் தொடர்புபடுத்திப் பேச, தொடக்கத்தில் மலருக்குப் பதில் சொல்லிக் கொண் டிருந்த இருவரும், பின்பு நேரடியாகப் பேசத் தொடங் கினார்கள்.

முதலில் மைதிலிக்கு உரையாடலில் பங்கு பெறு வதில் மிகுந்த தயக்கமே!

ஏனெனில் சற்று முன்னர் முன்பின் அறிமுகமற்ற நபருடன் நடத்திய பேச்சு வார்த்தையின் அனுபவம் அப்படிப்பட்டது.

ஆனால் தொடக்கத்திலிருந்த தயக்கத்தை உடைக்க ஜெய் ஹோ நபர் பேசிய விதம் மைதிலிக்குப் பெரிதும் துணை புரிந்தாலும், தன்னுடைய அடிப்படை விவரங் கள், அடையாளங்கள் ஏதும் குறிப்பிடாமல் தொடங்கிய முகப்புத்தக ஃப்ரோஃபைல் அவளுக்குக் கூடுதல் துணிவைத் தந்தது.

ஆரம்பத்தில் அன்றைய நாள் நடந்த விளையாட்டுப் பற்றி மட்டும் தொடங்கிய பேச்சு வார்த்தை, தொடர்ந்து கிரிக்கெட் சூதாட்டம், விளம்பரங்கள், அணியினரைத்

தேர்வு செய்வதில் இருக்கும் அரசியல் என்று அனைத்தையும் வட்டமடித்தது.

அன்று நம் தேசத்து அணியினரின் மோசமான ஆட்டம் இங்கே இருவரிடையே சுவாரஸ்யமான உரையாடலுக்கு வித்திட்டது.

மகள் மைதிலி இப்படி கிரிக்கெட் ஆட்டம் முடிந்த பிறகும் மணிக்கணக்கில் இருந்த இருக்கையை விட்டு அகலாமல் மடியில் கணினியை வைத்துக் கொண்டு அமர்ந்திருப்பது வளர்மதியைத் திகைப்படையச் செய்தது.

''மைதிலி! எவ்வளவு நேரமா சாப்பிடக் கூப்பிடறேன்? இன்னமும் சாப்பிட வராமல் என்ன பண்றே?'' என்ற வளர்மதிக்கு இணையதள அரட்டையில் வெகு ஜோராக தன் கேள்விக்குக் கூட பதில் சொல்லாமல் ஈடுபட்டிருப்பவளைக் கண்டதும் சற்று எரிச்சல் வந்தது.

''ஒரு ஃபைவ் மினிட்ஸ்மா'' என்றாள் அன்னையின் முகத்தை ஏறெடுத்தும் பார்க்காமல்.

''இதோட எவ்வளவு தடவை இந்தப் பதிலை சொல்லிட்டே தெரியுமா? மணி இப்போ நைட் பத்து ஆகுது'' என்று கணினியை வலுக்கட்டாயமாக வாங்கி வைத்தார்.

''ஏன்மா?'' என்று ஆவேசமாகக் கேட்டவள், அன்னையின் முகத்தில் தெரிந்த கோபத்தைப் பார்த்ததும் அமைதியானாள்.

வளர்மதியும் தன் பெண்ணிடம் அநாவசியமாக கோபம் கொள்ள மாட்டார் எனினும், அவசியமான தருணங்களில் செல்லம் கொடுப்பதுமில்லை.



அதை நன்றாகவே உணர்ந்திருந்த மைதிலி மௌனமாகவே உணவருந்த தாயின் பின்னால் நடந்துச் சென்றாள்.

பத்து நிமிடங்கள் ஒருவித மயான அமைதி நிலவ, ''அம்மா சாரிம்மா!'' என்றாள் வருத்தம் தொனிக்கும் வகையில்.

அன்னையிடமிருந்து எந்த பதிலும் இல்லாமல் போகவே, ''நீங்க எதுவும் பேச மாட்டீங்களா?'', ''என்னை மன்னிக்க மாட்டீங்களா?'' என்று விதவிதமாகத் தன் கேள்விக்கணைகள் மூலம் வளர்மதியை சாந்தப்படுத்த முயற்சி செய்தாள்.

மைதிலியின் முயற்சி தோல்வியைத் தழுவ தன் அறைக்குச் சென்றவளுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

அம்மா அழைத்தது கூடக் கேட்காமல், அவருடன் பேசாமல் இருக்கும் அளவிற்கா ஜெய் ஹோவிடம் பேசிக் கொண்டிருந்திருக்கேன்? என்று ஆழ்மனதில் வியப்பு எழுந்தது.

ஜெய் ஹோ என்ற பெயரில் இருந்தவர் ஆணா அல்லது பெண்ணா? எந்த மொழி? என்ன செய்கிறார்?

எதுவுமே தெரியாமலா பேசிக் கொண்டிருந்திருக்கிறாள்?

அந்த ஜெய் ஹோவிற்கும் இந்த விவரங்கள் தெரிந்திருக்க வாய்ப்பில்லையே?! யாராக இருப்பினும் கண்ணியமானவர் என்று மட்டும் மைதிலியால் நினைக்க முடிந்தது.

அந்த நினைப்பே அடுத்த முறை 'ஜெய் ஹோ' உடனான அவளது உரையாடலுக்கு வித்திட்டது.

இணைய தளத்தில் ஃபேஸ் புக்கிற்கு செல்ல அங்கே 'ஜெய் ஹோ'விடமிருந்து புதிதாக ஒரு தகவல் எட்டிப் பார்த்தது.

''ஹை! அன்றைக்கு உங்கள் இணையதள தொடர்பில் ஏதோ கோளாறு என்று நினைக்கிறேன். பாதியிலேயே பேச்சுவார்த்தைத் தடைப்பட்டு விட்டது. நைஸ் டாக்கிங் வித் யூ. ஜெய் ஹோ!''

அந்த ஜெய் ஹோ நபரைத் தன்னுடைய நண்பர்கள் பட்டியலில் சேர்க்கும்போது தொடங்கிய பேச்சு வார்த்தையில், ''சாரி! அன்றைக்கு அம்மா உடனே சாப்பிட வரச் சொல்லி லேப் டாப்பை எடுத்துட்டாங்க. அதான் முறையாக விடைபெற முடியவில்லை!'' என்றாள் மைதிலி.

''பரவாயில்லை. பேசிக் கொண்டிருந்ததில் ரொம்ப நேரமானது தெரியாமல் போயிடுச்சு. உங்க அம்மாக்கு ரொம்ப கோபமா?''

''அவங்க கேட்டதுக்குக் கூட பதில் சொல்லாமல் இருந்ததில் ரொம்ப கோபம்! இன்னும் சரியா கூட என்னிடம் பேசலை. ரொம்பக் கஷ்டமா இருக்கு.''

''ஓ!... ஐ அம் சாரி இஃப் ஐ காஸ்ட் யூ எனி ட்ரபிள்.''

''ஒண்ணும் பிரச்சனையில்லை. நீங்க எதுக்கு சாரி கேட்கணும்? என் மேல் தான் தப்பு'' - இது மைதிலி.

''ஒரு விஷயம் தெரியுமா? தப்பு செய்றவங்களை விட தப்பு செய்யத் தூண்டறவங்களுக்குத் தான் தண்டனை அதிகம்னு இந்தியன் பீனல் கோட் (Indian Penal Code) சொல்லுது.''



''ஓ! அப்போ நீங்கத் தான் என்கிட்டே அம்மா கூப்பிடும்போது போக வேண்டாம்னு சொல்லி தூண்டியதா?''

''நீங்க என்னுடைய வக்கீல் மாதிரி இப்படி எனக்காக வக்காலத்து வாங்கறீங்க?''

''போச்சுடா... அன்றைக்கு முழுக்க நம்ம பேச்சு கிரிக்கெட் சுத்தியே வந்தது; இன்றைக்கு தண்டனை, ஐ.பீ.சி., வக்கீல் என்று அதைச் சுத்தி வரப் போகுதா?'' என்று செய்தி அனுப்பினாள் மைதிலி.

''ஒரு எதிர்கால ஐ.பீ.எஸ். ஆபீசருக்கு வேறென்ன பேசத் தெரியும்?'' இயல்பாய் வந்தது பதில்.

சற்றே திகைப்படைந்த மைதிலி, ''ஓ! போலீஸ் ஆபீசர்? குட் டு நோ!'' என்றாள்.

வழக்கம்போல் இத்தகைய பேச்சிற்கு ஏதாவது கிண்டல் செய்து பதில் வரும் என்று எதிர்பார்த்த 'ஜெய் ஹோ'விற்கு பாராட்டும் விதமாக பதில் வரவும் ஆனந்தமாக இருந்தது.

அதை அவளிடம் வெளிப்படுத்த, ''மத்தவங்க சொல்றது மாதிரியே இந்த மைதிலியும் சொல்லுவான்னு எதிர்பார்த்தீங்களா? நோ வே!''

பேச்சைப் போலவே பெயரும் அழகு என்ற எண்ணத்தில் ஒவ்வொரு எழுத்தையும் ரசனையுடன், 'மை-தி-லி' என்று முணுமுணுத்தவன் தன்னைப் பற்றிய அறிமுகத்தைக் கொடுப்பதிலும் தயக்கம் காட்டவில்லை.

"ராகவனுடைய எதிர்பார்ப்பு ஏமாற்றம் அடைஞ்சதில் ரொம்பவே சந்தோஷம் தானுங்க..." என்ற போது 'வின் இந்தியா' மற்றும் 'ஜெய் ஹோ' இருவருக்குமான பரஸ்பர அறிமுகம் இனிதே நடந்தேறியது.

இப்படியாகத் தொடங்கிய அவர்கள் இருவருக்குமான பேச்சு நாளடைவில் அன்றாட வழக்கமாயிற்று.



# 4

ராகவன் மற்றும் மைதிலி இருவருக்குமிடையே யான நட்பில் அடிப்படைப் புரிதல் பலமாக இருந்தது.

அந்த அடிப்படைப் புரிதலுக்கு அஸ்திவாரம் மைதிலி - ராகவன் இருவருக்குமான கருத்துப் பரிமாற்றம்தான்.

வானத்திற்கு கீழே உள்ள விஷயங்களை மட்டுமல்ல... அண்ட சராசரத்தைப் பற்றிய அனைத்து விஷயங்களை யும் பற்றி பேசியிருக்கின்றனர்.

இருவருக்கிடையே உடன்படாத கருத்துக்களினால் காரசாரமான விவாதங்கள் எழுந்தாலும் பின்வாங்காமல் வாதங்களை முன் வைத்தனர்.

அப்படி முன் வைக்கப்படும் கருத்துக்கள் நட்பை பலப்படுத்தியதே தவிர அதை பலவீனப்படுத்திய தில்லை.



தன்னுடைய கருத்திற்கு சுதந்திரம் நிலவும் இடத்தில் நட்பு ஆழமாக வேர்விட்டதில் எந்த அளவிற்கு ஆச் சரியம் இல்லையோ, அதே போல இருவருக்கிடையே யான 'இனம் புரியாத உணர்வு' பரவியதிலும் ஆச்சரியத் திற்கு இடமில்லை.

இத்தனைக்கும் இருவரும் ஒருவரையொருவர் சந்தித்ததில்லை!

புகைப்படத்தைக் கூட பகிர்ந்ததில்லை...

தொலைபேசியில் தொடர்பு கொண்டதுமில்லை.

இந்த காரணத்தினாலோ என்னவோ, அந்த இனம் புரியாத உணர்வை உணராமல்... அதற்கொரு தனிப் பட்ட முக்கியத்துவமும் கொடுக்காமல் இருந்தனர் இரு வரும்.

ஒருவருக்கொருவர் மனவிருப்பத்தை பிரகடனப் படுத்திக் கொள்ள சிரத்தை எடுத்துக் கொள்வதோ, மற்றவர்களுடன் அந்த உணர்வைப் பற்றி பகிர்ந்து கொள்ளும் முயற்சியோ அவசியமற்றதானது.

அதனால் இருவருக்குமான பேச்சு அடுத்த கட்டத் திற்கு முன்னேற எந்த வேகத்தடையும் அவசியப்பட வில்லை!

ஆனால் அந்தத் தடை அவளுக்கு அவசியமானதோ என்று உணர்த்தும் வகையில் ஒரு நிகழ்வு அமைந்தது.

மைதிலி தன் தோழி ஷோபாவின் பெற்றோரது இரு பத்தைந்தாவது திருமண நாள் விருந்திற்குச் சென்றிருந் தாள்.

விருந்தில் ஷோபாவின் தாய் ராதாவிடம் மைதிலி யின் தோழியர் வட்டம் அவள் உள்பட அவரது

கல்யாணக் கதையைப் பற்றி கேள்வி கேட்டபடி இருந்தனர்.

''என்னம்மா கதை சொல்றது? நான் கல்யாணத்துக்கு முன்னாடி ஷோபாவுடைய அப்பாவைப் பார்த்ததே இல்லை. இந்தக் காலம் மாதிரியா...? கண்டதும் காதல், காணாமல் கூட காதல் என்று என்னவெல்லாமோ இருக்கு.''

''உங்களோட கல்யாண கதையைக் கூட 'காணாத காதல்' வகையில் சேர்த்துக்கலாமேம்மா?'' ஷோபா தன் அன்னையிடம் வினவினாள்.

''நீ வேற ஷோபா... அந்தக் காலத்தில் கல்யாணம் என்ற விஷயத்துக்குப் பிறகு தான் காதல் என்ற அத்தியாயம் வரும். அதனால் இது அதிலெல்லாம் சேர்த்தியில்லை.''

விருந்துக்கு வந்திருந்த ஒரு தோழி, ''படத்தில் மட்டும் தான் அந்த மாதிரி காணாமல் காதல் எல்லாம் வரும். நிஜத்தில் ஸ்கோப்பே இல்லை'' என்று தோளை அலட்சியமாகக் குலுக்கினாள்.

மைதிலி தோழியின் கருத்திற்கு ஆட்சேபணைத் தெரிவிக்கும் விதமாக, ''ஒரு காலத்தில் காதல் என்ற விஷயத்துக்குக் கூடத் தான் ஸ்கோப்பே இல்லாமல் இருந்தது; ஆனால் இப்போ அது மாறி இருக்கு இல்ல? அது மாதிரி தான் இதுவும்'' என்று தெரிவித்தாள்.

மைதிலியைப் பொறுத்தவரை காணாமலேயே நட்பு பூக்கும் போது காதல் சாத்தியம் இல்லையா என்ற எண்ணம்!



''அப்படி ஒரேடியா சொல்லிட முடியாதும்மா. நளன் - தமயந்தி, ப்ரித்திவிராஜ் - சம்யுக்தா, ஏன் நம்ம கிருஷ்ணர் - ருக்மிணி கூட தான் காணாமல் காதல் கொண்டிருந்தாங்க. சோ, அது ஒரேடியா முன்னாடி இல்லைனும் சொல்ல முடியாதுதான்'' - இது ஷோபாவின் அன்னை.

''நோ வே! எப்படி தான் முடிஞ்சதோ? காதலுக்கு அடிப்படை விஷயம் என்ன ஆன்ட்டி? ஈர்ப்பு தானே? அந்த ஈர்ப்பு எங்கே இருந்து பார்க்காமலே வரும்?'' என்றாள் மற்றொருத்தி.

''ஒய் நாட்? பார்வையில் ஈர்ப்பு இருக்கிற மாதிரி ஒருத்தங்களுடைய பேச்சில்... வார்த்தையில்... கருத்தில் ஈர்ப்பு வராதா என்ன?'' இது மைதிலியின் வாதம்.

''ஒருத்தங்களுடைய கண் உண்மை சொல்லுதா... பொய் சொல்லுதான்னு ஈசியா சொல்லிடலாம்; ஆனால் கருத்துப் பரிமாற்றம் மட்டும் நடக்கும்போது எது உண்மை... எது பொய் அப்படின்னு வித்தியாசம் தெரியாது.''

''யூ ஆர் ரைட் ஷோபி! அதனால் தான் இப்போவெல்லாம் இன்டர்நெட், செல்போன் என்று நிறைய ஏமாத்தறாங்க, எக்கச்சக்கமா தப்பு நடக்குது.''

மைதிலியால் அவர்கள் சொல்வதை ஒப்புக்கொள்ள முடியவில்லை.

''இந்த மாதிரி தப்பு, ஏமாற்று எல்லாம் மனுஷங்களைப் பொருத்தது. எந்த லெவலில் மெச்சூரிட்டி ரெண்டு பேருக்கும் இருக்குது என்பது உள்பட'' தோழிகளிடம் எடுத்துரைத்தாள் மைதிலி.

''நீ சொல்றது ஒரு வகையில் சரி தான்; மனுஷங் களைப் பொருத்ததுதான். நேரில் பார்க்க, காதல் கோட்டை அஜித் - தேவயானி மாதிரி ரெண்டு பேரும் இருந்தால் அந்த காணாத காதல் கூட சக்சஸ் ஆகலாம்; இல்லாட்டி போன வாரம் பேப்பரில் வந்த நியூஸ் மாதிரி தற்கொலையில் முடியும்.''

''அதென்ன நியூஸ் டி ஷோபா?''

''ஒரு ஜோடி பார்க்காமலே செல்போனில் லவ் பண்ணி இருக்காங்க. அந்தப் பொண்ணுக்கு தேனினும் இனிய குரல் இருக்கிறதால் தேவலோக ரம்பை மாதிரி இருப்பாள் தன் காதலின்னு கற்பனையில் கோட்டை கட்டியிருக்கான் அந்த ஹீரோ.''

''போச்சுடா!''

''ஒருவேளை காதலுக்கு உருவம் கட்டாயமோ?'' - மைதிலியின் எண்ண ஓட்டம் இப்படிச் சென்றது.

''ம்! ஹீரோ அவளை நேரில் பார்க்கும்போது அந்தப் பொண்ணு சுமாரைவிட சுமார் ரகமாய் போச்சாம். அத னால் ஹீரோ மனசு உடைஞ்சு ரயிலில் விழுந்து தற் கொலை செய்துட்டான்.''

''அட கஷ்டமே!'' அதுவரை அமைதியாய் இருந்த ஷோபாவின் தாயார் கூட அந்த கதையைக் கேட்டு பரிதவித்தார்.

அப்பொழுது கூட மைதிலி, ''எங்கேயோ நடக்கிற ஒரு விஷயத்தை வைச்சுட்டு முடிவு செய்ய முடியாதுடி ஷோப்ஸ்.''

தோழியின் பேச்சைக் கேட்டு புருவம் உயர்த்தியவள், ''எடுத்துக்காட்டுன்னு நான் சொல்றேன். விதி



விலக்குன்னு நீ சொல்றே. ப்ரூவ் மீ ராங்'' என்றாள் ஷோபா.

''அப்போ மிஸ். ப்யூட்டிஃபுல் அண்ட் மிஸ்டர். ஹேண்ட்சம் தான் லவ்ஸ் செய்ய முடியுமா? லவ் மேரேஜ் என்று சொல்றவங்க பாதி பேரைப் பார்த்தால் எப்படி இவங்க எல்லாம் லவ் செய்து கல்யாணம் செய்துக்கிட் டாங்க என்ற சந்தேகம் வருதே? அவங்க எல்லாம் தென் ஹவ் கம்?'' வினவினாள் மைதிலி.

''நீ சொல்றது நடக்க வாய்ப்பு ஜாஸ்தி தான். ஆனால் அந்த வகை ஒருத்தங்களைப் பார்த்து பேசி, பழகி வருவது'' என்றாள் ஷோபா.

''இன்னமும் சொல்லப்போனால் 'ஃபெமிலியாரிட்டி லீட்ஸ் டு லவ்' என்று சொல்லுவாங்களே? பார்த்தவுடன் லவ் வராது; பார்க்க பார்க்க லவ் வந்துடும்'' என்று சற்றே கிண்டலுடன் சொன்னாள் ஒரு தோழி.

''ஏன்டி? அதே மாதிரி பேசிப் பேசி லவ் வந்துடுமோ என்னவோ?'' அவளுடைய மனநிலை குழம்பத் தொடங் கியது மைதிலிக்கு.

''என்ன மைதிலி எதுவும் அனுபவமோ?'' என்று தோழியர் வட்டம் கூச்சலிட்டனர்.

தன் நிலைப் பற்றி எதுவுமே தெளிவாகத் தெரியாத மைதிலிக்கு தோழியரின் கூச்சலை ஆமோதிக்க முடிய வில்லை.

''எதுக்குடி இப்படி முழிக்கறே மைதிலி?''

''இல்லை... நடக்கிற விஷயமெல்லாம் புதுசா இருக்கு.''

மைதிலி எதை நினைத்து பேசிக் கொண்டிருக்கிறாளோ? ஆனால் அவளது தோழிகள் உலக நடப்பைப் பற்றிப் பேசிய விஷயங்கள் புதுமையாக இருப்பதாக நினைத்துக் கொண்டனர்.

''இதுக்கே இப்படிச் சொன்னால் இன்னமும் நான் சொல்றதுக்கு என்ன சொல்லப் போறே?''

''இன்னமுமா?!!''

''இப்போவெல்லாம் கொரியன் மொபைல் என்று மார்க்கெட்டில் இருக்கு. அதில் வாய்ஸ் மாடுலேஷன் வைச்சு ஆண்களே பெண் குரலில் பேசி நிறைய ஆம்பளைங்களை ஏமாத்தறாங்க. இன்னமும் உலகம் தெரியாத அப்பாவியா தான் நீ இருக்கேன்னு நினைக்கிறேன்.''

''போடி ஷோபா! இந்த மாதிரி நாலு விஷயம் படிச்சால் மனுஷங்க மேல் இருக்கிற நம்பிக்கையே போயிடும். நம்ம ஆன்ட்டிகிட்ட வேற ஏதாவது சுவாரஸ்யமா கதை கேட்போம்'' என்று ஒரு தோழி பேச்சை மாற்ற, மைதிலியின் மனம் அதுவரை நடந்த பேச்சு வார்த்தையை அசை போட்டது.

எண்ணங்களின் போராட்டம் முடிவடைந்த பொழுது, 'யார் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் போகட்டும்; ராகவன் நல்லவன்' என்ற முடிவுக்கு வந்தாள்.

அதனால் இருவருக்கிடையே நடந்த பேச்சு இனிதே தொடர்ந்தது. தேர்வு சமயத்தில் ராகவனின் தரப்பிலிருந்து 'பேச்சு வேண்டாம்' என்று சொல்லும் வரையில்!



# 5



இன்று காலை கண் விழித்த பொழுதிலிருந்தே மைதிலிக்கு ஏன் என்று விளங்காமலே இனிய பரபரப்பாகவே இருந்தது.

ஏன் என்று தெரியாமல் என்ன?

எல்லாம் தெரியும் தான்!

ஆனாலும் முழுதும் இன்னமும் தெரிந்த பாடில்லை!

கடந்த சில நாட்களாக இணைய தளத்தின் பக்கம் வர முடியாமலிருந்த அவளின் 'ஜெய் ஹோ' நண்பன் ராகவன், இன்று தொடர்பு கொள்வதாக முன்பே தெரிவித்திருந்தான். அதுதான் அவளுக்கு இத்தனை பரபரப்பு!

கல்லூரி விடுமுறை நாட்களானதால் மைதிலிக்கும் வெளி வேலை இல்லை. காலையில் எழுந்ததும், கணினிக்கு உயிரூட்டிய பின் தான், தன் அன்றாட வேலையைச் செய்யத் தொடங்கினாள்.

நொடிக்கொரு தரம் கணினியில் பார்வையை செலுத்தியவாறே இருந்தவளுக்கு, நேரம் செல்லச் செல்ல பரபரப்பும் பதட்டமும் கூடியது. பரபரப்பின் அளவைப் பொருத்து அவளது எரிச்சலின் அளவும்!

'ஏன் இன்னமும் அவன் வரலை? இன்றைக்கும் ஏதாவது வேலை இருக்கா என்ன? அதான் எக்ஸாம் எல்லாம் நேற்றே முடிஞ்சு இருக்கும் இல்ல?'

கணினியை முறைத்துப் பார்த்தவாறு கேள்விகளைத் தொடுத்தால்... அது என்ன இவளுக்கு பயந்து கொண்டு பதிலைக் கக்கி விடுமா என்ன?

'ஏய்ய்...! இரு... இரு! ராகவன் பெரிய போலீஸ் ஆபீசரா ஆனவுடன் உன்னைத்தான் முதலில் உள்ளே போடச் சொல்லணும்!'

'ம்க்கும்! மைதிலி... கம்ப்யூட்டரை இல்ல... முதலில் உன்னைத் தான் பைத்தியக்கார ஹாஸபிடலில் போடச் சொல்லணும். ரொம்ப முத்திப் போச்சு!'

'வேற வேலை இருந்தால் போய் பாரு. இன்னமும் கொஞ்ச நேரம் கம்ப்யூட்டரை முழிச்சு முழிச்சுப் பார்த்து கிட்டே இருந்தால், முழி தெறிச்சு, அந்த ஸ்க்ரீனிலேயே அது போய் உட்கார்ந்துக்கப் போகுது.'

தன்னை நினைத்தே சிரித்தவாறு தலையில் தட்டிக் கொண்டு அம்மாவிற்கு உதவ அடுப்படிக்குச் சென்றாள்.

மைதிலியும், ராகவனும் குறிப்பிட்ட இந்த நேரத்திற்கு இணைய தளத்தில் சந்திப்பதென நேரம் குறித்துக் கொண்டு சந்திப்பதில்லை.

எந்த நேரம் இருவருக்கும் சரி வருகிறதோ, அப்போது இருவரும் ஆன் லைனில் இருந்தால் சந்திப்பதுதான். இது சில நாட்களுக்கு முன்பு வரையில்.

ஆனால் அது, எப்போது, எப்படி, யாரால் மாறியதென வரையறுத்துச் சொல்ல முடியாதபடி இருந்தது இன்றைய நிலை.



'யூ தேர்?'

'இருக்கீங்களா?'

'ஹலோ...?'

'எங்கே போனீங்க? ஆளையே காணோம்?' இப்படி விதவிதமாக இருதரப்பிலிருந்தும் கேள்விகள் நாள் முழுதும் மற்றவருக்கு பறந்த வண்ணம் இருந்தது இப்பொழுது!

மலருடனும் தான் அவள் இணையத்தில் அரட்டை அடிக்கிறாள். ஆனால் அதில் இம்மாதிரி உணர்வேதும் இல்லையே?

ஒரு விஷயமும் இல்லாவிட்டாலும் எப்போதும் அவனுடன் பேசிக் கொண்டிருக்க வேண்டும் போல... பேசவில்லை என்றாலும் அவனையே நினைத்துக் கொண்டிருக்க வேண்டும் போல... ஏன் இப்படி? இது போல் சிறிதாவது அவனுக்கு இருக்குமா? இந்த உணர் வுக்குப் பெயர் தான் என்ன?

அடுப்படியில் பாத்திரங்களை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தவளின் சிந்தனையை இவ்வளவும் போட்டு அலைக்களித்தன.

மைதிலியின் அன்னை வளர்மதிக்கு பழைய பாடல் கள் என்றால் விருப்பம். மெல்லிய ஓசையுடன் ஏதாவது பாடலை ஓடவிட்டுக் கொண்ட வேலைகளைச் செய் வது அவரது வழக்கம். இன்றும் அது போல் பீ.பி.ஸ்ரீநிவா சின் இனிமையான குரலில் பாடல் ஒலித்துக் கொண் டிருக்க, கையிலிருந்த பாத்திரத்தைக் கீழே நழுவ விட் டாள் மைதிலி.

'ஒருத்தி ஒருவனை நினைத்து விட்டால் அந்த உறவுக்குப் பெயர் என்ன?

காதல்...!'

"என்னாச்சு மைதிலி?"

"ஒ... ஒண்ணுமில்லம்மா. எப்படின்னு தெரியலை...?" மைதிலியிடமிருந்து தட்டுத் தடுமாறி வந்தது பதில்.

"தெரிஞ்சு பட்டாலும், தெரியாமல் பட்டாலும் வலி என்னமோ உனக்கு தான் மைதிலி. பார்த்து பொறுமையா செய்டா."

வளர்மதி என்னமோ சாதாரணமாகச் சொன்னது போல் தான் இருந்தது. ஆனால் மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் தானே? ச்ச... ச்ச... இப்போது எதற்கு பேய்... கீய் என்று என்னென்னமோ தோன்றுகிறது?

தாயிடம் கலக்கமாக ஒரு பார்வையைச் செலுத்தி விட்டு, "இதோ வந்துடறேன்மா!" என அங்கிருந்து தன்னுடைய அறைக்கு நகர்ந்த மைதிலிக்கு, அவள் முகத்தின் பூரிப்பை மறைக்க முடியவில்லை!

'இதற்கு பெயர் தான் கா... கா... காதலா? அடச்சே! காதல் என்ற வார்த்தையைச் சொல்றதுக்கே எனக்கு இப்படி திக்குதே... ஹொவ் டிட் திஸ் ஹேப்பன் டு மீ?"

இதுவரையில் ராகவனும் அவளும் பேசியதையெல்லாம் நினைவு கூர்ந்து பார்த்தவளின் முகமெல்லாம் காரணமே இல்லாமல் சிரிப்பின் சாயல் படர்ந்தது.

சிரித்து மகிழும் அளவிற்கு அவர்கள் சல்லாப வார்த்தைகளையோ காதல் மொழிகளையோ பகிர்ந்ததில்லை.



இருப்பினும் இன்று, இந்த நொடியில் ராகவன் தொடர்புடையதை எல்லாம் நினைத்துப் பார்க்க, அவளுக்கு மனம் விழைந்தது.

கட்டிலில் படுத்த வண்ணம், தலையணையைக் கட்டிக் கொண்டு, ராகவன் எப்படி இருப்பானென்ற இனிய கற்பனையில் மூழ்கியவளுக்கு, வரி ஓவியமாகக் கூட அவனை மனதில் கொண்டு வர முடியவில்லை!

'ராகவன் கருப்பா சிவப்பா, கூனா குள்ளமா எதுவுமே தெரியாது! அவனுடைய குரலைக்கூட கேட்டது கிடையாது!

நேரில் பார்க்காமல், பேசாமல் ஒருவரைப் பற்றி எந்தளவிற்குத் தெரிந்து கொள்ள முடியும்?

கண்ணிய குறைவாக அவன் இதுவரை ஒரு வார்த்தை கூட பேசியது இல்லை தான். இருந்தாலும்... அது தான் அவனின் நிஜ முகமா? இல்லை நிறம் மாறும் முகமா?

அவனைப் பற்றி ஒரு மண்ணும் தெரியாத போது இது எப்படி?

"எதுவுமே தெரியாத மாதிரி கேட்காதே மைதிலி. நீ ஒண்ணும்... ஒண்ணுமே தெரியாத சின்னப் பாப்பா இல்ல! உனக்குச் சின்ன சந்தேகம் கூடவா வந்ததில்லைன்னு சொல்றே?"

"........"

"சந்தேகம் வராமல் தான்... எல்லாத்தையும் அப்படியே போய் அம்மாவிடம் ஒப்பிச்சுடற நீ... ராகவனுடன் மணிக்கணக்கா பேசறதை மறைச்சியா?"

'நான்... நான் ஒண்ணும் மறைக்கலை!'

'முழுசா சொல்லவுமில்லை; லையிங் பை ஒமிஷன், மைதிலி உனக்குத் தெரிஞ்சிருக்கணும். சோ... இந்த டிராமா போடற வேலையை விட்டுட்டு மேலே யோசி!'

அழுத்தம் திருத்தமாக உள்ளிருந்து ஒலித்தக் குரலில் தனக்குத் தானே வாதமும் பிரதிவாதமும் செய்து கொண்டிருந்த மைதிலி சட்டென்று அடங்கினாள்.

ஒரே சமயத்தில் பலவிதமான எண்ணங்களும் உணர்வுகளும் அவளைப் போட்டு பந்தாட, அவள் மிகவும் திண்டாடிப் போனாள்.

ராகவனை எண்ணி மகிழ்ச்சி;

ஆனால் தாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்ததே இல்லை என்பதை நினைத்துக் குழப்பம், பயம்;

எதையும் மறைக்காத அம்மாவிடம் இதைச் சொல்லாமல் விடுத்ததையெண்ணி குற்ற உணர்வு.

இந்த எல்லாக் குழப்பத்திற்கும் ஏணி வைத்தது போன்று மற்றுமொரு பெரும் குழப்பமும் இப்பொழுது அவளுக்கு இருந்தது.

ராகவனிடம் தொடர்ந்து தொடர்பு வைத்துக் கொள்வதா இல்லையா?

தொடர்பு வைத்துக் கொண்டால் தன்னுடைய எண்ணத்தை அவனிடம் சொல்வதா வேண்டாமா?

நேரில் பழகுபவர்களுக்கே தன் மனம் கவர்ந்தவரிடம் காதலைச் சொல்வது சில சமயம் தர்மசங்கடமான ஒன்று!

முகக் குறிப்பைக் கொண்டே சிலதைத் தெரிந்து கொள்ள வாய்ப்பாவது இருக்கும். இங்கே... அதற்கும் இப்போதைக்கு வழியிருக்கப் போவதில்லை!



ஹ்ம்ம்...

மைதிலிக்குத் தான் அத்தனை குழப்பங்களும்!

ராகவன் தெளிந்த மனதோடு, தெளிவாக இருந்தான். தனக்கு இன்னது தான் வேண்டும் என்ற நிச்சயத்தோடும், தனக்கு வேண்டியதைச் செய்து கொள்ளும் செயல் திறனோடும், செய்ய முடியுமென்ற நம்பிக்கையோடுமிருந்தான்.

முதல் கட்ட ஐ.பீ.எஸ். தேர்வை நல்ல முறையில் எழுதி முடித்ததும், அவன் முதலில் தேடியது மைதிலியைத்தான்.

தேர்வைக் காரணமாக வைத்துக் கொண்டு கடந்த சில நாட்களாக மைதிலியுடனான தொடர்பை அவன் நிறுத்தி வைத்திருந்தாலும், முழு காரணம் அதுவல்ல.

தன்னைத் தானே தெரிந்து உணர்ந்து கொள்ள அவனுக்கே அவன் வைத்துக் கொண்ட பரீட்சை தான் அது!

அந்தப் பரீட்சையில் படு மோசமாக ராகவன் தோற்றாலும் உலகை வென்ற மனநிலையில் இருந்தவனுக்கு, இனி செய்ய வேண்டியவற்றைக் குறித்து எந்தச் சந்தேகமும் இருக்கவில்லை.

துள்ளலோடு கணினியை இயக்கியவனை மைதிலியின் 'வெற்றி நிச்சயம்!' என்ற வாழ்த்தொலி வரவேற்றது.

சந்தோஷம் நிரம்பி வழியும் முகத்தோடு, ''வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும்... அதை வாங்கித் தந்த பெருமையெல்லாம் உன்னைச் சேரும்!'' என்று பதில் அனுப்பிவிட்டு மிகுந்த எதிர்பார்ப்போடு காத்திருந்தான்.

திறந்திருந்த ஜன்னலின் வழியாக மழை தூதுவதை மெய் மறந்து வண்ண வண்ண கனவுகளோடு பார்த்துக் கொண்டிருந்த மைதிலியை, 'டங்' என்ற சப்தத்தோடு வந்த ராகவனின் விளிப்பு, விழிக்கச் செய்தது.

இனி ராகவனுடனான பேச்சைச் சற்று குறைக்க வேண்டுமென்று அத்தனை நேரமும் என்னென்னமோ நினைத்து வைத்ததெல்லாம் மறந்து போக, பாய்ந் தோடிச் சென்று கணினி முன்பு அமர்ந்தாள் மைதிலி.

பெரும் உற்சாகத்தோடு, ''ஹாய்ய்! இதென்ன? படிக்கிறதெல்லாம நீங்க? புகழ் எல்லாம் எனக்கா? பரவாயில்லை. அதையும் நீங்களே வைச்சுக்கோங்க. எனக்கு இந்த வெற்று புகழ் எல்லாம் பிடிக்காது'' என் றாள் பெரிய மனதோடு.

''ஹாய்! ஹா ஹா!'' ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னும் ஒரு பெண் இருக்கிறாள்' என்று சொல்வாங்க இல்ல? அது மாதிரின்னு வைச்சுக்கோயேன் மைதிலி!''

இதற்கு எப்படி பதில் சொல்வதென தெரியாமல், சிறிது நேரம் மகிழ்ச்சியில் திணறிவிட்டு, ''அதை விடுங்க! முதல்ல நீங்க எப்படி இருக்கீங்க? எக்ஸாம் எப்படிச் செய்தீங்க? சாட்டுக்கு வர ஏன் இவ்வளவு நேரம் எல்லாம் சொல்லுங்க'' என்று சரமாரியாக கேள்விகளை அடுக்கலானாள்.

கணினி திரையின் முன் வாய் விட்டுச் சிரித்தவன், ''ஹப்பா! துப்பாக்கியிலிருந்து வர புல்லட் மாதிரி என்ன வேகமா வருது கேள்வியெல்லாம்? வரிசையா ஒவ் வொண்ணா பதில் சொல்றேன். 1. நான் நல்லா இருக்கேன்.



2. எக்ஸாம் ரொம்ப நல்லா செய்திருக்கேன். 3. மிஸ் மீ?'' என அவளது கேள்விகளுக்குப் பதில் தந்தவன், அவ ளுடைய கடைசி கேள்விக்கு மற்றுமொரு கேள்வி யையே பதிலாகத் தந்தான்.

'ம்ம்! நான் உங்களை ரொம்பவே மிஸ் செய்தேன் ராகவன்!' மெல்லமாகச் சொல்லிக் கொண்ட மைதிலி, ''நினைப்புதான்!'' என்று அவனுக்குப் பதிலை அனுப்பி னாள்.

''நினைப்பு இருக்கப் போய் தானே கேட்கிறேன்? சொல்லு. என்னை மிஸ் செய்தியா, இல்லையா?'' அவள் என்னதான் சொல்வாள் என அறிந்து கொள்ளும் ஆவ லில் விடாமல் கேட்டான்.

''உங்களைத்தான் மிஸ் செய்யறாங்களாக்கும்! அதுக்கு வேற ஆளைப் பாருங்க ஐ.பீ.எஸ். சார்!''

''ஹா ஹா! நீ என்னை மிஸ் செய்தால் தானே நான் வேற ஆளைப் பார்க்கணும்?'' என்று சிரித்தவன்,

''நீ என்னை எப்போதும் மிஸ் செய்ய மாட்டே மைதிலி. அதே மாதிரி நானும் உன்னை மிஸ் செய்துட மாட் டேன்!'' என்றான் உறுதி போல.

நான் உன்னைத் தவற விட்டுவிட மாட்டேன் என்ற அர்த்தத்தில் அவன் சொன்னதை, ராகவனின் மனதில் தான் இன்னமும் இல்லை என மைதிலி தவறாகப் புரிந்து கொண்டாள்.

''ஹலோ! நீங்க உங்களைப் பற்றி மட்டும் பேசுங்க. ஏன், என்னையும் சேர்த்துக்கறீங்க? நான் உங்களை மிஸ் செய்வேன் தான்.''

"மேடம் ரொம்ப சூடா இருக்காங்க போலிருக்கு. நான் திரும்பச் சொல்றேன் மைதிலி. மிஸ் செய்யவே மாட்டோம். நீ வேணும்னாலும் பாரு!"

என்ன இவன் சொன்னதையே சொல்லிக்கிட்டு இருக்கான். எப்போ பேசாமல் இருக்கணும்னு தெரிய வேண்டாம்? கிறுக்கு!

"வேண்டாம் ராகவன்! அப்புறம் எனக்கு ரொம்பக் கோபம் வந்துடும்... நான் சொல்றதுதான் நடக்கும்! நீங்களும் வேணா பாருங்க" என்றாள் அழுத்தம் திருத்தமாக.

'லூசு! நான் என்ன சொல்ல வரேன்னு உனக்குப் புரியலையா? மட மைதிலி!' செல்லமாகக் கொஞ்சிக் கொண்டவன்,

"சரி! உனக்கும் வேண்டாம், எனக்கும் வேண்டாம். நாம ரெண்டு பேரு சொல்றதும் நடக்கும். இது ஓகேவா? சமாதானம் எம்.எம்?"

இவர்கள் இருவரும் பேசிக் கொண்ட போது, மேலே சென்று கொண்டிருந்த தேவர்கள் 'ததாஸ்து!' என்று சொல்லிவிட்டுப் போனார்களோ என்னவோ?

விதி, பெரிய அதிகாரி என்று பார்க்குமா? இல்லை ஏழை பாமரன் என்று பார்க்குமா?

"அதென்ன எம்.எம்? எஃப். எம். ரேடியோ மாதிரி?"

"ஏற்கனவே சூடா இருக்கே. அதனால இன்னொரு நாளைக்குச் சொல்றேன்" என்றவன் பேச்சை வேறு திசையில் திருப்பினான்.

'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்பது மறந்து, இருவருமே நீண்ட நாட்களாக ஒருவருடன்



ஒருவர் பேசாதிருந்த தாகத்தைப் பேசிப் பேசியே தீர்த்துக் கொள்ள முயன்றனர்.

இருந்தும், இருவருக்குமே திருப்தி தான் ஏற்படவில்லை.

"அம்மா கூப்பிடற மாதிரி இருக்கு ராகவன். அப்புறம் பார்க்கலாமா?" என்றாள் மனமேயின்றி.

"பரவாயில்லை. எனக்காக கொஞ்சம் திட்டு வாங்கிக்கோயேன் மைதிலி."

"நாளைக்கும் நான் வரணுமா? வேண்டாமா?"

"வரணும் தாயே வரணும்!"

"அது! அந்தப் பயம் இருக்கணும். பை! நாளைக்குப் பார்க்கலாம்" சிரித்துவிட்டு கணினியை ஆஃப் செய்த இருவருக்கும் முகத்தில் டன் கணக்கில் அசட்டுப் புன்னகை வழிந்தது.

தலைக்குப் பின் இரண்டு கையையும் கட்டிக் கொண்டு, நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்த ராகவனுக்கு என்றைக்கும் இல்லாமல் இன்று இருவரது பேச்சிலும் ஒரு உரிமை இழைந்தோடியது போன்றிருந்தது.

என் மனம் தெளிவாக எனக்குப் புரிந்ததால் இப்படித் தோன்றுகிறதோ?

இல்லை உண்மையிலேயே அப்படித் தானா?

ராகவனுக்கு மைதிலியிடம் தொலைபேசியிலோ, 'சாட்' மூலமாகவோ தன் மனதைச் சொல்வதில் விருப்பமில்லை.

இதுநாள் வரையில் தங்கள் புகைப்படத்தை மற்றவருக்கு அனுப்பவோ இல்லை தொலைபேசி

எண்ணை பரிமாறிக் கொள்ளவோ இருவருமே முயன்ற தில்லை.

இனி, அப்படி இருக்க முடியாது. முக்கிய ஐ.பீ.எஸ். தேர்வு எழுதுமுன் சொல்லிவிட வேண்டியது தான்.

இதையே நினைத்து மனதை உழப்பிக் கொண் டிருந்தால் மனதை ஒரு நிலைப்படுத்தி படிக்க முடியா தென்று எண்ணியவன், தலையைக் குலுக்கிவிட்டுக் கொண்டு வேறு வேலைகளில் கவனம் செலுத்தினான்.

அவனுடைய மனதை மைதிலியிடம் சொல்ல ஒரு சந்தர்ப்பமும் ராகவனுக்கு அமைந்தது.

ஒருமுறை இணையத்தில் அரட்டையின் போது மைதிலி, ''ராகவன்! உங்களுக்கு ட்ரைனிங் எத்தனை மாசம் இருக்கும்? எங்கே போடுவாங்க?''

''ஹைதராபாத்தில் இருக்கும் மைதிலி. ஆறிலிருந்து ஒன்பது மாசம் வரைக்கும் இருக்கலாம்.''

இரண்டு பக்கத்திலும் சிறிது நேரம் மௌனம் நிலவ, ''தமிழ்நாடு போலீசும், மகாராஷ்டிரா போலீசும் தான் ரொம்ப பெஸ்ட்ன்னு கேள்விப் பட்டிருக்கேன். ஏன் அப்படி? எல்லோரும் ஒரே ட்ரைனிங் எடுத்துட்டு தானே போஸ்ட் எடுக்கறாங்க?''

''ம்ம்... போஸ்டிங் எடுக்கிற வரை ஒரே பயிற்சி தான். ஆனால் இந்த ரெண்டு ஸ்டேட்டும் அப்புறமும் கூட நிறைய ட்ரைனிங் எடுக்கிறாங்க. குறிப்பாக அட் லாண்டா சிட்டி போலீஸ் கிட்ட இருந்து ட்ரைனிங் எடுத் துக்கிறாங்க.''

''உங்களுக்கே இங்கே தமிழ்நாட்டிலேயே போஸ்டிங் கிடைச்சுடும் இல்ல ராகவன்?'' தனது அடுத்தக் கவ லையைக் கேள்வியாகக் கேட்டாள் மைதிலி.



''மைதிலி! முதலில் நான் அடுத்து வர்ற மெயின் எக்ஸாம், அப்புறம் இன்டர்வ்யூ எல்லாம் நல்லா செய்து பாஸ் செய்யணும். அதுக்குப் பிறகு தான் மற்றதெல் லாம், ஐ.பீ.எஸ். ஆபீசரா ஆகணும் என்பது சின்ன வயசிலிருந்து எனக்கிருக்கிற கனவு. அது நிறைவேற... நீ தான் எனக்கு ஹெல்ப் செய்யணும். செய்வே தானே மைதிலி?''

''சின்ன வயசிலிருந்தா... அப்போ என்ன இப்போ நீங்க குடு குடு கிழமா? இருபத்து மூணு வயசுன்னு தானே சொன்னீங்க?''

''ஜோக்கா? எனக்கு சிரிப்பே வரலை!''

''ப்ச்! என்ன ராகவன்! உங்களுக்கு நான் என்ன ஹெல்ப் செய்ய முடியும்?''

''உன்னால மட்டும் தான் முடியும் மைதிலி. என்னால உட்கார்ந்து படிக்க முடியலை. கவனம் வேறே எங்கெங் கேயோ போகுது. இது மாதிரி எனக்கு கவனம் சிதறினதே கிடையாது மைதிலி.''

''....''

மைதிலிக்கு இங்கே 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது. இவன் என்ன சொல்ல வருகிறான்?

''ஒரு வேலையை செய்ய உட்கார்ந்தால் அதில் முழு மனசோடு ஈடுபடுவேன். இப்போ அது முடியலை.''

''........''

''ப்ரிலிம்ஸ்க்கு முன்னாடியும் இப்படி இருந்தது. ஆனால் இப்போ இன்னமும் மோசமா இருக்கு. இப்படியே போய்க்கிட்டு இருந்தால் ரொம்ப கஷ்டம் மைதிலி.''

உன்னோடு 'சாட்' மூலம் பேசுவதால் என் கவனம் சிதறுகிறது.. இனி இதை நிறுத்தி விடலாம் என்கிறானா?

முடியுமா தன்னால்?

''மெயின் எக்ஸாமிற்கு அப்புறம் இதைப் பற்றி யோசிக்கக் கூடாதா ராகவன்? ப்ளீஸ்...?''

''அதுவரை எல்லாம் தாங்க முடியும்னு தோன்றலை மைதிலி. அப்புறம் எக்ஸாம் கூட என்னால ஒழுங்கா எழுத முடியாம போகலாம்.. அது ஓகேவா உனக்கு?''

அவன் இலட்சியத்தைக் கெடுக்கும் வேலையை, அதுவும் அவன் மீது அக்கறை கொண்டவன் செய்யலாமா?

அவன் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கலாமா?

''உங்... உங்க இஷ்டம் ராகவன்.''

''ரியலி?!''

''ஹப்பா... இப்ப தான் எனக்கு மூச்சே வந்து இருக்க. எங்கே? எப்போ நாம மீட் செய்யலாம்னு சொல்லு. இது உன்னிஷ்டம்'' சந்தோஷமாகப் பதில் தட்டி அனுப்பினான் ராகவன்.

நேரில் சந்திப்பதா? இதற்குத் தான் இத்தனை பீடிகை போட்டானா?

நேரில் சந்திப்பதைக் குறித்து லேசாக எழுந்த தயக்கத்தை உதறித் தள்ளிய மைதிலிக்கு முகம் பூவாக மலர்ந்தது.

அதன் பிறகு இருவரும் கலந்து எங்கே, எப்போது சந்திப்பதென முடிவெடுத்தனர்.



அந்த நாளை எண்ணி கனவுகள் காணும் போதே இதை அம்மாவிடம் சொல்ல வேண்டுமே? எப்படி எடுத்துக் கொள்வாரோ? அவர் என்ன சொல்வாரோ என்ற எண்ணமும் மைதிலிக்கு கூடவே எழுந்தது.

# 6



மைதிலி கலக்கமடைந்த மாதிரியே அவளது அன்னை வளர்மதி சந்திப்பு குறித்து எதிர்ப்பு தெரிவித்தார்.

ஆழ்ந்த மௌனத்தை உடைத்த வளர்மதி மகளிடம், ''நீ ராகவனைப் பார்க்க போறது எனக்கு சரியாப்படலை மைதிலி'' என்றார் எடுத்துரைக்கும் விதமாக.

''ராகவன் ரொம்ப நல்ல மாதிரிம்மா.''

''இருந்துட்டுப் போகட்டும்!''

''என் மேலே உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?'' மன்றாடும் குரலில் வினவினாள். அந்தக் குரலில் ஏமாற்றமும், கோபமும் கூட கலந்திருந்தது.

''இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்றது இருக்கட்டும் மைதிலி. முதலில் என் கேள்விக்கு நீ பதில் சொல்லு. உனக்கும், ராகவனுக்கும் இடையில் என்ன மாதிரி ரிலேஷன்ஷிப்?''

''....?''

''இதுக்கு உனக்குப் பதில் சொல்ல முடியாதில்லையா? நட்புக்கு மேலே, காதலுக்குக் கீழே... அப்படி இப்படின்னு ஏதாவது சமாதானம் சொல்லக்கூட முயற்சி செய்யலையா நீ?''

''உங்களுக்கு எல்லா விஷயமும் தெரியுமேம்மா?''

''அப்படியா?'' என்று புருவம் உயர்த்தியவர்,

''ஒரு நாளைக்கு சாட் ரூம் பக்கம் எட்டிப் பார்க்கலை என்றால் ரெஸ்ட்லெஸ்ஸா இருக்கிற விஷயம் தெரியாதே! வீட்டில் இன்டர்நெட் கனெக்ஷன் பிரச்சனை என்றால் என்ன நிலைமைன்னு தெரியாது தான்! இதோ இப்போ கூட ராகவனுடன் என்ன மாதிரியான ரிலேஷன்ஷிப் என்று கேட்டால் பதில் சொல்ல முடியாத அளவுக்கு ஒரு குழப்பத்தில் என் பொண்ணு இருக்கிறாள் என்று கூடத் தெரியாது'' வளர்மதி தன் பெண்ணிடம் கண்டிப்பு காட்டாமல் நிலைமையை விளக்கினார்.

''குழப்பம் எல்லாம் இருக்கும்மா. அது நேரில் பார்த்தால் கொஞ்சம் தெளிவாகலாம்... அதுக்குத் தான் கேட்கிறேன்'' மெல்லிய குரலில் விளக்கம் தந்தாள் மைதிலி.

''முதலில் உன் மனசை போட்டுக் குழப்பிக்காமல் தெளிவான மனநிலைக்கு வா மைதிலி. நீ எடுக்கும் முடிவு எல்லாருக்கும் சந்தோஷத்தைத் தரணும். ஒரு அம்மாவா இதுவரையில் உன்னை சரியான பாதையில் தான் வழிநடத்தி இருக்கேன். உன்னுடைய சுதந்திரத்தை எந்த வகையிலும் நாங்க ரெஸ்ட்ரிக்ட் செய்தது கிடையாது'' மகளது தலையை அன்புடன் கோதியபடியே அறிவுரைத்தார்.



''நீங்க நான் எடுத்த முடிவு தப்புன்னு நினைக்கறீங்களாம்மா?''

''நீ என்ன முடிவு எடுத்தாலும் கண் மூடித்தனமான அதை நான் ஒத்துக்கணும்னு நீ நினைக்கிறியா மைதிலி?''

''நீங்க என்னை ரொம்ப குழப்பறீங்க.''

''நான் தெளிவா தான் இருக்கேன். நீ தான் குழப்பத்தில் இருக்கே. அப்படி இருக்கிறதால் தான் உன்னால் என் கேள்விகளுக்கு ஷார்ப்பா பதில் சொல்ல முடியலை.''

''....''

''நீ எடுக்கிற முடிவு சரின்னு பட்டால் என்னை கன்வின்ஸ் பண்ணு. நான் சிம்பிள் கேள்விகளைத் தானே உன்னிடம் கேட்கிறேன்.''

''எனக்கு கொஞ்சம் யோசிக்க டைம் வேணும்மா'' என்று பேச்சை முடித்த மைதிலி இது குறித்து ராகவனிடமே தெளிவு பெற அவன் உதவியை நாடினாள்.

அன்று இணைய தளத்தில் மைதிலி தன்னுடன் சரியாகப் பேசாதது கண்டு, ''வாட் இஸ் ஈட்டிங் யூ மைதிலி?'' என்றான் அக்கறையுடன்.

''கொஞ்சம் யோசனையாவே இருக்கு. அம்மாவிடம் இன்றைக்கு நம்ம மீட் பண்ணப் போறதைப் பற்றி பேசினேன். அவங்க...'' தயக்கம் காட்டினாள் மைதிலி.

''எதுவா இருந்தாலும் சொல்லும்மா. வேண்டாம்னு சொல்லிட்டாங்களா?'' அந்தத் தருணத்தில் ராகவனின் வாடிய முகம் மைதிலிக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

"இல்லை; அவங்க அந்த மாதிரி எதுவும் சொல்லலை ஆனால்..."

ஒரு நிம்மதிப் பெருமூச்சை வெளியேற்றியபடி, "ஆனால்? ஆனால் என்ன?" என்றான்.

"அவங்க கேட்ட கேள்விக்கு என்னால் எந்தப் பதிலும் சொல்ல முடியாமல் குழப்பம்" இப்பொழுது பகிர்வதில் எந்தத் தயக்கமுமில்லை மைதிலிக்கு.

"ஏன் மைதிலி? என்னாச்சு?"

"நம்ம ரெண்டு பேருக்கும் நடுவில் என்ன ரிலேஷன் ஷிப் என்று தான் அம்மா கேட்டாங்க. ஆனால் இதற்கான பதில் தான் எனக்கு சொல்லத் தெரியலை. உங்களிடம் கேட்கலாம்னு தான்...?" அவனுக்காவது இதற்கான விடை தெரிகிறதா என்று நினைத்து மைதிலி கேட்டாளோ?

ராகவனைக் கட்டாயம் அந்த கேள்வி திகைப்படையச் செய்தது.

இரண்டு நிமிடங்கள் திரையில் எந்த சலனமும் இல்லாமல் இருக்கவும் மைதிலி, "யூ தேர்?" என்று வினவினாள்.

"ய்யா!" என்று மேலும் சில நொடிகள் தயங்கிய ராகவன், "இந்தக் கேள்விக்கான பதிலைத் தெளிவாக்கிக் கலாம்னு தான் நேரில் கூப்பிடறேன் மைதிலி" என்றான்.

நெஞ்சம் படபடக்க, "நேரில் பார்க்கிறதுக்கு முன்னாடியே தெளிவாகிக்கலாமே ராகவன்?" என்று வினவினாள்.

மைதிலியின் பேச்சில் இருந்த நியாயத்தை உணர்ந்த தாலோ என்னவோ சற்றே தயக்கத்துடன், "நமக்குள் இருக்கிறது ப்ரெண்ட்ஷிப் மட்டும் இல்லைன்னு நீ அக்ரீ பண்ணிக்கிறியா?" என்று தொடங்க,



"எஸ்.அக்ரீட்" என்று ஆமோதித்தாள் மைதிலி.

"ம்ம்... நமக்குள் இருக்கிற உறவு காலம் முழுக்க நிரந்தரமா இருக்கணும்னு ஆசைப்படறேன். அதைப் பற்றி பேச தான் நேரில் பார்க்கலாம்னு சொன்னேன்" அவன் வார்த்தைகளில் வெளிப்பட்ட உணர்வை மைதிலியால் புரிந்து கொள்ள முடிந்தது.

"காலம் முழுக்க நிரந்தரமான்னா...?" தெரிந்தும் தெரியாதது போல வினவினாள்.

"நிரந்தரமான்னா... நிரந்தரமா. காலம் முழுக்க நீ காண்பிக்கிற அன்பு, அக்கறை, நட்பு, பாசம், கூடவே காதல்... எல்லாம் வேணும் மைதிலி. நீ எனக்கு வாழ்க்கைத் துணையா வர உனக்குச் சம்மதமா?" என்றான் ராகவன்.

எதிர்பார்த்ததே என்றாலும் அவன் நேரடியாக வினவும் பொழுது திக்கு முக்காடிப் போனாள் மைதிலி. பகலவனைச் சூழ்ந்திருந்த மேகம் விலகி புது ஒளி பாய்வது போல் இதுவரை இருந்த குழப்பமெல்லாம் நீங்கி புத்துணர்ச்சி பெற்றதொரு பூரிப்பு.

"நீ இருக்கியா மைதிலி?" எந்த பதிலும் வராதது கண்ட ராகவன் பதட்டம் கொண்டான்.

"ம்! சொல்லுங்க ராகவன்..."

"நான் சொல்ல வேண்டியதெல்லாம் சொல்லிட்டேன். இனிமேல் நீ தான் சொல்லணும்" என்றான் எதிர்பார்ப்புடன்.

'எப்படிச் சொல்வது?' என்று யோசித்த மைதிலி, "இதைச் சொல்லவா நேரில் கூப்பிட்டீங்க?" என்று கேட்டாள்.

''உன்னுடைய கேள்வியெல்லாத்துக்கும் அப்புறம் பதில் சொல்றேன். நீ எனக்கு இப்ப ஒரு பதிலைச் சொல்லேன் மைதிலி. ப்ளீஸ்...''

''நான் நோ சொன்னால் என்ன செய்வீங்க ராகவ்?''

''நீ அந்த மாதிரி சொல்ல மாட்டாய்ன்னு எனக்குத் தெரியும்'' அவனிடமிருந்து பதில் உறுதியாக வந்தது.

''அவ்வளவு நம்பிக்கை இருக்கும்போது இப்போ மட்டும் எதுக்காக பதில் சொல்லிட்டு மற்றதைப் பேசுங் கன்னு சொல்றீங்களாம்?''

''நான் நினைச்சதையே நீ உறுதி செய்யும் போது கிடைக்கிற சந்தோஷத்துக்காகத்தான்!'' என்று அனுப்பி விட்டு புன்னகைக்கும் ஸ்மைலி ஒன்றை அனுப்பினான்.

'என்னை இந்த அளவிற்குப் புரிந்து வைத்திருக் கிறானா?' என்று பெருமிதம் கொண்ட மைதிலி, உங்க வாழ்க்கைத் துணையா வர்றதில் முழு சம்மதம் ராகவ்'' என்று ஒப்புதல் தந்தாள்.

''ஐ லவ் யூ சோ மச் எம்.எம்!'' என்றான் உருக்கமாக.

''ஐ லவ் யூ டூ. சரி... அதென்ன எம்.எம்?'' முன்பை விட ராகவனிடத்தில் மைதிலிக்கு உரிமை எழுந்தது.

''இதையாவது நேரில் சொல்றேனே மைதிலி?''

''நெட்டில் தானே பிள்ளையார் சுழி போட்டோம். அதிலேயே சொல்றதுக்கு என்னவாம் ராகவ்?''

''என் லவ்வை சொன்ன நிமிஷமே உன் முகத்தை நேரில் பார்க்கணும். அதில் பிரதிபலிக்கிற உணர்வுகளை மனசில் பூட்டி வைச்சுக்கணும்ன்னு ஆசையா இருந்தது. அதே மாதிரி தான் எம்.எம். பற்றியும்... போதுமா?''



''சமாளிக்க உங்களுக்கு சொல்லித் தரணுமாக்கும்?''

''ஹா... ஹா! இப்போவே இந்த அலுப்பா உனக்கு?''

இருவரும் தொடர்ந்து மணிக்கணக்கில் பேசிவிட்டு மனமேயின்றி விடைபெற்றனர். மைதிலியின் முகத்தில் வாய்கொள்ளா புன்னகை நிலைத்திருந்தது.

ராகவனிடம் தன் விருப்பத்தைச் சொல்வதற்கு முன் அம்மாவிடம் பேசி இருக்கலாமோ? எப்படி இது சாத் தியமானது?

ஏதோ ஒரு விஷயத்திற்குக் கருத்து கேட்கவில்லை என்றால் கூட பரவாயில்லை; வாழ்வின் ஒரு முக்கிய மான முடிவை அவரிடம் பேசாமல் எப்படி எடுத்தேன்?

சிறிது சிறிதாகத் தலைத்தூக்கிய குற்ற உணர்வு மனதை முழுவதுமாக ஆக்கிரமிக்க, தாயிடம் சென்று உடனே இந்த விஷயத்தைப் பற்றி பேசுவது என முடி வெடுத்தாள்.

எடுத்தவுடன் ராகவனிடம் விருப்பத்தை சொல்லி விட்டதாகச் சொல்லாமல் தயக்கத்துடன், ''அம்மா! எனக்கு ராகவனை ரொம்பப் பிடிச்சிருக்கும்மா. ஐ அம் இன் லவ் வித் ஹிம் மா!'' என்றாள்.

''என்னடா சொல்றே? நீ எல்லா விஷயத்திலும் நாலு விதமா யோசிச்சு தானே முடிவெடுப்பே? இப்போ என்ன எடுத்தோம் கவிழ்த்தோம்ங்கிற மாதிரி வந்து நிற்கிறே?'' தன் மகளது வாழ்க்கை சம்பந்தப்பட்டது என்பதால் கூடுதல் படபடப்பு வெளிப்பட்டது வளர்மதியின் பேச் சில்.

''என்னம்மா இப்படிச் சொல்றீங்க? எனக்குப் பிடிச் சிருக்குன்னு நல்லா யோசிச்சு தானே முடிவெடுத்தேன்.''

''சரி! நீ யோசிச்சதாவே இருக்கட்டுமே!'' என்ற வளர்மதி.

''அந்த ராகவனைப் பற்றி உனக்கு என்னம்மா தெரியும்? ஆணா? பெண்ணா? சைக்கோவா?'' என்று கேள்விகளை அடுக்கியபோது,

''அம்மா!'' என்ற தன் மகளது அலறலில் நிறுத்தினார்.

''சைக்கோ... அந்த மாதிரியெல்லாம் சொல்லாதீங்கம்மா'' என்றபோது மைதிலியின் கண்களில் லேசாகக் கண்ணீர் துளிர்த்ததோ?

அவளது கண்களில் கலக்கத்தைப் பார்த்த வளர்மதியின் நெஞ்சம் வெகுவாகப் பதறியது.

மகளின் ஈடுபாடு தான் நினைத்ததை விட அதிகமோ?

முதல் நாள் அவள் இணைய தளத்தில் அரட்டை எனும் போதே கண்டிப்பு காட்டியிருக்க வேண்டுமோ?

அன்றே தன் எதிர்ப்பைக் காண்பிக்காமல், மௌனமாக இருந்திருக்கக் கூடாதோ?

உயிருக்கு உயிரான மகளின் வாழ்க்கை சம்பந்தப்பட்ட விஷயமாயிற்றே?

முன்பை விட தன் பேச்சில் கவனத்தைக் கூட்டி, ''சரி! அப்படிச் சொல்லலை. உன் வாழ்வு சம்பந்தப்பட்ட அக்கறை எனக்கு இருக்குடா. உனக்கு இந்த உலகத்தைப் பற்றின அனுபவம் ரொம்ப குறைவு மைதிலி. முன்னே பின்னே பார்க்காத ராகவனை நல்ல மாதிரின்னு எந்த அடிப்படையில் நம்பறது?'' என எடுத்துரைத்தார்.





''எனக்கும், ராகவனுக்கும் நல்ல புரிதல் இருக்கு. வாழ்க்கையில் ஜெயிக்கணும்னு லட்சியம் மட்டுமில்லை கேலிபர்-ம் இருக்கு. இதைத் தவிர நீங்க வேறென்ன தேவைம்மா?''

''நட்பு என்பது நீங்க ரெண்டு பேரும் மட்டும் சம்பந்தப்பட்டது. ஆனால் காதல் என்ற விஷயம் ரெண்டு குடும்பத்தையும் இணைக்கிற ஒரு விஷயம். உனக்கு அவங்க குடும்பம் பற்றி ஏதாவது தெரியுமா?''

''ராகவன் நல்லவரா இருக்கிறதுக்கு அவங்க குடும்பம் நல்ல மாதிரியா தானே இருக்கணும்?''

புன்னகை உதிர்த்த வளர்மதி, ''ஏன்? சேற்றில் முளைத்த செந்தாமரைன்னு கூட தான் வாதம் செய்யலாம்'' என்று வருத்தத்துடன் சொல்லிவிட்டு, ''சரி அதை விடு. குடும்பம் பற்றி எல்லாம் பேசறதுக்கு முன்னாடி ராகவனைப் பற்றி பேசறதுக்கே நிறைய இருக்கேடா. நீ நேரில் அவரைப் பார்த்திருக்கியா?'' எனறார்.

''ஆனால் அதற்கான அவசியம் என்ன?''

மைதிலி இப்படி கண்மூடித்தனமாக இருப்பது வளர்மதியின் வயிற்றில் புளியைக் கரைத்தது.

''இதுவரையில் அவசியம் வரலை. ஆனால் இனிமேல் உங்களுக்கே அவசியம்னு ஆயிடுச்சே. அதனால் தானே மீட் பண்ணனும்னு ஆசைப்படறீங்க?''

''அதனால்...'' என்று மறுத்துப் பேசத் தொடங்கியவளுக்கு அந்த வாக்கியத்தை முடிக்க முடியவில்லை.

'அதனால் தானே ராகவன் இந்த விஷயத்தைத் தொடங்கியது?' என்று மைதிலியின் சிந்தனை ஓட்டம் தொடங்கியது.

''கருப்பா, சிவப்பா, குள்ளமா, உயரமா என்று உனக்கு முக்கியமில்லாமல் இருந்திருக்கலாம்; ஆனால் இனி மேல் அதே மாதிரி நிலை இருக்குமான்னு சொல்ல முடியாதே?''

''இரு...க்கும்...மா.''

''உனக்கு இருக்கும்னே வைச்சுப்போம். அங்கே ராகவனுக்கு?''

''... இரு...க்க்....கலா...ம்.'' - ஏன் தான் அந்த நொடியில் அவள் வார்த்தைகள் உறுதியாய் வரவில்லையோ?''

''இப்போ நடப்பெல்லாம் உனக்குத் தெரிஞ்சு பேசறியா... இல்லை தெரியாமல் பேசறியான்னே தெரியலை'' என்று விட்டு ஷோபாவின் வீட்டில் பேசியது போன்று தன் பங்கிற்கு செய்திகளில் வரும் ஒரு சில விஷயங்களை மைதிலியிடம் பகிர்ந்து கொண்டார்.

மைதிலியும் அந்த விஷயங்களைத் தெரிந்து வைத்திருந்தாள் என்றாலும், ''ஏன்மா? ரெண்டு நாளைக்கு முன்னாடி நான் ஒரு விஷயத்தைப் பார்த்தேன். இன்டர்நெட் மூலமா பழகியதில் விரும்பி, காதல் ஏற்பட்டு ஒரு மாற்றுத் திறனாளி பெண்ணை வெளிநாட்டு இளைஞர் ஒருத்தர் கல்யாணம் செய்திருக்கிறார். மனம் ஒத்து வந்ததற்குப் பிறகு வேறெந்த விஷயமும் அவர்கள் காதல் கை கூடத் தடையா இல்லை. அதை கூட உதாரணமா நான் சொல்லலாமே?'' என்று விளக்கினாள்.

''அப்போ ராகவன் இருபதோ, நாற்பதோ எப்படி இருந்தாலும் உனக்கு ஓ.கே. அதைத் தான் சொல்ல வர்றே இல்லையா?''



''தேவையில்லாமல் வீணா எனக்கு பயம் காட்றீங்க!''

''ம்ஹ்ம்! இப்படி சொன்னால் நான் என்ன சொல்றது? அப்போ கல்யாணம் போது மீட் செய்துக்க வேண்டியது தானே?'' என்று வினவினார் மகளிடம்.

''எங்களுக்கு மீட் செய்யணும்னு ஆசையே வரக் கூடாதா? நாங்களும் ஒரு நார்மல் மனுஷங்க தானேம்மா?'' என்று தன் தரப்பு விளக்கம் தந்தாள்.

''அதாவது காதல் என்ற விஷயத்திற்கு உருவம் அவசியப்படுது இல்லையாடா?'' என்று தூண்டில் போட்டார் வளர்மதி.

''அப்படி இல்லைம்மா. நான் எப்படி இருந்தாலும் ராகவனுக்கே ஓ.கே. அதே மாதிரி தான் எனக்கும்.'' விடாப்பிடியாய் இருந்தாள் மைதிலி.

''அப்படின்னா நான் சொல்ற மாதிரி உன்னால் செய்ய முடியுமா?'' சவால்விடும் தொனியில் கேட்டார் தாய்.

''என்ன செய்யணும்? இந்த விஷயத்தைப் பற்றி என் முடிவை மாத்திக்கிறதைத் தவிர...'' மைதிலியின் குரலில் இருந்த உறுதி வளர்மதியைக் கலக்கமடையச் செய்தது.

''ரெண்டு பேரும் ஒரு பொது இடத்தில் மீட் பண்ணுங்க. ஆனால் மைதிலி என்ற பெயரில் வேறொரு பெண்ணை அறிமுகப்படுத்தி, கொஞ்ச நேரமாவது பேச வைக்கணும். ராகவனுடைய ரியாக்ஷன் எப்படி இருக்குன்னு ஒரு சின்ன டெஸ்ட். அவ்வளவுதான்'' என்று தன் யோசனையைப் பகிர்ந்தார்.

''இது தப்பும்மா...'' என்றாள் தயக்கத்துடன்.

''ஏன்? உன்மேல் நம்பிக்கை இல்லையா?'' என்று வளர்மதி போட்ட தூபமும், தோழிகளுடன் நடந்த விவாதத்தின் விளைவாகவும் மைதிலியிடம் அவளது தாயின் யோசனை எடுபட்டது.

ஆனால் அந்த யோசனையின் விளைவாக ராகவனுக்கு ஆத்திரம் பொங்கியது.

மிகவும் எதிர்பார்ப்புடன் நேரில் சந்தித்த தினத்தன்று ராகவனை சந்திக்கப் போவதை எண்ணி சந்தோஷம்,

ஆள் மாறாட்ட சோதனை என்று திட்டமிட்டதிலிருந்து அதை முழுதாகச் செயல்படுத்த முடியுமா என்ற பதட்டம்,

அதையும் தாண்டி உள்ளுக்குள் எழுந்த குறுகுறுப்பு என அவள் மனதிலிருந்த கலவையான உணர்வுகள், முகத்தில் வெளிக்காட்டாத கவனத்துடன் காபி ஷாப்பிற்குச் சென்றாள் மைதிலி.

தன் தோழியை அழைத்துக் கொண்டு சென்றவள் தயங்கியபடியே சுற்று முற்றும் பார்த்துக் கொண்டிருக்க, அங்கிருந்தவர்களில் இவளையே பார்த்தபடி கண்களில் ஆசை நிரம்ப கையசைப்பது ராகவனா? ஏற்கனவே சொன்ன மாதிரி நீல நிற சட்டையில் தான் வந்திருந்தான்.

மைதிலி, தான் பச்சை நிற உடையில் சந்திக்க வருவதாகக் குறிப்பிட்டிருந்தாள். அதன் படியே தன் தோழியை பச்சை நிற உடையில் தயார் செய்து அழைத்து வந்திருந்தாள்.

முழு பச்சை நிற உடையில் தன்னுடன் வருபவளைச் சட்டை செய்யாமல், இப்படி பச்சை - சிகப்பு வர்ண





கலப்பில் வரும் தன்னையே ராகவன் பார்க்கிறானே என ஆச்சரியமடைந்தாலும் அதனால் துளிர்த்த ஆனந்தத்தை மைதிலி மறுப்பதற்கில்லை.

அவனிருந்த மேஜையை அடைந்த பிறகு, மைதிலியின் தோழி அவளை மைதிலி என்று ராகவனிடம் அறிமுகப்படுத்திக் கொள்ள, மைதிலியோ தன்னை ''ஜானகி'' என்று சொல்லிக் கொண்டாள்.

அப்படி அவள் அறிமுகப்படுத்தியதும் ராகவனின் முகம் இருண்டு, வெளிறிய மாதிரி தோன்றியது இவளது பிரமையோ?

சில நொடிகள் நீண்ட தர்ம சங்கடமான மௌனத்தைக் கலைக்கும் பொருட்டு, தொண்டையைச் செருமிக் கொண்டு, ''சோ... கடைசியா 'வின் இந்தியா'வும், 'ஜெய் ஹோ'வும் மீட் பண்ணியாச்சு போல?!'' என்று சாதாரணமாய் தொடங்கினான் ராகவன்.

மைதிலியின் தோழிக்கு இவர்களின் அறிமுகப் பேச்சு பற்றி எதுவும் தெரிவிக்கப்படாததால், அவள் சிரித்தபடி மழுப்ப முயல, ''வெற்றி கூட்டணி அமைய பிள்ளையார் சுழி ஏற்கனவே போட்டாச்சா?'' என்று எதுவும் தெரியாத பாவனையில் கேட்டாள் ஜானகி என்கிற மைதிலி.

மூன்றாவது நபரின் முன்னிலையில் தனிப்பட்ட எந்த விஷயத்தையும் பேச முடியாது என்றெண்ணியதாலோ என்னவோ முதன் முறை அறிமுகமாகும் ஒரு நபரிடம் என்ன பொதுவான விஷயங்கள் பேச முடியுமோ அதை மட்டுமே பேசினான் ராகவன். அதையும் பேசுவதற்குள் நூறு முறை தொண்டையைச் செரும வேண்டியிருந்தது அவனுக்கு.

காபி ஷாப்பில் இருந்த கூட்டம், சென்னையில் அடித்த வெயில் என்று எதைப் பேசினாலும் அவனது பார்வை ஒருமுறை தன் கூட தன் தோழியின் புறம் செல்லாததைக் கவனித்துக் கொண்டே தான் இருந்தாள் மைதிலி. ஆனால் அவ்வப்பொழுது அது தன்னைத் தீர்க்கமாகப் பார்த்து அவசரமாக விலகிச் செல்வது போல் தோன்றவும், மைதிலிக்குள் ஏதோ இனம் புரியாத ஆனந்தம் பெருகியது.

அதன் பின் தொடர்ந்த நிமிடங்களில் ராகவனின் பேச்சுக்கும், கேள்விகளுக்கும் மைதிலியின் தோழி பதிலே பேசாமல் மழுப்ப பார்க்க, பெரும்பாலான நேரங்களில் உடனிருந்த மைதிலியே பதில் பேச என்று... ராகவன் எப்படி உணர்ந்தானோ? அவனின் பார்வை அவனருகில் வீற்றிருந்த இரு பெண்களைத் தவிர்த்து, சுவற்றில் இருந்த மெனு, வாசல் என்றது அலை பாய்ந்தது.

புத்தியையும், புலன்களையும் கூராக்கிக் கொண்டு தொடக்கத்திலிருந்து ராகவனை நோட்டம் விட்ட மைதிலியிடம் அவனது விநயம் மிகுந்த பேச்சும், உணர்ச்சியைக் காட்டாத கண்ணியமான பார்வையும் நற்சான்றிதழைப் பெற்றதோடு நூற்றுக்கு நூறு மதிப் பெண்களும் பெற்றன.

முகம் காணாமல் அரட்டை அடிக்கும்போது ராகவன் தேவையற்ற புகழ்ச்சி வார்த்தைகளைப் பயன்படுத்தி கவர்பவனில்லை என்பது எவ்வளவு உண்மையோ, அது அப்படியோ நேரில் சந்தித்துப் பேசும் போதும் பொருந் திற்று.



வயதுக்கே உரிய கிளர்ச்சியிலும், இன்றைய திரைப் படங்களின் பாதிப்பிலும் காதல் என்ற பெயரில் எந்த விதமான போலி வர்ணனைகளையோ, வசனங்களையோ, ஏன்... சாதாரண கேலிகளைக் கூட பேச முயலவில்லை ராகவன்.

அரட்டை அடிக்கும்போது கூட இதெல்லாம் உனக் குத் தெரியும் தானே? இந்தக் குணங்களால் தானே அவனிடம் காதல் வயப்பட்டால் என்று மனசாட்சி கேள்வி யெழுப்பியதோடு அவனிடம் நாடகத்தைக் கலைத்து உண்மையை விளம்பவும் மைதிலிக்கு உடனே ஆணைப் பிறப்பித்தது.

எதிரிலிருந்த 'மைதிலி'யுடன் தானோ, இல்லை தன்னுடன் 'மைதிலி'யோ இயல்பாகப் பேச முடியாமல் இருக்கவும், ஒருநிலைக்கு மேல் பொறுக்காமல், தலையை உலுக்கிக் கொண்டு, 'வின் இந்தியா'வும், 'ஜெய் ஹோ'வும் கம்ப்யூட்டர் முன்னாடி தான் நல்லா பேசுவாங்க போல! அவங்களுக்கு நேரில் சந்திக்கிறது அத்தனை ராசி இல் லையோ என்னவோ?'' என்றான் எங்கேயோ பார்த்துக் கொண்டு.

அவனது கேள்விக்கு விடையாக ஆர்டர் செய்திருந்த காபியை பருகுவது போல் பாசாங்கு செய்ததுடன் அரு கிலிருந்த மைதிலியிடம், 'இன்னுமென்ன தயக்கம்?' என்பது போல் அர்த்தப் பார்வை வீசினாள் எதிரில் அமர்ந்திருப்பவள்.

அவளது பார்வையில் ராகவன் என்ன நினைத் தானோ?

தனது தவிப்புக்குக் காரணமான பெண் தான் இப் பொழுது 'மைதிலி' இயல்பாய் பேசுவதற்கும் தடையாக

இருக்கிறாள் போல என்ற நினைப்பில் நீண்ட பெருமூச்சு ஒன்றை வெளியேற்றினான்.

அவன் எத்தனை கனவுகளோடு மைதிலியை நாடி வந்திருப்பான்...? இங்கே என்னவோ அவளைக் கண்டு பொங்க வேண்டிய உணர்வுகளும், ஒத்த மனம் கொண்ட அலைவரிசையும் அவளது தோழியிடம் தோன்றுவது தான் விந்தை!

இனக்கவர்ச்சிக்கும், காதலுக்கும் வித்தியாசம் தெரியாத முட்டாளில்லையே அவன்! ஆனால் இந்த சந்திப்பில் அவனது உள்ளுணர்வுக்கும், நடப்பிற்கும் பொருந்தாத ஒரு சித்திரவதையை அனுபவித்துக் கொண்டிருந்தான் ராகவன்.

இந்த அவஸ்தையிலிருந்து விரைவில் விடுபட எண்ணி, ''மிஸ். ஜானகி! தப்பா எடுத்துக்காதீங்க. ரொம்பவே எதிர்பார்ப்போட இன்றைக்கு மீட் பண்ண வெயிட் பண்ணிட்டு இருந்தேன். ஆனால்... உங்க பிரெண்ட் கூட ஒரு அஞ்சு நிமிஷம் தனியா பேசலாமா? என்னை நம்பலாம்...'' என்று நாகரீகமான முறையில் அனுமதி கோரினான்.

''தனியாகவா?'' என்று தயங்கிய மைதிலிக்கு அங்கிருந்து கிளம்ப மனமே வரவில்லை.

ராகவன் அப்படிச் சொல்வதைக் கேட்டு தன்னை எப்படி அவன் மூன்றாவது மனுஷியாக நினைக்க முடியும் என்று உள்ளம் வலித்தது.

இத்தனை நேரம் 'எப்படி உண்மையைச் சொல்வது?' என்று தவித்தவளுக்கு இனியும் சொல்லாமல் தொடர விருப்பமிருக்கவில்லை. தனிமையில் அவளது ராகவன்



தன் தோழியிடம் அவனுடைய காதலை வெளிப்படுத்தினால்...?

தன்னிடம் அவன் நேரில் சொல்ல விரும்பிய ஐ லவ் யூவும், எம்.எம். என்பதற்கான விளக்கமும் அவளிடம் சொல்லிவிட்டால்?

இப்படி ராகவன் ஐந்து நிமிடங்கள் இன்னொரு பெண்ணிடம் தனிமையில் பேசவே கூடாது என்று பொஸஸிவ்வாக இருப்பவள், அவனிடத்தில் இன்னொரு பெண்ணை மைதிலி என்றே அறிமுகப்படுத்தியே இருக்கக்கூடாது.

காலம் கடந்து உதிக்கும் இந்த ஞானோதயம் பயன்படாத விஷயம்!

மெல்ல தயங்கியபடியே, ''தனியா பேசணும் என்றால் நீங்க என்கிட்டே தான் பேசணும்! ஜானகின்னு அறிமுகப்படுத்திக்கிட்ட நான் தான் உங்க மைதிலி...'' என்று உண்மையைப் போட்டுடைத்தாள்.

அவள் அப்படி சொல்வதைக் கேட்ட ராகவனுக்கு ஒரு நிமிடம் ஒன்றுமே விளங்கவில்லை. என்ன சொல்ல வருகிறாள் இவள்...? இவள் மைதிலியா?

அதுவரை ஜானகிக்காகப் பொங்கும் உணர்வுகளுக்காக அவனையே வெறுத்துக் கொண்டிருந்த அவனது மனம், இப்பொழுது வாய்கொள்ளா சிரிப்புடன் தன்னெதிரே அமர்ந்திருப்பவளைக் கண்டதும் வெகுண்டது.

இருவருக்கும் தனிமை கொடுத்துவிட்டு மைதிலியின் தோழி அங்கிருந்து விடைபெற்றுக் கொள்ள, அதுவரை புன்னகையை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தவனின்

முகத்தில் இப்பொழுது நெற்றி நரம்புகள் புடைப்பதைக் கண்ட மைதிலியின் நெஞ்சில் கலக்கம் எட்டிப் பார்த்தது.

அந்த காபி டே மேஜை மீதிருந்த கோப்பையை அவன் உடைத்து விடுவது போல உள்ளங்கையால் இறுக்குவது கண்டு, ''அப்செட் ஆயிட்டீங்களா?'' என்று மெல்ல வினவினாள்.

அவளது பேச்சு ராகவனின் கோபத்தை மேலும் கிளற, ''உன்னுடைய டெஸ்ட் எல்லாம் முடிஞ்சதா இல்லை... இன்னமும் ஏதாவது மிச்ச மீதி இருக்கா?'' என்று வெறுப்பை உமிழ்ந்தான்.

''ரா...''

''பேசாதே நீ! இப்படி சோதனை இருக்குன்னு தெரிஞ்சிருந்தால் சர்டிஃபிகேட் எல்லாம் கூட காண்பிச்சிருப்பேனே? அச்சோ... மிஸ் ஆயிடுச்சே?!'' என்று கிண்டலுடன் சொல்லிவிட்டு,

''இன்னமும் எத்தனை பேர் வைச்சு என்னைச் சோதிக்கப் போறே? நீ மைதிலி தான்னு நான் மட்டும் எப்படி நம்பறது? மாசக்கணக்கில் நெட்டில் பேசியிருக்கோம். அப்போவெல்லாம் வராத நம்பிக்கை... இதோ இப்போ இங்கே ஜானகியா பேசின அரை மணி நேரத்தில் உனக்கு வந்துடுச்சோ?''

''நான் சொல்றதைக் கொஞ்சம் கேட்டுட்டுப் பேசுங்களேன். ப்ளீஸ்!'' என்று கெஞ்சுதலாகச் சொன்னாள் மைதிலி.

அவளது நிலையைப் பற்றிய விளக்கம் கொடுத்தால் ஒருவேளை புரிந்து கொள்வானோ என்ற ஆதங்கம் மைதிலிக்கு!



ஆனால் அதற்கான வாய்ப்பை ராகவன் தந்தால் தானே?

கரகரப்பான குரலில், ''எப்போ உனக்கு என்மேல் வைச்சிருக்கிற நம்பிக்கை போச்சோ, அப்போவே நம்ம ரிலேஷன்ஷிப்புக்கு அர்த்தமே இல்லைன்னு நினைக்கிறேன். இனிமேல் நமக்குள் பேச்செதுக்கு?'' என்று சொல்லிவிட்டு ராகவன் எழுந்து செல்ல, மைதிலி பிரமை பிடித்தவள் போன்று அதே இடத்தில் வீற்றிருந்தாள்.

# 7



ராகவன் கோபித்துக் கொண்டு சென்ற பின், எப்படி, எப்பொழுது திரும்ப அவள் வீடு வந்து சேர்ந்தாள் என்பதே மைதிலிக்கு சிறிதும் நினைவில்லை.

உட்கார இடமில்லாமல் சிலர் வந்து அவளிடம் இடம் கேட்கவும் தான், தன்னுணர்வு பெற்று எழுந்து, ஒரு ஆட்டோவைப் பிடித்து தன் வீட்டை அடைந்தாள்.

நல்லவேளை அப்பொழுது வளர்மதி பிரதோஷம் என்று கோவிலுக்கு போயிருந்தார். இல்லையென்றால் மகள் வந்த நிலையைக் கண்டு துடித்துப் போயிருப்பார்.

வீட்டைத் திறந்து உள்ளே சென்று, கட்டிலில் விழுந்தவளை இன்னமும் ராகவனின் ஆத்திரக் குரலும், முகமுமே சுற்றிச் சுற்றி வந்தது.

நான் எதையோ நினைத்து செய்யப் போக... அது அவளை ரொம்பவுமே காயப்படுத்திவிட்டதோ?

ராகவன் கடைசியாகக் காட்டிய கோபத்திற்கு முன்பு ஒரே ஒரு நொடி அவள் கண்களில் வலி தெரிந்ததோ?

அதற்கு நானே காரணமாகி விட்டேனா? என்று நினைக்கும் பொழுதே மைதிலியின் மூடிய இமைகளி லிருந்து சரசரவென கண்ணீர் வழிந்தோடியது.

ஐ அம் சோ சாரி ராகவன்! ஐ டிட்ன்ட் மீன் டு ஹர்ட் யூ! தெரிந்து செய்தாலும் தெரியாமல் செய்தாலும் இரு வருக்குமே வலிப்பது என்னவோ நிஜம்!

ராகவன் எப்படியும் அவளைத் தொடர்பு கொள்வான் என்ற எண்ணம், மைதிலிக்கு அடுத்து வந்த சில நாட் களில் சுத்தமாக இருந்த இடம் தெரியாமல் போனது.

இல்லை... அவன் என்னைத் தொடர்பு கொள்ள மாட் டான். ரொம்பவும் கர்வம் பிடித்தவன்!

அதை எப்படி கர்வம்னு சொல்றது மைதிலி? அவ னுக்குத் தன்மானம், ரோஷம் எல்லாம் கொஞ்சம் அதிகம்னு உனக்கு முன்னாடியே தெரியும் தானே?

ஒரு சமயம் இணையத் தளத்தில் ஏதோ விளையாட் டாக, ''உங்களுக்கு என்னப்பா? அதான் இப்ப எல்லாம் நீங்க இந்த 'நெட்லேயே' நெட்டை... அதான் வலையை வீசி மீன் பிடிக்கிறீங்க'' என்று சொன்னதற்குக் கோபப் பட்டு,

''என்னைப் பற்றித் தெரிஞ்சு இருந்தும், நீ எப்படி என்னை அப்படிச் சொல்ல போச்சுன்னு?'' இரண்டு நாள் சாட்டிற்கு வராமலே இருந்தவன் அவன்.



அவன் வேற எப்படிச் செயல்படுவான்னு நினைச்சே மைதிலி?

அம்மா சொன்னாங்க... ஆட்டுக்குட்டி சொன்னாங்க என்று என்னமோ செய்தாயிற்று! இப்போது அழுது என்ன ஆகப் போகுது?

அவனுடன் பேச ஆரம்பிக்கும்போதும், அப்புறம் அவனுடனான நட்பு பலப்படும் போதும்... யாரிடம் சொன்னே? இல்லை... யாரைக் கேட்டு அனுமதி வாங் கிட்டு அதையெல்லாம் தொடங்கினே?

அதுக்கெல்லாம் உனக்கு அனுமதி தேவைப்படாத போது, கடைசி வரைக்கும் நீ எதை சரின்னு நினைச் சியோ அதைச் செய்து இருக்கணும்.

இப்ப வந்து அம்மா சொன்னதால தான் அப்படிச் செய்தேன் என்று சொல்றது கொஞ்சமும் நல்லா இல்லை மைதிலி!

உனக்கே உங்க அம்மா சொன்னவுடன், ராகவன் மீதிருந்து நம்பிக்கை கொஞ்சம் குறைய ஆரம்பிச் சுடுச்சோ? பயம் வந்துடுச்சோ?

நம்பிக்கை போச்சுன்னு அதை எப்படிச் சொல்றது?

வீட்டில் பெரியவங்க பார்த்து, விசாரிச்சு கல்யாணம் செய்யும் போதே, ஆயிரம் குறுக்கு விசாரணை செய் றாங்க... நாலு இடத்தில் விசாரிக்கிறாங்க.

இது நானா தேடிப் போன பந்தம் எனும்போது, அதனுடைய எல்லாமும் என் பொறுப்பு தானே? அதை நானாகச் சோதித்துப் பார்க்கிறதில் என்ன தப்பு?

நான் என்ன துப்பறியும் நிறுவனத்தை வைத்தா அவனைச் சோதித்துப் பார்த்தேன்? அதையும் தானே இப்பொழுது எல்லோரும் செய்கிறார்கள்?

இவனை மாதிரியே எல்லோரும் கோபப்பட்டு எழுந்து போனால், யாருக்குமே இப்போதைக்கு கல்யாணம் ஆகி இருக்காது!

ஆனால் திருமணத்திற்கு தான் கட்டுப்பாடுகள், வரை முறைகள் எல்லாம்... காதலுக்கு தான் ஒன்றுமில் லையே! நம்புகிறேன்; காதலிக்கிறேன் என்று சொன்ன பின்பு அந்த வரைமுறைகள் இருவருக்குள்ளும் நுழைந் திருக்கக் கூடாதா? ஒன்றும் புரியாமல் தலையில் கை வைத்துக் கொண்டாள் மைதிலி.

ஒரே விஷயத்தையே எல்லோரும் பார்த்தாலும், பார்க் கும் விஷயத்தைப் பொறுத்தும், ஆட்களைப் பொறுத் தும், சூழ்நிலையைப் பொறுத்தும், பார்க்கும் ஒவ் வொருவரின் கண்ணோட்டம் வேறுபடுகிறது.

எனக்கு சரி என்று பட்டது, என்னுடைய அம்மாவிற்கு பயத்தை விளைவித்தது.

இப்பொழுது சின்ன விஷயம், பெரிய பின் விளைவு களை ஏற்படுத்தாது என்று நினைத்து தான் செய்த காரியம், ராகவனின் கண்ணோட்டத்தில் பெரிய குற்ற மாகத் தெரிந்திருக்கிறது.

இதில் யாரை நோவது?

ஆனால்... அதற்காக இத்தனை நாட்கள் கழித்தும், ஒரு சிறிய விளக்கம் கேட்க வேண்டும் என்று கூடவா அவனுக்குத் தோன்றாது?

அவள் அனுப்பிய அத்தனை மின்னஞ்சல்களும் பெறு வார் யாருமின்றி இவளிடமே திரும்பி வர வர, மைதி லிக்கும் 'இப்படிச் செய்துவிட்டேனே?' என்ற பட்சா தாபம் போய், அங்கே கோபம் குடிக் கொண்டது.



அவளாக அனுப்பிய மின்னஞ்சல் தான் சுவற்றில் அடித்த பந்தாக தன்னிடமே திரும்பி வருகிறதே என்று, வெட்கத்தை விட்டு மலர் மூலம் விசாரித்ததும் பயனின்றி போனது.

ராகவன் என்ற ஒருவனே இல்லாதது போன்று மைதி லிக்கும் ராகவனுக்கும் இடையிலான நட்பு வட்டாரத் தில் யாருக்குமே அவனைப் பற்றி எந்தத் தகவலும் தெரிந்திருக்கவில்லை.

''எங்க க்ரூப்பில் மெம்பராக தான் இருந்தான். என்ன ஆச்சுன்னு தெரியலை... ரெண்டு நாளுக்கு முன்னாடி அன்-சப்ஸ்க்ரைப் செய்துட்டான். ஈமெயில் ஐடியும் இப்ப இல்லையென்கிற மாதிரி காட்டுது. அவனோட மற்ற மொபைல் நம்பர் எல்லாம் எங்களிடம் இல்லையே?''

இதையே தான் ஒவ்வொருவரும் வெவ்வேறு மாதிரியாகச் சொன்னார்கள்!

இப்படியா ஒருவன் மாயமாக மறைய முடியும்?!

அவனைப் பற்றி வேறு ஒன்றுமே தெரியாமல் எப்படி அவனைத் தேடுவது? தொடர்பு கொள்வது?

கூடாது என்று நினைத்தாலும் மீண்டும் மீண்டும் அதையே யோசிக்க, அவளுக்குத் தலைவலியும் மன வலியும் தான் மிஞ்சிற்று.

தலைவலி நாளடைவில் மறைந்து போனது. ஆனால் மனதில் ஏற்பட்ட காயமோ அவளை மறக்க விட வில்லை.

படிப்பில், வேலையில் என அவளை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டாலும், ஒரு மூலையில் 'முணுக்,

முணுக்' என்ற வலி அவளுக்குமே தெரியாமல் அங்கேயே தங்கி விட்டது.

எம்.பி.ஏ. முடித்து, நல்ல பொறுப்பான பதவியில் வங்கியில் வேலைக்கு சேர்ந்த இத்தனை வருடத்திற்குப் பிறகு, ராகவனை நேரில் காண்போம் என்று அவள் சிறிதும் நினைக்கவில்லை.

நான்கு வருடத்திற்கு முந்தைய சந்திப்பு, வலி, வேதனை எல்லாம் இப்படி அணு பிசகாமல் அவளுக்கு நினைவிருக்கும், அந்த நினைவு அவளுக்கு இந்தளவு வேதனையைத் தரும் என்றும் நினைத்தவளில்லை.

மறந்து போனேன் என்று நினைத்தது தவறோ?

இல்லை... ஒருவேளை... மறந்தால் தானே நினைக்க என்று மாற்றி நினைக்க வேண்டுமோ?!

கைகள் நடுங்க கணினியை அணைத்த மைதிலி, அந்த மேஜையிலேயே தலையைக் கவிழ்த்தாள்.

* * *

'ச்சை! என்னை என்னன்னு நினைச்சாள் இந்த மைதிலி?'

இந்தக் கடைசி நாலு நாளா, எத்தனை தடவை வித விதமா அவளிடம் கேட்டு இருப்பேன்? தைரியம் சொல்லியிருப்பேன்?

அப்போ எல்லாம், 'உங்களை நம்பாமல் நான் வேறு யாரை நம்பப் போறேன் ராகவன்?' என்று பெரிய இவள் மாதிரி வசனம் பேசிட்டு... இன்றைக்கு இவளுக்கே இவள் டேப்பு போடுறாளாமா டேப்பு?

பெரிய ஸ்டன்ட் மாஸ்டர் தான்!



வேறு ஒருத்தியை இவள் மாதிரி என்னிடம் காட்டறதுக்கு எவ்வளவு தைரியம் இருக்கணும் இவளுக்கு?

நம்ப வைச்சு கழுத்தை அறுக்கிறதே இந்தப் பொண்ணுங்களுக்கு வேலையா போச்சு! எத்தனைப் பேரு இதைச் சொல்லி நாம கேட்டு இருப்போம்?

இப்போ நானே இதைச் சொல்ற மாதிரி நிலைக்கு, என்னை ஆளாக்கிட்டாளே இந்த மைதிலி?

நான் எத்தனை நம்பிக்கையோட அங்கே, அவளைச் சந்திக்கப் போனேன்? அந்த நம்பிக்கை, அவளுக்கு என் மேலே இல்லாமல் போச்சே?

அடிப்படை நம்பிக்கையே இல்லாமல் அப்புறம் என்ன பெரிய மண்ணாங்கட்டி லவ்வு?! லவ்வாம் லவ்வு!

முதல் கோணல் முற்றும் கோணல்!

ஆனால் "ஃபர்ஸ்ட் இம்ப்ரெஷன் இஸ் நாட் ஆல்வேஸ் தி பெஸ்ட் இம்ப்ரெஷன்" என்றும் ஒரு சொல் இருக்கிறது என்பதை ஏனோ அவன் மறந்து விட்டான்.

முதல் சந்திப்பிலேயே இப்படி இருந்தால், இவளோடு வாழ் நாளெல்லாம் சேர்ந்து இருக்கிறது எப்படிச் சாத்தியம்? எதுவும் சந்தேகம் இருந்தால் என்னிடம் அவள் நேரடியாக அல்லவா கேட்டிருக்க வேண்டும்?

பெரிய துப்பறியும் சிங்கி போல அதென்ன ஆள் மாறாட்டம் செய்றது? பெரிய லேடி ஜேம்ஸ் பான்ட் என்று நினைப்பு!

ராகவனின் அத்தனைக் கோபத்திற்குப் பின்னாலும், அவனின் வலி மறைந்திருந்தது.

காபி ஷாப்பில் தனியாக இரண்டு பெண்கள், சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு, உள்ளே நுழைந்த

நொடியிலிருந்தே, அவனின் பார்வை அவனையும் அறியாமல் 'இவள் தான் என் மைதிலி' என்ற நிச்சயத்தில் மைதிலியின் மீதே நிலைத்திருந்தது.

தயங்கித் தயங்கி அவனிடம் வந்த மைதிலி, அவளை ஜானகி என்று அறிமுகப்படுத்திக் கொள்ள, ராகவனின் முகம் ஏமாற்றத்தில், அதிர்ச்சியில், பயத்தில் எப்படி வெளுத்திருக்கும் என்பதைச் சிறிது கற்பனை செய்து கொள்ளலாம்.

வந்த இன்னொருத்தியின் முகத்தைக் கூட பார்க்க முடியாமல், அவளின் பெயர் கூட கவனத்தில் பதியாமல், மைதிலியின் மீதிருந்த பார்வையை விலக்கிக் கொள்ளவும் முடியாமல் அவன் தவித்த தவிப்பு...!

அந்த நொடியில் அவனுக்குத் தன் மீதே ஆழ்ந்த வெறுப்பும், அருவருப்பும் தோன்றியதை அவள் அறிவாளா?

முள் மேல் வீற்றிருப்பதைப் போன்று உட்கார முடியாமல் தவித்தவனுக்கு, எப்போதடா அங்கிருந்து கிளம்ப முடியும் என்று தான் தோன்றியது.

அவனை அவனிடமிருந்தே காப்பவள் போன்று, மைதிலி மனமிரங்கி உண்மையை உரைத்த போதோ,

'ஹப்பாடியா... நான் அத்தனை கீழ்த் தரமானவன் இல்லை' என ஒரே ஒரு நொடி தோன்றிய நிம்மதி, மகிழ்ச்சி, அருகில் உட்கார்ந்திருந்தவளைக் கண்டதும் பெரும் சீற்றமாக உருவெடுத்தது.

இவள் யார் என் வாழ்க்கையோடு விளையாட? ஹூ கேவ் ஹர் தி ரைட்ஸ் ஃபார் தட்?



என்னோட காதல், என்னோட வாழ்க்கை எல்லாம் இவளுக்கு அத்தனைக் கிள்ளுக் கீரையாய் போச்சா?

நான் பாட்டுக்கு அவள் சொன்னதை நம்பி, தப்பும் தவறுமா அந்த இன்னொரு பெண்ணிடம் எதுவும் சொல்லி இருந்தால் என்னவாகிறது?

என் முகத்தைப் போய் நான் எங்கே வைத்துக் கொள்வது? இதையெல்லாம் கொஞ்சமாவது நினைத்துப் பார்த்தாளா அவள்?

தடதடவென படிகளில் ஏறி, தன் அறைக்குள் புகுந்தவன், கையிலிருந்த ஹெல்மெட்டைத் தூக்கி, தூர விசிறி அடித்தான்.

அது, அவன் வாங்கிக் குவித்திருந்த மெடல்களிலும் கேடயங்களிலும் விழுந்து, அவற்றையும் கலைத்து தரையில் வாரி இறைத்தது.

அவன் அறையிருந்த அலங்கோல நிலை, அவன் கருத்தில் பதியவேயில்லை.

இருந்த கோபத்தில், கணினியை இயக்கியவன் செய்த முதல் வேலை, அவனுடைய ஈமெயில் ஐடி, பேஸ் புக் ஐடி இரண்டையும் மாற்றியது தான்.

'அவன் வாழ்க்கை...'

'அவன் காதல்...'

எனக் கோபம் அடைந்தவனுக்கு, அது மைதிலியின் வாழ்க்கையும் தான், அவளுடைய காதலும் தான் என்பது நினைப்பிலில்லை.

அதை அவளுக்குத் தெரிந்த வகையில் அமைத்துக் கொள்ள, தப்போ சரியோ அவள் செய்த சிறு முயற்சி தான் அது என்பதும் புரியவில்லை.

அதை யாரும், அவனே கூட கிள்ளுக் கீரையாய் ஆக்கி விடக் கூடாதே என்ற எண்ணத்தில் செய்தது என்றும் தெரியவில்லை.

ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் உண்டு என்பதும் மறந்து போனது.

அதைத் தெரிந்து கொள்ளும் பக்குவமும் பொறுமையும் அப்போது அவனுக்கு இல்லாமல் போனது தான் பரிதாபம்!

இருபத்தி மூன்று வயது என்பது அத்தனை மன முதிர்ச்சி அடையாத வயது. என்ன தான் பொறுப்பானவன் என்றாலும், படிப்பில் கெட்டி என்றாலும், அந்த வயதுக்கே உரிய முதிர்ச்சியின்மை அவனிடம் இருக்கத் தான் செய்தது.

இத்தனைக்கும் காவல் துறையில் சேரப் போகிறவன். குற்றம் சாட்டப்பட்டவருக்கும் கூட, வாதாட, தங்கள் தரப்பு நியாயத்தைச் சொல்ல சந்தர்ப்பம் வழங்குகிறது நமது சட்டம்.

கொலையே செய்திருந்தாலும், ஏன் அதைச் செய்தார்கள்? என்ன காரணம் என்று விசாரிக்கப்படுகிறது. காரணத்தைப் பொறுத்து, அது குற்றமா இல்லையா என்று தீர்மானிக்கப்படுகிறது.

இந்தச் சந்தர்ப்பம் எதையுமே மைதிலிக்கு ராகவன் அளிக்கவில்லை.

'நான் அவளை நம்பினேன். அவள் என்னை நம்பவில்லை. தன்னை ஏமாற்றி விட்டாள்' என்ற எண்ணம் ஒன்று தான் பிரதானமாக இருந்தது.



அந்த எண்ணம் மற்ற எல்லாவற்றையுமே பின்னுக்குத் தள்ள, கோபம் தந்த பலத்தோடு, ஐ.பீ.எஸ். தேர்வில் முழு மூச்சோடு தன்னை ஈடுபடுத்திக் கொண்டான் ராகவன்.

அந்த வெறி, அவன் பயிற்சிக்கு ஹைதராபாத் சென்ற போதும் அவனுடனே சென்றது.

பயிற்சியிலும் முதன்மையாக வர, அவனின் முதல் போஸ்டிங்கை, அவன் விருப்பப்படியே மகாராஷ்டிர மாநிலத்தில், சைபர் கிரைம் பிரிவில் கேட்டுப் பெற்றான்.

இத்தனைக்கு நடுவிலும், மைதிலியின் நினைவு அவனுக்கு இருந்து கொண்டே தான் இருந்தது.

சைபர் கிரைம் பிரிவில் வேலைக்குச் சேர்ந்த பின், அவன் பார்த்த வித விதமான குற்றங்கள், கேஸுக்கள், கண்ணில் பட்ட மனிதர்கள், எல்லாம் சேர்ந்து, அவனின் வயதும் துணை புரிய, கோபம் மட்டும் கொஞ்சமே கொஞ்சம் குறைந்திருந்தது.

ஆனால், அவளைத் தேடவோ, இல்லை அவளுடன் மீண்டும் தொடர்பைப் புதுப்பிக்கவோ அவன் முயலவில்லை.

அவள் பெயர் தெரியும், தாய் தகப்பன் பெயர் தெரியும், படித்தக் கல்லூரியும் தெரியும். அவனுடைய தொழிலுக்கு, அதிகாரத்திற்கு அவளைத் தேடிச் செல்வது என்பது முடியாத காரியமன்று.

இருப்பினும், முடிந்த கதை என்றிருப்பதை மீண்டும் ஆரம்பிப்பானேன் என்ற எண்ணம்.

தாடைகள் இறுக, 'மைதிலி என்னை மறந்தே போயிருப்பாள். நான்கு வருடத்தில் அந்த நான்கு மாதங்கள் அவளுக்கு மறந்தே போயிருக்கும்' என நினைத்துக் கொண்டான்.

வேண்டுமென்று இருந்தால் அவளும் தன்னைத் தொடர்பு கொண்டிருக்கலாமே?

பெயர் தெரிந்தவர்களை, காவல் துறையில் தேடிப் பிடிப்பதா கஷ்டம்? மனமிருந்தால் மார்க்கமுண்டு!

இன்னமும் ராகவனுக்கு, மைதிலியின் மீதான அடிப் படை கோபம் அப்படியே இருந்ததால், அவன் சொன்ன மனமும் மார்க்கமும் அவனுக்கு மூடியே இருந்தது.

இப்பொழுதும் அவனுக்கு கணினியை மூடவே தோன்றியது.

மூடிய மன வாசல் எப்பொழுது திறக்கும்?



# 8

"நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு மறக்கத் தெரியாதா?
பழகத் தெரிந்த மனமே உனக்கு விலகத் தெரியாதா?
மயங்கத் தெரிந்த கண்ணே உனக்கு உறங்கத் தெரியாதா?
மலரத் தெரிந்த அன்பே உனக்கு மறையத் தெரியாதா?"



காற்றில் மிதந்து வந்த கீதம் மைதிலியின் உள்ளத்தை வாட வைத்தது.

காலம் எல்லாவற்றையும் மறக்கடிக்கும் சிறந்த மருந்து என்பார்களே? அப்படி இல்லையா?

ஏனோ மைதிலியின் உள்ளத்தில் ராகவனை மீண்டும் சந்தித்த பிறகு, அவன் மீதான கோபம் என்ற போர் வையில் மறைக்கப்பட்டிருக்கும் வேதனையும், வலியும் காலம் கடந்தாலும் அதிகமாகிறதே தவிர குறைவதாய் இல்லை!

இதோ இங்கே தொலைக்காட்சியில் வரும் பாடலைக் கேட்டாலே ராகவனின் நினைப்பு வருகிறதே, அவனுக் கும் இப்படி சிறிதாவது இருக்குமா?

தன் சிந்தனை வட்டத்தில் உலா வந்தபடி, கையில் இருந்த ரிமோட்டை வைத்து சேனல்களை மாற்றியபடி அமர்ந்திருந்தாள்.

"நீ திட்டி முறைத்தால் நானும் திட்டி முறைப்பேன்.
சண்டை பிடித்தால் நானும் சண்டை பிடிப்பேன்
நீ பேசாவிட்டால் நானும் பேச மாட்டேன்..."

சுவாரஸ்யமே இல்லாமல் கேட்டுக் கொண்டிருந்த பாடலை மனம் மீண்டும் அசை போட்டது.

'காதலில் நாம் எதைக் கொடுக்கிறோமோ அது நமக்கு பத்து மடங்காய் திரும்பி வரும்' என்று வழக்கில் சொல் வதை வைத்து எழுதிய வரிகள் போல அந்தப் பாடல் வரிகள்?!

ம்ம்ம்... அப்படியென்றால் அது எனக்கும் பொருந்தும் தானே?

நான் கோபத்தைக் காட்டினால் ராகவன் என் மீது கோபப்படுவான். கெஞ்சினால் தன்னிடம் கெஞ்ச... அவனது இயல்பிற்கு மிஞ்சப் போகிறான். அவனைப் பார்த்துப் பயப்படுவது போல் நான் மிரண்டால், அவன் முருங்கை மரத்திற்கு மேல் ஏறுவான்.

ஆக அவனிடம் இயல்பாய் பேச முயற்சிக்கலாமா? முயற்சித்தால் பலன் கிடைக்குமா? ஆனால் எங்கே? எப்பொழுது?

அந்தக் கேள்விக்கான விடை மைதிலிக்கு விரைவி லேயே கிடைத்தது.

தோழி ஷோபாவின் வற்புறுத்தலின் பெயரில், வங்கி விடுமுறை நாளன்று சென்னை எம்.ஏ. சிதம்பரம் மைதானத்தில் நடைபெறும் 20-20 கிரிக்கெட் விளை யாட்டுப் போட்டியை நேரில் காண அவளுடன் சென் றிருந்தாள் மைதிலி.

''மைதிலி! ஏன்டி இப்படி முகத்தைத் தூக்கி வைச் சிருக்கே? வி.ஐ.பி. சீட் கிடைச்சிருக்கு. சி.எஸ்.கே. மேட்ச் ஆரம்பிக்கப் போகுது. சுட்டெரிக்கிற வெயில்கூட இன்றைக்கு இல்லை. இன்னமும் என்ன வேணும் உனக்கு?''

''ஷோபா! கிரிக்கெட் மேட்ச்சில் முதலிலிருந்த ஆர் வமே இப்போவெல்லாம் எனக்கு இல்லைன்னு சொன் னால், அது இதுன்னு வற்புறுத்தி என்னையும் கூட இழுத்துட்டு வந்துட்டே... அப்புறம் இதென்ன கேள்வி?!''



அவளது கேள்வியைச் சட்டை செய்யாத ஷோபா, ''இன்னமும் கொஞ்ச நேரத்தில் மேட்ச் ஸ்டார்ட் ஆகிடும். நான் போய் 'ப்ளகார்ட்' (Placard) வாங்கிட்டு வந்துடறேன்'' என்றுவிட்டு நகர்ந்தாள்.

வீட்டில் தனிமையை விரும்பாத மனம், இப்பொழுது சேப்பாக்க மைதானத்தில் கூடியிருக்கும் கூட்டத்தையும் விரும்பவில்லை.

ஒன்றையும் யோசிக்க விடாமல் இதென்ன இப்படி ஒரு கூச்சல்? ஆர்ப்பாட்டம்? அமைதியாகவே ஆட்டத் தைப் பார்க்கத் தெரியாதா இவர்களுக்கு?!

ராகவனின் அருகாமையை நாடும் அவளது மனதிற்கு எதுதான் பிடிக்கும்?

ராகவனுடன் இயல்பாய் பேச வேண்டும் என்று முடி வெடுத்த பிறகு, அவனை நேரில் பார்ப்பதற்கான வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தாள்.

அவனை தான் இப்பொழுதெல்லாம் இணைய தளத்தில் பார்க்க முடிவதில்லையே?

அவளின் எண்ண ஓட்டத்திற்கு ஒத்துப் போவதைப் போல சற்று தள்ளி யாருடனோ பேசியபடி நின்றிருந்த ராகவனை அவளது கண்கள் படம் பிடித்தன.

அவனா? ராகவனா? அங்கே இளமஞ்சள் நிற டி-ஷர்ட்டில் நின்றிருப்பவன் தானே?

தன்னுடைய கண்களை நம்ப மாட்டாதவளாய் கண் களை இறுக மூடி, மூடி மைதிலி திறக்க, சற்று முன்பு கண்ணில் பட்ட ராகவன் இப்பொழுது அந்த இடத்தி லில்லை.

ஏமாற்றத்துடன் பார்வையைச் சில நொடிகள் சுற்றி லும் வீசியவள், தன்னை நோக்கி வரும் ஷோபாவைப் பார்த்து முறுவலித்தாள்.

''யாரை மைதிலி இவ்வளவு ஆர்வமா தேடறே?''

''ப்ச்! உன்னைத்தான்னு சொன்னால் நம்பவா போறே?''

''சாதாரணமா சொன்னால் நம்பியிருப்பேன்; ஆனால் இத்தனை சலிப்புடன் சொன்னால்... ம்ஹூம்... சான்சே இல்லை மைதிலி!'' என்று தோளைக் குலுக்கிய ஷோபா, மைதிலிக்குப் பின்னால் நோக்கியவாறே யாரையோ பார்த்து கையை அசைத்தாள்.

அவள் கையசைத்த திசையில் பார்வையை ஓட்டிய மைதிலியின் கண்களில், ஆண்மையின் இலக்கணமாக அங்கே நின்றிருந்த ராகவன் தென்பட்டான்.

மைதிலி திகைப்புடன் நோக்க, ஷோபா சிறிது பரபரப் போடு, ''ஹலோ! ஏ.சி.பி. சார்! எங்கே இவ்வளவு தூரம்?'' என்றாள்.

மைதிலியின் பார்வையை ஒரேயொரு நொடி நேருக்கு நேர் சந்தித்த பின், இவர்களை நோக்கி மெதுவாக வந்த ராகவன், ''பிள்ளையாருக்கு வேண்டுதல் நிறைவேற்ற லாம்னு வந்திருக்கேன்'' என்றான் இயல்பாக.

அவனது நக்கலைக் கேட்ட மைதிலிக்கு சட்டென சிரிப்பு வந்துவிட, அவள் வாயை விரல்களால் மூடிக் கொண்டாள்.

ஒரு நொடியேனும் மைதிலியின் பார்வையில் மயங் கியவன், இப்பொழுது சிரிப்பினால் அவள் கண்கள் மலர்வதைக் கண்டதும் மேலும் கிறங்கினான்.



மைதிலியின் முதுகில் உரிமையுடன் ஒரு செல்ல அடி அடித்த ஷோபா, ''இப்போ தான் இவளிடம் பல்ப் வாங் கினேன். அடுத்து உங்களிடமா? என்ன சார் இன்றைக்கு ட்யூட்டி இல்லைன்னு ஜோக் எல்லாம் கூட அடிக்க றீங்க?'' என்றாள்.

தன் அமைதியைக் கலைத்த மைதிலி, ''ஒருவேளை உனக்கு பல்ப் கொடுக்கணும்னு தான் சார்க்கு வேண்டு தலோ என்னவோ?'' என்று தோழியிடம் கண் சிமிட்டி னாள்.

''உங்க பிரண்ட் என்னை வம்பில் மாட்டி விடறாங்க. அப்படி எதுவுமில்லை மேடம்!'' நல்ல பிள்ளை போல பாவ்லா செய்தான் ராகவன்.

''மேடம் எல்லாம் வேண்டாம். உங்களுக்குத்தான் எங்கப் பேர் தெரியுமே ஏ.சி.பி. சார்! கால் மீ ஷோபா அண்ட் ஷி இஸ்...'' என்று அறிமுகப்படுத்தி வைக்க முயல,

''எஸ். ஐ நோ! மை... மைதிலி!''

அவனது திக்கலும், தடுமாற்றமும் மைதிலியை மானசீகமாக சிறகின்றி வானில் பறக்க வைத்தன.

''என்னது மை... மைதிலியா? என்ன நடக்குது இங்கே?'' என்று ஷோபா வெளிப்படையாக வினவ,

மைதிலியின் சூடேறிய கன்னங்களைக் கண்டு கொள்ளாதவன் போல ராகவன், ''கொஞ்சம் தடுமாற்றம் தான் ஷோ... ஷோபா. மற்றபடி வேறென்ன இருக்க முடியும்? இல்லையா மைதிலி?'' என்று வேண்டு மென்றே மைதிலியிடம் கேட்டான்.

கிறக்கம் குறைந்து வம்பிழுக்க வேண்டும் என்று நொடிப்பொழுதில் குளுரைத்துக் கொண்டான் போல?!

அவனுக்கு சளைத்தவளா மைதிலி? இதற்காகத் தானே காத்திருந்தாள்?

''வேறெதுவும் இருந்தாலும் இப்போ இருக்குன்னு சொல்லணுமா, இல்லை... இல்லைன்னு சொல்ல னுமா?'' என்று தெளிவாக்கிக் கொள்ள வினவினாள்.

''என்னடி மைதிலி நடக்குது இங்கே? மண்டையைப் பிச்சுக்கலாம் போல இருக்க. விசு படம் எதுவும் பார்த் தியா?''

ராகவன், ''ஹலோ... ஹலோ! நீங்க பார்த்த படத்தைப் பற்றி டிஸ்கஸ் பண்றதுக்கு முன்னாடி, நான் உட்கார ஒரு இடம் பார்த்துட்டுக் கிளம்பறேன்'' என்று அங்கிருந்து நகர எத்தனித்தான்.

தன்னருகில் காலியாக இருந்த இருக்கையைக் காண் பித்த ஷோபா, ''நீங்க இங்கேயே உட்கார்ந்து உங்க வேண்டுதலை நிறைவேத்திக்கோங்க சார்'' என்றாள்.

''இப்போதானே பல்ப் அது, இதுன்னு பயந்தீங்க. ஏன் ஷோபா ரிஸ்க்? நான் வேற இடத்தில் உட்கார்ந்துக் கிறேன்.''

ஷோபா, ''ஹி ஹி! நீங்க சொல்றது ஒரு விதத்தில் சரி தான். ஆனால் அதுக்கும் ஒரு ஐடியா இருக்கு. மைதிலி! நீ இங்கே வா. நான் உன் இடத்தில் உட்கார்ந்துக்கிறேன்'' எனத் தன் இடத்தைத் தோழியுடன் மாற்றிக் கொண் டாள்.

''எனக்காக நீங்க, உங்க இடத்தை மாத்திக்க வேண் டாம் ஷோபா. நான் வேற ஏதாவது இடத்தை...'' என்று



ராகவனின் வாய் சொன்னாலும், அவனது கால்கள் மைதிலியின் பக்கத்து இருக்கையை நோக்கி நகர்ந்தன.

மைதிலி, ''வாய்க்கும், காலுக்கும் 'கோ ஆர்டினேஷன்... கோ ஆர்டினேஷன்' அப்படின்னு ஒண்ணு இருக்கணும்'' என்றாள் பொதுவாக பேசுவது போல்.

அவள் பொதுவாகப் பேசினாலும், சொல்வது தனக்குத் தான் என்று தெரியாதவனா ராகவன்?

''பேச்சுக்கும், செயலுக்கும் கோ ஆர்டினேஷன் இருந் ததா என்ன?''

மெதுவாக ராகவன் கேட்டது பொதுவாக இல்லை... மைதிலியிடம் மட்டும் தான்!

கிரிக்கெட் ஆட்டம் தொடங்கியதால் ஷோபாவின் கவனம் முழுவதுமாக விளையாட்டில் இருக்க, அங்கே மைதிலிக்கும், ராகவனுக்கும் இடையேயான உரை யாடல்கள் அரங்கேறுவதில் தடையொன்றும் இருக்க வில்லை.

''...''

''என்ன பேச்சே காணோம்? எதுவும் பதில் சொல்ல முடியலையோ?''

''சில நேரங்களில் வார்த்தைகள் புரிய வைக்காததை மௌனம் புரிய வைச்சிடும்.''

''ஓ! அதான் நாலு வருஷமா மௌனமே புரியட் டும்னு இருந்தாச்சு போல...!'' என்று கேலி பேசினான் ராகவன்.

''ஹம்ப்! என்னை மாதிரி ஃபாலோ செய்றதுனா அதை எல்லாத்திலும் இல்ல இருக்கணும்? என்ன பசப்பி

னாலும் மயங்கறதுக்கு நான் ஒண்ணும் பழைய ராகவ னில்லை!''

''ம்... வர்ற வழியில் போஸ்டர் அடிச்சு ஒட்டி இருந் தாங்க.''

''இப்போ என்ன வேணும் உனக்கு?'' பொறுமை இழந்த குரலில் ராகவன் கேட்டாலும் அந்த இடத்தை விட்டு எழுந்து செல்ல வேண்டும் என்று அவனுக்குத் தோன்றவில்லை.

அவன் சாதாரணமாகக் கேட்பது போல் எடுத்துக் கொண்டவள், ''ஷோபா! ராகவன் என்ன வேணும்னு கேட்கிறார். உனக்கு ஏதாவது வாங்கிட்டு வரச் சொல் லவா?'' என்று தோழியிடம் கேட்டாள்.

'இவளை என்ன தான் செய்வது?'

மகாராஷ்ட்ராவிலிருந்து தமிழ்நாட்டிற்கு இடமாறுதல் வாங்கிக் கொண்டதற்கு மைதிலியும் ஒரு முக்கிய காரணி என்று மனசாட்சிப்படி ராகவன் ஒத்துக் கொண்டு தான் ஆக வேண்டும்.

அவளது இருப்பிடம் பற்றிய தேடலைத் தொடங்கு வதற்கு தயங்கிக் கொண்டிருந்த போதுதான் மைதிலியை அவன் காவல் நிலையத்தில் சந்திக்க நேரிட்டது.

நீறு பூத்த நெருப்பாய் மனதில் கனன்று கொண்டிருந்த கசப்பான சம்பவங்கள் மீண்டும் மனதில் அணிவகுக்க மைதிலியிடம் காட்டத்தைக் காண்பித்தான்.

மீண்டும் இருவரும் நேரில் சந்தித்த நாளில், இணைய தளத்தில் ஒருவருக்கொருவர் பேசாமல் இருந்தது வேறு அவனுக்குக் காட்டத்தை அதிகப்படுத்தியது.



தப்பு செய்தவள் அவள்... ஒரு மன்னிப்பு கூட கேட்க முடியாத அளவிற்கு, அவளுக்கு அத்தனை ஈகோவா?

அவளுக்கு ஈகோ என்று குற்றம் சாட்டிய ராகவனின் ஈகோவும் விழித்துக் கொண்டதால், இணைய தளத்திற்கு அதன் பிறகு செல்ல அவன் விருப்பப்படவில்லை.

இணைய தளத்திற்குச் செல்லவே விரும்பாமலிருந் தவனுக்கு, இன்று மைதிலியை நேரில் கண்டதும் ஈகோவை இழுத்துப் பிடிக்க முடியவில்லை.

அதுவும் ஷோபா தன்னை நோக்கி கையசைத்த பிறகு, முகத்தைத் திருப்பிக் கொள்வது அவனுக்கு சரி யாகப் படவில்லை.

ராகவனின் பேச்சிற்குப் பதிலுக்கு பதில் துடுக்காகப் பேசிய மைதிலியின் இயல்பும், புன்னகையும் அவனைத் தவிக்க வைத்ததென்னவோ உண்மை!

சிலை போல அமர்ந்திருந்தவனிடம், ''என்ன ராகவன்? என்ன வேணும்னு கேட்டுட்டு கண்ணைத் திறந்து வைச் சுட்டே தூங்கறீங்க?'' சாதுவாய் வினவினாள் மைதிலி.

ராகவன் அக்னிப் பார்வையை அவளை நோக்கி வீச, ''எனக்கு எதுவும் வேண்டாம்'' என்று முணுமுணுத்தான்.

''அப்போ என்னை நிம்மதியா மேட்ச் பார்க்க விட றியா?'' என்றான் சலிப்பாக.

''நான் என்ன உங்க கண்ணைக் கட்டியா வைச்சிருக் கேன்? அதெல்லாம் உங்கப் பழக்கம்.'' மைதிலி தன் நியாயத்தைக் கேட்பதற்கும், ராகவனின் போன் ஒலிப்ப தற்கும் சரியாக இருந்தது.

போனில் பேசிக் கொண்டிருந்தவன் தன்னுடைய பர்ஸில் இருந்த ஒரு அட்டையைப் பார்த்து நம்பர் ஒன்றைச் சொன்னான்.

''ம்.... நான் இப்போ பிஸியா இருக்கேன் ராஜீவ். இந்த ஆர்டர் நம்பரைக் கொடுத்தால் அவங்க உனக்கு சாஃப்ட்வேர் அப்டேட் பண்ணி வைச்சிருப்பாங்க'' என்று விட்டு சுருக்கமாகத் தன் பேச்சை முடித்தான்.

சில நிமிடங்கள் மட்டும் அமைதியாக இருந்த மைதிலி இப்பொழுது அதி முக்கியமாக, ''நீங்க யாருக்கு சப்போர்ட் பண்றீங்க? சி.எஸ்.கே.-வா இல்லை ஆர்.சி.பீ-யா?'' என்றாள்.

அணிந்திருக்கும் மஞ்சள் வர்ண டி-ஷர்ட்டைப் பார்த்தும்கூட இது என்ன அநாவசியமான கேள்வி? அவளும் என்னதான் செய்வாள் பாவம்!

''யுகோஸ்லோவியா-க்கு'' எரிச்சலுடன் வந்தது பதில்.

'உன் செய்கையும், பேச்சும் எனக்கு உற்சாகம் தான் கொடுக்கிறது' என்பதைப் போல, ''கையைக் கொடுங்க... நானும் அந்த டீமுக்குத் தான்'' என்றாள்.

''ஓ! காட்!'' பெருமூச்சை விட்டவன், அந்தக் கணத்தில் தன் இடத்தை விட்டு, 'விட்டால் போதும்' என அவசரமாக நகர்ந்துவிட, அந்த அவசரத்தில் அவனது பர்ஸ் கீழே விழுந்தது.

ராகவனின் பர்ஸ் கீழே விழுந்ததைப் பார்த்தவள், அதை உடனே அவனிடம் தெரிவிக்க அவன் பெயரைச் சொல்லி அழைத்தாள்.

ஆனால், 'ரா...கவ்! ரா...கவ்!'' என்ற மைதிலியின் அழைப்பு காதில் விழுந்தும் விழாத மாதிரியான பாவனை வேறு அவனிடத்தில்!!



விழுந்த வேகத்தில், த்ரீ ஃபோல்ட் என்று சொல்லக் கூடிய மூன்று மடிப்புகளும் குப்புற விரிந்திருந்தது.

அவனுடைய பர்ஸைத் தேடியாவது அவன் மீண்டும் அங்கே வந்து தானே ஆக வேண்டும்?

அவனுடைய உடமையை பத்திரப்படுத்துவதற்காக, மைதிலி அதைக் கீழிருந்து கவனத்துடன் எடுக்க, அதிலிருந்த ராகவனின் பெற்றோர்களின் புகைப்படம் அவள் கண்களில் பட்டது.

நட்பாக இருந்த நாட்களில் ராகவன் அவனது பெற்றோர்களைப் பற்றி நிறையவே சொல்லியிருக்கிறான். அவர்களைப் பற்றி நிறைய கேள்விப்பட்டு இருக்கிறாளே தவிர, இதோ இப்பொழுது தான் புகைப்படத்திலாவது அவர்களைப் பார்க்கிறாள்.

நேரில் சந்திக்கும்போது, 'உனக்கு ஃபேமிலி போட்டோ காண்பிக்கிறேன், நீயும் மறக்காமல் எடுத்துட்டு வா' என்றும் சொல்லியிருந்தான். ஆனால், அன்று தான் எல்லாம் அள்ளி கொட்டி அலங்கோலம் செய்தாகி விட்டதே!! இன்னமும் என்ன பாக்கி இருக்கிறது?

ஏதோ, விட்ட குறை தொட்ட குறை இன்னமும் கணக்கில் வர வேண்டும் என்ற ஆசையினாலோ என்னவோ, பர்ஸில் இருந்த அவனுடைய விசிட்டிங் கார்டை ராகவனின் அனுமதி இல்லாமலேயே எடுக்கத் துணிந்தாள்.

மைதிலி அவனது விசிட்டிங் கார்டை உருவியதும் அதன் பின்னால் ஒளிந்திருந்த சின்னத் துண்டு காகிதம் அவளுடைய கண்களில் பட்டது.

அடுத்தவரின் உடமையை இப்படிக் கள்ளத்தனமாய் நோட்டம் விடுவது அநாகரீகம் என்று தெரியாதவள் இல்லை தான்! ஆனால் அவளுடைய உள்மனம், ராக வனை, 'அடுத்தவர்' என்று சுட்டிக் காட்டவில்லையே?

அவளது இதயம் அதன் துடிப்பை பன்மடங்கு அதி கரிக்க, நடுக்கம் பரவிய கைகளால் அந்தத் துண்டுக் காகிதத்தைப் பிரித்தவளுக்கு ஓராயிரம் பூக்கூடையில் இருந்து பூமாரி பொழிவது போன்ற பேரானந்தம்!

அந்த பேரானந்தத்திற்குக் காரணம் - துண்டு காகிதத்தில் இருந்தது மைதிலி பற்றி பிரசுரமாகியிருந்த செய்தி.

நிர்வாகப் படிப்பில் முதலிடம் பெற்ற மைதிலி, இந்தியாவில் இருக்கும் நிறுவனங்களுக்கு முன்னுரிமை கொடுத்தது பற்றி வெளியிட்டிருந்த செய்தி அது. இடைப்பட்ட நான்கு வருடத்தில் வெளியான செய்திக் குறிப்பு.

அவளுடன் பேச்சு வார்த்தையே இல்லாமலிருந்த தருணத்திலும், இவளைப் பற்றிய செய்தியைப் பத்திரப் படுத்தி வைத்திருக்கிறான் என்றால்...??

ராகவனுடன் சுமூக உறவு ஏற்படுவதற்கான வாய்ப்பு பற்றி அதுவரை இருந்த அவநம்பிக்கை மைதிலிக்கு மறைந்து போய், இப்பொழுது அங்கே நம்பிக்கை வேர் விடத் தொடங்கியது.

கனவுலகிலிருந்து மீண்டு, அவனது பர்ஸை அவளது கைப்பையில் மைதிலி பத்திரப்படுத்தவும், ராகவன் அங்கே வரவும் சரியாக இருந்தது.



கீழே தவற விட்ட பர்ஸ் இருக்கிறதா என்று துளாவிய வனிடம், அதை ஒப்படைத்த மைதிலி அவனுக்கு மட்டும் கேட்கும்படியாக,

''தவற விட்டது பத்திரமாகத்தான் இருக்கிறது. உங்க ராசி.... அது நாலு நிமிஷமாக இருந்தாலும் சரி, நாலு வருஷமாக இருந்தாலும் சரி!'' எனக் குறிப்பு கொடுத் தாள்.

''தவற விடறதுக்கும், தலை முழுகறதுக்கும் வித்தி யாசம் நிறையவே இருக்கு'' என்றபோது வெளிவந்த வார்த்தைகளிலும், ராகவனின் கண்களிலும் ஆத்திரம் அதிகமாகவே இருந்தது.

அவனை நேருக்கு நேராய் நோக்கியவள், ''தூங்கற துக்கும், தூங்கற மாதிரி நடிக்கறதுக்கும் இருக்கிற வித்தியாசம் மாதிரியா?'' என்று உணர்ச்சியற்ற குரலில் திருப்பிக் கேட்டாள்.

இவர்கள் இங்கே வார்த்தையால் ஒருவரை ஒருவர் பந்தாடிக் கொண்டிருக்க, அவர்கள் இருவரின் வீட்ட வரும், வீட்டில் ஹாயாக இருந்தபடியே, சி.எஸ்.கே. அணியினரின் பந்து வீச்சைக் கண்டுக் களித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது, வீட்டிலிருந்த பெரிய தொலைக்காட்சி திரையில் ராகவன் - மைதிலியின் முகங்கள் க்ளோஸ் - அப்பில் பக்கமாகத் தெரிந்தன.

தன் மகளைத் தொலைக்காட்சி திரையில் கண்ட மகிழ்ச்சியில் அன்பழகன், ''ஹே! வளர்! இங்கே வாம்மா... இங்கே பார். நம்ம பொண்ணு டி.வி.யில் வர்றா பாரு. அதோ, அவள் கூட பக்கத்தில் உட்கார்ந்து பேசிட்டு இருக்காரே, அவர் தான் ஏ.சி.பி. ராகவன். அன்றைக்குக்

கூட நான் சொல்லலை? அவர் தான். ஆள் ரொம்ப சிம்பிளா இருக்கிறார் இல்ல?'' என்று மனைவியிடம் சுட்டிக் காட்டி விவரங்களைப் பகிர,

தன் பங்குக்கு அவரிடம் முக்கியமான விஷயம் பகிர் கிறவர் போல் கணவரை ஆழ்ந்து நோக்கினார் வளர்மதி.

# 9



அங்கே ராகவனின் வீட்டிலோ, தன் கணவனைத் தொலைபேசியில் அழைத்த ரேகா, ''கண்டுபிடிச்சேன்! கண்டுபிடிச்சேன்...! காதல் நோயை கண்டுபிடிச்சேன்!'' என்று பாடிக் கொண்டிருந்தாள்.

''ஹே! ரேகா குட்டி! என்ன பாட்டெல்லாம் ஒரே அமர்க்களப்படுது?'' மனைவியின் குரலில் உற்சாக மடைந்தான் ராஜீவ்.

ரேகாவோ பதில் ஒன்றும் சொல்லாமல், திரும்பவும் தன் குரல் வளத்தைத் தன் கணவனுக்கு காட்டுவதி லேயே குறியாக இருந்தாள்.

''கண்டுபிடிச்சேன்! கண்டுபிடிச்சேன்...! காதல் நோயைக் கண்டுபிடிச்சேன்!''

ஒருவேளை தன் மனைவி, தங்கள் திருமணத் தினத் திற்காக தான் வாங்கி வைத்திருக்கும் மோதிரத்தைப்



பார்த்திருப்பாளோ? எப்படியும் தெரியத் தானே போகிறது?

சிரித்துக் கொண்டே, ''ஹே ரேகா! நீ இப்பதான் இந்த நோயைக் கண்டு பிடிச்சியா? நான் எப்பவோ அதைக் கண்டு பிடிச்சுட்டேனே. நீ இருந்தாலும் இத்தனை 'தத்தியா' இருக்க வேண்டாம் ரேகா. 'எல்லாத்திலும்' உனக்கு நிறைய ப்ராக்டிஸ் வேண்டியிருக்கு டா!'' என எல்லாத்திலும் ஒரு அழுத்தத்தைக் கொடுத்துச் சொன் னான்.

பேச ஆரம்பித்த விஷயம் மறந்துப் போக, கணவன் கொடுத்த குறிப்பு புரிந்த ரேகா, ''இதோடா! எனக்கு ஒண்ணும் நிறைய ப்ராக்டிஸ் தேவையில்லையாக்கும். சொல்லிக் கொடுக்கிற மாஸ்டர் சரியா இருந்தால், எனக்கு எதுக்கு அத்தனை தடவை ப்ராக்டிஸ் தேவைப் படுது? அப்புறம் நான் ஏன் 'தத்தியா' இருக்கப் போறேன்? நீங்க தான் தத்தியாக்கும். புரிஞ்சதா மாஸ்டர்?'' என்றாள் கொஞ்சலாக.

''எல்லாம் என் நேரம் தான்! நீ இந்தளவு பேசவே உனக்கு ரெண்டரை வருஷம் ஆகியிருக்கு. இந்த அழகில், இங்கே ஸ்டுடெண்ட் சரியில்லாமல் மாஸ்டரை குறை சொல்லி ஆகுது. ஆல் மை டைம்ஸ்!''

''ஹா ஹா! ச்சோ ச்சோ! ரொம்ப பாவம் தான் மாஸ்டர், உங்க நிலைமை!''

''நீ ஏன் சிரிக்க மாட்டே? நல்லா சிரி! இதுக்கு உனக்குத் தண்டனை... இன்னைக்கு நைட், நேற்று நான் சொன்னப் பாடத்தைச் சரியா திரும்பச் செய்யறது தான். எங்கே? இப்ப சிரி, பார்ப்போம்?''

பொங்கி வந்தச் சிரிப்பை அடக்கிய ரேகா, ''ரா...ஜீ...வ்! லைன் சரியா இல்லைப் போல? கனெக்ஷன் விட்டு விட்டு வருது. என்ன சொன்னீங்க ராஜீவ்? நைட்-க்கு கஞ்சி காய்ச்சி வைக்கவா? உங்களுக்கு இல்லாததா பாவா? வைச்சுட்டால் போச்சு!'' ஒன்றும் தெரியாத சின்னப் பிள்ளை போன்று உரைத்தாள்.

''அம்மா தாயே! பரதேவதை! நீ கஞ்சியும் காய்ச்ச வேண்டாம். குதிரையும் காய்ச்ச வேண்டாம். என்னை வெறுப்பேத்தறதுக்கு போன் செய்யலைன்னா, எதுக்கு செய்தேன்னு சொன்னால், நானும் கொஞ்சம் வேலையைப் போய் பார்ப்பேன்.''

கணவன் கடுப்புடன் சொல்லவும், உடனே ரேகா இறங்கி, ''கோபிச்சுக்காதீங்கப்பா! என் செல்லம் இல்ல? என் ராசு குட்டி இல்ல? என் ஜீவன் இல்ல? என் பாவா இல்ல? நீங்க கோபிச்சுக்கிட்டால் அப்புறம் நான் எப்படி விஷயத்தைச் சொல்றதாம்?'' எனத் தாஜா செய்ய லானாள்.

சிரிப்புடன், ''ம்க்ஹ்ம்! உன்னை அப்புறம் பார்க்க வேண்டிய விதத்தில் பார்க்கிறேன். இப்ப விஷயத்தைச் சீக்கிரம் சொல்லி முடி'' என்றான்.

''உங்க தம்பி, 'என்ற கொழுந்தன் காதல் வலையில் சிக்கித் தத்தளிக்கிறார்' இதுதான் இன்றைக்கு டி.வி.யில் ஸ்பெஷல் நியூஸ் ஃப்ளாஷ், தெரியுமா?''

''போச்சுடா! ஆரம்பிச்சுட்டியா? உனக்கும் வேலை யில்லை. எங்க அம்மாக்கும் வேலையில்லை. அவன் கல்யாணம் அப்புறம் செய்துக்கிறேன் என்றால், விடுங் களேன்! அவன் பாட்டுக்கு, அவன் உண்டு. அவன்



கிரிக்கெட் மேட்ச் உண்டுன்னு இருக்கான். கொஞ்சம் தனியா விடுங்கம்மா! அவனையும் கொஞ்சம் அவன் பின்னால் டிடெக்டிவ் வேலை செய்யச் சொல்லாமல் இருங்க.'' அப்படியே எங்களை

ராஜீவ் இப்பொழுது நிஜமான எரிச்சலுடன் சொல்ல வும், ரேகா அவசரமாக, ''இல்லை ராஜீவ்! நிஜமாவே இப்போ தான் ராகவனையும், அவனோட இன்னொரு பெண்ணையும் டி.வி.யில் காண்பிச்சாங்க. ரெண்டு பேரும் பேசிக்கிட்டு இருந்ததைப் பார்த்தேன். அதுவும் கோபமா பேசிக்கிட்டு இருந்த மாதிரி இருந்தது'' என்றாள்.

''ஆமா! ஆணும் பொண்ணும் பேசிட்டு இருந்தால் உடனே லவ் தானா? இங்கே, நம்ம ஆபீஸில் மாலதி கூட நான் பேசினால், உடனே எங்க ரெண்டு பேருக்கும் லவ்வா? என்ன பேசறே நீ?''

''அந்த ஆசையெல்லாம் வேற இருக்கா உனக்கு? கொன்னுடுவேன் ராஸ்கல்!''

மனைவி கொதிக்க, ''ஹி ஹி! சரி சரி! ஒரு பேச்சுக்கு சொன்னேன். நாம ராகவன் விஷயத்திற்கு வருவோம். மேட்சுக்கு நடுவில், ஒரு நிமிஷம் கூட இருக்காது. அந்த ஒரு நிமிஷத்தில், நீ எல்லாத்தையும் சரியா கவனிச்சு பார்த்துட்டியா? போடா செல்லம்! உன்னை அம்மா கூப்பிடற மாதிரி இருக்குது பாரு'' என்று தொடர்பைத் துண்டித்த ராஜீவ்,

''உஸ்! ஹப்பா! முடியலை சாமி!'' என பெருமூச்சு விட்டபடி, ராகவன் கொடுத்த எண்ணை எடுத்துக் கொண்டு கிளம்பத் தயாரானான்.

''ம்க்ஹ்ம்! என்னை விரட்டுறதுலேயே இருங்க'' என்று கூறினாலும், கைப்பேசியை வைத்தவளுக்கு,

கணவன் சொல்வதிலும் அர்த்தம் இருப்பதாகத்தான் தோன்றியது.

வாரத்திற்கு ஒரு முறை இப்படி ஏதாவது ஒரு வழக்கை அவன் முன் கொண்டு வைத்தால், அவனும் தான் என்ன செய்வான் பாவம்?

* * *

சேப்பாக்கம் மைதானத்தில் மைதிலியைப் பார்த்த ஒரு வாரத்திற்கு பின்பும், ராகவனுக்கு மைதிலியின் சிரித்த முகமும், பதிலுக்கு பதில் வாயடித்த அவளது பேச்சுமே நினைவில் நின்றிருந்தது.

அவளைப் பார்த்த பொழுது, கோபம் வந்தாலும், இப்பொழுது அவளது பேச்சை நினைத்தால் சிரிப்புதான் வந்தது அவனுக்கு.

அவன் 'யுகோஸ்லோவியா-க்கு' என்றதும், 'நானும் தான்' என அவள் சொன்னது, அவனுக்கு கை கொடுத்த அழகு என்று ஒவ்வொன்றாக அவன் மனக்கண்ணில் வலம் வர, 'அவளுக்கு உடம்பெல்லாம் திமிர்தான்!' எனத் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான்.

'நாலு நிமிஷமானாலும் சரி... நாலு வருஷமானாலும் சரி எதுவுமே கை தவறாத ராசியாமே எனக்கு!' மைதிலி குடுகுடுப்பைக்காரி சொல்லியிருக்காளே என்று நினைத்ததும் அடக்க மாட்டாமல் சிரிப்பு வந்தது.

'நினைத்தாலே இனிக்கும்' என்பது போன்று மைதிலியின் நினைவே இப்படித் தித்திக்க, அவள் மீது கோபம் என்றிருந்தது எல்லாம் வெறும் நாடகமா? பொய்யா? வெளி வேஷமா?



ஒன்றுமே புரியவில்லை ராகவனுக்கு.

மைதிலி செய்த காரியத்தின் மீது, தனக்கு இன்னமும் உள்ளே கோபம் இருக்கத்தான் செய்கிறது. அவளை நேரில் பார்த்த இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் அது அவள் மீது பாய்ந்திருப்பதும் உண்மை.

அந்தக் கோபம் வடியாதவரை, அவர்களின் உறவில் வளர்ச்சி... கேள்விக் குறிதான்!

அது வடிய, இருவரும் சந்திக்கும் தருணங்கள் அமைய வேண்டும். தானாக அமையவில்லையென்றால் நாமாகத்தான் அமைத்துக் கொள்ள வேண்டும்.

அட... அட... அவளைச் சந்திக்க என்னவெல்லாம், எப்படியெல்லாம் யோசிக்கிற ராகவா நீ? போலீஸ்காரன் மூளை என்றால் சும்மாவா சொல்லு?!

கூட இருந்தே கொல்லும் வியாதியாக, இந்த மன சாட்சியுடன் ஒரே தொல்லைடா சாமி!?

தன் மனமே தன் வசமில்லை என்பது மட்டும் அவனுக்கு நன்றாகப் புரிந்தது.

தலையை அழுந்தக் கோதிக் கொண்டவன், செவி வரை விரிந்த புன்னகையுடன், எப்போது அவளைச் சந்திக்கலாம் எனத் திட்டமிடலானான்.

மாடியிலிருந்து வேகமாக இறங்கி வந்த ராஜீவ், "டேய் ராகவா! என்னடா? என் வண்டியை சர்வீஸுக்கு எடுத்துட்டுப் போயிட்டாங்களாமா? ரேகா சொன்னாள். சாயங்காலம் நானே கொண்டு வந்து, ரெகுலர் சர்வீஸுக்கு விடுறதா சொல்லியிருந்தேனே? அப்புறம் எப்படி?" எனக் குழம்பினான்.

''சாயங்காலம் தானே சார்-ன்னு கால் செய்துக் கேட்டாங்க. என்னுடைய வண்டிச் சாவியை நான் எங்கேயோ வைச்சுட்டேன் போல. காலையில் உன் வண்டியை எடுத்துட்டு வெளியே போயிருந்தேன். கொஞ்சம் மக்கர் செய்த மாதிரியிருந்தது. அதன் இப்பவே வரச் சொல்லி, அவங்களையே எடுத்துட்டுப் போகச் சொன்னேன். என் வண்டியிருக்கு இல்ல? உன் வண்டி வர வரைக்கும், அதை யூஸ் செய்துக்கோ ராஜீவ். நோ ப்ராப்ளம்!'' என்றான் ஆபத்பாந்தவன், அநாத ரட்சகன், ராகவன் ஸ்வாமிகள்!

''ஓ! அப்படியா சொல்றே? நேற்று நாம கோவிலுக்குப் போயிருந்தப்ப கூட நல்லா தானே இருந்தது ரேகா? அப்பவெல்லாம் பிரச்சனையில்லையே?'' பாவம் மண்டைக் காய்ந்தது ராஜீவிற்கு.

''நீங்க சும்மா இருங்க ராஜீவ். உங்கத் தம்பி தான் ஏதோ ப்ராப்ளம்னு சொல்றார் இல்ல? நேற்றே ஏதோ ஆடற மாதிரி இருந்ததேன்னு நினைச்சேன் ராகவன். நான் சொல்றதைக் கேட்டாதானே உங்க அண்ணன்?'' நொடித்தாள் ரேகா.

இட்லியை விண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்த ராகவன், ''பாருங்க! உங்களுக்குக் கூட தெரிஞ்சிருக்கு அண்ணி, உங்களைக் கூப்பிட்டுட்டு போகும் போது ஏதாவது ஆயிடுச்சுன்னா? நாம ஜாக்கிரதையா இருக்கணும் இல்ல அண்ணி?'' என்றான் அக்கறையாக.

ரேகா ஆமோதிக்க ராஜீவோ, ''என் தம்பி சொல்றதையெல்லாம் அப்படியே நம்பிடாதே ரேகா. அவன் முழியே சரியில்லை பாரு! இவரோட சாவி எங்கே வைச்சேன்னு



இவருக்குத் தெரியலை என்பதையே முதல்ல நம்ப முடியலை.''

ஜெயலக்ஷ்மி, ''இப்ப நீ என்னதான் சொல்றே ராஜீவ்? அவங்க அண்ணி எல்லாம் தெரிஞ்சு இருக்குன்னு சொல்றான் ராகவ். அதை நம்பக் கூடாதுன்னு சொல்றியா? அப்ப, நீ என்ன நம்ம ரேகாவிற்கு ஒண்ணுமே தெரியாதுன்னு சொல்றியா ராஜீவ்?'' இளைய மகனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, மூத்த மகனிடம் கேட்டார்.

பரிமாறிக் கொண்டிருந்த தாய், காலையிலேயே தன் திருப்பணி சேவையை ஆரம்பிக்கவும் ராஜீவ்,

''அம்மா! ஏன் மா ஏன்? எதுக்கு உங்களுக்கு இந்த வேண்டாத வேலை? நான் சொல்லாததையும் சொன்ன மாதிரி எதுக்கு பில்ட்-அப் கொடுக்கிறீங்க? ரேகா! வேண்டாம்! முறைக்காதே ப்ளீஸ்! இவங்க ரெண்டு பேரையும் நம்பி என்னை நட்டாத்தில் விட்டுடாதே. என்னைப் பார்த்தால் பாவமா இல்லையா உனக்கு?'' என்றான்.

சட்னியை ராஜீவின் தட்டில் ஊற்றிக் கொண்டிருந்த ரேகா, ''ம்க்ஹ்ம்! உங்களை அப்புறம் பார்த்துக்கிறேன். இப்ப சாப்பிடுங்க'' என்றாள்.

காலை உணவு முடிந்ததும் ராஜீவ், ராகவனது வண்டிச் சாவியை எடுத்துக் கொண்டே, ''ஓகே ராகவா! உன் வண்டியை எடுத்துட்டுப் போறேன். தேங்க்ஸ்!'' என்று கிளம்பலானான்.

அண்ணனின் கையிலிருந்த சாவியை லாவகமாக கை பற்றிய ராகவன், ''எங்கே போகணும் உனக்கு? நானும் வரேன், போகலாம் வா!'' என்று வாசலுக்குப் போனான்.

''உன் வண்டியை என்னை யூஸ் செய்துக்கோன்னு சொல்லிட்டு, நீ எங்கே கிளம்பிட்டே? உனக்கு ஆபீஸ் வண்டி வருமில்ல?'' ராஜீவ் தம்பியுடன் நடந்துக் கொண்டே கேட்டான்.

ராகவன், ''இப்பவும் அதே தான் சொல்றேன். வா... வந்து உட்கார்... யூஸ் செய்துக்கோ. நான் என்ன வேண்டாம்னா சொல்றேன்? நீ எங்கே போகணும்னு சொல்லு. அந்தப் பக்கம் எனக்கும் வேலையிருந்தால், நானே உன்னை ட்ராப் செய்றேன். இல்லைன்னா, ஒரு கால் டாக்ஸி பக்கத்தில் இறக்கி விடறேன். சரி தானே?'' என்று ஹெல்மெட்டைக் கையில் வைத்து ஆட்டியபடி கண் சிமிட்டினான்.

காலையில் அண்ணனும் தந்தையும் பேசிக் கொண்டிருந்ததை வைத்து தானே இத்தனையையும் தனக்குத் தக்கப் படி மாற்றிக் கொண்டான்.

ஹெல்மெட்டை மாட்டிக் கொண்டு, பைக்கின் பின்னால் ஏறிய ராஜீவ், ''ஹ்ம்ம்! எப்படியும் ட்ராப் சர்வீஸ் இருக்குன்னு சொல்றே'' சிரித்து,

''போங்க டிரைவர் சார்! சீ - ஹார்ஸ் பேங்க் போகனும். அங்கே செக்யூரிட்டி கேமரா சரியா வேலை செய்யலை போல. நேற்று நைட் ரெகார்ட் செய்தது சரியா ரெகார்ட் ஆகலை. சரிப் பார்க்கணும்'' என்றான்.

சென்னை போக்குவரத்தில் வண்டியைப் பத்திரமாக ஓட்டிய ராகவன், வங்கி அலுவலக நேரம், அலுவலர்கள் எப்பொழுது வருவார்கள் என்ன ஏது, அதன் பாதுகாப்பு, என்று அண்ணனிடம் விபரத்தைக் கேட்டறிந்து கொண்டான்.



வங்கி வந்தடைந்ததும், ''எனக்கும் இங்கே கொஞ்சம் வேலையிருக்கு ராஜீவ். உனக்கு வேலை முடிஞ்சவுடன் எனக்கு கால் செய். வந்து பிக்-அப் செய்துக்கிறேன்'' என்ற ராகவன், ராஜீவ் அங்கிருந்து சென்றதும் பைக்கை அதனிடத்தில் நிறுத்தினான்.

வங்கி அலுவல் நேரம் தொடங்கி விட்டதின் அறிகுறியாக, வண்டி நிறுத்துமிடம் முழுதும் வாகன நெரிசல்தான். வண்டியைக் கொண்டு வந்து நிறுத்துவோரும், எடுத்துக் கொண்டு செல்வோரும் எனக் கூட்டமாக இருந்தது.

'ஹியர் யு கோ ராகவ்!' எனச் சொல்லிக் கொண்டு, ஆழ்ந்த மூச்சை வெளிவிட்டவன், மெதுவாக வங்கியினுள் நுழைந்து, பார்வையைச் சுற்றும் முற்றும் ஓட விட்டான்.

பணம் புழங்கும் இடமல்லவா? ஒரே பரபரப்பாக இருந்தது. டோக்கன் எண்ணை ஒலிப் பெருக்கி சத்தம் போட்டுக் கொண்டிருக்க, ஒரு சிலர், விண்ணப்பித்த படிவத்தை எப்படி பூர்த்தி செய்வது என அருகில் இருந்தவர்களிடம் கேட்டுக் கொண்டிருந்தனர்.

''என்ன சார்? இத்தனை லேட் ஆகுது? நான் இந்த வேலையை முடிச்சுட்டு ஸ்கூலுக்கு வேற போகணும். ரெண்டு மணி நேரம் தான் பெர்மிஷன் போட்டுட்டு வந்திருக்கேன்'' - இது யாரோ அங்கிருந்த ஒருவரின் புலம்பல்.

ஆனால், இந்த அவசரம் என்னை எதுவும் பாதிக்காது என்பது போல், வாசல் அருகே நின்றிருந்த ராகவன், மெல்ல தன் பார்வையைச் சுழலவிட, அவன் தேடி வந்தது அவனது கண்ணில் பட்டது.

கிட்டத்தட்ட வங்கியின் பின்புறமாக இருந்த, 'துணை மேலாளர், மைதிலி அன்பழகன்' என்ற பலகை தாங்கிய அறையை நோக்கி அடியெடுத்து வைத்தான் ராகவன்.

அவளுடைய இடத்திலேயே அவளைச் சந்திக்கப் போகிறான். அதுவும் இரண்டு முறை முறைப்பும், விறைப்புமாக முறுக்கிக் கொண்டுப் போன பின்பு. என்னை எப்படி வரவேற்பாள்?

டேய் ராகவா! ரொம்ப எதுவும் பேசினால்... அவளை முட்டிக்கு முட்டித் தட்டி உள்ளே போட்டுடுவேன்னு சொல்லு. ப்ராப்ளம் சால்வ்ட்!

அபத்தமான சிந்தனைகள் தோற்றுவித்த புன்னகையுடனே, லேசாக திறந்திருந்த கதவைத் தட்ட கையை உயர்த்தினான்.

அறையின் ஒரு பக்கத்தை அடைத்திருந்த ஷெல்ப்பில் எதையோ தேடிக் கொண்டிருந்த மைதிலி, ''ஒன் செகண்ட் ப்ளீஸ்! இருங்க, பார்த்துச் சொல்லிடறேன்'' யாருடனோ போனில் உரையாடிக் கொண்டிருந்தாள்.

முதுகு வரையிருந்த அடர்த்தியான கருங்கூந்தலை, சின்ன கிளிப் கொண்டு கட்டியிருக்க, அடர் பவள நிற உடலில், ஆங்காங்கே பெரிய பெரிய பூக்கள் போட்ட காட்டன் புடவை அவளது இடையைச் சுற்றியிருந்தது.

அவள் ராகவனைக் கவனிக்காத அந்தத் தருணத்தில், பக்கவாட்டில் தெரிந்த மைதிலியை உச்சி முதல் பாதம் வரை அவனது பார்வை ஆசையுடன் தழுவிச் சென்றது.

கரங்களில் ஃபைலும், கழுத்துக்கும் செவிக்கும் இடையில் கைப்பேசியுமாக சற்றே நிமிர்ந்தவள், யோசனையுடன் கதவருகே நகர்ந்தாள்.



எதிர்பாராமல் ராகவனை அங்கே பார்க்கவும், மைதிலிக்கு அவளது கண்களையே நம்ப முடியவில்லை. விழிகளை விரித்து விரித்துப் பார்த்தாள். தன்னை மெதுவாகக் கிள்ளியும் வேறு பார்த்துக் கொண்டவள், பிறகு பேசுவதாகச் சொல்லி பேசியை வைத்தாள்.

''வாவ்! ராகவன்! நீங்க... எங்கே... இங்கே? வாட் எ ப்லேசன்ட் சர்ப்ரைஸ்!'' மகிழ்ச்சியில் வார்த்தைகள் சிக்கித் தவித்தன.

மைதிலி திரும்புவது போலிருந்தவுடனேயே, சட்டென அந்தப் பக்கம் போக முயன்ற ராகவன், இப்பொழுது தான் அவளைப் பார்ப்பது போன்ற பாவனையுடன், ''ஓ! மைதிலி! நீ எங்கே இங்கே?'' என்று கிளிப்பிள்ளையாய் மாறினான்.

''என்ன நக்கலா? நான் கேட்க வேண்டிய கேள்வியை நீங்க கேட்கறீங்க? நான் இங்கே தானே வேலைப் பார்க்கிறேன்.''

மைதிலி பெயர் பலகையைக் காண்பிக்க, அப்பொழுது தான் ஞாபகம் வந்தவனாக ராகவன், ''ஓ! யா! உங்க அப்பா சொன்னார் இல்ல? நான் மறந்தே போயிட்டேன்!'' என்றான்.

''தட்ஸ் ஓகே. இதென்ன ரிசர்வ் பேங்க்கா? இல்லை, உங்க 'வான்டட்' பெர்சன்ஸ் லிஸ்டில் இருக்கறவங்க இந்த பாங்க்கில் இருக்காங்களா? சொன்னவுடனே நீங்க ஞாபகம் வைச்சுக்க?'' மைதிலி சிரிக்க, பதிலுக்கு ஒன்றும் சொல்லாமல் அவளையே பார்த்தவனது பார்வையில், அவளுக்கு முகம் சூடானது.

உள்ளிழுத்த மூச்சுடன், ''எங்கே இந்தப் பக்கம்?'' என்றாள் மீண்டும்.

''என் அண்ணனை வண்டியில் ட்ராப் செய்ய வந்தேன். உங்க பேங்க் செக்யூரிட்டியை எங்க அண்ணனுடைய கம்பெனி தான் பார்த்துக்குது. அப்படியே உங்க மேனேஜரைப் பார்த்து சில விவரங்கள் கேட்க வேண்டியிருந்தது. அதான் கேட்டுட்டு வரேன்.''

''ஓ! விவரம் கேட்டாச்சா?''

''ம்ம். ஆச்சே. ஹி வாஸ் வெரி ஹெல்ப்ஃபுல்.''

''எப்படிக் கேட்டீங்க? போன்லேயா?''

''எதுக்கு இப்படி விசாரணை? இவ்வளவு தூரம் வந்துட்டு எதுக்கு போனில் கேட்கணும்? நேரில் தான் கேட்டேன்.''

''ஆச்சரியம்தான்.''

''இதில் என்ன ஆச்சரியமிருக்கு?''

''பின்னே இல்லையா? உங்க அண்ணனை இங்கே ட்ராப் செய்துட்டு, கொச்சினில் இருக்க எங்க மேனேஜரை வேற நேரில் பார்த்துப் பேசிட்டு, உடனே இங்கே திரும்பியும் இருக்கீங்களே? இது ஆச்சரியம் இல்லாமல் வேறென்ன?''

மைதிலியின் கண்ணும், முகமும் சிரிப்பில் மலர்ந்திருக்க ராகவனுக்கும் சிரிப்பை அடக்குவது வெகு சிரமமாக இருந்தது.

''ஹி ஹி! அப்ப நான் வேற யாரையோ பார்த்துப் பேசியிருக்கேன் போல'' என்றான் விட்டுக் கொடுக்காமல்.

''கொச்சினுக்கே போயிட்டு வந்தவங்க நீங்க. நீங்க சொன்னால் சரியா தான் இருக்கும்.''



''ராட்சசி!'' மெதுவாக வாய்க்குள்ளேயே திட்டிக் கொண்டாலும், திடீரென்று கூர்மை பெற்ற அவளது உணர்வுகள், அதை உடனே செவியுற்று குதூகலித்துக் கொண்டிருந்தன.

மைதிலியின் அறை வாயிலிலேயே நடந்த இந்தச் சம்பாஷணையை, வேலை முடித்து வந்த ராஜீவ் ஆச்சரியமாகக் கண்ணுற்றான்.

யாரோ தெரியாத பெண்ணிடம், இத்தனை சிரிப்புடன் பேசறது நம்ம ராகவனா? இதற்காகத்தான் சோழியன் குடுமி ஆடியிருக்கிறதா? ராகவா, என்ன நடக்குது இங்கே?

அண்ணனை அருகே அழைத்து, மைதிலி - ராஜீவ் இருவருக்கும் ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்தி வைத்த பின், அண்ணன் தம்பி இருவரும் அவளிடம் விடைப் பெற்றுக் கிளம்பினார்கள்.

''ராகவன், நீங்க பேங்க் மேனேஜரைப் பார்க்க வந்தீங்களா? இல்லை, உங்களை மேரேஜ் செய்து உங்களையே மேனேஜ் செய்யப் போறவளைப் பேங்க்கில் பார்க்க வந்தீங்களா?'' முகத்தில் நகை துலங்க, ராகவன் தன் முன்னிருப்பதாக நினைத்து அவனைக் கேள்வி கேட்டாள் மைதிலி.

அடுத்த சந்திப்பு எப்பொழுது என்ற யோசனையுடனே, அன்று நடந்த சந்திப்பைக் குறித்த மகிழ்ச்சியில் திளைத்து, அன்றைய வேலையில் ஈடுபட்டாள்.

இருவரும் மிகவும் எதிர்பார்த்த அடுத்த சந்திப்பு மறுநாளே நடந்தேறியது. ஆனால் அது எதிர்பாராத விதமாக அத்தனை மகிழ்ச்சிக்கரமானதாக தான் இல்லை.

மாறாக, அது மற்றுமொரு குழப்பத்திற்குத் தான் வழி வகுத்தது.



# 10

அவனது அலைபேசியில் ஏதோ புதிய எண்ணிலிருந்து அழைப்பு வர ராகவன், ''ராகவன் ஹியர்!'' என்றான் கம்பீரமான குரலில்.

அவனது குரலைக் கேட்டதும் அதுவரை மனதில் ஏற்பட்டிருந்த கலவரம் சற்று மட்டுப்பட்டது போல உணர்ந்தாள் மைதிலி.

''ஹை! நான்... மைதிலி பேசறேன்.''

அவளது குரலில் இருந்த கலக்கம் ராகவனுக்குப் புரிபட, ''என்னாச்சு மைதிலி? எனி ப்ராப்ளம்?'' என்றான் சுற்றி வளைக்காமல்.

''எஸ்... ராகவன். உங்களுக்கு டைம் இருந்தால் நேரில் உடனே மீட் பண்ணலாமா? கொஞ்சம் கான்ஃபிடன்ஷியல்...''

மைதிலிக்கு ஏனோ தன்னுடைய அலுவலக அறையில் பேசுவது சரியாகப் படவில்லை. யாராவது யதேச்சையாகக் கேட்டால் கூட மிகவும் பிரச்சனையாக முடிந்து விடும்.



''இல்லை மைதிலி. என்னால் இப்போதைக்கு உடனே நேரில் வர முடியாது. ஆபீசில் மானிடர் பண்ண வேண்டிய வேலை இருக்கு. முடிஞ்சால் போனில் விஷயத்தைச் சொல்ல முடியுமா?'' என்றான் அக்கறையான குரலில்.

தன் அறையில் இருந்து வெளியே வந்து பெண்களின் ஓய்வறைக்குள் நுழைந்தவள் அங்கு யாரும் இல்லாததை உறுதிப்படுத்திக் கொண்டு, ''ராகவன்! எங்களுடைய பேங்க்கில் ப்ரோக்ராம்ஸ் மெயின்டெனன்ஸ்காக டெண்டர் விட்டிருந்தோம். அதில் நிறைய சாஃப்ட்வேர் கம்பெனி பிட் (bid) பண்ணுவாங்க. நாளையோட அந்த டெண்டர் க்ளோஸ் ஆகுது'' படபடப்பாக விவரிக்கத் தொடங்கினாள் மைதிலி.

''ஓகே! பிட் பண்றவங்க ஆன் லைனில் பண்ணுவாங்களா? இல்லை ஹார்ட் காபி... அதாவது பிரிண்ட் எடுத்து ஏதாவது?''

''ஹார்ட் காபியில் தான் பண்ணுவாங்க. ஆன் லைனில் பண்றது சரி வராது. ஆனால் எங்க கைக்கு சப்மிட் செய்திருக்கிற பேப்பர்ஸ் வந்ததும் சிஸ்டமில் எல்லா தகவலையும ஸ்டோர் செய்திடுவோம் ராகவ்.''

அவளது குரலில் இருந்த பதட்டம் சிறிது கூட குறையாதது கண்டு, ''ஓகே மைதிலி. முதலில் ஒரு விஷயம் ஞாபகம் வைச்சுக்கோ. சால்வ் பண்ண முடியாத பிரச்சனை எதுவுமே இல்லை. கொஞ்சம் ரிலாக்ஸ் ஆகிக்கோ. டென்ஷன் ஆகாமல் பேசு'' என்றான் பரிவுடன்.

அந்தக் கணத்தில் அவனுடைய ஆறுதல் உண்மையிலேயே மிகவும் தேவையான ஒன்றாக இருந்தது போல அவளுக்கு.

''தேங்க்ஸ் ராகவ்'' என்று சொன்னவளின் குரல், ''அந்த ஃபைல் காணாமல் போச்சு'' என்றபோது கம்மியது.

''நல்லா தேடி பார்த்தியா? யாரெல்லாம் அந்த விஷயத்தில் பொறுப்பானவங்க மைதிலி?''

''இது கொஞ்சம் செக்யூரிட்டி சம்பந்தப்பட்ட விஷயம்ங்கறதால் நான் தான் லீட் செய்திட்டு இருந்தேன். நாளையில் இருந்து தான் மேனேஜர்ஸ் கமிட்டிக்குப் போகும்.''

''ம்ம்... யார்கிட்டேயாவது இது பற்றி சொன்னியா?''

''இல்லை ராகவ். இதுவரை இந்த டெண்டர் பற்றி ரிபோர்ட் பண்றதுக்கு எல்லாம் ஜெனரல் மேனேஜர் கிட்ட போவேன். இன்னமும் அவர்கிட்டே நான் இதைச் சொல்லலை'' என அவசரமாக அவனது கேள்விக்குப் பதில் சொன்னவள் தொடர்ந்து மீதி பிரச்சனையையும் விவரித்தாள்.

''ரெண்டு மணி நேரமா தொலைஞ்சு போச்சேன்னு தேடிட்டு இருந்தேன். சரி... என்னுடைய சிஸ்டமில் இருக்கிற டீடைல்ஸ் எடுத்து பிரிண்ட் எடுக்கலாம்னா... அதுவும் க்ராஷ் (crash) ஆயிடுச்சு. எனக்கு இதையெல்லாம் ஒண்ணுக்கு ஒண்ணு ரிலேட் செய்தால் தலையே சுத்துது. எல்லாம் பிளான் செய்து நடக்குதோன்னு...'' மீண்டும் அவள் குரலில் தீவிரம் எட்டிப் பார்த்தது.

''ம்.. உன்னுடைய பயம் புரியுது மைதிலி'' என்றவன், சிறிது யோசனைக்குப் பிறகு, ''இப்போதைக்கு நான் சொல்றது வொர்க் அவுட் ஆகுமான்னு பாரு. நாளைக்கு தானே பிட் பண்றதுக்கு கடைசி தேதின்னு சொன்னே?



அதை இன்னமும் ஒரு வாரம் நீடிக்க முடியுமான்னு பாரு.''

''எதுக்கு ராகவ்?'' புருவத்தின் மத்தியில் முடிச்சு விழுந்தது மைதிலிக்கு.

''செக்யூரிட்டி சம்பந்தமான விஷயம் என்பதால் நமக்கு இந்த நேரத்தில் டைம் தேவைப்படுது. அதான் சொல்றேன்.''

''ம்.. ஒகே... முயற்சி பண்றேன்'' என்றாள் யோசனையுடன்.

''அடுத்தது உன்னுடைய சிஸ்டம் பிரச்சனையானதுக்குக் காரணம் ஏதாவது வைரஸ் பிரச்சனையா? உன்னுடையதில் மட்டும் தானான்னு கம்ப்யூட்டர் செக்ஷனில் சொல்லி செக் பண்ணு. இன் தி மீன் டைம், உங்க டேட்டாவை அப்படியே மெயின் சர்வரில் இருந்து ரெகவர் பண்றதுக்கான முயற்சி பண்ணு'' அவனுடைய காவல் துறை மூளை பல கோணங்களிலும் பிரச்சனையைப் பற்றி சிந்தித்தது.

''ம்... கண்டிப்பா செய்யறேன்'' குரலில் கொஞ்சமே கொஞ்சம் நிதானம் எட்டிப் பார்த்தது.

''எங்க அண்ணன்கிட்டே சொல்லி உன்னுடைய ரூம்க்கு யார் யாரெல்லாம் வந்து போயிருக்காங்கன்னு ரெக்கார்ட் ஆகியிருக்கிற வீடியோவை எடுக்க வைக்கச் சொல்றேன். எப்படியும் கண்டு பிடிச்சுடலாம் மைதிலி. டோன்ட் வொர்ரி. இப்போதைக்கு இதெல்லாம் செய்து முடிக்க நமக்கு கொஞ்சம் கால அவகாசம் தேவை. அது தான் முக்கியம்.''

''ம்... இன்னொரு விஷயம் மைதிலி... உன் ரூமுக்கு வெளியே மட்டும்தான் கேமரா இருக்கா? இல்லை உள்ளேயும் செக்யூரிட்டிக்காக கண்காணிப்பு கேமரா இருக்கா?''

''இல்லை ராகவ்! வெளியே மட்டும்தான் செக்யூரிட்டி கேமரா இருக்கு. பேங்க் வாசலில் பின் பாயிண்ட் வாக் த்ரூ (pinpoint walk-through) டிடெக்டர் இருக்கிறதால ரூமுக்குள் கேமரா வைச்சிக்கலை. ஆனால் யார் ரூமுக் குள் வர்றாங்க வெளியே போறாங்கன்னு வீடியோ ரெக்கார்ட் செய்றதில் தெரிஞ்சுக்க முடியும்'' போதுமான விளக்கங்களைத் தந்தாள்.

அதை உள்வாங்கிக் கொண்ட ராகவன், ''அப்புறம் முடிஞ்ச வரை இந்த விஷயம் வெளியில் தெரிய வேணாம். குற்றவாளி சுதாரிக்கறதுக்கு வாய்ப்பு இருக்கு'' என்று அறிவுறுத்தினான்.

''ஆனால்... நான் என்னுடைய ஜி.எம்.கிட்ட ரிப் போர்ட் பண்ணியே ஆகணுமே? அதோட ஒரு வாரம் டெட் லைன் தள்ளி வைக்க அவர்கிட்டே தான் கேட் கணும்.''

''தட்ஸ் ஓகே. ஆனால் வேற யாருக்கும் தெரியாமல் பார்த்துக்கோ.''

''சரி ராகவ்'' ஆமோதித்தவளிடம், ''சியர் அப் மைதிலி. எல்லாம் சரி பண்ணிடலாம்'' என்று தைரியம் சொன் னான்.

''தேங்க்ஸ்... இட் மீன்ஸ் எ லாட் டு மீ'' என்றுவிட்டு விடைபெற்றாள் மைதிலி.



இரண்டு நிமிடங்களில் மீண்டும் ராகவனிடம் இருந்து அழைப்பு வர எடுத்த எடுப்பில், ''இது தான் உன்னுடைய மொபைல் நம்பரா மைதிலி? ஆபீஸ் நம்பர், வீட்டு நம்பர் கொடுக்க முடியுமா? ஏதாவது தகவல் சொல்ல தேவைப்படலாம்'' என்ற காரணத்தைச் சொல்லி அனைத்துத் தொடர்பு எண்களையும் பெற்றுக் கொண்டான்.

மைதிலியிடம் எண்களை உறுதிப்படுத்திக் கொண் டவன், ''என்னுடைய ஆபீஸ் நம்பர் நோட் செய்துக்கோ மைதிலி'' என்று சொல்லத் தொடங்க,

''என்கிட்டே உங்க விசிட்டிங் கார்ட் இருக்கு ராகவ்'' என்ற பதில் அவனை வியப்பில் ஆழ்த்தியது.

அவளிருக்கும் நிலையில் அநாவசியமான கேள்வி களுக்கோ, பேச்சிற்கோ இடம் கொடுக்காமல் மீண்டும் அழைப்பதாகச் சொல்லி வைத்து விட்டான்.

மைதிலியிடம் பேசி வைத்தவனுக்கு அவள் பிரச் சனை குறித்து வருத்தம் இருந்தாலும், அதைத் தாண்டி சின்னதாக ஒரு சந்தோஷம் அவன் மனதில் குடி கொண்டது. அவளுக்கு ஒரு பிரச்சனை என்றால் தன்னைத் தானே அதன் தீர்விற்காக முதலில் நாடினாள்?

அதுவும் நம்பகமாக கையாளப்பட வேண்டிய ஒரு விஷயத்தைப் பற்றி விவாதிக்க நம்பிக்கையான நபரிடம் தானே வரவேண்டும்?

இத்தனைக்கும் அவளுடைய அலுவலகத்திற்கும், அவனுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லாத போது கூட ராகவனைத் தானே தேடினாள்? அவனுக்குத் தானே முன்னுரிமை தந்தாள்?

ஆக... அவளுடைய நம்பிக்கைக்குரியவன் அவன் தான்! அதில் எந்தவித சந்தேகமும் தேவையில்லை என்பது உறுதியாகிவிட்டது.

இந்தக் கோணத்தில் சிந்தித்தபோது அவன் மனம் உற்சாகத்தில் துள்ளியது. இந்த சந்தோஷம் பழைய மனக்கசப்பைச் சிறியதாக்கியது. இந்தப் பிரச்சனை தீர்ந்தவுடன் அவளிடம் வெளிப்படையாகப் பேச வேண்டும் என்று முடிவு செய்தான்.

அங்கே வங்கியில் ராகவனின் ஆலோசனைப்படி ஒவ்வொன்றாக செய்யத் தொடங்கினாள் மைதிலி. தன்னுடைய கணிப்பொறியில் இருக்கும் விவரங்களை ரீ ஸ்டோர் செய்ய பணித்தவள், அந்த டெண்டருக்கான கால வரையறையை இன்னமும் ஒரு வாரம் நீட்டிப்பது குறித்துப் பேச பொது மேலாளரை சந்தித்தாள்.

விஷயத்தை அறிந்தவுடன் பொது மேலாளர் மோகன சுந்தரம், ''அதெப்படி அவ்வளவு அலட்சியமா இருந்தீங்க மைதிலி? இது எவ்வளவு பெரிய பிரச்சனை தெரியுமா?'' என்றார் கோபத்துடன்.

''இதற்கு எந்த எக்ஸ்க்யூஸ்-ம் சொல்ல முடியாது சார். ஆனால் ரொம்பவே கவனமா இருக்கும்போது தான் இந்த மாதிரி...''

''எனக்கு நீங்க வேலை விஷயத்தில் எவ்வளவு சின்சியர்ன்னு தெரியும் மைதிலி. ஆனால் இந்த இஷ்யூ-வில் பேங்கிங் செக்யூரிட்டி பிரச்சனை வந்தால் உங்களை டிஸ்மிஸ் செய்யக்கூட வாய்ப்பு இருக்கு.''

''..........''



''என்னால் இந்த விஷயத்தில் என்ன ஹெல்ப் செய்ய முடியும்னு எதிர்பார்க்கறீங்க?'' நிலைமையை எடுத்துச் சொன்னாலும் அவளுக்கு உதவிக்கரம் நீட்ட முன் வந்தவரிடம்,

''உங்க ஹெல்ப் எனக்குக் கட்டாயம் தேவைப்படுது சார். நாளைக்கு இருக்கிற டெட் லைனை ஒரு வாரத்திற்கு தள்ளி வைக்கணும்'' என்று கோரிக்கை வைத்தாள்.

''வாட்? ஒரு வாரமா? இதெல்லாம் முடியற காரியமா? ஆகக் கூடிய வேலையைப் பாருங்க மைதிலி'' குரலிலும், பார்வையிலும் அவ நம்பிக்கை வெளிப்பட்டது.

''இல்லை சார். வேற வழியே இல்லை. நீங்கதான் மேலிடத்தில் பேசி இதைச் செய்யணும். ப்ளீஸ் சார்.''

தன்னுடைய மூக்குக் கண்ணாடியைச் சரி செய்த மோகனசுந்தரம், ''இப்போ ஒரு வாரம் தள்ளி போடறதால் என்ன நடக்கும்னு நினைக்கறீங்க?'' என்று மைதிலியிடம் விளக்கம் கேட்டார்.

''போலீஸ் டிபார்ட்மென்டில் எனக்கு வேண்டியவர் ஒருத்தர் இருக்கார் சார். சொல்லப் போனால், அவரிடம் இந்தப் பிரச்சனையைச் சொல்லி கருத்து கேட்கும் போது அவர்தான் டெட் லைன் ஒரு வாரம் தள்ளிப் போடறதுக்கான ஐடியா கொடுத்தார்...''

''என்ன சொல்றீங்க மைதிலி? ஹேவ் யூ அல்ரெடி டேக்கன் திஸ் இஷ்யூ டு தி போலீஸ்?'' முன்னைவிட குரலில் கோபம் கொந்தளித்தது.

''இல்லை சார்... இன்னமும் இல்லை. ஜஸ்ட் ப்ரெண்ட்லி கன்சல்டேஷன் தான்'' தயக்கத்துடன்

சொன்னாள். இந்த விஷயத்தைச் சொல்லியிருக்கவே கூடாது என்று அவள் மனதில் தோன்றியது.

"தப்புக்கு மேல் தப்பா செய்யறீங்க மைதிலி. ஒரு சீனியர் அத்தாரிட்டிகிட்டே பேசாமல் நீங்களா எப்படி போலீஸ்கிட்டே கருத்து கேட்கலாம்? இதென்ன உங்கள் கம்பெனியா இஷ்டத்துக்கு நீங்க முடிவு பண்றதுக்கு? உங்களை மாதிரி ஒருத்தர்கிட்டே இருந்து முன்னே பின்னே யோசிக்காத இந்த மாதிரியான செயலை நான் எதிர்பார்க்கலை."

அவளது பணிக் காலத்தில் இதுவரை மோகனசுந்தரத்திடமிருந்து எத்தனையோ பாராட்டுக்களைப் பெற்றிருக்கிறாள். ஆனால் முதன் முறையாக தவறு செய்து அவரிடம் தலைகுனிய வேண்டியதாகிவிட, இதுவே முதலும், கடைசியுமாக இருக்க வேண்டுமே என்ற எண்ணம் அவளுக்கு மனதில் விழுந்தது.

அவளுக்கு ராகவனின் கருத்து முக்கியம் என்றாலும் ஸீ ஹார்ஸ் பேங்க்கைப் பொறுத்தவரை இது பெரிய குற்றம் தானே?

வங்கியின் உள்ளே நடக்கும் விஷயத்தை வெளி நபரிடம் பேசியது தப்பு என்று மோகனசுந்தரம் கண்டிப்பது நியாயமானதுதான்!

"வேற யார்கிட்ட சொல்லி சஜஷன் கேட்டீங்க மைதிலி? அப்பா, அம்மா, இன்னொரு பேங்க்கில் வேலை பார்க்கிற ப்ரெண்ட்... இப்படி எல்லார்கிட்டேயும் சொல்லியாச்சா?" அதிருபதியுடன் வினவினார் பொது மேலாளர்.

"இல்லை சார். யார்கிட்டேயும் இல்லை. ஐ அம் ரியலி சாரி சார்."



"ம். முதலில் உங்க ரூமுக்கு வாங்க. அங்கே வேறெதுவும் ஃபைல் காணாமல் போயிருக்கான்னு பார்க்கலாம். இந்த ஃபைல் மட்டும் எப்படி மிஸ் ஆகியிருக்கும்?"

மோகனசுந்தரத்திடம் பேசியதில் மீண்டும் நெஞ்சில் பதட்டம் குடி கொண்டாலும், ஃபைல் இருந்த இடத்தைக் காட்டி,

"இந்த டேபிள் டிராவில்தான் சார் வைச்சிருந்தேன்" என்று திறந்து காண்பித்தாள்.

அங்கே இருந்த மற்ற மேஜை திறப்புகளிலும் ஒரு முறைக்கு இருமுறை அந்த ஃபைலைத் துளாவியவர், "அந்த ப்யூன் மாணிக்கம் எங்கே? அவன் எதுவும் உங்க ரூமுக்கு வந்தானா?" என்றபடி ப்யூனைத் தேடிச் சென்றார் மோகனசுந்தரம்.

அவர் பின்னோடு வேகமாகச் சென்ற மைதிலி, "சார்... சார்... ஒரு நிமிஷம். இந்த விஷயம் யாருக்கும் தெரிய... வேண்டாம் சார்" என்றாள் தயக்கத்துடன்.

"நம்ம பேங்க்கில் வேலை பார்க்கிறவங்களுக்கே தெரிய வேணாம்னு இப்போ சொல்றீங்க. ஆனால் முன்னாடியே இந்த அறிவு உங்களுக்கு இருந்திருக்க வேணாமா?" என்று கடிந்தார்.

ப்யூன் வெளியில் சென்றிருப்பதாகத் தகவல் வரவும் அவன் வந்ததும் தன்னை வந்து பார்க்கச் சொல்லுமாறு அங்கிருந்த கணக்கரிடம் சொல்லிவிட்டு வேகமாக தன்னறைக்குச் சென்று விட்டார்.

மைதிலிக்குப் புயல் அடித்து ஓய்ந்தது மாதிரி இருந்தது. ராகவனுடன் பேசி முடித்தபோது திரண்டிருந்த மலையளவு நம்பிக்கை, இப்பொழுது மோகனசுந்தரத்திடம்

பேசியதும் மடுவாகக் குறைந்து மறைந்தே போய்விடும் போல இருந்தது.

வேலையில் ஒரு குறை சொல்லும் அளவிற்கு என்றைக்குமே அவள் நடந்து கொண்டது கிடையாது என்றாலும் இன்றைக்கு நடந்த இமாலயத் தவறுக்கு அவள் தானே முழு பொறுப்பு?

கண்ணை கட்டி காட்டில் விட்டது போன்ற இந்த சூழ்நிலையில் மூளையில் உள்ள செல்கள் அனைத்துமே வேலை நிறுத்தம் செய்யும் போலத் தெரிய, தலையில் கையை வைத்தபடி இரண்டு நிமிடங்கள் மைதிலி தன் இருக்கையில் கண் மூடி அமர்ந்தாள்.

மோகனசுந்தரத்திடம் மீண்டும் ஒரு வாரம் கெடுவை நீட்டிப்பது குறித்து பேசியே ஆகவேண்டும். அவர் மனது வைத்தால்தான் அது முடியும் என்பதால் என்ன கத்தினாலும் கேட்டுக் கொள்ளத்தான் வேண்டுமென்று பெருமூச்சுடன் எழுந்து அவரது அறைக்குச் சென்றாள்.

அவரது அறையில் 'டோன்ட் டிஸ்டர்ப்' என்ற போர்ட் வைக்கப்பட்டிருக்க, அவரை இன்டர்காமில் தொடர்பு கொள்ள முயன்றாள். அதுவும் தோல்வியடைய அடுத்து என்ன செய்வது என்ற குழப்பத்தில் ஆழ்ந்தாள்.

அடுத்ததாக முடிந்தவரை கணினியில் பதிவேற்றப் பட்ட விவரங்களை மீட்டெடுப்பது என்று அதில் ஈடு பட்டவள், அது தொடர்பானவர்களிடம் பேசிக் கொண்டிருந்த போது மோகனசுந்தரத்திடமிருந்து அவளுக்கு அழைப்பு வந்தது.

கவலையுடன் சென்றவளைப் புன்னகையுடன் வரவேற்றவர், ''பிரச்சனை எதுவுமே இல்லை. மாணிக்கம் தான் அந்த ஃபைலை காலையில் உன் ரூம் ஒதுங்க வைக்கும்போது ஸ்டோர் ரூமில் எடுத்து வைச்சிருக்கான். பத்திரமா வைச்சுக்கோங்க. எல்லா டீடைல்ஸ்ஸும் இருக்கான்னு பாருங்க'' என்று கோப்பை அவளிடம் நீட்டினார்.

'தான் காண்பது கனவா?' என்று ஒரு நிமிடம் கண்களை விரித்தவள் அவசர அவசரமாக அதைப் பிரித்துப் பார்த்து கண்களை ஓட்டினாள்.

''இது தான் சார்... இந்த ஃபைல் தான். தேங்க் காட்!'' என்று நிம்மதிப் பெருமூச்சை வெளியேற்றியவளின் முகத்தில் குழப்பம் சூரியனைக் கண்ட பனித் துளி போல் விலகியது.

தன் புன்னகையைப் பெரிதாக்கி, ''நானும் உங்க மேல் ரொம்பவே கோபத்தைக் காண்பிச்சுட்டேன்.'' மன்னிப்பு கோரும் குரலில் சொன்னவர்,

''இப்படியாகும்னு எதிர்பார்க்கவேயில்லை. என்னுடைய பிபீ (BP) இன்றைக்கு கன்னாபின்னான்னு ஏறியிருக்கும் நினைக்கிறேன்'' என்று இயல்பாகப் பேசினார்.

''ஐ அம் சாரி சார். நீங்க கோபப்பட்டது ரொம்பவே சரி தான். ஒரு வேலையை நல்லா செய்யும் போது பாராட்ட நீங்க. தப்பு செய்யும்போது கோபப்படறீங்க. என்னால் உங்களுக்கு தேவையில்லாத டென்ஷன்'' மைதிலியும் பதிலுக்கு சமாதானம் சொன்னாள்.

''ம். இனிமேல் இந்த மாதிரி ரிப்பீட் ஆகாமல் பார்த்துக்கோங்க'' என்றவரிடம், ''ஷ்யூர் சார். ஆனால்... இந்த ஃபைலை மாணிக்கம் எப்படி எடுத்திருக்க முடியும்?'' என்றாள் சந்தேகத்துடன்.

''இப்போ தான் அவனை லெஃப்ட் அண்ட் ரைட் வாங்கினேன். பாவம் 'வேலையை விட்டு எடுத்துடா தீங்க சார்! பிள்ளைக்குட்டிக்காரன் சார்!' என்று காலில் விழறான். என்ன செய்யச் சொல்றீங்க?'' என மைதிலி யிடம் கேட்க, அவளுக்கும் அதற்கு மேல் மாணிக்கத் தைப் பற்றிப் பேச விருப்பமிருக்கவில்லை.

மோகனசுந்தரம், தன்னிடமே அவ்வளவு கோபத்தைக் காட்டி இருக்கும்போது கடை நிலை ஊழியரான மாணிக்கம், அவர் கோபத்திற்குப் பயந்து மோகன சுந்தரத்தின் காலில் விழுந்திருப்பதில் ஆச்சரியம் எதுவும் அவளுக்குத் தோன்றவில்லை.

நன்றி தெரிவித்துவிட்டு தன் அறைக்கு வந்தவள் விஷ யத்தைத் தெரிவிக்க ராகவனைத் தொடர்பு கொண்டாள்.

இவளது அழைப்பிற்காகக் காத்திருந்தவன் போல, ''ம். சொல்லு மைதிலி'' என்றான் எடுத்தவுடனே.

மைதிலி, ''உங்க உதவிக்கு ரொம்ப... ரொம்...ப.. நன்றி ராகவன். பிரச்சனை சால்வ் ஆயிடுச்சு'' என்றாள் குதூகலிப்புடன்.

''என்னது பிரச்சனை சால்வ் ஆயிடுச்சா? என்னம்மா சொல்றே? ரெண்டே மணி நேரத்திலா?'' என்று குழம்பி னான் ராகவன்.

நடந்த விஷயங்களை அவனிடம் பகிர்ந்த மைதிலி, ''இன்னைக்கு ஜி.எம். கிட்டே செம டோஸ் வாங்கினது தான் மிச்சம். மத்தப்படி எந்தப் பாதிப்பும் இல்லாமல் முடிஞ்சதேன்னு இருக்கு எனக்கு'' என்றான்.

அவள் குரலில் வெளிப்பட்ட திருப்தி, நிம்மதி ராகவ னுக்கு சந்தோஷத்தைக் கொடுத்த அதே சமயத்தில் குழப்பத்தையும் தந்தது.



'இத்தனை முக்கியமான ஃபைலை ஒரு ப்யூன் எடுத்து செல்லுமளவிற்கு அலட்சியமாகவா வைத்திருப்பாள் மைதிலி?' என்ற கேள்வியில்தான் ராகவனுக்கு மிகுந்த குழப்பம்.

அவன் அறிந்த வரையில் மைதிலி எந்தவொரு விஷயத்திலும் அலட்சியம் காட்டுகிற பெண் அல்ல!

அப்படியென்றால்... மைதிலி சொல்வது...?

மைதிலியின் பேச்சும், அதன் விவரங்களும் ஒன் றுடன் ஒன்று தொடர்பு இல்லாதது போன்று இருந்தது அவனுக்கு.

மேலும் ஒரு முறை அவன் மைதிலியிடம் விவரங் களைக் கேட்க, அவள் முன்பு சொன்னதையேதான் எந்தவித மாற்றமுமின்றி சொன்னாள்.

''உண்மையைத்தான் சொல்றே மைதிலி?'' தயக்கத் துடன் கேட்ட ராகவனிடம்,

''என்னாலேயும்தான் இன்னமும் நடந்ததை எல்லாம் நம்பவே முடியலை ராகவன். நான் டென்ஷன் ஆகி, உங்களையும் டென்ஷன் ஆக்கி... கடைசியில் எல்லாமே 'புஸ்' ஆகிடுச்சு.'' என்றாள் கிண்டலாக.

பாவம்! அவள் சொல்லும் போது ராகவனின் முகத்தில் படர்ந்திருந்த சிந்தனையைப் பற்றி அவளுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை!!

''ம்... எனக்கும் பிரச்சனை ஒண்ணுமே இல்லாததுன்னு தான் தோணுது மைதிலி'' என்றவனது பேச்சில் ஒளிந் திருந்த அர்த்தம் மைதிலிக்கும் அப்பொழுது விளங்க வில்லை.

அதற்கான விளக்கம் கொடுக்க ராகவன் அடுத்தநாளே மைதிலியை அவள் பணிபுரியும் இடத்திற்கே நேரில் வந்து சந்திப்பான் என்று அவள் எதிர்பார்க்கவுமில்லை!

# 11



மைதிலி பேசி வைத்ததிலிருந்து ராகவனால் அந்த விஷயத்தை அப்படியே முடித்துவிட முடியவில்லை.

குறைந்தபட்சம் அப்படி ஒரு 'பிட்' இருக்கா இல்லையா? இல்லை... இதுவும் அவளோட 'பிட்டு' தானா? எல்லா விஷயமும் மாதிரி அதுவும் 'புஸ்'தானா?

அலுவலகத்தில் அவன் செய்ய வேண்டிய வேலைகள் குவிந்திருக்க, அதில் முழு மனதுடன் ஈடுபட முடியாமல் அவனுக்கு மனம் தடுமாறியது.

எங்கேயோ, ஏதோ தப்பு நடந்திருப்பதாக அவனது போலீஸ் மூளை சொல்லிக் கொண்டேயிருக்க, அதனிடமிருந்து தப்புவதற்காகவேனும் எதையாவது செய்துதான் ஆக வேண்டுமென முடிவு செய்தான்.

ராஜீவை அழைத்து, அவனுக்கு வேண்டியதைக் கூறிய பிறகுதான், ராகவனால் சிறிதாவது வேலையில் கவனம் செலுத்த முடிந்தது.

ஆனால், வீட்டிற்கு வந்து, ராஜீவ் பதிவு செய்து எடுத்து வைத்திருந்த வீடியோக்களைப் பார்த்த பிறகு.



கவனச் சிதைவே எத்தனையோ தேவலாமென தோன்றியது!

மனதிலிருந்த குழப்பம் போதாதென இப்பொழுது அங்கே கடுங்கோபம் குடிகொண்டது.

''ஆக... எல்லாமே பொய்! ஃபைல் தொலையவேயில்லை! இன்னொரு நாடகம்!''

எப்போதடா விடியும் என்று காத்திருந்தவன் அடுத்த நாள் வங்கியில் மைதிலியை அவள் அறையிலேயே சென்று சந்தித்தான்.

யாருடனோ தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்த மைதிலி, வரவேற்பாக முகத்தில் புன்னகையைத் தவழ விட்டு அவனை அமருமாறு சைகை செய்து, 'ஒரு நிமிஷம்!' என்பது போல் ஒற்றை விரலைக் காண்பித்தாள்.

அறையைச் சுற்றி வட்டமடித்த ராகவனது விழிகளில், ஒரு பக்கச் சுவற்றில், இவர்களது வங்கி லோகோவுடன், ''டிரஸ்ட் மீ... டிரஸ்ட் அஸ்... யு ஆர் இன் குட் ஹேண்ட்ஸ்'' என்று எழுதி மாட்டியிருந்தது பட்டது.

ஹ்ம்ம்... டிரஸ்ட்... நம்பிக்கை! வேடிக்கை தான்!

அவனுடைய சிந்தனையைக் கலைத்த மைதிலி, ''ரொம்ப சாரி! உங்களைக் காக்க வைச்சதுக்கு...'' என,

ராகவன், ''பழகிப் போச்சு! இது ஒண்ணும் உனக்குப் புதுசு இல்லையே?'' என்றான் உணர்ச்சியற்ற பார்வையை அவள் மீது வீசியபடி.

''அச்சோ! இன்னமுமா நீங்க இதைப் பழகலை? ரொம்பத் தப்பாச்சே?''

''எனக்கு இது வேண்டியது தான்!''

எல்லாம் நான் கொடுத்த இடம்! போனது போகட்டும். இன்றிலிருந்து புதியதாய் ஆரம்பமாகட்டும் என்று அவன் நினைத்தது மிகவும் தவறாகி விட்டது போல!

கரும் பலகையில் எழுதிய பழைய கணக்கை அழிக்காமல், புதுப்புது கணக்கை அதன் மீதே எழுதினால் எல்லாமே குழப்பமாகத்தான் முடியும்!!

பழைய மனஸ்தாபம் தீராமல் நானாக நேற்று இவளைப் பார்க்க வந்ததும் இவளுக்கு ரொம்பத் தொக்காக போய் விட்டது.

மைதிலி, ''எதுக்கு இப்போ இப்படி முறைக்கிறீங்க ராகவன்? ஒண்ணும் பிரச்சனையில்லை. அதையும் பழகிக் கலாம். இப்படி நாம அடிக்கடி மீட் செய்தால் அதுக்கும் பழகித்தானே ஆகணும்?'' எனக் கள்ளமில்லாமல் சிரித் தாள்.

பல்லைக் கடித்தவன், ''நேற்று என்ன நடந்தது மைதிலி?'' என்று மீண்டும் வினவினான்.

''ஹப்பா... இதோட எத்தனை முறை இதைக் கேட் பீங்க ராகவன்?'' என்றவள், அவனது பார்வையின் தீவி ரத்தில் எல்லாவற்றையும் மறுபடியும் ஒருமுறை அவ னுடன் பகிர்ந்தாள்.

இன்னமும் அதையே சாதிக்கிறாளே! பாராட்டித்தான் தீரவேண்டும்!

இதை யோசித்தவனுக்கு ஏனோ அந்தத் தருணத்தில், 'உண்மையைச் சொல்லும் போது மட்டும் தான் முன் னுக்குப் பின் முரணின்றி, தயக்கமின்றி அப்படியே



சொல்ல முடியும்' என்று புத்தியில் உரைக்காமல் போயிற்று.

அவளின் அறையைச் சுற்றி அவநம்பிக்கையுடன் கண்களால் அலசியவனுக்கு உள்பக்கமாக ஒரு கதவு தென்பட, 'ஒருவேளை இந்தக் கதவு வழியாக ஃபைலை எடுத்து சென்றிருக்கலாமோ?' என்ற நப்பாசையுடன் மைதிலியிடம், ''இந்த ரூமுக்கு ரெண்டு பக்கம் வழியாக வும் போய் வரலாமா?'' என்றான்.

இவனெதற்கு இந்த கேள்வியைக் கேட்கிறான் என்பது விளங்காமலேயே அவனது கண்கள் சென்ற திசையைப் பார்த்தவள், ''இது ஜி.எம்.ரூமுக்கு போறதுக்கு ஒரு வழி ராகவ். நானும், ஜி.எம். மட்டும்தான் யூஸ் பண்ணு வோம். அதுக்கு சாவியும் எங்க ரெண்டு பேரிடம்தான் இருக்கு. மற்றபடி எல்லாரும் மெயின் டோர் வழியா தான். ஆமா... இதை எதுக்கு கேட்கறீங்க?'' என்றாள் அப்பாவியாய்.

ஆக மொத்தத்தில் அவனது நப்பாசை கூட நிராசை யாய் போய்விட்டது.

ஏமாற்றத்துடன் சற்றே குரலை உயர்த்தி, ''நீ ஃபைல் தொலைஞ்சு போச்சுன்னு சொல்ற கதையை என்னை அப்படியே நம்ப சொல்றியா?'' ஆவேசமாக அவளை வினவினான்.

ராகவனின் இந்தக் கேள்வியை எதிர்பாராதவள் சற்றே அதிர்ச்சியுடன், ''ஏன்? நம்பறதுக்கென்ன ராகவன்?''

''ம்ம்ம்... முன்பின் பார்த்திராத ஒருத்தனை நம்பற துக்கு டெஸ்ட் வைச்சு, யாரையும், எதையுமே அப்படியே நம்பக் கூடாதுன்னு அரிச்சுவடி போட்டவளே நீ தானே

மைதிலி? இப்போ என்னையே நம்பறதுக்கென்னன்னு கேட்கிறே?''

ராகவனின் குரலில் இருந்த உணர்ச்சிகளின் கலவை மைதிலியின் மனதைப் பிசைந்தது.

கலங்கிய குரலில், ''மொட்டை தாத்தாவிற்கும், முழங்காலுக்கும் என்ன சம்பந்தம் ராகவன்?'' எதிரில் நின்றவனை நேர்பார்வையுடன் கேட்டாள் மைதிலி.

பொங்கி வந்த கோபத்தோடு, ''சம்பந்தமா கேட்கிறே சம்பந்தம்? எல்லாத்தையும் மாஸ்டர் பிளான் போட்டு செய்துட்டு பேச வந்துட்டாள் பெரிய இவ மாதிரி...'' பல்லைக் கடித்தான்.

''எனக்கும் பொறுமையில்லை ராகவன். இப்போ என்ன சொல்ல வர்றீங்கன்னு கொஞ்சம் புரியற மாதிரி சொல்றீங்களா?'' மைதிலியின் உயர்த்தாத குரலில் அடக்கப்பட்ட சினம் வெளிப்பட்டது.

''சொல்றாங்க... பாகற்காயில் தேன் வடியுதுன்னு. என்னை மேலும் மேலும் கோபப்படுத்தாதே மைதிலி.''

''....''

ஓரிடத்தில் உட்கார முடியாமல் அங்குமிங்கும் நடை பயின்றபடியே, ''என்னை என்னன்னு நினைச்சே மைதிலி? ஒவ்வொரு தடவையும் என் உணர்ச்சியுடன் விளையாடிட்டு இருக்கேன்னு புரியாமலா இத்தனை வேலையும் செய்யறே?'' ஆதங்கத்துடன் பேசுபவனை மலங்க மலங்க விழித்துப் பார்த்தாள் மைதிலி.

'இவ்வளவு சொல்லிய பிறகும் எந்த விளக்கமும் கொடுக்காமல், நான் சொல்ல வருவது புரியவே இல்லை



என்பது மாதிரி என்ன பார்வை இவளுக்கு?' மைதிலியின் விழிகளைப் பார்த்தவனுக்கு மீண்டும் கோபம் கண்ணை மறைத்தது.

அவன் பொருமலைக் கேட்டவளின் மனம் வலிக்க, ''ஏன் ராகவன்? இப்போ என்ன நடந்ததுன்னு இப்படியெல்லாம் பேசறீங்க?'' வருத்தத்துடன் வினவினாள்.

''என்ன நடந்ததா? என்ன நடந்ததுன்னு என்னையே கேட்கிறியா? அன்னைக்கு ஸ்டேடியத்தில் நீ சிரிச்சு பேசியும் நான் சரியாகலைன்னு உனக்கு தெரியும். அதான் அடுத்ததா ஒரு சந்தர்ப்பத்துக்கு காத்துட்டு இருந்தே. நேற்றைக்கு நானா இங்கே பேங்க் வந்ததும் உன்னால் அப்படியே விட்டுட முடியலை. போன் நம்பர் தெரிஞ்சாலும் போனில் பேசறதுக்கு ஒரு சாக்கு தேவைப் பட்டது. அதற்காகத்தான் இந்த ஃபைல் தொலைஞ்சு போச்சுன்னு ஒரு டிராமா. போலீஸ்காரனுக்கு வேலை வெட்டி எதுவுமில்லைன்னு நினைச்சுட்டு இருக்கியா?''

மைதிலிக்குப் பேச சந்தர்ப்பமே கொடுக்காமல் தன் மனதில் இருந்த ஆத்திரம், கோபம், ஏமாற்றம் எல்லாவற்றையும் அவளிடம் கொட்டித் தீர்த்தான்.

மனதில் எழுந்த கோபத்திலும் நிதானம் தொலைக்காத மைதிலி, ''இந்த டிராமா போடுவதால் யாருக்கு என்ன லாபம்ன்னு நினைக்கறீங்க?'' என்று கேள்வி யெழுப்பினாள்.

இன்னமும் எனக்குக் காது குத்தியேதான் தீருவேன் என்றா இருக்கிறாள்?

''வேற யாருக்கு? சாட்சாத் உனக்கே தான்!''

"எந்த விதத்தில்?"

"நான் ஒண்ணும் உன்னோட கதை பேச வரலை. டிராமா போட்டவள் நீ? உனக்கு தெரியாதா?" இறுகிய முஷ்டியைக் கொண்டு அங்கிருக்கும் பொருட்களை உடைக்க வேண்டும் போல் தோன்றியது ராகவனுக்கு.

"தெரியாமல் தானே சார் கேட்கிறேன்?! உங்களுக்கு தெரிஞ்ச விஷயங்களை எனக்கும் சொல்லுங்க... ப்ளீஸ்."

கையோடு எடுத்து வந்திருந்த சீடியை அவளது மேஜை மேல் போட்டுவிட்டு, "இந்த வீடியோவைப் பார். அதிலே ரொம்பவே க்ளியரா இருக்கு; உன் ரூமுக்கு எந்த ப்யூனும் வரலை; நேற்றைக்கு ஸ்டோர் ரூமில் இருந்து தொலைஞ்சு போன ஃபைலையும் எந்த மாணிக்கமும் எடுத்துட்டும் வரலை" என்றான்.

மைதிலி அதற்கும் அசராமல் இருப்பதைக் கண்டு, "அதோட இது ரொம்பவே கான்ஃபிடன்ஷியலான விஷயம்னு சொன்னியே? அப்படி இருந்தும் நான் ஒரு மூணாவது மனுஷன்..." அவளுடைய பார்வை கூராக அவன் மீது சீற கண்டு என்ன தோன்றியதோ ராகவனுக்கு?

"அதாவது... உங்க பேங்க் விஷயத்தில் நான் வெளியாள்ன்னு சொல்ல வர்றேன்" என்று முணுமுணுத்தவன்,

"எதுக்கு நீ அவுட் சைடரான எனக்கு கால் செய்யணும்? அஃபீஷியலா போலீஸ் கம்ப்ளைன்ட் கொடுக்கிறதைப் பற்றி பேசணும் என்றால்கூட ஒத்துக்கலாம்."

"போதும் சார் உங்க சார்ஜ் ஷீட்டும், எவிடன்சும். இப்போ உங்களுக்கு என்னப் பிரச்சனை? நான் ஃபைலை தொலைச்சதா? இல்லை... எனக்கு பிரச்சனைன்னு



உங்களுக்கு கால் செய்ததா?" பொறுமை இழந்த குரலில் அவள் ராகவனிடம் வினவ,

அவனோ, "நீதான்!" என்றுவிட்டு ஆத்திரத்தில் அங்கிருந்த சுழல் நாற்காலியை சுற்றிவிட்டு நகர்ந்தான்.

# 12



பெரும்புயல் அடித்து ஓய்ந்தது போல ஆயாசமாக உணர்ந்தாள் மைதிலி.

எப்படியெல்லாம் பேசிவிட்டான் அவன்? இவனுக்கு எதையுமே நேர்கோட்டில் சிந்திக்கத் தெரியாதா?

'வித் ரெஃபரன்ஸ் டு' என்று சொல்வார்களே, அப்படி எல்லாவற்றையுமே முதல் சந்திப்போடு தொடர்புப் படுத்திதான் யோசிப்பானா இவன்?

சிறுத்தை தன் புள்ளிகளை மாற்றிக் கொண்டாலும் இவனால் அந்த விஷயத்தைப் பற்றி பேசாமல் இருக்க முடியாது போல?

மைதிலியின் கோபமும், ஆதங்கமும் வெகுநேரம் அடங்க மறுத்தது.

'துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு' என்றாலும் எதற்காக அவள் அப்படி ஒரு காரியம் செய்து வைத்தாள் என்று மைதிலியால் நொந்து கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

'வினை விதைத்தவன் வினை அறுப்பான்', 'தன் வினை தன்னைச் சுடும்!' நம்ம நாட்டில்தான் ஏற்கனவே எல்லா சூழ்நிலைக்கும் எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்களே!

அந்த வினை தான் நான்கு வருடங்கள் தாமதமானாலும் அதன் பிறபலனை இப்போது தனக்குக் காட்ட வந்திருக்கிறது.

ராகவனின் மன வேதனையும், ரணமும் மிகவும் ஆழமானது என்பதன் எதிரொலியே அவனது பேச்சும், நடவடிக்கையும்.

நான்கு வருடத்திற்குப் பின்னும் இத்தனைத் தாக்கம் இருக்கிறதென்றால்...?

காலையில் அத்தனை ஆத்திர அவசரத்திலும் ராகவன் அவளிடம் சொல்லாமல் சொல்லியதென்ன?

அவள் அவனுக்கு முக்கியம் என்றுதானே?

தனக்கு முக்கியத்துவம் வாய்ந்தவள் தன் மீது நம்பிக்கையில்லாமல் நடந்து கொண்டாள் என்பதினால் வந்த கோபம், வருத்தம் தான் எல்லாம்.

ராகவன் மீண்டும் அதுபோல ஒரு சம்பவம் நடந்து விடுமோ என்று பயப்படுகிறானோ?

அதனால் தான் அதுபோன்று சின்னதாக அவனுக்குத் தோன்றினாலும்கூட அவள் மீது அவனுக்கு கோபம்? ஆத்திரம்?

நான்கு வருடங்களுக்கு முந்தைய சந்திப்பில் நடந்த குழப்பங்களுக்கு விளக்கம் கொடுக்க இதுவரை சந்தர்ப்பம் வாய்க்கவில்லை என்பது அவளது துரதிர்ஷ்டம் தான்.



அப்படி சந்தர்ப்பம் வாய்க்கவில்லை என்று அதைச் சரி செய்யாமல் விட்ட சின்ன விரிசல்தான் இப்பொழுது பெரிய பிளவாய் விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது.

குறைந்தபட்சம் இப்பொழுது முளை விட்டிருக்கும் சின்னப் பிரச்சனையாவது உடனே களை எடுக்க வேண்டும்! அதற்கான சந்தர்ப்பத்தையாவது ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்தக் கோணத்தில் யோசித்த மைதிலிக்கு ராகவனின் கோபத்திற்கான காரணம் முழுதும் புரிபட, அவளுடைய கோபம் காணாமல் போனது.

தான் எப்படி அவனிடம் உரிமை எடுத்து தன் பிரச்சனையை அவனிடம் முதலில் சொன்னோமோ... அப்படி தானே அவனும் உரிமை எடுத்து தன்னிடத்தில் கோபப்படுகிறான்?

கோபம் அவசியமில்லை என்று புரிய வைத்தால் எல்லாம் சரியாகிவிடப் போகிறது!

மைதிலியின் பக்குவப்பட்ட சிந்தனை அவளைக் கவலைகளில் மூழ்க விடாமல் மீட்டெடுத்தது.

அடுத்து செய்ய வேண்டிய காரியங்களில் ராகவனை நேரில் சந்தித்து விளக்கம் கொடுப்பதற்கு முதலிடம் கொடுத்தாள்.

அதனால் வேலை முடிந்து வீட்டிற்குச் செல்லும் முன் அவனை, அவன் அலுவலகத்திலேயே சென்று சந்திப்பதென்று முடிவு செய்தாள்.

தன் கைப்பையை எடுத்துக் கொண்டு தயாராகும் போது, ராகவன் கொண்டு வந்திருந்த சீடி அவளது

மேஜையின் மேல் வீற்றிருக்க, அதையும் எடுத்து பையில் வைத்துக் கொண்டாள்.

அவனைச் சமாதானம் செய்ய வேண்டும் என்று துடித்தவளுக்கு ஒரு கணம் கூட, முதல் நாள் நடந்த அலுவலகப் பிரச்சனைப் பற்றிய நினைவு இருக்கவில்லை.

ஒருவேளை அந்த சீடியைப் பார்த்திருந்தாலாவது அவளுக்கு அதன் முக்கியத்துவம் புரிந்திருக்குமோ என்னவோ?

அப்படி புரிந்திருந்தால் பின் நாளில் வரும் பிரச்சனையை வரும் முன் தடுத்திருக்கலாமோ?

விதி யாரை விட்டது மைதிலியை மட்டும் விட்டு வைக்க?!

மைதிலியைத் தன் அலுவலகத்தில் எதிர்பாராத ராகவன், அவளைப் பார்த்ததும் சற்றே திகைப்புடன் தலையை மட்டும் அவளை வரவேற்கும் விதமாக அசைத்தான்.

மெல்லிய புன்னகையை உதிர்த்தவள், ''குட் ஈவ்னிங் சார்! உங்களுக்கு கொஞ்சம் நேரம் இருக்குமா என்கூட பேசறதுக்கு...'' என்றாள்.

காலையில் அவளிடம் கடுமையாய் பேசிவிட்டு வந்ததும், அவன் கோபத்தை வெளிப்படுத்தியதை எண்ணி மனதளவில் வருந்திக் கொண்டிருந்தவனுக்கு, இப்பொழுது தன் முன்பு புன்னகையுடன் நிற்பவளைக் கண்டதும் ஆச்சரியமாக இருந்தது.

''சும்மா டைம் பாஸ் பண்றதுக்கு ஏதாவது பேசணும்னா அதுக்கு இது இடமில்லை. திஸ் இஸ் தி ப்ளேஸ் டு டாக் அபௌட் சைபர் க்ரைம்'' என்று தெளிவுபடுத்தினான்.



புருவத்தை அழகாக உயர்த்தி, ''அப்போ ஃபைல் தொலைஞ்சு போன கம்ப்ளைண்ட் எல்லாம் பற்றி இங்கே பேசக்கூடாது, இல்லையா?'' என்றாள்.

'மறுபடியுமா?' என்பது போல் பார்த்தவனின் விழிகளில் கட்டாயம் கோபமில்லை.

அதுவே மைதிலிக்கு தைரியத்தை வரவழைக்க, ''காணாமல்தான் போச்சு... ஆனால் தொலைச்ச பொருள் பத்திரமா இருக்குதான்னு பார்க்கத்தான் வந்தேன்!'' என்றாள் பூடகமாக.

எதிரே அமர்ந்திருப்பவளின் கண்களை நேராகப் பார்த்து, ''காலையில் கோபப்பட்டது அவுட் ஆஃப் மை எமோஷன்ஸ். மறுபடியும் ஏதாவது சொல்லி என்னை டென்ஷன் பண்ணாதே ப்ளீஸ்!'' என்றான் உணர்ச்சியற்ற குரலில்.

காலையை விட இப்பொழுது இன்னமும் அதிகக் கோபத்தில் 'காச் மூச்' என்று கத்துவான். முடிந்தவரை எடுத்து சொல்வது என்ற முடிவுடன் வந்தவளுக்கு ராகவன் இப்படி பேசியதும் புன்னகைக் கீற்று பெரிதாகியது.

''என்ன சார் இப்படி உலக அதிசயமெல்லாம் நடக்குது?'' வியப்புடன் மைதிலி கேட்டது எதைக் குறிக்கிறது என்று அவனுக்கு நன்றாகவே புரிந்தது.

''சும்மா வெட்டியா இந்த வேலையில் இருக்கேன்னு நினைச்சியா? டூ யூ நோ ஹொவ் இம்பார்டன்ட் அவர் டைம் இஸ்? வேறெதுவும் இல்லைன்னா நீ கிளம்பலாம் மைதிலி.''

கறாராகச் சொன்னவனிடம், ''ஏன்? என்னுடைய நேரமும் விலை மதிப்பில்லாததுதான்! எனக்காக ரெண்டு நிமிஷம் ஒதுக்குங்க. சொல்ல வேண்டியதைச் சுருக்கமா சொல்லிடறேன்'' என்றாள்.

அவன் மௌனத்தையே சம்மதமாகக் கொண்டவள், ''ஒருத்தங்க மீது குற்றம் சொல்றதுக்கு முன்னாடி அவங்களிடம் என்ன ஏதுன்னு விசாரிக்கணும். உங்களுக்கு அதை நான் சொல்லணும்னு அவசியமில்லை.''

''.....''

''என்னுடைய டேபிள் மேலே இருந்த ஃபைல் எங்கேயும் கால் முளைச்சுப் போகலை என்றாலும், அதை எடுத்துட்டுப் போனவங்க யாரும் ப்ரோக்ராம் செய்து வைச்சிருக்கிற ரோபோ கிடையாது. ஸ்டோர் ரூமில் வைக்கணும்னு எடுத்திருக்கலாம்; அதை மற்ற ஃபைலோட தற்சமயத்துக்கு வைச்சுட்டு அப்புறம் மொத்தமா எடுத்து வைக்கலாம்னு இருந்திருக்கலாம். இப்படி எத்தனையோ சொல்லலாம்.''

'ஆனால் அதற்கெல்லாம் உன் அறையிலிருந்த ஃபைலை எடுத்தவர் கேமராவில் பதிவாகியிருக்கணும்' என்று மனதில் தோன்றியதை சொல்லி, வாதத்தை மேலும் வளர்க்காது விடுத்த ராகவன், ''ம்ம்...'' என நீண்ட பெருமூச்சை வெளியேற்றினான்.

''ஒருத்தரை குற்றவாளி என்ற கண்ணோட்டத்தில் பார்த்தால், அவங்க செய்யறது எல்லாமே குற்றமாதான் தெரியும். அந்த அனுமானத்தில் பேசறது யாருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்காது ராகவன்'' தன்னால் முயன்றவரை எடுத்துரைத்தாள்.

''தேங்க்ஸ்!'' உணர்ச்சியற்ற குரலில் சொன்னவன், ''நீ கேட்ட ரெண்டு நிமிஷம் முடிஞ்சுடுச்சு'' என தன் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு அவளைக் குறிப்பாகப் பார்த்தான்.



தன் நாற்காலியிலிருந்து எழுந்த மைதிலி, 'அப்புறம் ஒரு விஷயம்... இன்டர்நெட்டில் காணாமல் போனவங்களைக் கூட சைபர் க்ரைமில் தேடி தருவீங்களா?'' இதழ்கடையில் முறுவல் தோன்ற வினவ,

அவளது கேள்வியில் ராகவனுக்குப் புன்னகை மலர்ந்தாலும், ''போலீஸ்காரன் என்றால் உனக்கு அத்தனை இளப்பமா?'' என்றான் கேலியாக.

கண்களை சுருக்கிய மைதிலி, அவனை நோக்கி குனிந்து, ''இல்லவே இல்லை... நீங்கதான் ஸ்பெஷல் கன்ஸிடரேஷனாக்கும்!'' என்றாள் ரகசியக் குரலில்.

அவளது செய்கையும், பாவனையும் அவனை ஈர்த்தாலும், அதற்கு எந்தவித எதிரொலியும் வெளிக்காட்டாமலிருக்க முயன்றவன், அதில் ஓரளவு வெற்றியும் கண்டான்.

''ஐ டோன்ட் வான்ட் டு டேக் யுவர் டைம் எனிமோர். அப்புறம் பார்க்கலாம் ராகவன். பை...'' என்று கையசைத்துவிட்டு சென்றவளையே இமைக்காமல் பார்த்திருந்தான் ராகவன்.

# 13

''ராகவ்! உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் கேட்கணும்னு நினைச்சுட்டே இருந்தேன். இன்றைக்கு

தான் அதற்கான நேரம் வந்திருக்கு போல?!'' ராகவனை நோட்டம் பார்த்தாள் ரேகா.

அண்ணி கேட்க வருவது எதைப் பற்றி என்பது ராகவனுக்குத் தெரியாமலில்லை. கடந்த சில நாட்களாக சகோதரன் ராஜீவ் 'ஏதாவது விஷயமாடா? இருந்தால் சொல்லு... உன் அண்ணி ரொம்ப சந்தோஷப்படுவாள்' என்று விதவிதமாக நச்சரித்துக் கொண்டுதான் இருக்கிறான்.

ராகவனுக்கும், 'நீயும், அம்மா-அண்ணியுடன் கூட்டணியா? உன்னிடம் சொல்லலாமா?' என்று ஏதாவது சொல்லி மழுப்புவதே இப்பொழுதெல்லாம் பகுதி நேர தொழிலாகிவிட்டது.

மைதிலியிடம் மனம்விட்டுப் பேசுவதற்கு முன்னால் மற்றவர்களிடம் என்னவென்று சொல்வது என்ற குழப்பம்தான் ராகவனின் மழுப்பலுக்கு முக்கிய காரணம்.

புன்முறுவலுடன், ''என்ன அண்ணி! பீடிகை எல்லாம் பலமா இருக்கு. உங்களுக்கு இல்லாத நேரமா? சொல்லுங்க! என்ன விஷயம்?'' என்றான்.

''என்ன விஷயம்னு நீங்கதான் சொல்லணும்!'' ஏற்ற இறக்கத்துடன் கூறியவள், அதற்குத் தக்க புருவத்தையும் ஏற்றி இறக்கினாள்.

''இன்றைக்கு ராஜீவ் சீக்கிரமே வேலைக்குப் போயிட்டானா? உங்களுக்கு பொழுது போக நான்தான் கிடைச்சேனா அண்ணி?''

''உங்க அண்ணன்தான், என் நச்சரிப்பு தாங்காமல் இனிமேல் உங்களிடமே நேரடியா விஷயத்தைக் கேட்க சொன்னாங்க. அதான் கேட்கிறேன் என்ன விஷயம்?''



''என்ன அண்ணி இது வாழைப்பழ கதை மாதிரி ஆயிடுச்சு. விஷயம் பேசணும்னு கூப்பிட்டது நீங்க. இப்போ என்கிட்டேயே அதைத் திருப்பிக் கேட்கறீங்க?''

ராகவனின் குரலில் சிறிது கூட எரிச்சல் வரவில்லை; மாறாக உதட்டில் நிலைத்த புன்னகையும், முகத்தில் தெரிந்த மலர்ச்சியும் 'என்னவோ விஷயம்' என்று பறை சாற்றியது.

''நீங்க சரிப்பட்டு வர மாட்டீங்க. நான் அத்தைகிட்டேயே இன்றைக்கு பேசிக்கிறேன்'' என்று ரேகா இழுக்க,

ராகவன், ''எந்த விஷயத்தைப் பற்றி?'' என்றான் கிண்டலாக.

''ம்ம்ம்... அன்றைக்கு சி.எஸ்.கே. மேட்ச் நடந்ததே, அதை பற்றின விஷயமா இருக்கலாம்; நல்லா இருக்கிற ராஜீவ் பைக் 'ஸீ ஹார்ஸ்' பேங்க் போகும் போதெல்லாம் சர்வீஸுக்குப் போயிடுதே அதைப் பற்றியா இருக்கலாம்; அன்றைக்கு தட்டில் இருக்கிற சாப்பாட்டில் திரும்பத் திரும்ப 'M' என்ற எழுத்தை மட்டும் மாறி மாறி வரைஞ்சு அழகு பார்த்துட்டு இருந்தவங்களைப் பற்றிய விஷயமா இருக்கலாம்; தனியா சிரிக்கிறது, தலையை உலுக்கிக்கறது, திடீர்னு சோகமா ஆயிடறது, அப்புறம் அப்படியே மாறி ஒரே கோபமா 'உர்'ன்னு முகத்தை வைச்சுக்கிறது இதுக்கெல்லாம் என்ன அர்த்தம்னு கூட கேட்டு தெரிஞ்சுக்கலாம். எல்லாமே தனி தனி விஷயமா... இல்லை ஒரே விஷயமா ராகவ்? சொல்லுங்க பார்க்கலாம்!''

முன்பை விட பலமாகச் சிரித்த ராகவன், ''அண்ணி! எங்க டிபார்ட்மென்ட்டில் நீங்க வந்து சேர்ந்துடுங்க.

உங்களுக்கு ஒரு நல்ல எதிர்காலம் கட்டாயமா இருக்கு. சூப்பரா வருவீங்க'' என ஆருடம் சொன்னான்.

நீண்ட பெருமூச்சை வெளியேற்றிய ரேகா, ''உங்களுக்கு ஏதாவது என்னால் முடிஞ்ச ஹெல்ப் செய்யலாம்னு இருந்தேன். ஆனால் நீங்க இந்த விஷயத்தில் என்னை வேண்டாத விருந்தாளியாதான் நினைக்கறீங்க போல!'' அடுத்த வழியில் ஏதாவது பலன் தெரிகிறதா என்று முயன்றாள்.

''எதுக்கு இவ்வளவு சீரியஸ் ஆயிட்டீங்க அண்ணி? டேக் இட் ஈசி.'' சமாதானம் சொல்லத் தொடங்கியவன் அண்ணியின் முகம் தெளிவாகாதது கண்டு சிரித்த படியே,

''நீங்க ஒரு லேடி ஜேம்ஸ்பாண்ட் அண்ணி. என்னால் இப்போதைக்கு இதை மட்டும்தான் சொல்ல முடியும். எல்லாம் ஒரே விஷயம்தான். என்னைப் பொறுத்த வரையில் எப்போதும் ஒரே ஒரு விஷயம்தான்.''

அவன் அப்படி சொல்லும் போது 'ஜஸ்ட் லைக் தட்' என்று சொல்லவில்லை; கண்களில் கனவு மிதக்க, இதழ்களில் புன்னகை தவழ, முகத்தில் நம்பிக்கை பிரதிபலிக்க ஒவ்வொரு வார்த்தையையும் அனுபவித்துச் சொன்னான்.

''ஹப்பாடி! உங்ககிட்டே இருந்து விஷயத்தை வர வைக்க எவ்வளவு நேரமா முகத்தை உம்முன்னு வைக்க வேண்டியதா போச்சு? முகமே வலிக்குது'' என்று அறிவித்த ரேகா,

குறும்பான புன்னகையோடு, ''பொண்ணு உங்களுக்கு ஏத்த ஜோடியாதான் இருக்கா. என்னை மாதிரியே ரொம்ப சாது'' என்றாள்.



''அண்ணி!'' என்று அலறிய ராகவன், ''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி லேடி ஜேம்ஸ்பாண்ட் என்று சொன்னேன் இல்லையா? அதை வாபஸ் வாங்கிக்கிறேன்'' என அறிவித்தான்.

''இதென்ன தம்பி அரசியல்வாதிங்களுக்குக் கொடுக்கிற டாக்டர் பட்டத்தைத் திருப்பிக் கேட்கிற மாதிரி கேட்கறீங்க? அதெல்லாம் தர முடியாது... சொல்லிட்டேன்!''

''தமிழ்நாட்டையே விலை பேசி, கேரளாவையும் இலவசமா இணைச்சு விற்பனை செய்ற ஆளுங்களை 'சாது'... 'ரொம்ப சாது' அப்படின்னு சொன்னால் வேறென்ன செய்யறது?''

''நீங்க இப்போ மைதிலியை ரெஃபர் செய்தீங்களா? இல்லை என்னையா?'' தன்னிடம் நியாயம் கேட்டவனை ரேகா வம்புக்கிழுக்க,

''அண்ணி! நீங்கதான் மைதிலியை உங்களை மாதிரின்னு சொல்லிட்டீங்களே? அப்போ ரெண்டு பேரையும்தான்!'' என்று வேகமாகச் சொன்னவன்,

உடனே, ''அப்படி தான் சொல்லிடுவேனா...? சொல்ல முடியுமா? அப்படி சொல்லிட்டு தைரியமா நடமாடிடத்தான் முடியுமா?! ஹே! ஹ்ஹஹஹே!'' என்று நிதானமாகக் கேட்டுவிட்டுச் சிரித்தான்.

''நீங்க பிழைச்சுப்பீங்க!'' ராகவனுக்கு சான்றிதழ் வழங்கிய ரேகா,

''ம்... போன தடவை பேங்க்கில் பார்த்து எதுவும் பேசாமல் வந்துட்டேன். அடுத்த தடவை நேரில் பார்க்கும்

போது உங்களைப் பற்றி ரொம்ப 'நல்ல' மாதிரி சொல்லி வைக்கிறேன்.' 'நல்ல' என்பதில் தக்க அழுத்தம் கொடுத் தாள்.

இரு கைகளையும் தலைக்கு மேலே தூக்கி கும்பிடு போட்டவன், ''உங்க ரேஞ்சுக்கு நானெல்லாம் சுண்டக் காய்! விட்டுடுங்க ப்ளீஸ்!'' என்று சிரித்தபடி சொல்லி விட்டு நகர்ந்தான்.

ராகவனுக்குத் தன் அண்ணி ரேகாவிடம் பேசிவிட்டு வந்ததிலிருந்து மைதிலியைப் பற்றிய நினைப்புதான். அது இல்லாமல் இருந்தால்தானே ஆச்சரியப்பட வேண் டியதாய் இருக்கும்?

எத்தனை விதங்களில் அவன் மைதிலியின் மீது கோபத்தைக் காட்டினாலும் அத்தனையையும் உள் வாங்கிக் கொண்டு சிறு ஏமாற்றத்தைக்கூட காட்டாமல் அவள் செயல்படுவது அவனைத் திகைக்க வைத்தது.

ஒவ்வொரு முறையும் மைதிலியின் பேச்சு விளை யாட்டுத் தனமாய் நடந்து கொள்வது போல் மேலோட் டமாகத் தெரிந்தாலும், இருவருக்குமான பிரச்சனையைப் பெரிதுபடுத்தாமல் சமாதானத்திற்கு இணங்கும் அவளது மனமுதிர்ச்சியை அவனால் புரிந்து கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

அவனுக்குத்தான் இப்பொழுது தன் கோபத்தை இழுத்துப் பிடித்துக் கொண்டிருப்பது வீண் பிடிவாதமாய் பட்டது.

'நீ ஏன் இப்படி செய்தாய்?' என்று நேரடியாகக் கேட்டு சண்டைப் போட்டு விளக்கம் கேட்டால் அவனது கோபத்தை நியாயம் என்று எடுக்கலாம்.



ஆனால் விளக்கமும் கேட்காமல்... சமாதானத்திற்கு வருபவளையும் சட்டை செய்யாமல்... கோபத்தை இயன்றவரை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தால் அதற்குப் பெயர் பிடிவாதம் என்று தானே பொருள்?

இப்படி யோசிக்கும் போதே, 'அதெப்படி விளக்கம் கேட்பது? நோ வே!' என்று மனம் எனும் வேதாளம் முறுக்கிக் கொண்டு, முருங்கை மரத்தின் மீது ஏறி அமர்ந்து கொண்டது.,

'நீயாக விளக்கம் கேட்க வேண்டாம்; மைதிலியின் பாணியில் சமாதானத்திற்கு இணங்கலாமே?' வேதா ளத்தை தாஜா செய்யும் விக்கிரமாதித்தனாக அறிவு செயல்பட்டது.

இப்பொழுது எதற்காக மனதை வேதாளத்திற்கு ஒப்பிடுவது? கீழே இறங்கியிருக்கும் மனது மீண்டும் உச்சாணிக் கொம்பில் ஏறவா?

மனம் ஒரு குரங்கு என்பது எத்தனை உண்மை?

இரண்டு நாட்களுக்கு முன்பு, மைதிலியை எப்படி பார்க்கலாம் என சதி திட்டம் போடாதக் குறையாக யோசனையிலிருந்தவன், அடுத்த நாளே ஏதோ ஒரு கோப்பின் உதவியுடன் தலைகீழாக மாறிப்போனான்.

மீண்டும் அவனே இப்பொழுது அவளுடன் இணக்க மாகவாவது போகலாமே என்று யோசிக்கின்றான்.

காதலில் மட்டுமே இது சாத்தியமா?

ராகவனை வங்கியில் மூன்றாவது முறையாகக் கண்ட மைதிலிக்கு நிஜமாகவே இம்முறை ஆச்சரியமோ ஆச்சரியம்தான்.

போன முறை வந்திருந்த பொழுதே அத்தனைக் கத்தி விட்டுப் போனானே? இன்று எதற்காக வந்திருக் கிறானோ? கடவுளே!

இன்னொரு முறை இவன் கோபமாகப் பார்த்தால்கூட தன்னால் தாங்க முடியாது என்று தோன்றியது அவ ளுக்கு.

அவனுடைய கோபம் மூலம் வெளிப்படுவது அவனது அன்பு என்றாலுமே... அடுத்த முறை என்று ஒன்று வந்தால் தானும் வெடிப்பது நிச்சயம். அது நடக்காமல் பார்க்கவே அவள் விரும்புகிறாள்.

ஹ்ம்ம்... நாம் விரும்புவது எல்லாம் நடக்கிறதா என்ன?

உள்ளே வந்த அவளைப் பார்த்து தன் கையைக் கிள்ளிக் கொண்ட மைதிலியைக் கண்டவனுக்கு புன் னகை அரும்பியது.

வெயிலும் பனியுமாக மாறி மாறி உணர்வுகளைக் காட்டிக் கொண்டிருந்தால் அவளும் தான் என்ன செய் வாள்?

அவளது குழப்பத்தைத் தீர்க்கும் முகமாக பேச்சைத் தானே முதலில் துவக்கியவன், ''ஹலோ மைதிலி!'' என்றான் நட்பாக.

''ஹ...லோ... இருங்க இருங்க! முதலில், நீங்க இந்தத் தடவை எங்க மேனேஜரைப் பார்க்க வந்தீங்களா இல்லை வீடியோ கொடுக்க வந்தீங்களா என்று சொல்லிடுங்க. நான் அதுக்குத் தகுந்த மாதிரி என்னை நான் தயார் செய்துப்பேன்.''



''இல்லை இந்தத் தடவை அந்த ரெண்டுமே காரண மில்லை. இது வேற!''

''ஹப்பாடியா! தப்பிச்சேன்!'' என்றவள், ''ஆனால், எப்படி ராகவ் இப்படி? 'நான் எப்போ வருவேன்... எப்படி வருவேன் என்றே தெரியாது. ஆனால் வர வேண்டிய நேரத்தில் கரெக்டா வந்துடுவேன்னு' அந்த ராகவேந்திர பக்தர் சொல்றார்... இந்த ராகவன் செய்றார்?? அப்படியா?'' என்று கண்சிமிட்டினாள்.

''ஹா ஹா... ஆக தலைவர் ரேஞ்சுக்கு என்னை உயர்த்திட்டேன்னு சொல்லு. தேங்க்ஸ்! தேங்க்ஸ்! தேங்க்ஸ்!''

''ம்க்கும்! நினைப்புதான் பிழைப்பை கெடுக்கு தாம்மா. நான் ஏதோ ஒரு ரைமிங்கா வரட்டுமேன்னு ட்ரை செய்தேன். நீங்க ஒண்ணும் மேலே பறக்க வேண்டாம். கீழே இறங்கி வாங்க.''

''இல்லாட்டியும் அப்படியே மேலே பறக்க விட்டுடு வீங்களா நீங்க? அப்பப்ப கீழே இறக்கி விட்டுடமாட் டீங்க?''

''இப்போ, நீங்க என்னை மட்டும் சொன்னீங்களா? இல்லை... பொதுவா எல்லாப் பெண்களையும் சொன் னீங்களா?''

''உன்னை மட்டும்தான் குறிப்பிட்டேன் மைதிலி. எப்பவும் உன்னை மட்டும்தான்...'' என்றான் மெதுவாக.

பின்பாதியைச் சரியாகக் கவனிக்காமல், அவனைக் குறுகுறுப்பாகப் பார்த்த மைதிலி, ''ராகவன்! நீங்க இங்கே அடிக்கடி வர்றதைப் பார்த்தால்... பேசாமல் உங்களுக்கும் என் பக்கத்தில் ஒரு சீட்டைப் போடணும் போலிருக்கே

ராகவன்? எப்படி? போட்டுடலாமா?'' என்று கண் சிமிட்டினாள்.

''ஆளை விடுங்கம்மா! என் வேலையைச் செய்யவே ரெண்டு ஆளு வேணும். நான் கிளம்பறேன்'' என்று இருக்கையை விட்டு எழப் போனவனைக் கையைப் பிடித்து இழுத்த மைதிலி,

''ஹே ராகவன்! நான் சும்மா சொன்னேன். நான் செய்ற வேலைக்கு நீங்க எல்லாம் அன்டர் - குவாலி ஃபைட். அதனால தப்பிச்சுட்டீங்க'' என்று சிரித்தாள்.

முதன் முதலாக தன் மனங்கவர்ந்தவளின் தொடு கையை உணர்ந்தவனுக்கு மனமும் முகமும் கனிந்தது.

தன் கரத்தைப் பற்றியிருந்த அவளது கரத்தோடு அவளையும் சேர்த்து அணைக்கவேண்டும் எனக் கட்டுக்கடங்காமல் எழுந்த ஆசைக்கு, இடம் பொருள் கருதி தடைப் போட்டான்.

அவளது வெள்ளைச் சிரிப்பைப் பார்த்தவனுக்கு, அன்று அவள் மேல் அத்தனைக் கோபப்பட்டிருக்க வேண்டாமோ? சிறிது அவளுக்கும் புரியும்படியே சொல்லி யிருக்கலாமோ? என்ற எண்ணம் ஆயிரமாவது முறை யாக எழுந்தது.

எதற்கு ஒன்றோடு ஒன்றாக எல்லா விஷயத்தையும் சேர்த்து பார்க்க வேண்டும்? அன்றைக்கு என் மீது நம் பிக்கையில்லாமல் ஒரு வேலை செய்தவள், இன்றைக் கும் அதே மாதிரி தான் செய்ய வேண்டுமென கட் டாயமா என்ன?

தன்னுடன் ஏதோ ஒரு சாக்கு வைத்தாவது பேசவேண்டு மென அவள் நினைத்ததை எண்ணி நான் சந்தோஷம் தானே படவேண்டும்?



இதென்ன காதல் வந்தால் குழப்பமும் சேர்ந்தே வருமா என்ன? தன் மீதே நம்பிக்கை குறையுமா?

ரொம்பவே நீ என்னைக் குழப்புறே மைதிலி!

''ஹலோ! ராகவன்? என்ன உட்கார்ந்துக்கிட்டே தூங் கிட்டீங்களா?''

அவன் முகத்தின் முன்னே சொடுக்குப் போட்ட கரத்தை எடுத்து அப்படியே தன் முகத்தில் பதித்துக் கொள்ள வேண்டும் போல ஆசையெழ, மிகுந்த பிரயாசையுடன் பார்வையை வேறு பக்கம் திருப்பினான்.

''என்ன விஷயமா பேங்க் வந்தீங்கன்னு நீங்க இன்ன மும் சொல்லவேயில்லையே ராகவன்?''

'உன்னைத்தான் பார்க்க வந்தேன்' என்று வாயைத் திறந்து சொல்ல மாட்டானா என்ற ஆசையில் அவளும் எப்படியெல்லாமோ தான் கேட்டுப் பார்க்கிறாள்... கல் லுளி மங்கன்! வாயைத் திறக்கிறானா பார்!

''ஏதாவது விஷயம் இருந்தால்தான் வரணுமா? சும்மாத்தான் வந்தேன்!''

''ம்ம்? அப்படியா? ஆனால் பேங்க் வர்றவங்க சும்மா வர்ற கூடாதே. தப்பாச்சே! கை நிறைய காசு கொண் டுட்டு வரணுமாக்கும்'' கண்களை பயமுறுத்துவது போல் உருட்டினாள்.

''ஜோக்கா? இங்கேயிருந்து எதையாவது கொண்டு போறதாயிருந்தால்... அப்போ?''

''ம்ஹூம்! இங்கே அப்பவும் எதையாவது கொடுத் தால்தான் அதற்கு மாற்றா எதையாவது கொண்டுப் போகலாம். நீங்க எதை ராகவன் கொண்டுப் போக

போறீங்க? இல்லை கொடுக்கப் போறீங்க?'' தலையைச் சாய்த்து மைதிலி வினவ, ராகவனுக்குத் தான் ஒரு நொடி மூச்சு நின்றது.

என் இதயத்தை உன்னிடம் கொடுக்கலாம் என்றாலோ அது எப்போதிலிருந்தோ உன்னிடம் இருக்கு மைதிலி. நீதான் உன்னுடையதைக் கொடுக்கணும். அதுவும் முழு மனதுடன். முழு நம்பிக்கையுடன். வாட் இஸ் லவ் வித்தௌட் டிரஸ்ட்? இரெண்டையுமே தருவியா மைதிலி?

''கொடுக்கத் தான் போறேன் மைதிலி. ஒரு கம்ப்ளைன்ட் கொடுக்கணும்'' என்றான் அதிதீவிரமாக.

''என்னது? கம்ப்ளைன்டா? நீங்க... அதுவும் என்கிட்டேயா? என்ன விளையாடறீங்களா ராகவன்?''

''நோ. சீரியஸா தான் சொல்றேன் மைதிலி. உங்க பேங்க் மேலே கம்ப்ளைன்ட் என்றால் உங்க பாங்க்கில் வந்து தானே கம்ப்ளைன்ட் செய்யணும்? அதான் வந்திருக்கேன்.''

என்னவென்று பார்த்தவளிடம் அவனுடைய சம்பள விவரங்கள் அடங்கிய சில 'பே ஸ்லிப்' மற்றும் பேங்க் பாஸ் புக் இரண்டையும் எடுத்துக் காண்பித்தான்.

''இதில் பார்த்தியா மைதிலி? உங்க பேங்க்கில் தான் எனக்கு அக்கவுண்ட் இருக்கு. இந்த பே ஸ்லிப்பில் இருக்கிற தொகையும், அக்கவுண்ட்டில் டெபாசிட் ஆகிற தொகையும் வித்தியாசமா இருக்கு பாரு.''

மைதிலி அவசரமாக இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்க, இரண்டிற்கும் இடையில் பெரிய வித்தியாசம் எதுவுமில்லாமல் இருக்கவும் நிம்மதி பெருமூச்சுடன் ராகவனை ஏறிட்டாள்.



அவன் அவளை குறும்பாகப் பார்க்கவும், ''ஆமாம்! பாயிண்ட் ஒன் என்பது ரொம்ப வித்தியாசம் தான். அதாவது ப...த்...து... பைசா...'' மைதிலி கண்களையும், கைகளையும் விரிப்பது போல் பாவனை செய்ய,

''ம்... இருந்தாலும் எனக்கு ஈடு செய்யறது உங்கப் பொறுப்பு தானே?''

''பத்து பைசா குறையுதுன்னு உங்க லெட்டர் பேடில் அபீஷியலா ஒரு கம்ப்ளைன்ட் கூட எழுதி எடுத்துட்டு வந்திருப்பீங்க போல?'' செல்லமாக முணுமுணுத்தவள்,

''நான் ஒத்துக்கறேன் சார்... நீங்க பேங்க் விஷயமா தான் என்னைப் பார்க்க வந்திருக்கீங்க. போதுமா?'' என்றாள் சிரிப்புடன்.

''இதுக்கே இப்படி சொன்னால் எப்படி? இப்போ தானே நோட் செய்ய ஆரம்பிச்சுருக்கேன்? இன்னமும் இது மாதிரி எத்தனை கம்ப்ளைன்ட் வர போகுதோ?'' என்றான் பயமுறுத்துவது போல.

''இந்த மாதிரியா?'' என்று கண்களை விரித்தவள்,

''தேவுடா! ராகவா! காப்பாத்துப்பா! இனிமேல் எதுக்காக பேங்க் பக்கம் வந்தீங்கன்னு கேட்கமாட்டேன்... கேட்கவே மாட்டேன்!'' என்று சத்தமாக பிரார்த்தனை செய்து, கன்னத்தில் வேறு போட்டுக் கொண்டாள்.

அவளிடம் கண்ணடித்துவிட்டு, ''இன்டர்நெட்டில் காணாமல் போனவங்களைக் கண்டுபிடிக்கச் சொல்லி

கம்ப்ளைன்ட் சொன்னவங்களையெல்லாம் ராகவன் காப்பாத்த மாட்டார்!'' என்று அருள்பாளித்தான்.

''காப்பாத்தலைன்னா போகட்டும்! நான் ஈடு செய்துக்குவேனாக்கும்...''

தனக்கு அழகு காட்டிய இதழ்களின் மீது பார்வையை ஒரு சில நொடிகள் செலுத்தியவன், ''எப்படி ஈடு செய்யறதுன்னு கண்டுபிடிச்சு வை. அப்புறம் வந்து நான் வசூல் செய்துக்கிறேன். பை'' என்று விட்டு போக, அவனைப் புன்முறுவலுடன் தொடர்ந்தது மைதிலியின் கண்கள்.

# 14



''ஹே குண்டம்மா! எழுந்துக்கோங்க மேடம்!'' ராஜீவ் உறங்கிக் கொண்டிருந்த அவனது மனைவியை துயிலெழுப்பிக் கொண்டிருந்தான்.

''நான் குளிக்கப் போகும் போது எழுப்பிட்டு போனேன். இன்னமுமா தூங்கறே? சீக்கிரம் வாடா. நான் வேற செங்கல்பட்டு வரைக்கும் போகணும்.''

உடை மாற்றி வந்தவன், மனைவியின் அருகே உட்கார்ந்து அவளை லேசாக உலுக்கி, ''பின் தூங்கி முன் எழுவாள் பத்தினி' என்பது வாசுகி காலத்தோட போயே போச்சு போல?'' என்றான் கேலியாக.



ரேகா, ''ம்ம். ரெண்டே நிமிஷம். வந்துடறேன்ப்பா. கொஞ்சம் வெயிட் பண்ணுங்க ப்ளீஸ்'' என மெல்ல எழுந்து குளியலறைக்குச் சென்றாள்.

''ஹப்பாடியா... இதை மட்டும் நான், அவள் நல்லா முழிச்சுக்கிட்டு இருக்கும்போது சொல்லியிருக்கணும்... டின் தாண்டா ராஜீவ் உனக்கு.'' சிரித்துக் கொண்டே தனக்கு வேண்டியதை எடுத்து வைத்தான்.

முகம் கழுவிவிட்டு வந்தவள், தள்ளாடியபடியே சுவற்றில் சாய்ந்ததைப் பார்த்தவன், தலைவாரிக் கொண்டிருந்த சீப்பை போட்டு விட்டு அவசரமாக மனைவியின் புறம் சென்றான்.

''ஹே ரேகாம்மா? ரேகா? என்னடா செய்யுது? உடம்பு சரியில்லைன்னா சொல்றதுக்கென்ன? உன்னை யாரு இப்ப எழுந்திருக்க சொன்னது?''

அவன் தான் அவளை எழுப்பியது என்பதை மறந்து படபடத்தான். தன்னை தாங்கியவாறே படுக்கைக்கு அழைத்து வந்தவனின் தோளில் வாகாக சாய்ந்து கொண்ட ரேகா, ''எனக்கு ஒண்ணுமில்லை ராஜீவ். கொஞ்ச நேரத்தில் சரியாகிடும். நீங்க எதுக்கு இப்ப டென்ஷன் ஆகறீங்க?'' என்றாள் சலுகையாக.

மனைவியை உட்கார வைத்தவன், தானும் கட்டில் தலைமாட்டில் சாய்ந்து உட்கார்ந்தபடி அவளைத் தன் மீது சாய்த்துக்கொண்டான்.

''ம்க்கும்! ஒண்ணும் செய்யாதவங்களுக்குத்தான் அப்படி மயங்கி கீழே விழற மாதிரி ஆகுமாமா? அடிச்சேனா பாரு!'' கோபத்துடன் பேசியவனின் கோபம் கூட ரேகாவின் மனதிற்கு இதம் அளிக்க, கணவனின் மார்பில் இன்னமும் ஒன்றிக் கொண்டாள்.

'என்ன செய்யுது ரேகா? டாக்டர்கிட்டே போகலாமா? நீ சொன்னால் தானே எனக்குத் தெரியும். மழை சீசன் வேற? ஃப்ளூ ஏதாவது வந்திருக்கப் போகுதுடா'' என்றான் அக்கறையாக.

''அச்சோ! எனக்கு எல்லாம் நார்மலாதான் இருக்கு ராஜீவ். அந்த உப்பு பிஸ்கட் மட்டும் கொஞ்சம் எடுத்து தாங்க ப்ளீஸ். அதைச் சாப்பிட்டால் இன்னமும் கொஞ்ச நேரத்தில் எல்லாம் சரியாயிடும்.''

அவள் கேட்டதை எடுத்துக் கொடுத்தவன், ''பசிக் குதா? காலையிலேயே சால்ட் பிஸ்கட் சாப்பிடறே? எனக்காக நைட் முழிக்காதேன்னா கேட்கிறதே கிடை யாது. சாப்பிடாமல் முழிச்சு இருந்துட்டு கண்ட நேரத் தில் சாப்பிட்டு, கண்ட நேரத்தில் தூங்க வேண்டியது. இந்த மாதிரியே நீ என்னை ரொம்ப படுத்தினால், அப்புறம் உன்னை உங்க அம்மா வீட்டுக்கு அனுப் பிடுவேன். பார்த்துக்கோ!'' என மிரட்ட,

ரேகா, ''ம்ம். ஆமாம். போகணும். போய்... ஒரு அஞ் சாறு மாசம் இருந்துட்டு வரவா ஜீவா?'' அவன் முகத்தை ஏறிட்டவாறே மெதுவாகக் கேட்டாள்.

''என்னது?'' அலறிய ராஜீவ், ''என்ன விளையாட றியா? இப்ப நிஜமாவே நீ என்கிட்டே அடிவாங்கப் போறே ரேகா! அப்படிச் சொன்னால் நீ பயந்துட்டு ஒழுங்கா சாப்பிடுவே, நேரத்திற்கு தூங்குவேன்னு பார்த்தால்... நீ என்ன சேம் சைட் கோல் போடறே? அதுவும் எப்படி? ஒரு நாள், ரெண்டு நாள் இல்லை. அஞ்சாறு மாசமாம்! உனக்கு கொஞ்சம்கூட மனசாட்சியும் இல்லை. என் மேலே பாசமும் இல்லை ரேகா. நல்லதுக்கே இது



காலமில்லைடா ராஜீவ்!'' புலம்பிவிட்டு, முகத்தை 'உம்'மென்று வைத்துக் கொண்டான்.

அவன் சட்டை பட்டனைத் திருகிக் கொண்டே, ''சரியான 'புத்து'ப்பா நீங்க! தலை பிரசவத்திற்கு அம்மா வீட்டுக்குப் போறது முறை தானே ராஜீவ்?'' முணு முணுத்தவள், அவன் மார்பிலேயே தன்னை அழுந்தப் புதைத்துக் கொண்டாள்.

முகமெங்கும் சந்தோஷம் பொங்க, ஆவலுடன் அவள் முகத்தைப் பிடித்து நிமிர்த்தி, ''ஹே! குட்டி! ரேகா! என்னடா சொல்றே?'' நம்ப முடியாமல் கேட்டவன், அவளை இறுக அணைத்துக் கொண்டு, அவள் நெற்றியில் இதழ் பதித்தான்.

''ம்ம். சொல்றாங்க! செய்றதையெல்லாம் செய்து விட்டு ஒண்ணும் தெரியாத மாதிரி கேட்கிற கேள்வியைப் பாரு!'' வெட்கத்துடன் மெல்ல முணுமுணுத்த மனை விக்கு, தன் உல்லாச சிரிப்பையே பதிலாகத் தந்தவன், தன் நன்றியையும், சந்தோஷத்தையும் தெரிவிக்க அப்போதைக்கு வேறுவழி தெரியாமல், அவள் முக மெங்கும் தன் முத்திரைகளைப் பதிக்கலானான்.

இருவரின் உள்ளமும் குளிர, நன்றி தெரிவித்து முடித்த பின், மெல்ல ஒவ்வொன்றாக எல்லா விவரங்களையும் அவளிடம் கேட்டறிந்தக் கணவன், திடீரென்று நினைத் துக் கொண்டு,

''என்னை மன்னிச்சுடு ரேகா'' என ரொம்பவே தீவிர மாக சொன்னதைக் கேட்டவளுக்கு புருவங்கள் முடிச் சிட்டன.

''ஏன்? இப்ப எதுக்கு மன்னிப்பு கேட்கறீங்க?''

''இல்லை... நமக்கே இப்போ தத்தி தத்தி நடக்கப் போற குழந்தை பிறக்கப் போகுது. உன்னைப் போய் நான்,'த-த்-தி'ன்னு சொன்னேனே... ரொம்ப சாரிடா!'' குறும்புடன் கண் சிமிட்டி சிரித்தவனைப் பார்த்தவள், பக்கத்தில் இருந்த தலையணையாலேயே அவனை இரண்டு போட்டாள்.

''நான் சொல்றேன். நீங்க தத்தி! தத்தி! தத்தி!! ஒரு நிமிஷத்தில் என்னை எப்படி கலவரப்படுத்திட்டீங்க... உங்களை...'' செல்லக் கோபத்துடன் மேலும் இரண்டு வைத்தவள், அடக்க முடியாமல் சிரித்து, அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்.

''என்னய்யா தத்தின்னு சொல்றே? இப்ப உன்னை என்ன செய்றேன் பாரு...'' என்றவனின் இதழ்கள் அவன் மனைவியின் முகத்தில் விளையாட ஆரம்பித்தன.

சிறிது நேரம் கழித்து ரேகா, ''செங்கல்பட்டில் பிசினஸ் மீட்டிங் இருக்கு. போகணும்னு சொன்னீங்க? நேரமாகலையா?'' என்றாள் மெல்ல.

''ப்ச்! இருக்கு. ஆனால் இப்ப எனக்கு போகவே மனசில்லை. அம்மாவும், அப்பாவும் வேற பெரியப்பா வீடு பால் காயச்சறதுக்கு காலையிலேயே கிளம்பிப் போயிருக்காங்க. நீ வேற தனியா இருப்பியே? கட்டாயம் போகணுமா?'' என்றான் மனமேயில்லாமல்.

''இதென்ன காடா, தனியா இருக்க பயப்பட? நம்ம வீடு தானே? அத்தையும், மாமாவும் விசேஷம் முடிஞ்சவுடன் வந்துடுவாங்க. பிசினஸ் மீட்டிங் முடிச்சுட்டு நீங்களும் சீக்கிரம் வாங்க. இப்ப கிளம்புவீங்களாம். சமத்து இல்ல? வாங்க.''

* * *



அன்று அஷ்டலக்ஷ்மி கோவிலில் நல்ல கூட்டம். வெள்ளிக்கிழமை வேறு.

'இந்த அம்மா சும்மாவாவது இருக்காங்களா? ஏதோ வேண்டுதல் அதிதுன்னு பேங்க் லீவ் விட்டிருக்க நாள் அன்றைக்கு கூட வீட்டில் ஹாய்யா இருக்க விடமாட்டேங்கறாங்க. நல்ல வேளை மழை இல்லை இன்றைக்கு' அலுத்துக் கொண்டே கோவிலுக்கு வந்த மைதிலிக்கு அங்கு வந்ததும் மனதில் அமைதியும் நிறைவும் தானாக வந்து குடிக் கொண்டது.

அகமும், புறமும் நிறைய தேவியைத் தரிசித்துவிட்டு நிதானமாக பிரகாரத்தில் வந்தமர்ந்தாள்.

தூரத்தில் தெரிந்த கடல் - என்னருகே வா வாவென அவளை அலை கரம் கொண்டு ஆர்ப்பாட்டமாக அழைக்க, மதிய நேர வெயிலுக்கு அஞ்சி, தூணில் சாய்ந்தவாறே நிழலிலேயே அமர்ந்தாள்.

நிழலின் அருமை வெயிலில் தான் தெரியும் என்பது எத்தனை உண்மை? பிரிவென்றே ஒன்று இல்லையென்றால் சேர்ந்து இருப்பதில் உள்ள சந்தோஷத்தையோ, நிறைவையோ முழுவதும் அனுபவிக்க முடியாமலே போய்விடுமோ?

ஆனால், நான்கு வருடங்களுக்கு முன்பு போலவே இப்பொழுதும் ஏதும் நடந்து ராகவனைப் பார்க்க முடியாமலே போய்விடுமோ என்ற எண்ணம் அவ்வப்பொழுது தோன்றி அவளை அச்சுறுத்தியது.

கடந்த ஒரு வாரமாக அவனைக் காண முடியாத ஏக்கம், அவளை என்னவெல்லாமோ எண்ண தூண்டியது. ஏதோ ஒரு சாக்கை வைத்துக் கொண்டு அவர்கள்

இருவரும் சந்திப்பது இப்பொழுது வழக்கமாகி இருக்க, வெளியூரில் வேலை என்ற காரணத்தினால் போன ஒரு வாரமாக ராகவனைப் பார்க்கவோ, அவனுடன் பேசவோ இயலவில்லை அவளால்.

அவனைக் காணாத கடந்த நாட்கள் கொடிய நீண்ட, நெடிய ஏ...ழு நாட்களாக தோன்றியது அவளுக்கு. ஹ்ம்ம்....

வெயிலில் தங்கம் போன்று ஜொலித்த வெள்ளி மணல் கண்ணைப் பறிக்க, கண்ணைச் சுருக்கிக் கொண்ட மைதிலி தன் பார்வையையும், மனதையும் கோவிலுக்கு வருவோர் போவோர் மீது செலுத்த, சற்று தள்ளி வீற்றிருந்த ஒரு பெண்ணின் சந்தோஷம் இவளையும் வந்து தொற்றிக் கொண்டது.

கோவிலிலிருந்த கூட்டம் எதையுமே பொருட்படுத்தாமல் தன்னுள்ளேயே மூழ்கியிருந்த அப்பெண்ணின் முக பாவமும் அதில் அப்பட்டமாகத் தெரிந்த மகிழ்ச்சியும், பூரிப்பும் மைதிலியின் முகத்திலும் புன்சிரிப்பை வரவழைக்க, 'அம்மா தாயே! ரொம்ப சந்தோஷமா இருக்காங்க போல? எப்பவும் அவங்க இத்தனை சந்தோஷமாகவே வை தாயே!' என ஒரு நொடி கண் மூடி பிரார்த்தித்துக் கொண்டாள்.

தானாக எதையாவது நினைப்பதும், நினைத்ததையெண்ணி சிரிப்பதுமாக இருந்த ரேகாவிற்கு உலகமே அவள் கைக்குள் அடக்கம் போன்றிருந்தது.

காலையில் கிளம்பிச் சென்ற ராஜீவ், சிறிது நேரத்திலேயே கையில் உப்பு பிஸ்கட்டும், பூவுமாக திரும்ப வந்ததையும், 'ஏதோ இப்போதைக்கு தன்னால் முடிந்த



சின்ன கிஃப்ட்!' என்று அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியதையும் எண்ணி பார்த்தவளுக்கு முகத்தில் ஏன் சந்தோஷம் பொங்காது?

அதன் பின் அவன் திரும்பக் கிளம்ப சற்று நேரமானது வேறு விஷயம்!

முகத்தில் சிரிப்போடு எழுந்த ரேகாவிற்கு, சட்டென்று எழுந்ததோ என்னவோ, சற்றே தள்ளாடி அருகிலிருந்த தூணைப் பற்றிக் கொள்வதற்குள் அவளை வந்து தாங்கிக் கொண்டாள் மைதிலி.

தூணில் சாய்ந்தபடி, சில நொடிகள் கண் மூடியிருந்த ரேகா, ''ரொம்ப தேங்க்ஸ்ங்க!'' என்றவாறே மைதிலியை ஏறிட,

தான் அவளையே பார்த்து கொண்டிருந்ததைப் பற்றி எதுவும் கூறாத மைதிலி, ''தட்ஸ் ஓகே. நானும் இப்ப கிளம்பலாம் என்றுதான் எழுந்தேன்'' என்றாள்.

மைதிலியை அங்கே எதிர்பார்க்காத ரேகா, ''ஓ! நீங்க... மைதிலி தானே?'' என்றாள்.

''ஆ...மா...ம்! உங்களுக்கு என்னைத் தெரியுமா? சாரி... உங்களை எனக்குத் தெரியலை.''

''தட்ஸ் ஓகே.'' மைதிலி சொன்னதையே அவளுக்குத் திரும்ப படித்த ரேகா,

''நான் ஒண்ணும் உங்க பேங்க் ஜி.எம். இல்லையே? நீங்க தெரிஞ்சு வைச்சுக்க.'' சிரித்துவிட்டு, ''என் பேரு ரேகா. நான் உங்களை உங்க பேங்க்கில் பார்த்திருக்கேன். எனக்கு உங்களைத் தெரியும்.''

''ஓ! அப்படியா? ஆனால், நான் உங்களைப் பார்த்தது இல்லையே?''

''உங்களுக்குப் பார்க்க வேண்டிய அவசியம் அப்போ வரலை. அதான் இப்போ பார்த்துட்டோம் இல்ல? இனி அடிக்கடி பார்க்கலாம் மைதிலி.''

வெளியில் நடந்தபடியே இருவரும் பேசிக் கொண்டு வர, வரும் வழியிலேயே ஓரிரு முறை ஆங்காங்கே நிற்க வேண்டியதாகிவிட்டது ரேகாவிற்கு.

''கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துட்டு அப்புறம் போகலாமே?'' தயங்கித் தயங்கி மைதிலி சொல்ல,

''இல்லை. இப்போவே லேட் ஆகிடுச்சு. நான் பாட்டுக்கு நேரம் தெரியாமல் இங்கேயே உட்கார்ந்து இருந்துட்டேன் போல. கோவிலில் இன்றைக்கு உச்சி வேளை பூஜைக்கு சொல்லியிருந்ததால்தான் வர வேண்டியதா போச்சு. இல்லைன்னா இன்னொரு நாள் கூட வந்திருப்பேன். ராஜீவிற்கு தெரிஞ்சால் என்னை உண்டு இல்லைன்னு ஆக்கப் போறார்.'' தன் பாட்டிற்கு அவள் வெளியாள் என்ற எண்ணமே இல்லாமல் சொல்லி கொண்டிருந்தவளை ஏனோ மைதிலிக்கு மிகவும் பிடித்துவிட்டது.

''உங்களை ஒண்ணும் செய்ய வேண்டாம்னு நான் வேணும்னாலும் சிபாரிசு செய்யவா?'' ரேகா ஏதோ பயந்து போய் சொல்வதாக எண்ணம் போலும்!

''ஹா... ஹா... நாம எல்லாம் தமிழ்நாடு, கூடவே கேரளாவையும் இலவசமா சேர்த்து விலை பேசறவங்கன்னு பேரு. இதுக்கெல்லாம் பயந்தால் நடக்குமா?'' ரேகா கண்சிமிட்டி சிரிக்க, அவளுடன் சேர்ந்து மைதிலியும் சிரித்தாள்.

அங்கிருந்த ஆட்டோவை அழைத்த மைதிலி, ''அப்போ நீங்க வீட்டில் டெரர்-ன்னு சொல்லுங்க'' என்றாள் குறும்பாக.



ரேகா, ''ச்ச...ச்ச... நான் பாவம். அப்பிராணி. ஆனால் நான் வாயைத் திறந்தாலே எல்லாம் டெரர் ஆகிடுவாங்க. அதான் ஏன்னு தெரியலை'' என்று கண் சிமிட்டினாள்.

மைதிலிக்கு மட்டும் ஒரு ஆட்டோ கிடைக்க, நுங்கம் பாக்கம் வரை செல்வதற்கு அங்கு அப்போதைக்கு ஆட்டோ கிடைக்காமல் ரேகா மட்டும் தனித்து நின்றாள்.

''நான் ரிடர்ன் சவாரிக்காக நிற்கிறேன் மேடம்'' என்றனர் அங்கிருந்த ஆட்டோ ஓட்டுனர்கள்.

ஒரு சில நிமிடங்கள் தயங்கின மைதிலி, ''உங்களுக்கு ப்ராப்ளம் இல்லைன்னா... உங்களை உங்க வீட்டில் விட்டுட்டு, அப்புறமா நான் எங்க வீட்டுக்கு போறேன்'' எனவும், மிகவுமே வசதியாக போய்விட்டது ரேகாவிற்கு.

''இல்லையில்லை'' என்று கூறி, முதலில் ஆட்டோவில் ஏறி அமர்ந்த ரேகா, ''வாங்க! உள்ளே வந்து உட்காருங்க!'' என்று மைதிலியை அழைக்க, 'இவள் என்ன எல்லோரையும் இப்படி நம்பி விடுகிறாளே' என்ற எண்ணத்துடன் மைதிலியும் ஏறி அமர்ந்தாள்.

நுங்கம்பாக்கம் போய் சேர்வதற்குள் மைதிலியின் ஜாதகத்தையே ரேகா வாங்கிவிட, மைதிலி, ''ஹப்பாடியா! டேலன்ட் தாங்க உங்களுக்கு! என்னோட ஃபுல் பயோடேட்டாவும் வாங்கிட்டீங்க. உங்களைப் பார்த்து உங்க வீட்டில் பயந்துக்கிறதில் ஆச்சரியமே இல்லை'' என்று சிரித்தாள்.

''ஹா... ஹா... ஐ லைக் யூ மைதிலி. ஐ லைக் யூ எ லாட்! என்னை புரிஞ்சுக்கிட்டீங்கன்னா நமக்குள்ள பிரச்சனையே வராது'' என்று சொல்லிவிட்டு, 'இவளை எதற்கு நான் புரிந்துக் கொள்ள வேண்டுமென்ற'

மைதிலியின் புரியாத முக பாவத்தில் பொங்கிச் சிரித்தாள் ரேகா.

"இவ்வளவு தூரம் வந்துட்டு எங்க வீட்டுக்குள்ள வராமல் உங்களை எப்படி அனுப்பறது மைதிலி? அப்புறம் ரா... ராஜீவ் என்னைத் தான் திட்டுவார். ஆட்டோவை அனுப்பிடுங்க. அப்புறம் போகலாம், வாங்க!'' மறுத்த மைதிலியை விடாமல் வற்புறுத்தியே ரேகா தன் வீட்டினுள் அழைத்துச் சென்றாள்.

"வாங்க... சும்மா கூச்சப்படாமல் வாங்க. நம்ம வீடு தான். முதன் முதலா வந்து இருக்கீங்க. ஸ்வீட் எடுத்துட்டு வரேன். உட்காருங்க'' என்றவாறே அடுப்படிக்குள் நுழைந்தவள் அங்கே தன் மாமியாரைக் கண்டதும் உற்சாகத்துடன்,

"வந்துட்டீங்களா அத்தை? விசேஷம் எல்லாம் எப்படி இருந்தது?'' என்று ஜெயலக்ஷ்மியை விசாரித்தாள்.

"எல்லாம் நல்லபடியா நடந்ததும்மா. உன்னை விசாரிச்சாங்க. அதிருக்கட்டும்.நீ வா இப்படி. என் கண்ணு!'' என்றபடி ரேகாவின் வாயில் ஒரு கை சக்கரையை அள்ளிப் போட்டு அவள் நெற்றியில் முத்தமிட்டவர்,

"நீ எங்கே போயிட்டே? சாப்பிட்டியா? இல்லையா? உன் புருஷன் போன் மேலே போன் போட்டு, எங்களை ஒரு வழி செய்துட்டான். போனை சைலன்ஸ் மோடில் போட்டு இருந்தியா? முதலில் அவனைக் கூப்பிட்டுச் சொல்லிடு.''

வெட்கத்துடன் சிரித்தவள், "நானே சொல்லணும்னு இருந்தேன், அதுக்குள்ள அவரே சொல்லிட்டாரா? என்



வாய்க்கு சக்கரை போட்டது இருக்கட்டும் அத்தை...'' என்று விட்டு மெல்லிய குரலில், "இப்ப நான் யாரை கூட்டிகிட்டு வந்திருக்கேன்னு தெரிஞ்சால், என் ரெண்டு கைக்கும் தங்க வளையல்தான் செய்து போடுவீங்க...'' என்றாள்.

கண்கள் ஆர்வத்தில் மின்ன, "அப்படி யாரம்மா கூட்டிகிட்டு வந்திருக்கே?'' என்றார்.

அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த வீட்டைச் சுற்றி பார்வையை ஓட்டிய மைதிலியின் விழிகள், ராகவனின் பெற்றோர்களின் பெரிதுப்படுத்திய படத்தைப் பார்த்து ஆச்சரியத்தில் அகல விரிந்தன.

இது... இது... இவர்கள்...?

"அத்தை...'' திகைத்துப் போய் திரும்பிய மைதிலியைச் சுட்டிக் காட்டிய ரேகா,

"இவங்கதான் நான் சொன்னவங்க. நல்லா பார்த்துக்கோங்க... ஹப்பாடியா... என் வேலை முடிஞ்சதுப்பா. அப்படியே உங்க கையாலேயே ஸ்வீட்டும் கொடுத்துடுங்க அத்தை'' என்றபடி அங்கிருந்த சோபாவில் உட்கார்ந்தாள்.

இரு கரங்களையும் குவித்து, "வணக்கம் அத்... ஆன்ட்டி!'' என்ற மைதிலிக்கு என்ன செய்வது, என்ன பேசுவதென்றே புரியவில்லை. இதயம் வெகு வேகமாக துடித்துக் கொண்டிருந்தது. ரேகாவிற்குத் தள்ளாட்டம் போய், இப்போது இவளுக்கே வந்து விடும் போல!

முதன் முதலில் ராகவனின் பெற்றோரை நேரில் சந்திக்கிறாள்... கலைந்த தலையும் வெயிலில் காய்ந்த முகமுமாக இருக்கிறாளோ?

தெரிந்திருந்தால் எப்பவும் செய்வதையே இன்னமும் கொஞ்சம் பளிச்சென்று செய்திருக்கலாமே! பெண்ணுக்கே உரிய குணம் தலைத் தூக்க, ஒன்றும் செய்ய இயலாமல் நின்றாள்.

ரேகாவிடம் கண்களாலேயே விசாரித்த ஜெயலக்ஷ்மி, "நீ தான் மைதிலியாம்மா? நல்ல பேரு. பொருத்தமா இருக்கு. நல்லா இரும்மா. எங்க வீட்டில் இன்றைக்கு ரெண்டு விசேஷம். இந்த ஸ்வீட்டை எடுத்துக்கோம்மா." சந்தோஷத்துடன் மைதிலிக்கு இனிப்பை வழங்கினார்.

உள்ளறையிலிருந்து வந்த நம்மாழ்வார், "வந்துட்டியா ரேகா? வெளியே போயிட்டு சீக்கிரம் வர கூடாதாம்மா? உன்னை காணோம்ன்னு..." என்று பேசிக் கொண்டே வந்தவர், அப்பொழுது தான் அங்கிருந்த ஒரு புதிய முகத்தைக் கண்டு பேச்சை இடையிலேயே நிறுத்தினார்.

"சாரி மாமா. போனை சைலன்ட்டில் போட்டிருந்தேன். இவங்க மைதிலி. நம்ம ராகவனோட ப்ரெண்டு. ராஜீவ் சொன்னார் இல்ல மாமா? இவங்க பேங்க் செக்யூரிட்டியை ராஜீவ் தான் பார்த்துக்கிறார்" மாமனாரிடம் அறிமுகப்படுத்தி வைத்தவள்,

மெல்ல மைதிலிக்கு மட்டும் கேட்கும் வண்ணம், "இவங்க செக்யூரிட்டியை ராகவன் பார்த்துக்கிறார்" என்று முணுமுணுத்துவிட்டு கண்சிமிட்டினாள்.

அதிர்ச்சியிலும் ஆச்சரியத்திலும் விழிகள் தெறித்து விடும் போல் ரேகாவை ஏறிட்ட மைதிலிக்கு, ஏற்கனவே மேலண்ணத்தில் ஒட்டியிருந்த நாக்கு அங்கேயே பசை போட்டு ஒட்டிக் கொள்ளும் போலிருந்தது.

என்ன சொல்கிறாள் இவள்...?



"என்ன ரேகா? என்னவெல்லாமோ சொல்லி இப்படி மாட்டிவிடறீங்களே?" மைதிலி ரேகாவிடம் கிசுகிசுக்க,

"இன்னமும் என்ன ரேகா? நான் ஐ.பீ.எஸ். ஆபீசர் ராகவனோட அண்ணியாக்கும். ஒழுங்கா அக்கான்னு கூப்பிடு" அவளிடம் போலியாக மிரட்டியவள், "எவ்வளவு நேரமாதான் நானும் மரியாதை கொடுக்கிற மாதிரியே ஆக்ட் கொடுக்கிறது?" என்றாள் சிரிப்புடன்.

மைதிலியை நன்றாகப் பார்த்த நம்மாழ்வார், "உட்காரும்மா. எதுக்கு நிற்கிறே? அப்பா என்ன செய்றாங்கம்மா?" என்று விசாரிக்க ஆரம்பித்தார்.

"நீங்க பேசிட்டு இருங்க மாமா. நான் போய் ராஜீவுக்கு போன் செய்துட்டு வந்துடறேன்."

* * *

ஒரு வழியாக வீடு வந்து சேர்ந்த மைதிலிக்கு கால்கள் தரையிலேயே படவில்லை. எப்படி, எந்த வழியாக வந்தோமென்று கூட அவளுக்கு நினைவில் இல்லை.

மிதந்தபடியே இருந்தவள், தாய் வளர்மதி கேட்ட கேள்விகளுக்குக் கூட என்னப் பதில் சொல்வதென்று தெரியாமல் திருதிருவென விழித்தாள்.

"அவங்களே தான் கொண்டு வந்து விடறதா சொன்னாங்கம்மா. சைதாப்பேட்டையில் இருக்க வீடு தானே? ஆட்டோவிலேயே போயிக்குவேன்னு சொல்லிட்டு வந்துட்டேன்."

தன்னறைக்கு வந்த மைதிலிக்கு இப்பொழுது நினைத்தாலும் எல்லாம் கனவு போன்றிருந்தது. ரேகாவைக் கோவிலில் பார்த்தது தற்செயலான விஷயமா? இல்லை தெய்வச் செயலா?

அவனோட அம்மாவிற்கும் அப்பாவிற்கும் அவளைப் பிடித்திருக்கும் தானே? பிடிக்காமல் தான் ஸ்வீட் எல்லாம் கொடுப்பாங்களா? ரெண்டு விசேஷம்னு சொன்னாங்களே? என்னவாக இருக்கும்? ஒருவேளை, நான் அங்கே வந்ததையும் விசேஷம்னு சேர்த்து சொல்லியிருப்பாங்களா? நினைப்பு தான் மைதிலி உனக்கு!

ச்சே... அவர்களிடம் இன்னமும் நான் கொஞ்சம் சரளமாக பேசி இருக்கலாமோ? சகஜமாக பேச முடியாத அளவிற்கு அப்படி என்ன பதட்டம் வேண்டியிருக்கு மைதிலி உனக்கு?

இந்த ரேகா என்னை இப்படி மாட்டிவிட பார்த்தாளே! ஏதும் தெரிந்தே தான் சொல்லியிருப்பாளோ? அவன் அம்மாவிற்கும் தெரிந்திருக்குமோ? அதுதான், அப்படி பாசமா பார்த்தார்களோ?

தெரிந்திருந்தால், எப்படி தெரிந்திருக்கும்? யார் சொல்லியிருப்பா? ஒருவேளை, ராகவன் ஏற்கனவே என்னைப் பற்றி வீட்டில் சொல்லிவிட்டானா? என்னவென்று சொல்லியிருப்பான்?

'மைதிலியை தான் கல்யாணம் செய்துக்கப் போறேன்' என்று சொல்லியிருப்பானோ?

அந்த நினைப்பே தித்திக்க, மைதிலியின் முகம் வானில் உலாவரும் பூரண சந்திரனை போன்று ஒளி வீசியது.

அவள் அங்கிருக்கும் பொழுதே ராகவனும் வீட்டிற்கு வந்திருந்தால் எப்படியிருந்திருக்கும்? அவனுடையே வீட்டிற்கு திரும்பியிருக்கலாம். அம்மாவிடமும் அவனை அறிமுகப்படுத்தி வைத்திருக்கலாம், இல்ல? ஹ்ம்ம்...



தலையணையைக் கட்டிக்கொண்டு கட்டிலில் படுத்திருந்த மைதிலிக்கு அன்று பொட்டு கூட உறக்கம் வரும் போல தோன்றவில்லை.

உறக்கத்தைத் தழுவாத அவளின் விழிகள், கனவையும் இனிய கற்பனையையும் உற்சாகத்துடன் தழுவிக் கொண்டன.

# 15

தன் தாயின் மடியில் தலை சாய்த்திருந்த மைதிலி, தன் வீட்டிலுள்ள ஹோம் தியேட்டரில் அந்நியன் படத்தைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள்.

தாய், மகள் இருவருக்கும் விருப்பமான பொழுது போக்குகளில் அவ்வப்பொழுது இப்படி படம் பார்ப்பதும் ஒன்று. மைதிலியின் நெற்றிக் கேசத்தை கோதிவிட்ட வளர்மதி, ''நைட் தூங்கலையா மைதிலி? கண் அசத்துற மாதிரி இருக்கே?'' என்று அக்கறையுடன் விசாரித்தார்.

''உங்க மடியில் ஹாயா தலை சாய்ச்சு படுத்துட்டு, நீங்க இந்த மாதிரி தலை கோதினால், நான் கும்பகர்னி ஆனாலும் ஆச்சரியப்படறதுக்கில்லைம்மா.'' சிரித்த படியே பதில் தந்தாள்.

''ம்ம்ம்... அம்மா மடி சொகுசு எல்லாம் கல்யாணம் ஆகிற வரைக்கும்தான் அனுபவிக்க முடியும். இப்போவே நல்லா அனுபவிச்சுக்கோ...''

"நீங்க எப்படி அப்படி சொல்லலாம்?" செல்ல சண்டை ஒன்றை மைதிலி தொடங்க,

வளர்மதியோ, "பாட்டு முடிஞ்சுடுச்சு. இப்போதைக்கு படம் பார்க்கலாம் மைதிலி. நம்ம சண்டையை அப்புறம் வைச்சுக்கலாம்" என கண்சிமிட்டிவிட்டு சண்டைக்கு தற்காலிகமாக முற்றுப்புள்ளி ஒன்றை வைத்தார்.

"வெவ்வே..." அழகு காண்பித்த மகள், அன்னையின் மடியில் செல்லமாக முட்டிவிட்டு படத்தைப் பார்க்க லானாள்.

விக்ரம் அந்நியனாக மாறி மிரட்டிக் கொண்டிருந்த காட்சியில் லயித்திருந்தவள் மீண்டும் அந்த வசனத் தைக் கேட்கும் பொருட்டு 'ரீவைண்ட்' செய்தாள்.

"பிசினஸ்ன்னா ஒண்ணு ரெண்டு காசு பார்க்க அப்படி இப்படி தான் இருக்கும். இதுக்குப் போய் கொல்லுவீங்களா?"

"அப்படி சாதாரணத் தப்பு மாதிரி சொல்லி தப்பிச் சுக்கப் பார்க்காதே! அஞ்சு பைசா திருடினா தப்பா?"

"பெரிய தப்பில்லீங்க!"

"அஞ்சு கோடி தடவை அஞ்சு பைசா திருடினால்...?"

"தப்பு மாதிரி தாங்க தெரியுது!"

"அஞ்சுகோடி பேரு, அஞ்சு கோடி தடவை, அஞ்சு அஞ்சு பைசாவா திருடினால்...?"

"பெரிய தப்புங்க...!"

மீண்டும் அந்த வசனங்களைக் கேட்ட போது மைதி லியின் முகத்தில் குழப்ப ரேகைகள் பதிவாக,

மகளது விநோதமான நடவடிக்கையில் துணுக்குற்ற வளர்மதி, "என்னாச்சு மைதிலி? மறுபடியும் மறுபடியும் அதையே போட்டு பார்த்துட்டு இருக்கே?" என்றார்.



எழுந்து அமர்ந்த மைதிலி தன் செல்போனை எடுத்து அதில் இருந்த கால்குலேட்டரில் ஏதோ கணக்கு பார்த்தாள்.

"என்னாச்சு மைதிலி?" என்று திரும்பக் கேட்ட தாயிடம்,

"நீங்க படத்தைப் பாருங்கம்மா. எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு" என்று தன்னறைக்குச் சென்றாள்.

மகளது அறைக்கு அவள் பின்னோடு சென்ற வளர் மதிக்கு மைதிலியின் போக்கு எதுவும் புரியவில்லை.

பின்னே...? படம் பார்த்துக் கொண்டிருந்த மகள் திடீரென்று தன்னுடைய சம்பள விவரங்களையும், வங்கி கணக்குப் புத்தகத்தையும் எடுத்துப் பார்ப்பது மட்டு மில்லாமல், விரல்களால் காற்றில் கோலம் போட்டபடி வாய்க்குள் எதையோ முணுமுணுத்தபடி இருந்தால்?

அவர் நிற்பது கூட தெரியாமல் கால்குலேட்டரை எடுத்து கணக்கு போடுவதும், டைரியில் எதையோ எழுதிக் கொண்டிருப்பதுமாக அவள் இருக்கவும், 'ஏதோ முக்கியமான வேலை அவளுக்கு ஞாபகம் வந்துவிட்டது போல' என்றெண்ணி தன் வேலைகளைக் கவனிக்கச் சென்றார்.

ராகவன் பேசியதுடன் பட வசனத்தையும் சேர்த்து ஒப்பிட்ட மைதிலிக்கு, "பத்து பைசா குறைவதில் தப் பில்லை. ஒவ்வொரு முறையும், ஒவ்வொருவரிடமும் பத்து பைசா குறைந்தால்...?" என்பதுதான் மனதில் எழுந்த கேள்வி.

அதை சரிபார்க்க தன்னுடைய சம்பள ஸ்லிப்பையும், வங்கிக் கணக்கு புத்தகத்தையும் எடுத்து பார்க்க,

ராகவனது கணக்கில் விடுபட்ட பத்து பைசா இவளது கணக்கிலும் விடுபட்டிருந்தது!

அதோடு ஒவ்வொரு முறையும் சம்பள பணத்தில் விடுபடும் தொகை வழக்கமானதாகவும் அமைந்து அவளை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தியது.

பத்து மாதங்களில் விடுபட்டுப் போகும் பணத்தை, மொத்தமாக பதினோராவது மாதத்தில் ஒரு ரூபாய் அதிகப்படுத்தித் தானாக சேமிப்பில் போடப்பட்டிருக் கிறதா என்று கணக்கு பார்த்தவளுக்கு ஏமாற்றமே எஞ்சியது.

வங்கியின் பாதுகாப்பு முறைகளையும், விதிகளையும் நன்கு அறிந்தவள் என்ற முறையில் இப்படி நடப்பதற் கான சாத்தியக் கூறுகள் மிகவும் குறைவு என நம்பிக் கையுடன் இருந்தவளை கண் முன் தெரிந்த கணக்கீடு களும், புரிந்த நிதர்சனமும் கலவரப்படுத்தின.

பத்து பைசா விடுபட்டு போக முடியும் என்றால், அதே வழியில் பத்து கோடி ரூபாயும் விடுபட வாய்ப்பு இருப்பதாகத்தானே அர்த்தமாகிறது?

தொகை மிகவும் சின்னது என்பதால் மட்டுமே தப் பித்துக் கொண்டிருக்கும் நபரை எப்படிக் கண்டு பிடிப்பது என்ற வழிவகைத் தெரியாமல் இருந்தாள்.

ஒரு சிறு துரும்பு கிடைத்தாலும் போதும் என்ற நிலையில் இருந்தவளின் சிந்தனையில் இப்படி ஒரு திருட்டை நடத்த கட்டாயம் சாஃப்ட்வேர் துணையை நாடியிருக்க வேண்டும் என்பது தெள்ளத் தெளிவாகியது.

சாஃப்ட்வேர் துணை என்றால்...? அதன் பொருட்டு வங்கியுடன் தொடர்புடைய கம்பெனியே இந்த வேலையை நடத்தி இருக்குமோ?



அதன் தொடர்புடைய கம்பெனி பற்றிய விவரங் களை கணினியில் ஆராய்ந்து பார்த்ததில், இது மாதிரி யான அல்லது வேறு வகையான குற்றச்சாட்டுகள் எது வும் அந்தக் கம்பெனி பெயரில் இதுவரையில் பதிவாக வில்லை. அந்தக் கம்பெனி உடனான ஒப்பந்தம் முடி வடைந்து அது தொடர்பாக புது ஒப்பந்தம் பற்றிய 'பிட் டிங்' கோப்பு தான் சில வாரங்களுக்கு முன் தொலைந்து போனது!

அப்படியானால்...? இவை ஒன்றுடன் ஒன்று தொடர் புடையவையா அல்லது தற்செயலாக நிகழும் தனிப் பட்ட நிகழ்வுகளா?

தனக்குத் தோன்றும் அத்தனை சந்தேகங்களையும் குறிப்புகளாக டைரியில் குறித்தவளுக்கு, அந்த பிட்டிங் தொடர்பான பிரச்சனையின் போது ராகவன் இவளிடம் கொடுத்த சீ.டி நினைவு வந்தது.

அவன் அதைக் கொடுத்தபோதே பார்த்திருக்க வேண் டுமோ என்று காலம் கடந்த ஞானோதயமும் பிறக்க, அதை இப்பொழுது தேட முனைந்தாள்.

கவனமாக பதிவு செய்யப்பட்டிருந்த காட்சிகளைப் பார்வையிட்ட போது ஒரு விஷயம் மட்டும் தெளிவாகப் புரிந்தது.

அவளது அறையிலிருந்து யாரும் எந்தப் கோப் பையையும் - அதுவும் முக்கியத்துவம் வாய்ந்த எந்த கோப்பையையும் எடுத்து போகவில்லை என்பது!

அதிலும் முக்கியமாக அவளது அறைப் பக்கம் ப்யூன் மாணிக்கம் வரவேயில்லை என்பதும்!

இவளது அறைக்கும், பொதுமேலாளர் அறைக்கும் பொதுவான சுவற்றிலுள்ள வாயில் வழியாக எடுத்துச்

செல்ல வாய்ப்பு இருக்கிறதென்றாலும்... அதை பயன்படுத்த பொது மேலாளருக்கும், இவளுக்கும் மட்டுமே அதிகாரம் உண்டு... இருவருமே இந்த வேலையைச் செய்திருக்க வாய்ப்பு இல்லை எனும் போது...?

யாரோ செய்த வேலையை மாணிக்கம் செய்ததாகக் குற்றம் சுமத்தி ப்யூனை பலிகடா ஆக்கப்பட்டிருக்கக் கூடுமா?

மறுநாள் முதல் வேலையாக அவனை விசாரித்தால் போகிறது...!

அத்துடன், ராகவன் திரும்ப வந்தவுடன் அவனிடம் சொல்லி பொது மேலாளர் அறை வழியாக வேறு யாராவது அந்த கோப்பையை எடுத்து சென்றிருக்கிறார்களா என்பதை கண்டறிய அதற்குரிய வீடியோ பதிவையும் கேட்டுப் பெற வேண்டும்!

ராகவனை இந்த விஷயத்தில் தொந்தரவு செய்வதில் மைதிலிக்கு சற்றே எழுந்த தயக்கத்தை அவள் பொருட்படுத்தவில்லை.

# 16



ராகவன் தன் வேலை நிமித்தமாக கோயம்புத்தூருக்கு வந்து இன்றுடன் பத்து நாட்கள் ஆகிறது.

மறுநாள் சென்னைக்குத் திரும்ப வேண்டிய நிலையில், இப்பொழுது நண்பன் சதீஷின் இரவு விருந்திற்கான அழைப்பை ஏற்று அவனது வீட்டிற்கு வந்திருந்தவன், சதீஷின் அப்பா சேகருடன் சேர்ந்து உரையாடியபடி உணவருந்திக் கொண்டிருந்தனர்.



''சைபர் டிவிஷன் இப்போ புதுசா வந்திருக்கிற பிரிவு... ரொம்ப எல்லாம் வேலை இருக்காதுன்னு நினைச்சேன் ராகவன். சதீஷைக் கூட, நீ ஏன்டா லா அண்ட் ஆர்டர் எடுத்தேன்னு கேட்டுட்டு இருப்பேன்? பார்த்தால் இவனை விட உனக்குத் தான் நிறைய வேலை இருக்கும் போல?''

தன் மகன் சதீஷிற்குத் தான் 'நேரம் காலம் தெரியாத வேலை' என்று அவர் அவ்வப்போது வருத்தப்படுவது உண்டு.

இப்பொழுது ராகவன் கோயம்புத்தூர் வந்ததில் இருந்தும் சேகர் கவனித்துக் கொண்டு தானே இருக்கிறார்? அவனுக்காவது வேலைப்பளு குறைவாக இருக்குமோ என்று எண்ணியவரின் ஆதங்கம் தான் இப்பொழுது வெளிப்பட்டது.

''ஹா... ஹா... காவல் துறைக்கு வந்துட்டு நைன் டு ஃபைவ் தான் வேலை பார்ப்பேன்னு சொல்ல முடியுமாப்பா? அப்படி ஆசைப்படறவங்க உங்களை மாதிரி டீச்சர் ஆகிடுவாங்க. எங்களை மாதிரி போலீஸ் ஆக மாட்டாங்களாக்கும்'' என்று வழக்கம் போல் தனது விளக்கத்தைத் தந்தான் சதீஷ்.

சதீஷின் தாய் கமலம், ''ம்... இப்படி நேரம் காலம் இல்லாத வேலைன்னு தான் பொண்ணு கொடுக்கிறதுக்கே யோசிக்கிறாங்க'' தன் ஆதங்கத்தை வேதனையுடன் வெளிப்படுத்தினார்.

ராகவனுக்குத் தன் நண்பனின் தாய் புலம்பலைக் கேட்கும் போது, மைதிலியின் முகம் ஒரு நொடி கண் முன் வந்து போனது.

காவல்துறை அதிகாரியின் வேலை இயல்பு பற்றி ராகவன் விளக்கும் போது அவள் கவனமாகக் கேட்டுக் கொள்வாளே தவிர, ஒருதடவை கூட 'எதற்காக இந்த வேலை?' என்று அவள் அலுத்துக் கொண்டதில்லை.

மாறாக, 'நான் உங்களை மட்டும் விரும்பலை ராகவ்... உங்களை, உங்க ஆசைகளை, உங்க கனவுகளை... எல்லாத்தையும் விரும்பறேன்' என்று ஊக்கப்படுத்துவாள்.

''ஏன்மா? உங்க புலம்பலை ராகவன்கிட்டேயும் ஆரம்பிச்சுட்டீங்களா? அவன் பாருங்க என்ன பேசுறதுன்னு தெரியாமல் வாயடைச்சு போயிட்டான். ஏன்மா இப்படி ஒரு இக்கட்டில் அவனை விடறீங்க?'' அன்னையிடம் உரிமையாக சண்டையிட்டான் சதீஷ்.

ராகவன், ''இல்லை சதீஷ். அங்கிள் வேலை பற்றி கேட்கவும் அதைப் பற்றி நினைச்சுட்டு இருந்தேன்'' என்று உடனே சமாளித்தான்.

சேகர் ஆர்வமுடன் ராகவனைப் பார்க்க, ''இப்போ க்ரைம் ரேட், சைபர் சைடில் தான் அங்கிள் ஜாஸ்தி ஆகிட்டு வருது. அதோட இப்போ எல்லா டிவிஷன் கூடவும் நாங்க சேர்ந்து வேலை பண்ணறோம் அங்கிள்'' என்று தன் பணி சம்பந்தமாகப் பேசத் தொடங்கினான்.

''ம். ஆமாம்பா. ராகவன் சொல்றது சரி தான். இதோ இப்போ கோயம்புத்தூர்க்கு வந்ததுகூட டிராஃபிக் கண்ட்ரோல் சம்பந்தமா புதுசா செயல்படுத்தி இருக்கிற



ஸ்கீம் சம்பந்தமா மீட்டிங்கு தான்'' சதீஷ் சுருக்கமாகச் சொன்னதை விளக்கினான் ராகவன்.

''இப்போ ட்ராஃபிக் தான் அங்கிள் எங்கே பார்த்தாலும் ரொம்ப பெரிய பிரச்சனையா இருக்கு. ஸ்பீடிங்க்கு பிடிச்சாலும் ஃபைன் கட்டிடலாம்னு நம்ம ஜனங்க ரொம்ப அலட்சியமா இருக்காங்க. உயிரோட மதிப்பும் தெரிய மாட்டேங்குது, தப்போட வீரியமும் புரிய மாட்டேங்குது.''

''சரி அதுக்கு இப்போ என்ன மாதிரி ரூல் இம்ப்ளிமென்ட் செய்து இருக்கீங்க?'' என்றார் சேகர்.

''ம். ஸ்பீடிங்க்கு பிடிச்சால் இ-சலான் மூலமா ஃபைன் கட்ட வசதி பண்ணி இருக்கோம். அதோட, சம்பந்தப்பட்ட நபருடைய லைசென்ஸ் நம்பரை ஒரு சின்ன டிவைஸ் வைச்சு அவருடைய டிரைவிங் ஹிஸ்டரியை தெரிஞ்சுக்கலாம். அதோட பாய்ண்ட்ஸ் சேர சேர லைசென்ஸ் கேன்சல், ப்ரிஸன் இப்படி தண்டனை கிடைக்க வாய்ப்பிருக்கு.''

''ஓ! பரவாயில்லையே? இப்போ கோயம்புத்தூரிலும் அதே தான் பிரச்சனை. எவ்வளவு தூரம் இது சக்சஸ் ஆகுதுன்னுதான் பார்ப்போமே?'' என்ற சேகருக்கு ஒரு நிம்மதி பெருமூச்சு வந்தது.

''ஏற்கனவே இது பெங்களூர், சென்னை எல்லா இடத்திலும் வந்துடுச்சு. இப்போ அடுத்ததா இங்கே கோவையில் இம்ப்ளிமென்ட் செய்யப் போறோம். அதுக்கான செர்வர் பராமரிப்பு, டிவைஸ் ஆபரேஷன் பற்றி இஞ்சினியர்ஸ், ஆபீசர்ஸ் இப்படி எல்லாம் சேர்ந்து பேசறதுக்கு தான் இந்த மீட்டிங் அங்கிள்.'' ராகவன் தன் பணி விவரங்களை விளக்கினான்.

''வேலைப் பற்றி பேசறதெல்லாம் இருக்கட்டும் தம்பி. அதைப் பற்றி பேசி சாப்பிடாமல் இருக்கீங் களே?'' சதீஷின் தாயார் மேலும் சிறிது உணவை எடுத்து பரிமாறினார்.

''சாப்பாடு ரொம்ப நல்லாயிருக்கு ஆன்ட்டி!'' மனதார ராகவன் பாராட்ட,

''தேங்க்ஸ் தம்பி. உனக்காவது பொண்ணு உறுதியாச் சாப்பா?'' தாய் என்கிற மனக்கவலையில் வினவினார் கமலம்.

''ஹா... ஹா... கூடிய சீக்கிரமே இருக்கலாம் ஆன்ட்டி. நான் கட்டாயம் உறுதியானபிறகு சொல்றேன். அதோட சதீஷுக்கும் சீக்கிரமே உறுதியாகிடும். கவலைப்படா தீங்க'' என்று தைரியம் சொன்னான்.

''எங்கேப்பா? கல்யாணத்துக்குன்னு மேட்ரிமோனிய லில் ஒரு பத்து பொண்ணுங்களை ஷார்ட் லிஸ்ட் பண்ணி வைச்சிருக்கேன். பாருடான்னு சொன்னால்... அதுகூட முடிய மாட்டேங்குது எங்க வீட்டு ஆபீசருக்கு...'' கேலியும், கிண்டலுமாக வருந்தினார்.

'ஒருவேளை சதீஷிற்கும் தன்னைப் போல் ஏதாவது ஸ்பெஷல் ஃபீலிங் இருக்குமோ?' என்ற நினைப்பில் ராகவன் நண்பனிடம், ''ஏன்டா சதீஷ் இப்படி? வேறெது வும் மனசில் இருக்காடா?'' என்று சிரிப்புடன் கேட்டான்.

''நீ வேற எதையாவது கிளப்பி விடாதேடா. டைம் இல்ல அப்படின்னு தப்பிச்சுட்டு இருக்கேன். அவ்வளவு தான்.''

''டேய்! நாளைக்கு உனக்கு ஆஃப் தானே? இன் றைக்கு நைட் உட்கார்ந்து பாரேன் சதீஷ்.''



''யூ டூ ராகவன்...!'' சிரித்த சதீஷ், ''டேய்! சாப்பிட் டதும் நீயும் வாயேன். எனக்கும் போர் அடிக்காது'' என்று துணைக்கு நண்பனையும் அழைத்துக் கொண்டான்.

கல்யாண வரன்களைத் தேடும் இணையதளத்தில், சதீஷிற்காக கமலம் தேர்ந்தெடுத்து வைத்திருக்கும் பெண்களில் அவனுக்குத் தகுந்த மாதிரியான பெண்ணை தேர்வு செய்ய சதீஷ் செல்ல, அவனுக்குத் துணையாகச் சென்றான் ராகவன்.

அங்கே தேர்வுப் பட்டியலைப் பார்த்துக் கொண்டிருந் ததில் மைதிலியின் பக்கமும் இருந்ததில் ராகவனுக்கு மிகுந்த அதிர்ச்சி... ஏமாற்றம்... குழப்பம்... என்னவென்று வகையிட முடியாத உணர்வில் சில நிமிடங்களுக்கு சிலையாகிப் போனான்.

நண்பனின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத சதீஷ், ''இந்தப் பெண் உனக்கு தான் ராகவன் பொருத்தமா இருக்கும். சென்னைவாசி, நல்ல பொருத்தம், படிப்பு... எல்லாமே உனக்கு சரியாக இருக்கும்'' என்று அவனை உலுக்கிக் கொண்டிருந்தான்.

ராகவன் புரியாமல் ஏறிடவும், ''ஸீ ஹார்ஸ் பேங்க் இங்கே கோயம்புத்தூரில் இல்லை. அதோட அவங்க இருக்கிற பதவிக்கு ராஜினாமா செய்துட்டு இங்கே வர சொல்றது தப்புடா. அப்பாவும், அம்மாவும் இங்கே கோவையில் இருந்து நகர மாட்டாங்க. அதான் சொல் றேன். உனக்கு மேட்ச் சரியா இருக்கும். டீடைல்ஸ் நோட் செய்துக்கோ'' என்று காரணங்களைப் பட்டியலிட்டு விளக் கினான்.

ராகவனுக்கோ முள் மேல் அமர்ந்திருப்பது போல் இருந்தது. மைதிலியைப் பற்றி சற்று முன்பு நினைக்கும்

போதுகூட மனதிற்கு இனியவள் என்ற முறையில்தான் அவன் நினைத்தது.

ஆனால் இவன் மட்டும் நினைத்து என்ன பிரயோஜனம்?

மைதிலியின் அன்பும் மாறாது இருந்திருந்தால், இப்படி வரன் வேண்டி இணைய தளத்தில் அவளைப் பற்றி குறிப்பிட்டிருப்பாளா?

முன்பின் அறிமுகம் இல்லாது, இணையதளம் வாயிலாகத் தொடர்பு கொண்டவன் என்பதற்காகத்தானே என்னையே சோதித்துப் பார்த்தாள்?

இப்பொழுது கல்யாண வரன் தேடலுக்கு மட்டும் அவளுக்கு எல்லோர் மீதும் நம்பிக்கை பிறந்து விட்டதாக்கும்?

நினைக்க நினைக்க ராகவனின் மனம் கொந்தளிக்கத் தொடங்கியது.

சரி... இப்படிக் கல்யாணத்திற்காக வரன் தேடும் மைதிலி எந்தக் காரணத்துக்காக இப்பொழுது என் பின்னாடியே வருகிறாள்? என்னை மேலும் பைத்தியமாக்கவா?

சிரித்தாலும், சிடுசிடுத்தாலும் அவள் தன் பின்னாடியே வருவதால் ஒருவேளை மைதிலியும் அவனை மனதார காதலிக்கிறாள் என்று அவன் நினைப்பது, இவனது ஆசை கொண்ட மனதில் தோன்றிய தேவையற்ற கற்பனையோ?

மைதிலியைப் பற்றி யோசித்து யோசித்து தலையைப் பிடித்துக் கொண்டான்.

''ஹே! என்னாச்சு ராகவ்? ஆர் யூ ஆல்ரைட்?'' என்று சதீஷ் கேட்டதற்கு, ''தலை வலி!'' என்று காரணம் சொல்லிவிட்டு, உடனடியாக அங்கிருந்து கிளம்பினான்.



வெகுநேரம் உள்ளத்தில் மட்டுமே உழன்றவன், ஹோட்டல் அறைக்கு வந்ததும் மைதிலி எதிரில் நிற்பது போன்ற கற்பனையில் பேச ஆரம்பித்தான்.

''நீ திரும்ப என்னோடு சாதாரணமா கூட பழகியிருக்கலாம்; ஆனால் நான் அப்படி நினைக்கலை மைதிலி...''

''.....''

''இன்னமும் என்னைக் காயப்படுத்திப் பார்க்க ஆசைப்படாதே ப்ளீஸ்! உன்னிடம் ஏமாறவோ இல்லை என்னையே நான் ஏமாத்திக்கவோ இனிமேலும் முடியாது மைதிலி... முடியாது! நோ வே!''

புலம்பலை வெளியில் கொட்டிய பின்பும் மனம் ஆறாமல் அறையினுள்ளே அங்கும் இங்குமாக நடை பயின்றான்.

அந்நேரத்தில் அவனது செல்போனுக்கு அழைப்பு வர அதை சுவாரஸ்யமின்றி எடுத்துப் பார்க்க, அதில் சென்னையின் வீட்டு எண் டிஸ்ப்ளேயில் ஒளிர்ந்தது. மகனது மனநிலையைப் பற்றி தெரிந்ததால் அன்னை அழைத்தாரோ என்னவோ?

இப்பொழுதிருக்கும் மனநிலையில் பேச முடியாது என்பதால் முதன்முறை அழைப்பை அவன் எடுக்காமல் விட, அலைபேசி தொடர்ந்து ஓய்வின்றி ஒலித்தது.

பனைமரத்தில் தேள் கொட்டினால், தென்னை மரத்தில் நெறி கட்டுவானேன்?

மைதிலி மீது இருக்கும் அதிருப்தியைக் காரணம் காட்டி எதற்காக வீட்டினருடன் பேசாமல் இருக்க வேண்டும்?

அழைப்பை எடுத்தவன் சுரத்தே இல்லாமல், ''ம்... சொல்லுங்கம்மா...'' என்றான்.

''சொல்றாங்க... ஐ அம் எ காம்ப்ளான் மாம்ன்னு! எத்தனை கப்பல் கவிழ்ந்துப் போச்சுன்னு இப்படி சோக கீதம் வாசிச்சுட்டு இருக்கே?''

மறுமுனையில் தாயிடமிருந்து வந்த கேள்விக்கு என்னப் பதில் சொல்வது என்று அவனுக்குத் தெரியவில்லை.

அம்மாவைப் போல கிண்டலாகக் கூற எண்ணி, ''ம்ம்... சொல்றாங்க... டைட்டானிக் கவிழ்ந்துடுச்சுன்னு... ஏன்மா நீங்க வேற...?'' சகஜமாய் பேசுவது போல வெளிக்காட்டினான்.

''அந்தக் கப்பல் கவிழலைன்னு தெரியுமே எங்களுக்கு...'' ஜெயலக்ஷ்மியின் குரலில் உற்சாகம் வெளிப்பட்டது.

தாயின் குரலில் 'ஏதோ...' புரிபட முன்னெச்சரிக்கை உணர்வுடன், ''கோயம்புத்தூரில் தான் கடல் இல்லையேம்மா... கப்பல் கவிழ்றதுக்கு...'' என யோசனையுடன் முணுமுணுத்தான்.

''டேய்! சீக்கிரம் உன் கல்யாணத்துக்கு ஆக வேண்டிய வேலையைப் பார்க்கணும். இந்த ஆக்ட் எல்லாம் போதும்டா. உங்க அண்ணி வேற ஏதோ சொல்றாங்க.''

சதீஷின் தாயாரின் ஏக்கத்திற்கும், தன் அன்னையின் ஏக்கத்திற்கும் பெரிதாக ஒன்றும் வித்தியாசம் இருக்கவில்லை. யாருடைய தாய் என்றாலும் அனைவரது ஆசையும், ஏக்கமும், உணர்வும் ஒன்று தானே? அவர்களது ஆசை நியாயமானதும்கூட!

தன்னுடைய ஏமாற்றத்தைக் காரணம் காட்டி, வீட்டிலிருக்கும் அன்பு உள்ளங்களையும் ஏமாற்றத்தில் ஆழ்த்த அவன் விரும்பவில்லை.

சதீஷின் வீட்டிலிருந்து கிளம்பும் பொழுது, மைதிலியின் படத்தைப் பார்த்த கமலம், 'இந்தப் பொண்ணு



ரொம்ப நல்லா இருக்கு சதீஷ். உனக்கு கேட்கலாமா சதீஷ்?' என்று கேட்டது வேறு இன்னமும் அவன் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்க, கண்களில் குரோதம் பரவ, தன் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு ஒரு தீர்மானத்திற்கு வந்தான்.

அதன் பலனாக உணர்ச்சியற்ற குரலில், ''அம்மா! நீங்களா ஏதாவது கற்பனையில் பேசிட்டு இருக்காதீங்க. அண்ணி சொல்றதையும் கேட்காதீங்க. இப்ப நான் சொல்றதை நல்லா கேட்டுக்கோங்கம்மா. எனக்கு நீங்களே பொண்ணு பாருங்க. உங்களுக்கு எந்தப் பொண்ணை பிடிக்குதோ, அந்தப் பொண்ணு கழுத்தில் நான் தாலி கட்டறேன். நிஜமா தான் சொல்றேன். இதில் எந்த மாற்றமும் கிடையாது'' ஒரே மூச்சாகச் சொல்லி முடித்தான்.

மறுமுனையில் பேச்சிழந்த ஜெயலக்ஷ்மிக்கு மகனுடைய உள்ளக்குமுறல் தெரிய ஒரு சதவீதமாவது வாய்ப்பு இருக்கிறதா?

# 17

முன்பிருந்த மைதிலியைப் போன்று இப்போதெல்லாம் வளைய வரும் மகளைப் பார்க்கப் பார்க்க வளர்மதிக்கு, முன்பு அவர் நல்லதென்று நினைத்து செய்தது மீண்டும் நினைவு வந்து மனதை வாட்டியது. என்னால் அல்லவோ என் மகள் இத்தனை வருடங்களாக இந்தச் சிரிப்பைத் தொலைத்திருந்தாள்?

அந்தச் சம்பவத்திற்குப் பிறகு நடந்ததெல்லாம் வளர்மதிக்கு ஒரு கனவு போல் தோன்றியது. நாட்கள் தான் எத்தனை வேகமாக பறக்கிறது? இப்பொழுதுதான் கோவிலிலிருந்து வந்து மைதிலியின் முகம் பார்த்தது போலிருக்கிறது.

அடி வயிற்றில் பிசைய, ''என்னம்மா நடந்தது? ராகவனைப் பார்த்தியா?'' என்று கேட்டதற்கு,

தாயின் கண்ணைப் பார்க்காமலே, ''ம்ம். பார்த்தேன் ம்மா. நீங்க சொன்னது தான் சரி. இதெல்லாம் ஒத்து வரும்போல தோணலைம்மா!'' எனச் சாதாரணம் போன்று சொல்லிவிட்டு சென்றுவிட்டாள்.

தன்னுடைய மனம் வருந்தக்கூடாதென்று மைதிலி அப்படி சொல்லியிருக்க கூடுமென்பதும் புரிய, அதன் பின்பு வந்த நாட்களை முள்ளின் மேல் இருப்பது போன்று தான் கழித்தார் வளர்மதி.

இன்றைய உலக நடப்பில் இணைய தளம் வாயிலாக சீரழியும் இக்கால சந்ததியினரைப் பற்றி ஒவ்வொரு செய்தியாகக் காதில் பட, அவரின் பயமும் அதிகரித்தது என்று தான் சொல்ல வேண்டும்.

இதோ... இப்பொழுது கூட சமீபத்தில், நல்ல வேலை யில், இந்தியாவின் புகழ்ப் பெற்ற கல்லூரியில் நன்றாக படித்த பெண், அவளுடைய காதலன் 'ஃபேஸ் புக்கில்' ஏதோ எழுதப் போக, அதற்கு அந்தப் பெண் மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்துக் கொண்டாளாம்.

என்ன படித்து என்ன? அந்த ஒரு நொடியில், மூளை புல் மேய அல்லவா போய் விடுகிறது? சிறிதாவது பெற்ற வர்களை, உற்றவர்களை நினைத்துப் பார்த்திருப்பாளா அந்தப் பெண்?



செய்தித்தாள்களுக்கு அது ஒரு சூடான செய்தி மட்டுமே! ஆனால் பெற்றவர்களுக்கு?

வளர்மதியின் ஆராய்ச்சி பார்வை மைதிலியின் மீது சில நாட்கள் தொடரவும், மைதிலியே, ''அம்மா! தேவையே இல்லாமல் கவலைப்படறதை விடுங்க. திஸ் வாஸ் நாட் மென்ட் டு பீ! அவ்வளவுதான்!'' என்று தைரியம் சொல்வாள்.

அப்பொழுதும் தாயின் முகம் தெளியாததைக் கண்டு, ''யாரோ, எங்கேயோ, ஏதோ செய்துக்கிட்டாங்க என்கிற துக்காக, நீங்க வீணா என்னை நினைச்சு கவலைப் படறதை முதலில் விடுங்க, பத்தாவது பரீட்சையில் சரியா மார்க் வரலை என்கிறதுக்காகக்கூட தான் சிலர் தவறான முடிவு எடுக்கிறாங்க. எல்லா இடத்திலும் எல் லாம் நடக்கத்தான் செய்யும். அதுக்கு நாம எப்படி ரியாக்ட் செய்றோம் என்பது தான் முக்கியம். சரியா? எங்கே சிரிங்க பார்ப்போம்? அது... இது தான் மை ஸ்வீட் மம்மி!'' என்று கொஞ்சிவிட்டு செல்வாள்.

மகள் கொஞ்சினாலும் கெஞ்சினாலும், தாய் மனம் மருகுவதைத் தவிர்க்க முடியுமா? அவர் கணவரின் துணை மட்டும் அப்பொழுது இல்லையென்றால், வளர்மதி என்னவாகி இருப்பாரோ?

அன்பழகனுக்கு யார், என்ன என்ற விபரம் முழுதும் தெரியாவிட்டாலும், எல்லாவற்றையும் மேலோட்டமாக வளர்மதி அவரிடம் சொல்லியிருந்தார்.

''வளர்! சும்மா நீயும் கவலைப்பட்டு, மைதிலிக்கும் எல்லாத்தையும் திரும்ப, திரும்ப நினைவு படுத்தாதே. அவளே 'போனால் போகுது' என்று தைரியமா இருக்கா.

முதலேயே தெரிஞ்சு இருந்தால் நம்மால் முடிஞ்சளவு தடுத்திருக்கலாம். இப்ப அதுக்காக என்ன செய்ய முடியும்? விடு கழுதையை! நாளடைவில் அவளே சுத்தமா இதை மறந்து போயிடுவாள். நீதான் போட்டு கஷ்டப்பட்டு உடம்பைக் கெடுத்துக்கிறே. கொஞ்சம் அமைதியா இரு வளர்!'' என்று மனைவியைத் தோளில் சாய்த்துக் கொள்வார்.

''நான் வேணும்னாலும் அவளிடம் ஏதாவது பேசவா?''

''இல்லைங்க. வேண்டாம். அவளுக்கு ஒரு மாதிரி இருந்தாலும் இருக்கும். உங்களுக்கு தெரிஞ்சதாகவே காட்டிக்க வேண்டாம். நானே பார்த்துக்கிறேன்'' மன வேதனையைப் பகிர்ந்துக் கொள்ள ஆள் கிடைத்த நிம்மதியில் கணவரின் மார்பில் கண் மூடி படுத்தார் வளர்மதி.

கணவர் சொல்வதும் சரிதானே?

பாதை முடிந்தப் பிறகும், இங்கு பயணம் மட்டும் முடிவதில்லையே?

இந்த உலகில் வந்த ஒவ்வொருவரின் வாழ்க்கைப் பயணமும், என்ன இடர் வந்தாலும் தொடர்ந்துக் கொண்டு தானேயிருக்கிறது?

ஆனால், அந்தப் பயணம் என் மகளுக்கு முழுவதுமே ரோஜா இதழ்கள் தூவிய பயணமாக இல்லாவிடினும் வெறும் முட்களாலான பயணமாக மாற நாமே ஒரு காரணமாகிவிட்டோமோ என்ற எண்ணம் அவரைச் சிந்திக்கத் தூண்டியது.

எல்லாவற்றிற்கும் நேரம் காலம் எல்லாம் இருப்பது போல, அமைதியாய் இருப்பதற்கும், விட்டு பிடிப்ப தற்குமே ஒரு நேரமிருக்கிறது.



எந்தக் காரணத்தினால் வந்திருப்பினும், அவரவர் துன்பத்தை அவரவர்தான் அனுபவித்தாக வேண்டும். இந்த எண்ணத்தோடே கஷ்டமாக இருந்தாலும், அந்த நிலையைச் சகித்துக் கொள்ள பழகினார்.

ஆனால் அவர் எதையும் சகித்துக் கொண்டிருக்க வேண் டியதில்லை என்பது போன்று, கடந்த சில வாரங்களாக மகளின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சி, பூரிப்பு, மலர்ச்சி எல்லாம் அந்தத் தாய் வயிற்றில் பாலை வார்த்தன.

எல்லாமே ராகவனை திரும்ப பார்த்ததற்குப் பிறகு தானே?

ஆனால், மறுபடியும் எதையும் அவளிடம் கேட்டோ, சொல்லியோ, தான் எதுவும் குழப்ப வேண்டாம், சொல்ல வேண்டுமென்றால் மைதிலியே சொல்வாள்.

மேலும், இனக்கவர்ச்சியில் சிக்கி கனவுலகில் மிதக்க மைதிலி ஒன்றும் கண்மூடித்தனமாக நடக்கும் பெண் ணில்லை என்பது ஒருபுறம், அனுபவ ஞானம் இல்லாத பருவ வயதிலும் மகளில்லை என்பது மறுபுறம்.

அத்தோடு முக்கியமாக அவரவர் துன்பத்தை எப்படி அவரவர்தான் சுமந்தாக வேண்டுமோ அதே போன்று அவரவர் துன்பத்திற்கும், இன்பத்திற்கும் அவரவரே தான் வழி காணவும் வேண்டுமென்று எண்ணி வெறும் பார்வையாளராக மட்டுமே இருந்து அமைதிக் காத்தார்.

ஏற்கனவே மகள் பாலை வார்த்திருந்த வயிற்றில், இன்று மதியம் வந்த ராகவனின் அம்மா ஜெயலக்ஷ்மி யின் தொலைபேசி அழைப்பு பாலோடு தேனையும் சேர்த்து வார்த்தது.

கேட்டதை நம்ப முடியாமல் கணவரை உடனே வீட்டிற்கு வரும்படி அழைத்தார்.

அன்பழகன் வந்ததும், ''என்ன வளர்! உடனே வாங்கன்னு சொன்னவுடன் அடிச்சுப் பிடிச்சு வந்தால், நீ என்ன கனவுலகத்தில் இருக்க மாதிரி இருக்கே?'' என்றார் குழப்பமாக.

அவர் கையைப் பிடித்து தன்னருகில் அமர வைத்த வளர்மதி, ''நான் சொல்றதைக் கேட்டால் நீங்களும் இப்படி தான் சந்தோஷமாயிடுவீங்க'' பரபரத்தவர்,

''யார் என்னைக் கூப்பிட்டு பேசினாங்கன்னு சொன்னால் நீங்க நம்பவே மாட்டீங்க'' என்ற பீடிகையுடன் தொடங்கினார்.

''வளர்! டென்ஷன் தாங்கலே... சீக்கிரம் சொல்லு.''

''ராகவனோட அம்மா கால் செய்து 'உங்கப் பொண்ணு மைதிலியை எங்களுக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. பொண்ணு பார்க்க எப்ப வரட்டும்னு கேட்டாங்கங்க...'' என்று விழிகளை விரித்தார்.

''என்னது? நீ சொன்ன அந்த ஃபேஸ்புக் ராகவனா? இந்த ஐ.பீ.எஸ். ராகவனா? அவரோட அம்மாவா? நல்லா கேட்டியா வளர்?''

ராகவனை ஐ.பீ.எஸ். ஆபீசராக இங்கே சென்னையில் பார்த்ததாக மைதிலி சொன்னதும், குழப்பத்தில் ஆழ்ந்த வளர்மதி, கிரிக்கெட் போட்டியன்று தொலைக்காட்சி திரையில் ராகவனையும் மைதிலியையும் அடையாளம் கண்ட கணவரிடம், ஃபேஸ்புக் ராகவனும் ஐ.பீ.எஸ். ஆபீசரும் ஒன்று தான் என்று முன்பே கூறியிருந்தார்.

''அட... நல்லா தெரியாமல் சொல்லுவேனா? அவரோட அம்மாவே அவங்களை அறிமுகப்படுத்திக்கிட்டாங்கன்னு சொல்றேன்!'' என்றவர் மற்ற விவரங்களையும் பகிர்ந்தார்.



யோசனையுடன் பார்த்திருந்த அன்பழகன், ''உன்னைப் பார்த்தாலே நீ என்ன நினைக்கிறேன்னு தெரியுது. உன்னைக் கேட்கவே வேண்டாம். எனக்கும் சம்மதம் தான் வளர். மைதிலிக்கும் பொருத்தமா இருப்பார். ஆனால் இது மைதிலிக்கு தெரியுமா? சொல்லிட்டியா?'' என்று விசாரித்தார்.

''அவளுக்கு தெரியுமா தெரியாதான்னு எனக்குத் தெரியலை...'' என்று இழுத்தவர், ''அவளுக்குத் தெரிஞ்சு இருந்தால் இவ்வளவு பெரிய விஷயத்தை நம்மக்கிட்ட சொல்லியிருக்கமாட்டாளா? ஒருவேளை, அவங்களுமே இவளுக்குத் தெரியாமல் சர்ப்ரைஸா வரணும் என்று நினைக்கறாங்களோ என்னவோ?'' என்றார்.

கணவரின் கூர்பார்வை தாக்க மெல்லிய குரலில், ''அதோட எனக்குமே, நான் சொல்லி தான் முன்னாடி எல்லாம் ஏடாகூடமாச்சோன்னு ஒரு குற்ற உணர்ச்சி இருந்துகிட்டே இருக்குங்க. இப்ப அவளுக்கு இந்த ஆனந்த அதிர்ச்சி கொடுப்பதன் மூலம் அதை சரி செய்யலாமே என்ற ஆசையும் இருக்கு. நீங்க என்ன சொல்றீங்க?'' என வினவினார்.

மனைவியின் கையைப் பற்றி அழுத்தி, ''வளர்! நான் ஏற்கனவே சொல்லியிருக்கேன். நீ சொன்னதில் எந்த தப்புமில்லை. ஒரு தாயா அதை கூட சொல்லாமல் இருந்தால்தான் தப்பு. உனக்கு எது சந்தோஷமோ அப்படியே செய். என்றைக்கும் நீ செய்ய நினைக்கிறதுக்கு நடுவில் நான் வந்ததில்லை. நிம்மதியா இரும்மா.'' அன்பழகன் ஆறுதல் கூற வளர்மதியின் முகத்தில் புன்னகை பூத்தது.

அடுத்ததாக வந்த ஞாயிற்றுக்கிழமை அன்று, தெரிந்தவர்கள் மதியம் தங்கள் வீட்டிற்கு வருகிறார்கள் என்று மட்டும் சொல்லி, மகளை இருப்பதில் நல்லதாக உடுத்திக் கொள்ளச் சொன்னார்.

தான் ராகவன் வீட்டிற்குச் சென்றதை அம்மாவிடம் சொன்னால் தவறாக நினைப்பாரோ என்று மைதிலி அவரிடம் சொல்லாமல் விடுத்ததும், இப்பொழுது வளர்மதி மகளுக்கு சொல்லாமல் சந்தோஷ அதிர்ச்சி தர நினைப்பதும், நேர்மாறான விளைவை ஏற்படுத்தும் என்று நினைத்து பார்த்திருப்பார்களா?

அங்கே, ராகவனின் வீட்டிலோ பெண் பார்க்க போகிறோம் என்று சொல்லி பிரச்சனையாகிறது.

ராகவன், ''என்னது? பெண் பார்க்கவா? யாரைக் கேட்டு இதை ஏற்பாடு செய்தீங்கம்மா?'' தாயிடம் வெடித்துக் கொண்டிருந்தான்.

''இதோ பாருடா! யாரை நான் கேட்கணும்? என் மகனுக்கு பெண் பார்க்க... விட்டால் பிரதம மந்திரிகிட்டே அனுமதி வாங்கணும்னு சொல்லுவே போலிருக்கே? அதுவுமில்லாமல் நான் ஏற்கனவே பெர்மிஷன் வாங்கிட்டேன்.''

''யார்க்கிட்டே வாங்கனீங்க? பொண்ணு பார்க்க போறது எனக்கு! அதுக்கு என்கிட்டே வாங்கணும்மா.''

''நீ இப்படி சொல்வேன்னு அப்பவே தெரிஞ்சிருந்தால், நீ பேசினதை நான் ரெக்கார்ட் செய்து வைச்சிருப்பேன்டா. ரேகா அப்பவே சொன்னாள் - உங்க சின்னப் பையனை நம்பாதீங்க அத்தைன்னு. நான்தான் நம்பலை.''



ராகவனுக்கும், ஜெயலக்ஷ்மிக்கும் நடக்கும் வாக்கு வாதத்தை சுவாரஸ்யமாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த ராஜீவ், ''அதைத்தானே அம்மா ரேகாவும் சொன்னாள். அப்புறம் என்ன இப்ப ஃபீலிங்க்ஸ்?'' அப்பாவியாக வினவியவன், ''சின்ன மருமகள் வர்றதுக்கு முன்னாடியே உன் பேச்சுக்கு இங்கே மதிப்பே இல்லாமல் போச்சு ரேகா! ரொம்ப மோசம்!'' என்று கண்சிமிட்டினான்.

அண்ணனை முறைத்துப் பார்த்த ராகவன், ''நீ கொஞ்ச நேரம் வாயை மூடிட்டிரு! நீயும், அண்ணியும் வேற நடு நடுவில்... எல்லாம் உங்க ரெண்டு பேராலதான்'' என்று அவனிடம் பாய்ந்தான்.

''எந்தப் பெண்ணை வேண்டும்னாலும் பாருங்க'' என்று சொல்லி முழுதாக ஒரு வாரம் கூட முடியவில்லை. அதற்குள் நிஜமாகவே பெண்ணை முடிவே செய்துவிட்டார்கள் போல!

ஏதோ ஒரு ஆத்திரத்தில் அப்படி சொன்னவன்தான். ஆனால் இப்பொழுது எங்காவது கண் காணாத இடத்திற்கு ஓடத்தான் தோன்றியது அவனுக்கு.

ஜெயலக்ஷ்மி, ''ஏன்டா அவங்க மேலே பாயறே? இப்போ என்னதான் செய்யணும்னு சொல்லு. குறைஞ்சபட்சம், உங்க அப்பா சொன்னதுக்காகவாவது அவங்க வீடு வரைக்கும் வந்து பார்க்கக் கூடாதா? பார்க்கிற எல்லா பெண்ணையுமா கல்யாணம் செய்துக்க முடியும்? அப்புறம் சொல்றோம் என்று சொல்லிவிட்டு வந்துடலாம். சரின்னு சொல்லு ராஜா!'' என்று அவரின் இளைய ராஜாவை தாஜா செய்தார்.

* * *

தங்கள் வீட்டிற்கு வந்த விருந்தினரைப் பரபரப்பும் உற்சாகமாக வரவேற்றனர் வளர்மதி - அன்பழகன் தம்பதியினர்.

இப்பொழுது தான் முதன் முறையாக ராகவனை நேரில் பார்த்த வளர்மதிக்கு மனதிற்கு நிறைவாக இருந்தது.

'ஸ்ரீராமஜெயம்! நல்லதே நடக்கட்டும்!'

வேண்டா வெறுப்பாக குடும்பத்தினருடன் வந்திருந்த ராகவனுக்கு அன்பழகனைக் கண்டதும் கண்ணில் குழப்பமும், வியப்பும் குடியேறியது. இவர் எப்படி இங்கே...?

மெல்ல உண்மை விளங்க, ஒரேயொரு நொடி தோன்றிய மகிழ்ச்சியும், நிம்மதியும் கடுங்கோபமாக மாறியது.

சோ.... எல்லாம் என் கற்பனை மட்டுமேயில்லை! நடப்பு தான்!

எல்லோரையும் இன்முகமாக வரவேற்று, நலம் விசாரித்து முடித்த பின் ஜெயலக்ஷ்மி ஆவலாக மைதிலி எங்கேயென்று விசாரிக்க, வளர்மதி ராகவனின் கோபத் தீயில் தன் பங்குக்கு நெய் ஊற்றும் வேலையாக,

''கூல் ட்ரிங்க்ஸ் கலக்கிட்டு இருக்கா. அவளைப் பெண் பார்க்க நீங்க வரப்போறீங்கன்னு மைதிலிக்கு தெரியாது. சர்ப்ரைஸா இருக்கட்டும்னு நினைச்சு நாங்களும் அவளுக்கு சொல்லலை'' என்றார் வெள்ளந்தியாக.

தாடையை இறுக கடித்துக் கொண்டு, கை நகங்களை வெறித்துக் கொண்டிருந்த ராகவன் வெடித்து சிதறாமல் இருந்தது தான் அதிசயம்.



எனக்கு இந்த அவமதிப்பு தேவைதான்! அம்மா! வீட்டுக்கு வாங்க!

விருந்தினருக்கு குளிர்பானம் எடுத்துக் கொண்டு வந்த மைதிலி முதலில் பார்த்தது ரேகாவைத்தான். ஆவலும் குறுகுறுப்புமாகப் பார்வையை சுழற்றியவளுக்கு புதையலே கிடைத்தது.

ராகவனுடன் அவனுடைய மொத்தக் குடும்பமும் வந்திருக்கிறார்களே!

நாம் நினைத்த மாதிரியே அவன் என்னைப் பற்றி வீட்டில் சொல்லியிருக்கான்! சோ ஸ்வீட்!

சந்தோஷத்தை அடக்கப் பார்த்தும் முடியாமல் அவள் முகத்தில் அதை அப்பட்டமாக பூசிக் கொண்டு வந்தவளை ஏறிட்ட ராகவனின் கொதிப்பை அடக்க நூறு குளிர்பானங்களால்கூட முடிந்திராது.

நம்மாழ்வார், ''ஹா... ஹா... இங்கேயும் சர்ப்ரைஸ் தானா? எங்க வீட்டிலும் அதே கதை தான். என் பையன் அவங்க அம்மாவிடம் 'உங்களுக்கு பிடிச்சால் சரி. எந்தப் பெண்ணா இருந்தாலும் ஓகேன்னு சொல்லிட்டான். ஆனால்... இன்றைக்கு இங்கே, உங்க வீட்டுக்கு அவனை வர வைக்கிறதுக்குள்ள 'உன்னைப்பிடி, என்னைப் பிடி'ன்னு ஆகிடுச்சு. கெஞ்சி, கொஞ்சி தான் அவங்க அம்மா அவனைக் கூட்டிட்டு வந்திருக்காங்க'' என்று போட்டு உடைத்தார்.

எல்லோரைப் பார்த்தும் வரவேற்பாக புன்னகை செய்த பின்பு மைதிலி ராகவனையே தான் பார்த்ததும், பார்க்காதது மாதிரி கண்களில் நிறைத்துக் கொண்டிருக்க, நம்மாழ்வார் இப்படிச் சொன்னதும் காற்றுப் போன பலூனாக சூம்பிப்போனது அவளது முகம்.

ஓ! இது தான் அவனது முகம் சிரிப்பைத் தொலைத் திருக்கும் காரணமா? எந்தப் பெண் என்றாலும் சரியென்று சொன்னவனுக்கு இந்தப் பெண்ணைப் பிடிக்கவில் லையா? ஏன் ராகவன்?

சட்டென்று கண்களில் நீர் முத்துக்கள் திரள, ராக வனை நேருக்கு நேராகப் பார்த்தாள்.

ஊமையாய் மைதிலியின் மனம் ராகவனைக் கேள்வி கேட்க, அங்கு கூடியிருந்த பெரியவர்களோ பஞ்சாங் கத்தைப் பார்த்து தேதி குறிக்கும் அடுத்த நிலைக்கே வந்துவிட்டிருந்தனர்.

''ஒரு நிமிஷம்! மன்னிக்கணும்! எனக்கு...நான் கொஞ்சம் ராகவனோட பேசணும்.''

சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்த சூழலைக் கலைத்தது அமைதியாக ஒலித்த மைதிலியின் குரல்.

* * *

உள்ளறை ஒன்றிலிருந்த ராகவனும் மைதிலியும் பேச்சை யார் முதலில் துவக்குவதென்று போட்டிப்போட் டுக் கொண்டிருந்தனர்.

சிறிது நேரக் காத்திருப்புக்கு பின்னர் ராகவன், பாதி திறந்திருந்தக் கதவருகில் செல்ல, அப்பொழுதுதான் உயிர் பெற்று எழுந்த சிலையாக மைதிலி,

''எங்கே போறீங்க?'' என்றாள் எரிச்சலுடன்.

''என்னோட பேசணும்னு சொல்லிட்டு நீ அமைதியா இருந்தால், அப்புறம் எனக்கு இங்கே என்ன வேலை?''

நீ பேசினாலும் எனக்கொன்றுமில்லை, பேசாவிட் டாலும் ஒன்றுமில்லை என்ற குரலில் ராகவன் சுவற்றில் சாய்ந்துக் கொண்டு அலட்சியமாக இயம்ப, மைதிலிக்கு கண் மண் தெரியாத கோபம் வந்தது.



நான் என்றால் உனக்கு அத்தனை அலட்சியமா? வேலை ஒன்றும் இல்லையாமா? எப்படி இருக்கும்? எந்தப் பெண் என்றாலும் சரியென்று சொன்னவனை இங்கே கையைப் பிடிச்சு தர தரன்னு இல்ல இழுத்துட்டு வந்து இருக்காங்க!

''ஆமாமா... உங்களுக்கு இங்கே வேலை ஒண்ணு மில்லை தான். அதான் பார்த்தாலே தெரியுதே.''

''எஸ்! நீ எல்லாத்தையும் அப்படியே ஒரு தடவை பார்த்தாலே தெரிஞ்சுக்கிற ஆளு தான். இது தெரியாமல் போகுமா?'' என்றான் கேலியாக.

''உங்க அப்பா தானே சொன்னாங்க, உங்களுக்கு என்னைப் பார்க்க வர பிடிக்கலைன்னு. அப்புறம் அதில் தனியா தெரிஞ்சுக்க என்ன இருக்கு? இதுக்குன்னு பூத கண்ணாடியா கொண்டுட்டு வர முடியும்?''

இவனுக்கு மட்டும்தான் கேலியாக பேசத் தெரியுமா? இந்தா... பிடிச்சுக்கோ!

அவளை யார் பெண் பார்க்க வருகிறார்கள் என்று தெரி யாமலே மைதிலி சந்தோஷத்துடன் சம்மதித்திருக்கும் பொழுது, அவனுக்கு யாரையுமேதான் பார்க்க பிடிக்கவில்லை என்ற உண்மை நிலவரத்தை இப்பொழுது, இங்கே, இந்த இடத்தில் சொல்லி, அவன் முகத்தில் மேலும் கரியைப் பூசிக் கொள்ள ராகவனுக்கு விருப்பமில்லை.

''ஆமா! வர விருப்பம் இல்லைதான். உன்னைப் பார்க் கவே எனக்கு பிடிக்கலை. போதுமா?'' வார்த்தையைப் பற்களுக்கு இடையில் கடித்து துப்பியவன்,

''ஏன்? வேற யாரும் உன்னைப் பார்த்தால் ஓகேன்னு தானே மேட்ரிமோனியலில் உன் கல்யாணத்துக்கு நீயே

விளம்பரம் கொடுத்திருக்கே? அப்புறம் நான் உன்னைப் பார்த்தால் என்ன பார்க்காவிட்டால்தான் என்ன?'' என்றான் கொதிப்புடன்.

இன்னமுமே அவனுக்கு சதீஷ் மைதிலியின் புகைப் படத்தைப் பார்த்து வர்ணித்தது நெஞ்சை ரணமாக அறுத்தது.

என்ன சொல்கிறான் இவன்? மேட்ரிமோனியலா? ஓ! அவனுடைய கோபத்தின் காரணம் ஓரளவிற்கு புரிய, அதற்கு என்ன பதில் சொல்வதென்று தான் புரியவில்லை அவளுக்கு. அவனைத் திரும்பப் பார்க்கும் முன் செய்தது அது. இருந்தாலும் குற்றம் செய்தவள் போன்று பதில் சொல்ல திண்டாடினாள்.

''அது...''

அவள் மறுக்கவே இல்லையே!

ஆத்திரத்துடன், ''அதே தான்! அதைப்பார்த்த போது, டூ யு நோ ஹொவ் ஐ ஃபெல்ட்?'' என்றான்.

''இப்ப நீங்க மட்டும் என்ன செய்து இருக்கீங்க? யாருன்னாலும் ஓகே சொல்லலையா?''

''அப்புறம்? 'எங்கிருந்தாலும் வாழ்க'ன்னு பாட்டு பாடிட்டு தேவதாஸ் மாதிரி ஆகச் சொல்றியா?''

வார்த்தைக்கு வார்த்தை மற்றவரை குதறிவிடும் வெறியில் இருந்த இருவருக்குமே பேசுவது எந்தள விற்கு உண்மை என்று தெரியவில்லை!

''எப்பவும் என்னை நம்ப வைச்சு கழுத்தருக்கிறதே உனக்கு வேலையா போச்சு!'' அவன் குரலில் இருந்தது வெறுப்பா இல்லை நிராசையா?



இதை இவன் விடவே மாட்டானா?

''நான் உங்களை மட்டுமில்ல என்னையும் சேர்த்து தான் கஷ்டப்படுத்திக்கிட்டேன் என்று எப்போ உங் களுக்கு புரிய போகுது ராகவன்?'' என்றாள் வேதனை யுடன்.

''ஹம்ப்! உனக்கென்ன? யாராய் இருந்தாலும்...'' என்று அவன் சொல்லி முடிப்பதற்குள் ராகவனை சீறும் விழிகளால் உறுத்து விழித்தாள் மைதிலி.

''ஹொவ் டேர் யு! ஷட் அப்! ஜஸ்ட் ஷட் அப்!'' என்று சீறியவள், ''முன்பின் தெரியாத உங்களுடன் பழகின ஒரே காரணத்திற்காக நீங்க என்ன வேணும்னாலும் பேச முடியாது மிஸ்டர்!'' என்றாள்.

தன்னுடன் வேறொருவனை இணைத்து ராகவன் எப்படி பேசலாம்?

அந்த நேரத்தில் திருமண இணையத்தளத்தில் இருப்பது அவளது பயோ-டேட்டா என்பது முற்றிலும் மறந்து போக, அவன் மீதான கோபம் மட்டுமே அவளுக்கு முன் னிருந்தது.

''நீங்களும் செய்றதையெல்லாம் செய்துட்டு, தப்பை மட்டும் என் மேலே போடாதீங்க மேடம்!'' ராகவனின் கை முஷ்டிகள் கோபத்தில் இறுகின.

இதுவரையில் அடக்கி வைக்கப்பட்டிருந்த அவளது கோபம், ஆத்திரம், குற்ற உணர்ச்சி எல்லாம் மொத்தமாக சேர்ந்து, மைதிலியின் கோபத்தையும் பொறுமையையும் எல்லை கடக்க வைக்க,

''தப்புதான் சாமி! தப்புதான்! முதலில் நாம் மீட் செய்த போது உங்களைச் சோதிச்சு பார்த்தது தப்புதான்.

அதை நான் மறுக்கலை. ஆனால், லெட் பைகான்ஸ் பீ பைகான்ஸ் (Let bygones be bygones) என்று தான் நான் பழசைப் பற்றி பேசலை. கஷ்டமான கடந்தக் காலத்தை மறக்கிறது என்பது, மங்கி பார்ஸ் விளையாட்டு மாதிரி தான். ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் கையை விட்டு தான் ஆகணும். அப்போதான் முன்னாடி போக முடியும். ஆனால் நீங்க அதை விடவே மாட்டீங்க எனும் போது... இதுக்கு மேலே நாம பேசறதே வேஸ்ட்'' என்றவளின் ஆத்திரக் குரல் முடிக்கும் போது உணர்ச்சியைத் தொலைத் திருந்தது.

''ஆக... இப்பவும் நீ போனா போகுதுன்னுதான் அதைப் பற்றி பேசறே? இல்லையா?''

கண்களில் தீப்பொறி பறக்க இருந்தவனை உணர்ச்சி துடைத்த முகத்துடன் ஏறிட்ட மைதிலி, ''போனால் போகு துன்னு நான் எதையுமே விடலை ராகவன். உங்களுக்கு இவ்வளவு தான் என்னைப் பற்றி தெரியும்னா... இங்கே யிருந்து போயிடுங்க. ப்ளீஸ்!''' என்று அவனுக்கு முதுகு காட்டித் திரும்பி நின்று கொண்டாள்.

''பெரியவங்களிடம் நீங்களே சொல்லிடுங்க. இப்ப நீங்க போகலாம்.''

அவள் ஒரு பெரிய மகாராணி போன்றும் தான் அவ ளுக்கு சேவகம் செய்யும் ஒரு சாதாரண ஏவலாள் போன் றும் அவனை சுலபமாக வெளியேற்ற நினைப்பவளின் முதுகையே கோபத்துடன் வெறித்தவன் சில நொடி களுக்கு பிறகு கதவை அறைந்து சாற்றிவிட்டு போக, தன் சக்தியெல்லாம் வடிந்தது போன்று மடங்கி சாய்ந்த மைதிலியின் பளிங்கு கன்னங்களில் கண்ணீர் கோடு களாக இறங்கிய வண்ணமிருந்தது.



# 18

மைதிலியுடன் தனியாகப் பேசிவிட்டு வந்தவன் யாரிடமும் எதுவும் சொல்லாமல் வெளியேறிவிட, நம் மாழ்வாருக்கும், ஜெயலக்ஷ்மிக்கும் மிகுந்த சங்கடமாய் போய்விட்டது.

பெண் பார்த்துவிட்டு வந்து இரண்டு நாட்களாகியும் அந்தக் கோபமிருந்ததால் ஜெயலக்ஷ்மி ராகவனிடம் ஒரு வார்த்தை கூட பேசவேயில்லை.

சிடுசிடுவென்று தன்னிடம் எதையாவது பேசும் போதெல்லாம், சிரித்தபடி பதில் பேசி சரிகட்டி பழகிய தாயின் உள்ளம் இந்த முறை ராகவனின் செய்கையில் குளிர மறுத்தது.

அவனாக வந்து வலிய பேசினாலும் கூட சிறு தலை யசைப்புடன் பேச்சு வார்த்தையை அவர் முடித்துக் கொள்ள, ஒருநிலைக்கு மேல் பொறுக்க முடியாத ராகவன் அடுப் படியில் வேலைப் பார்த்துக் கொண்டிருந்தவரிடம்,

''உங்க கூட கொஞ்சம் பேசணும்மா'' என்று வற்புறுத்தி தன்னறைக்கு அழைத்து வந்தான்.

''ஏன்மா இருக்கிற கஷ்டம் பத்தாதுன்னு நீங்களும் பேசாமல் இருந்து என் உயிரை வாங்கறீங்க?'' ராகவன் ஆதங்கத்துடன் வினவ, அவனது குரலிலிருந்து வேதனை தாயின் உள்ளத்தைப் பாகாய் உருக்கியது.

''என்னப்பா நீ...? பேசினாலும் உயிரை வாங்கறதா சொல்ற... பேசாமல் இருந்தாலும் உயிரை வாங்கறதா சொல்ற...? நான் என்னதான் செய்யட்டும்?'' மக னிடமே நியாயம் கேட்டார்.

முன்பு போல் உற்சாகமாக மகனிடம் உரையாட வில்லை என்றாலும் கடந்த இரண்டு நாட்கள் போல் 'உம்மென்றும்' ஜெயலக்ஷ்மி இல்லாமல் இருப்பதே ராகவனுக்கு ஆறுதலாய் இருந்தது.

''நானே என்ன செய்றதுன்னு தெரியாமல் மண் டையைப் பிச்சுட்டு இருக்கேன். இதில் நான் எங்கிருந்து உங்களுக்கு சொல்றது?'' என்று பதில் கேள்வி கேட்டு விட்டு பெருமூச்செறிந்தான்.

''ஏன் இதுவரை செய்ததெல்லாம் பத்தாதா?'' குறை பட்டுக் கொண்டார்.

''என்னை தானே குறை சொல்லுவீங்க நீங்க! வேறென்ன தெரியும்? தப்பு செய்றதெல்லாம் அவ...!''

''எனக்கு வேறெதுவும் தெரியவே வேண்டாம் ராகவா. ஆனால் எந்தப் பிரச்சனையா இருந்தாலும் விட்டு கொடுக் கிறதில் தப்பு எதுவுமில்லைன்னு மட்டும் எனக்குத் தெரியும்ப்பா.''

ஏதோ இடையிட்ட மகனிடம், ''நீ எதுவும் பேச வேண் டாம். ரெண்டு நிமிஷம் நான் சொல்றதைக் கேளு'' என்றுவிட்டுத் தொடர்ந்தார்.

''இப்போ பூதாகரமா இருக்கிற பிரச்சனை இன்னமும் சில வருஷத்துக்கு பிறகு யோசித்தால் உப்பு சப்பு பெறாத விஷயம் மாதிரி இருக்கும்ப்பா கண்கெட்ட பிறகு சூர்ய



நமஸ்காரம் மாதிரி காலம் கடந்து பிறக்கிற ஞானோ தயத்தால் யாருக்கும் எந்த புண்ணியமும் இல்லை.''

தாயின் தெளிவான குரலும், அனுபவம் மிகுந்த அவரது பேச்சும் காயம் பட்ட அவனின் மனதிற்கு மிகவும் ஆறுதலாக இருந்தது.

''புத்தர் இறப்பே இல்லாத வீட்டைத் தேடி ஒரு பிடி அரிசி வாங்கிட்டு வர சொன்ன மாதிரி, ஒரு தப்பு கூட செய்யாத பெண்ணை தேடி கல்யாணம் செய்துக்கப் போறியா?''

''ராகவனது மனதின் கொதிப்பு அவரது பேச்சில் சிறிது மட்டுப்பட்டது.''

''இல்லாட்டி... மைதிலி செய்த தப்பிற்கு அவளா வந்து மன்னிப்பு கேட்கலைன்னு ஈகோவா ராகவா?''

''அவ மன்னிப்பு கேட்கலைன்னா என்னடா? நீ அந்த தப்பையே மறந்துட வேண்டியது தானே? மன்னிக்கிறது மனுஷ குணம்... கசப்பை அடியோட மறக்கிறது தெய்வ குணம்! உனக்கு ரெண்டு குணத்தில் எதுவானாலும் எனக்கு சந்தோஷம் தான்பா. ஆனால் அந்தப் பிடிவாத குணத்தை மட்டும் பிடிச்சுக்கிட்டு உன்னையும், உன்னை சேர்ந்தவங்களையும் கஷ்டப்படுத்தாதே ராகவா.''

''ம்... சரிம்மா...'' ராகவன் யோசனையுடன் தலை யசைக்க,

ஜெயலக்ஷ்மி, ''நான் சொல்றதை சொல்லிட்டேன். சீக்கிரமே நல்ல முடிவை நீதான் சொல்லணும்'' என்று தன் வேலைகளைக் கவனிக்கச் சென்றார்.

* * *

பெண் பார்க்கும் படலத்திற்குப் பிறகு மைதிலியால் வளர்மதி உள்பட யாரிடமும் முகம் கொடுத்து பேச

முடியாமல் போக, அலுவலக வேலை என்று காரணம் சொல்லிக் கொண்டு, அலுவலக நேரம் தவிர தன் அறையிலேயே இரண்டு நாளாக முழுக்க அடைந்து கொண்டாள்.

கோபம் இந்த இரண்டு நாட்களில் சற்றே மட்டுப்பட, அவனிடம் அவ்வளவு கடுமையாகப் பேசியிருக்க வேண்டாமோ என்று யோசித்தவள், காலையில் முதல் வேலையாக ராகவனைப் பார்த்து பேச வேண்டும் என்று விரும்பினாள்.

ஆனால் பொது மேலாளர் உடல்நல குறைவால் விடுப்பு எடுத்ததில் வேலைப்பளு அதிகரித்திருக்க, அவளது சந்திப்பை அன்று மாலை வரை ஒத்தி வைக்க நேர்ந்தது.

முக்கியமான அலுவலக சந்திப்பு எதுவும் அன்று இல்லை என அவளது காரியதரிசி தெரிவிக்க மைதிலி, ''தேங்க்ஸ் கவிதா. நம்ம பேங்க் ப்யூன் எங்கேன்னு தெரியுமா? மாணிக்கத்தைப் பார்த்தால் உடனே வந்து என்னைப் பார்க்கச் சொல்லுங்க'' எனப் பணித்தாள்.

கவிதா, ''உங்களுக்குத் தெரியாதா மேடம்? மாணிக்கம் இப்போ ரெண்டு வாரமா வர்றதே இல்லையே? மனைவிக்கு பிரசவம்ன்னு ஒரு மாசம் லீவு வாங்கி இருந்தாரே?'' எனத் தகவல் தந்தாள்.

மைதிலிக்கு இந்த விஷயம் அதிர்ச்சியாக இருந்தாலும் முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் வெளிக்காட்டாமல், ''என்னது? ஒரு மாசமா லீவா? சரி... அவருடைய போன் நம்பர் இருந்தால் வாங்கிக் கொடுங்க.''

''சரி மேடம்'' ஒப்புதல் தந்த கவிதா, ''இன்றைக்கு மதியம் நம்ம ஜி.எம்.வந்துடுறதா உங்களிடம் சொல்லச்



சொன்னார். அவருக்கு அடுத்த வாரம் ரிடையர்மென்ட் பார்ட்டி ஏற்பாடு பண்ணனும் இல்லையா மேடம்?'' என நினைவூட்டினாள்.

''ஆங்... அதைப் பற்றி மறந்தே போயிட்டேன் பாரு கவிதா. வழக்கம் போல எல்லார்கிட்டேயும் பணம் வாங்கி நல்லதா ஒரு கிஃப்ட் வாங்கிடுங்க. இதோ என்னோட பங்கு...'' என்றுவிட்டு தன் கைப்பையிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுத்தாள்.

சாஃப்ட்வேர் ப்ரோக்ராம் மாற்றம் செய்திருப்பதை எப்படிக் கண்டுபிடிப்பது என்று சிறிது நேரம் குழம்பினாள். பிறகு அந்தக் கம்பெனிக்கு போன் செய்து 'ப்ரோக்ராம் மெயின்டனன்ஸ்' தொடர்பான பிரச்சனை பற்றி பேச இரண்டு பேரை உடனே அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டாள்.

வந்திருந்தவர்களிடம் ப்ரோக்ராம் பற்றிய தன்னுடைய சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொண்டவள், ''நீங்க சொல்றபடி பார்த்தால் இந்த ப்ரோக்ராமில் மாற்றம் செய்தால் தவிர தப்பு நடக்க வாய்ப்பே இல்லைன்னு தானே சொல்ல வர்றீங்க? இந்த ப்ரோக்ராமே தப்பா இருந்தால்...?'' என்று கடைசி கேள்வியை முன்வைத்தாள்.

''நோ சான்ஸ் மேடம். இதற்கான மெயின்டனன்ஸ் மட்டுமில்லை... ப்ரோக்ராம் டெவலப் பண்ணதே எங்க கம்பெனி என்பதால் தான் இத்தனை நம்பிக்கையோட சொல்றேன். ''வந்திருந்த இருவரும் உறுதியுடன் கூற,

''எக்ஸ்க்யூஸ் மீ சார். நான் தப்பு நடந்திருக்க வாய்ப்பு இருக்கான்னுதான் பார்த்துட்டு இருக்கேனே தவிர குற்றம் சொல்லலை...'' என்றுவிட்டு பிரச்சனையை விளக்கினாள்.

மற்ற இருவரும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்க மைதிலி, ''சோ... உங்க ப்ரோக்ராமில் ஏதாவது மாற்றம் செய்திருக்கலாமா... அப்படி செய்திருந்தால் யார் காரணம்? இந்த விவரம் சொல்ல முடியுமா?'' என்று கோரிக்கை வைத்தாள்.

''ம்ஹ்ம்ம்... ஸ்டில் அன்-பிலீவபில். நம்ம முடியலைன்னாலும் நடக்குதுன்னு சொல்றீங்களே?! இந்த விஷயம் ரொம்பவே முக்கியம்ங்கறதால் இதை சீக்கிரமாவே சரி பார்த்துடறோம்...''

''கீப் திஸ் ஏஸ் கான்ஃபிடன்ஷியல்....'' என்று சந்திப்பை முடித்துக் கொண்டாள்.

மதியம் பொது மேலாளர் மோகனசுந்தரத்தைச் சந்தித்த மைதிலி, ''ஹொவ் ஆர் யூ ஃபீலிங் நவ் சார்?'' என்று உடல்நல குறைவு என்று விடுப்பு எடுத்தவரை நலம் விசாரித்தாள்.

''ஐ அம் ஆல்ரைட் மைதிலி. ரிடையர் ஆகிறவயசு இல்லையா? அதான் ரத்த அழுத்தமும் இலவசமா உடம்பில் சேர்ந்துக்குது.'' சின்னதாக முறுவல் பூத்தபடி தன் கண்ணாடியை சரி செய்து கொண்டார்.

'இவரிருக்கும் உடல்நிலையில் வங்கியில் நடக்கும் திருட்டு பற்றி சொல்லலாமா? வேண்டாமா?' என்று மனதிற்குள் ஒற்றையா இரட்டையா பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் அதைப் பற்றி தெரிந்தப் பிறகு அதை மறைப்பதும் குற்றம் தானே? மேலதிகாரியிடம் சொல்லித் தானே ஆக வேண்டும்?

''நானே உங்களை வந்து பார்க்கணும்னு நினைச்சுட்டு இருந்தேன். சொல்லுங்க என்ன விஷயம்...?''



'ஒரு வேளை இவரும் நான் பேச வந்த விஷயத்தைப் பற்றித் தான் ஆலோசிக்க வந்திருப்பாரோ? அதற்காகக் கூட ரத்த அழுத்தம் வந்திருக்கலாம்....' அவளது மனதில் ஓடிய எண்ண ஓட்டம்.

''என்னம்மா ஏதோ சொல்ல வந்துட்டு எதுவுமே பேசாமல் இருக்கீங்க?'' வியப்புடன் வினவினார்.

''இல்லை சார். நீங்க சொல்லுவீங்கன்னு நினைச்சேன்...''

''ம்... நம்ம பேங்க் சவுத் ரீஜினல் மீட்டிங் ஹைதராபாத்தில் இன்னமும் ரெண்டு நாளில் நடக்க இருக்கு. இப்போ இருக்கிற ஹெல்த் கண்டிஷனுக்கு என்னால் பயணம் செய்ய முடியாது. நீங்க போயிட்டு வர முடியுமா?''

'இருக்கும் பிரச்சனையில் இவள் சென்னையிலிருந்து நகர்வது முடியாதே...' தவிப்புடன், ''இல்லை சார். என்னாலேயும் இப்போ பர்சனல் விஷயங்கள் காரணமா ஹைதராபாத் வரைக்கும் போக முடியாது. இன்னமும் ரெண்டு நாளில் அலையன்ஸ் ஃபிக்ஸ் பண்ணு மாதிரி இருக்கலாம்.'' வாய்க்கு வந்த காரணத்தைச் சொன்னாள்.

அடிமனதில் ராகவனை அன்றே நேரில் சென்று சந்தித்து ஆதியிலிருந்து அந்தம் வரை நடந்த குளறுபடிக்கு எல்லாம் சேர்த்து வைத்து மன்னிப்பு கோர வேண்டும் என்ற எண்ணமிருந்தது. அதற்கு இந்த ஒருவார ஹைதராபாத் பயணம் ஒத்து வராது என்பதால் தவிர்க்க முடியாத காரணத்தைச் சொன்னாள்.

''ஓ! கங்க்ராட்ஸ் மா. காட் ப்ளஸ் யூ.'' என்று வாழ்த்திய மோகனசுந்தரம், ''நான் எக்மோர் பிரான்ச்சில் பேசி

யாரையாவது அனுப்ப முடியுமான்னு கேட்டுப் பார்க்கிறேன்.'' மாற்று வழி இருப்பதாகக் கோடிட்டுக் காட்டினார்.

'உயரதிகாரி என்ற முறையில் இவரிடம் கலந்தாலோ சிக்காமல் இருக்க முடியாது' என்ற எண்ணத்தில், ''சார்.... இன்னொரு முக்கியமான விஷயம்...'' என்று தொடங்கி முழு மூச்சுடன் விஷயத்தைப் பகிர்ந்தாள்.

மைதிலி சொன்ன விஷயத்தால் ஏற்பட்ட அதிர்ச்சி அவரது முகத்தை வெளிற செய்து வியர்த்து வழிய வைத்தது. தன் கைக்குட்டையால் ஒற்றி எடுத்தபடியே, ''நி....ஜ...மா... வா சொல்றீங்க?'' நம்ப முடியாமல் வினவினார்.

மோகனசுந்தரத்திடம் விழைந்த மாற்றத்தைப் பார்த்து அதிர்ந்தவள், 'அடடா... ரத்த அழுத்தம் எதுவும் பிரச்சனையாகி விட்டதோ?' என்று கவலைக் கொண்டாள்.

அதற்கேற்றார் போல் அவரும் தன் பையிலிருந்து ஒரு மாத்திரையை எடுத்து விழுங்கினார்.

மைதிலி பதற்றத்துடன், ''சார்! டென்ஷன் ஆகாதீங்க... ப்ளீஸ், சீக்கிரமே கல்ப்ரிட் யாருன்னு கண்டுபிடிச்சிடலாம்.'' என்று தைரியம் சொன்னாள்.

''என்னம்மா? இன்னும் இருக்கிற ஒரு வாரம் சர்வீசில் இது பெரிய தலைவலியா இருக்கும் போல? யாரைன்னு சந்தேகப்பட முடியும்னு நீங்க நினைக்கிறீங்க?'' என்று ஆதங்கப்பட்டார்.

''இல்லை சார். நம்ம யாரையும் சந்தேகத்தின் பேரில் குற்றம் சுமத்தப் போறதில்லை. வலுவான ஆதாரங்களோட தான் குற்றவாளியைக் கண்டுபிடிக்கணும்.



பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்னு சொல்வாங்க. ஆனால் இங்கே பலநாள் திருட்டு இப்போ தான் அகப்படுது. கூடிய சீக்கிரமே திருடனையும் கண்டுபிடிச்சுடலாம்.'' என்று ஆழ்ந்த குரலில் உறுதியாகச் சொன்னாள்.

ஆனால் அந்தப் பேச்சிலும் துணிவு வராதவராக, ''அப்படி என்னம்மா ஆதாரம் கிடைக்கப் போகுது. செய்திருக்கிற வேலையைப் பார்த்தால் கில்லாடியா இருப்பான் போல இருக்கு...'' அவநம்பிக்கையுடன் பேச்சை இழுத்தார்.

''இல்லை சார்! நம்பிக்கை வைங்க...'' ஊக்கம் அளித்த மைதிலி, தான் இதுவரை சேகரித்து வைத்த விவரங்கள் அனைத்தையும் அவருடன் பகிர்ந்தாள்.

பிட்டிங் கோப்பில் தொடங்கி பதிவு செய்யப்பட வீடியோ, ப்யூன் நீண்ட விடுப்பு எடுத்திருப்பது, சாஃப்ட்வேர் பற்றிய மீட்டிங்கில் நடந்த பேச்சுவார்த்தை என்று ஒன்று விடாமல் கேட்டவருக்கு வானமும், பூமியும் தலைகீழாய் இருப்பது போல் பிரமை தட்டியது.

தலையைப் பிடித்துக் கொண்ட மோகனசுந்தரம், ''போதும் மைதிலி! இத்தனையும் கேட்டு தலை சுத்துது. இதை யார்கிட்டேயாவது டிஸ்கஸ் செய்தீங்களா?'' என்றார்.

''ஏற்கனவே ஃபைல் காணாமல் போன விஷயத்தில் நீங்க அப்செட் ஆனதால் இப்போ அந்த மாதிரி பண்ணலை. அதோட இந்த விஷயத்தை எவ்வளவுக்கு எவ்வளவு ரகசியமா செய்றோமோ, அவ்வளவுக்கவ்வளவு நமக்கு நல்லது. திருடன் சுதாரிச்சுட்டால் கஷ்டம் பாருங்க... அதான்.''

''ஓ!'' என்றவருக்கு, மைதிலி, ''சாரி சார்! நீங்க இந்த விஷயத்தில் ரொம்ப ஷாக் ஆகிட்டீங்க போல. டோன்ட்

வொர்ரி சார். சீக்கிரமே சால்வ் பண்ணிடலாம்.'' எனத் தோழமையுடன் தெம்பு தந்தாள்.

மோகனசுந்தரத்திற்கு தெம்பு கிடைத்ததோ இல் லையோ, மைதிலிக்கு அவரிடம் பேசிவிட்டு வந்ததி லிருந்து பெருமளவு மன பாரம் குறைந்தது.

ஒரு பிரச்சனையைத் தள்ளியிருந்து பார்க்கும் போது பூதாகரமாய் தோன்றுவது, அதையே அக்குவேறு ஆணிவேராய் ஆராய்ந்து பார்க்கும் போது தீர்வு காண்பது எளிது என்ற நம்பிக்கைப் பிறக்கிறது.

வங்கியில் ஏற்பட்ட பிரச்சனையைத் தீர்க்க முனைப் பாய் இறங்கி உடனே தீர்வு காண துடிப்பவளுக்கு தன் தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்படும் விரிசலை மட்டும் உடனே சரி செய்யாமல் ஆற போடுவது ஏனென்று தெரியவில்லை.

'ஆறின கஞ்சி பழங்கஞ்சி' என்பது மாதிரி முதல் சந் திப்பிலேயே ராகவனுடனான பிணக்கத்திற்குப் பிள்ளை யார் சுழி போட்டது சாட்சாத் இவளே தான் என்பது புது சிக்கலில் மறந்துவிட்டது போல!?!

பெண் பார்க்க வந்த போது எல்லா குற்றத்தையும் அவன் மேல் போட்டுவிட்டு தப்பித்துக் கொள்ள நினைக்கிறாளா?

ராகவனின் சந்திப்பிற்குப் பிறகு 'I am responsible for what I say. I am not responsible for what you understand'| என்ற வாசகம் நினைவில் வர தன்னையும், தன்னை அப்படி கடுமையாகப் பேச வைத்த சூழ்நிலையையும் எண்ணி நொந்து கொண்டாள் மைதிலி.



அவள் அப்படி பேசியதை ஒரே மாதிரி தான் புரிந்துக் கொள்ள முடியுமா? இல்லை.... எப்படி பார்த்தாலுமே அதை யாராலுமே சரியாகப் புரிந்துக் கொள்ள முடி யாதோ? அப்படி என்ன கோபம் அவளுக்கு?

அந்தக் கோபத்திலும் ராகவன் அமைதியாக தானே இருந்தான்? பேச்சை ஆரம்பித்தது அவள்!

பேச ஆரம்பித்த பொழுதும் ஏன் அவள் சூழ்நிலையை அவனுக்கு விளக்கிச் சொல்ல முற்படவில்லை? அப் புறம் அவன் தன்னைப் புரிந்துக் கொள்ளவில்லை என்று வருத்தப்படுவதில் என்ன பயன்?

அப்படி முகத்தில் அறைந்தது போல் பேசினால், ராகவன் அதை ஏற்று வெளிநடப்பு செய்யாமல் வேறு என்ன செய்வான்?

அவளது மனசாட்சி மேலும் குறுகுறுக்க, ராகவனை நேரில் பார்த்து பேசி... பேச்செல்லாம் மன்னிப்பு கேட்ட தற்கு பிறகு தான்... மற்ற எந்த வேலையாக இருந்தாலும் என்று செல்லமாகத் தன்னைத்தானே அதட்டிக் கொண்டு அவனை தொடர்பு கொள்ள முயன்றாள்.

முதல் மணியிலேயே அழைப்பு எடுக்கப்பட்டுவிட சுற்றி வளைக்காமல் மைதிலி, ''ராகவன்! உங்களை நேரில் மீட் பண்ணனும். இன்றைக்கு உங்களுக்கு டைம் இருக்குமா?'' என்றாள் தயக்கத்துடன்.

மறுமுனையில் அவன் கேட்டதற்குப் பதிலாய், ''எதுக்கா? கண்ணாமூச்சி விளையாடத்தான். நான் ஒளிஞ்சுக் கிறேன். நீங்க தான் போலீஸ் ஆச்சே.... கண்டுபிடிங்க...'' என்று கேலி பேசிவிட்டு நகைத்தாள்.

மைதிலிக்கே தன் பேச்சை எண்ணி ஒரே ஆச்சரியம் தான்! பின்னே..? ஒத்து வராது என்று வாதம் செய்தவள் இப்பொழுது அவனை அழைத்து கேலி பேசினால் ஆச்சரியம் தோன்றாமல் இருந்தால் தானே ஆச்சரியம்!!

"சரி.....சரி! இதுக்கே டென்ஷன் ஆனால் எப்படி?" என்று கேட்டுவிட்டு, "இந்த நாள் உங்க வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு நாளா அமையப் போகுது. அதுக் காகத் தான் நம்ம மீட் பண்ணனும் சார்." என்றாள்.

"ஓகே ராகவ்! நான் ஆபீசுக்கு வந்து உங்க ட்யூட்டி டைமில் தொந்தரவு பண்ணலை. நீங்களே எங்கே மீட் பண்ணலாம்னு சொல்லுங்க." அவனிடமே சந்திக்கும் இடத்தை தேர்ந்தெடுக்கச் சொன்னாள்.

கடிகாரத்தில் நேரம் பார்த்தவள், "நான் இன்றைக்கு ஒருமணி நேரம் பெர்மிஷன் போட்டுட்டு வீட்டுக்குக் கிளம்பிடுவேன். சோ...ஆறுமணி... சரியா தான் இருக்கும் ராகவ்." என்று தொடர்பைத் துண்டித்தாள்.

ராகவனும், மைதிலியும் ஆறுமணிக்கு மைதிலியின் வீட்டில் சந்தித்து மனம் விட்டு பேச முடிவெடுத்தனர்.

ஆனால்-

மனிதன் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்கும் என்பதற்கேற்ப மைதிலி வங்கியிலிருந்து கிளம்பி வீட்டிற்குச் செல்லும் வழியில் கடத்தப்பட்டாள்.

* * *

செங்கல்பட்டு செல்லும் வழியில், சற்றே உள்ளே தள்ளியிருந்த தன் பண்ணை வீட்டில், தொலைக்காட்சி ஓடிக் கொண்டிருக்க, அதில் கவனம் செலுத்த முடியாமல்,.. அன்று மாலையிலிருந்து நடந்ததை அசைப் போட்டுக் கொண்டிருந்தார் மோகனசுந்தரம்.



சற்று தள்ளி ஒரு சோபாவில், கால் கைகளில் கட்டுக்களுடன் மைதிலி மயக்கத்திலிருக்க, அவளிடம் லேசான அசைவு தெரிந்ததும், "முருகேசா! அந்த மயக்க மருந்தை அவள் மூக்கில் வைச்சு அழுத்து." என்று ஆணையிட்டார் தனது காரோட்டியிடம்.

மைதிலியைப் பார்க்கப் பார்க்க, அன்று காலையில் அவருக்கு இருந்த ரத்த அழுத்தம் இப்பொழுதும் திரும்ப அதே போன்று திரும்பியது.

என்னென்ன வேலையெல்லாம் செய்திருக்காள் இந்த மைதிலி? என்னிடமே வேலையைப் பழகிக் கொண்டு எனக்கே குழிப் பறிக்கிறாளா?

அன்று பிட்டிங் ஃபைலைக் காணோம் என்று அவள் போலீஸிடம் தெரிவித்த போதே சுதாரித்திருக்க வேண் டுமோ? ம்ம்ம்.... என்னுடைய இத்தனை வருஷ உழைப் பையும் வீணாக்கப் பார்த்தாளே?

பத்து வருடத்திருக்கு முன்பு ஆரம்பித்த பழக்கம், தூரத்து சொந்தம் என்று ஒருவன் அறிமுகமானான், கணினி துறையில் நல்ல அறிவாளி. ஆனால் குறுக்கு வழியில் சுலபமாகப் பணம் சம்பாதிப்பதில் ஈடுபாடு உடையவன்.

மென் பொருளை வைத்துக் கொண்டு உலகில் என் னென்னெல்லாம் செய்யலாம், செய்கிறார்கள் என்று அவன் சொல்லச் சொல்ல... பேராசை எனும் பேய் இருவரையும் பிடித்துக் கொண்டது.

பேராசை பெரும் நஷ்டம் என்று ஏனோ அப்பொழுது இருவருக்குமே நினைவில் வரவில்லை!

அவனுடைய மூலதனமாக அறிவையும், நேரத்தையும் போட, மோகனசுந்தரத்தின் மூலதனமாக ஒரு மென்பொருள் நிறுவனத்தை அவனுடைய பெயரில் ஆரம்பித்தனர் இருவரும். இந்தக் கூட்டணி பற்றி யாரிடமும் மறந்தும் கூட மூச்சு விட்டதில்லை.

அப்பொழுதே மோகனசுந்தரம் வங்கியில் நல்ல பதவி வகித்து வந்தார். அவர் வேலை பார்த்த வங்கிக்கு அவர்களின் மென்பொருள் நிறுவனத்தையே உபயோகித்து, மற்றவரின் சிறு துளி பெரு வெள்ளமென பணத்தைக் கொள்ளை அடிக்க ஆரம்பித்தனர்.

இந்த காரணத்திற்காகவே ஒவ்வொரு முறையும் வங்கியின் மென்பொருள் பாதுகாப்புப் பற்றிய ஏலம் வரும் போதெல்லாம் மற்றவர்களை விட குறைந்த மதிப்புள்ள கொட்டேஷனை தயாரித்து வருவதும் வாடிக்கையாய் இருந்தது.

இந்த முறை மைதிலியின் கணினியில் பிட்டிங் தொடர்பான விவரங்களை எடுக்கச் சென்றால், சுந்தரத்தின் போதாத வேளை... அது ஏற்கனவே க்ராஷ் (crash) ஆகியிருந்தது.

சரி.... அந்த கோப்பிலிருந்து விவரங்களைக் குறித்துக் கொள்ள எண்ணி அதற்கான முயற்சியில் இறங்கினால்.... அதுவும் இந்த அமைதிலியால் பாழ் ஆனது.

மைதிலி ஏன் இத்தனை புத்திசாலியாக இருந்துத் தொலைக்கிறாள்? முன்பிருந்த துணை பொது மேலாளர் என்றால் அவருடைய ஆமை வேக செயல்பாடுகளால்



இவருடைய திருட்டிற்கு எந்தப் பிரச்சனையும் இருந்திருக்காது....!

குடும்பம், மனைவி என்று வேறு பிக்கல் பிடுங்கல் இல்லாதிருந்த மோகனசுந்தரம், தன்னுடைய பணி ஓய்விற்குப் பிறகு வெளிநாட்டிற்குப் பறந்து விடலாமென்ற திட்டத்தில் இருந்தார்.

இப்பொழுதே யாரும் ஒன்றும் கண்டுபிடிக்கவில்லை.... இனி தன்னுடைய ஓய்விற்குப் பிறகு தான் கண்டுபிடிக்கப் போகிறார்களா என்ற எண்ணம்!

அப்படியே கண்டுபிடித்தாலுமே, அவர் வெளிநாட்டில் வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருப்பார்! ஒருவனாலும் ஒன்றும் செய்ய இயலாது!

இந்தளவு திண்ணக்கத்துடன் இருக்கும் பொழுது தான் இந்த மைதிலி வந்து எல்லாவற்றையும் தலைக்கீழ் ஆக்கிவிட்டாள்!


பெரும் பயத்துடனும் குழப்பத்தோடும் இருக்கும் பொழுது அவரின் சொந்தக்காரனின் ஆலோசனைப்படி, மைதிலியின் வண்டியைப் பஞ்சர் ஆக்கி, அவள் மாலை கிளம்பும் நேரத்திலேயே மோகனசுந்தரமும் கிளம்பி, அவளை வீட்டில் இறக்கி விடுவதாக பேர் செய்து தன்னுடைய காரிலேயே அவளை ஏற்றி, நடுவில் ஒரு ஹோட்டலில் உணவருந்த அழைத்து வைத்து, அங்கே முதலிலேயே வந்திருந்த தன்னுடைய பார்ட்னரின் துணையுடன் மைதிலியைப் பண்ணை வீட்டிற்கு கடத்தி வந்து... ஹப்பா... தன்னை எத்தனை வேலை செய்ய வைத்திருக்கிறாள் இவள்!

ஏதோ அவன் சொன்னான் என்று கடத்தி வந்தாகி விட்டது! ஆனால்... இவளை இப்பொழுது என்ன செய்வது? அவன் சொல்வது போன்று எங்கேயாவது அனுப்புவதா?

பணத்திலேயே புழங்குபவர்க்கு தனக்கு உரிமையில் லாத பணத்தைக் கொள்ளை அடிப்பது தவறாக தெரியவில்லை... ஆனால் வேறு ஏதாவது என்றால்....?

தன் மீது இது வரை சந்தேகம் வர சாத்தியமில்லை. நாளை வங்கிக்கு எப்பொழுதும் போன்று சென்று.... எல்லோர் மாதிரியும் 'ஓ...மைதிலி எங்கே? வீட்டிற்குப் போகவில்லையா?' என்று முகத்தைக் குழப்பமாக வைத்துக் கொண்டால் போதுமென்று கற்பனையில் ஆழ்ந்தவற்குத் தெரியவில்லை வல்லவனுக்கு வல்லவ னும் உலகத்தில் உண்டு என்று!

மைதிலி யாரிடமும் சொல்லவில்லை என்ற மிதப்பில் இருந்தவர், இதைப் பற்றி யாருக்கும் தெரியாது என்று தைரியத்தில் இருந்துவிட்டார். அவளுக்கு வரப்போகிற கணவன், சைபர் கிரைம் டிவிஷனில் ஐ.பீ.எஸ் ஆபீசர் என்று கனவிலும் கூட நினைக்கவில்லை!



# 19

அன்று மாலை விளக்கு வைக்கும் வேளையில் தயக்கத்துடன் தன் வீட்டு அழைப்பு மணியை அழுத்திய



ராகவனைப் பார்த்த வளர்மதிக்கு ஆச்சரியமே மேலோங் கியது.

இரண்டு நாட்களுக்கு முன்பு அத்தனை கோபமாகப் போனானே? மைதிலியும் எதையோ பறிக்கொடுத்தது போலல்லவா இருக்கிறாள். என்ன நடந்ததோ தெரியவில்லையே?

இப்போதைய இவர்களின் பிணக்கு நான்கு வருடத் திற்கு முந்தையதை விட மோசமாக ஆகிவிடுமோ என்ற பயத்துடன் இருந்தவர் ராகவன் நேரிலியே வந்தால் ஆச்சரியப்படாமல் என்னச் செய்வார்?

''வாங்க... உள்ளே வாங்க தம்பி!'' என்றவருக்கு மேற்கொண்டு அவனிடம் என்னப் பேசுவது, எதைப் பேசுவது என்ற தயக்கம் எழுந்தது.

இப்போது எதற்கு வந்திருக்கிறான்? என்னச் சொல்லப் போகிறான்? மைதிலி வேறு இன்றுசீக்கிரம் வருவதாகச் சொல்லியிருக்கிறாளே? இருவருக்கும் பேச்சு தடித்து விட்டால் என்னச் செய்வது?

''வாங்க... உட்காருங்க தம்பி. இருங்க! காபி எடுத் துட்டு வந்துடறேன்.'' என்றுவிட்டு உள்ளே விரைந்தவரை,

''இருக்கட்டும் ஆ...அத்தை! மைதிலி வந்ததும் சேர்ந்துக் குடிச்சுக்கிறேன்.'' என்றச் சொல் 'சடன் பிரேக்' போட்டது போல் நிற்கச் செய்தது.

ராகவனின் ஒற்றைச் சொல், அவனது சம்மதத்தை வளர்மதிக்கு தெள்ளத் தெளிவாக தெரிவிக்க, பளபளத் தக் கண்களும் புன்னகையில் விரிந்த இதழ்களுமாக அவரது மகிழ்ச்சியைக் காட்டியவர், ''ரொம்பச் சந் தோஷம் மாப்பிள்ளை! மைதிலியும் அவங்க அப்பாவும்

வந்தவுடன் இனிப்பே செய்து சாப்பிடலாம். இப்போ காபி எடுத்துட்டு வரேன்.'' என்று போனார்.

''வீட்டில் அம்மா, அப்பா எல்லோரும் நல்லா இருக்காங்களா தம்பி?'' என்ற நலன் விசாரணையுடன் காபியை அவன் கையில் கொடுத்த வளர்மதிக்கு, ராகவனுடன் பேசுவதில் இப்பொழுது எந்தத் தயக்கமுமில்லை. ஆனால் சொல்ல நினைப்பதை எப்படிச் சொல்வது என்ற யோசனை மட்டுமே.

மைதிலி வருவதாகச் சொன்ன நேரத்தை விட சற்று முன்னதாகவே வந்த ராகவனுக்கு, வளர்மதி ஏதோ சொல்ல நினைப்பதும், பின்னர் பொதுவாக வேறு பேசுவதுமாக இருப்பது விளங்க,

அவரது எல்லா நலன் விசாரிப்புக்கும் பதில் அளித்தப் பின், ''எங்க வீட்டு டிரைவரிலிருந்து பால்காரர் வரை எல்லோரும் நல்லா இருக்காங்க. ஆனால், நீங்க என்னிடம் வேற ஏதோ சொல்ல நினைக்கிற மாதிரி இருக்கு அத்தை. தயங்காமல் சும்மாச் சொல்லுங்க. நான் ஒன்றும் தப்பா நினைச்சுக்க மாட்டேன்,'' என்று உறுதி அளித்து, ஊக்கியவன்.

''அதுக்கு முன்னாடி நான் உங்களிடம் மன்னிப்பு கேட்டுக்கிறேன் அத்தை. அன்றைக்கு..... சொல்லாமல் கொள்ளாமல் நான் அப்படி உடனே கிளம்பிப் போனது ரொம்ப தப்புதான். என்னை மன்னிச்சுடுங்க அத்தை. மைதிலியிடமும் மன்னிப்பு கேட்கத்தான் வந்தேன்.'' என்று உணர்ந்துக் கூறினான்.

தன்னுடைய கையையே சில நொடிகள் பார்த்துக் கொண்டிருந்த வளர்மதி, ஒரு ஆழ்ந்த மூச்செடுத்துக் கொண்டு, வருவது வரட்டுமென்று பேசத் தொடங்கினார்.



ராகவனைத் தீர்க்கமாகப் பார்த்து, ''அது உங்க ரெண்டு பேருக்குமான விஷயம். நீங்களே பேசிக்கோங்க. உங்களுக்கும் மைதிலிக்கும் நடுவில் என்ன நடந்ததுன்னு முழுசா எனக்கு தெரியாது ராகவன். இப்பவும் சரி, நாலு வருஷத்திற்கு முன்னாடியும் சரி அவள் ஒன்றும் என்னிடம் விவரமா சொன்னதில்லை. முன்னாடியாவது உங்களைப் பார்த்துட்டு வந்து, இது ஒத்துவரும் போல் தோன்றலைம்மா-ன்னு சொன்னவள், இந்தத் தடவை அதுவுமே சொல்லலை.'' என்ற முஸ்தீப்புடன் பேச்சை ஆரம்பித்தார்.

ராகவன் சங்கடத்துடன், ''அத்தை... இப்ப எதுக்கு...?'' என்று ஆரம்பிக்க,

''இல்லை மாப்பிள்ளை,. நான் சொல்லி முடிச்சுடறேன்,'' என்று தொடர்ந்தவர்,

''நான் உங்களிடம் என்ன நடந்துன்னு கேட்க வரலை. இப்ப, அது எனக்கு தேவையும் இல்லை. நீங்க ரெண்டு பேருமே இப்ப ரெண்டும் கெட்டான் வயசில் இருக்கவங்க இல்லை. ஆனால் நாலு வருஷத்திற்கு முன்னாடி அப்படி என்னால விட முடியலை.'' என்றவர் சிறிது நேரம் அமைதியானார்.

பின்னர் ஒரு பெரு மூச்சுடன், ''அப்போ மைதிலி என்னிடம் உங்களுக்குள்ள எல்லாம் எப்படி முடிஞ்சதுன்னு விவரமா சொல்லலையே தவிர, எப்படி ஆரம்பிச்சதுன்னு சொல்லியிருக்காள். முதலிலேயே எனக்கு அது சாதாரணமான நட்பு இல்லை. அது வேறே எங்கேயோ போகப் போகுதுன்னு தெரிஞ்சு இருந்தால்... தடுக்க

முயன்றிருப்பேன். என்னால் முடிஞ்சிருந்தால்...! ஆனால் இந்தக் காலத்து குழந்தைங்க எங்கே பெரியவங்க சொல்றதைக் கேட்கிறாங்க? தினமும் என்னென்னமோ கேள்வி படறோம். அது மாதிரி நம்ம குழந்தைகளுக்கும் நடந்துடக் கூடாது என்ற பயத்தில் நாம ஏதாவது சொன்னால் அதை அலட்சியப்படுத்தத்தான் பார்க்கிறாங்க. இல்லாட்டி, 'நீங்க எல்லாம் ஓல்ட் ஜெனரேஷன்' என்று கிண்டல் தான் செய்வாங்க.'' என்றவர்.

''ஆனால் என் பெண் நான் சொன்னதை அலட்சியப் படுத்தலை. என்ன நினைச்சாளோ? நானும் தான் அப்போ என்ன நினைச்சேனோ? நான் சொன்ன மாதிரியே இன்னொரு பெண்ணை மைதிலியாய் உங்களிடம் அறிமுகப்படுத்தி இருக்காள்.'' என்ற வளர்மதி, திடுக்கிட்டு விழித்த மாதிரி சட்டென்று நிமிர்ந்த ராகவனைப் பார்த்தார்.

''நீங்களே சொல்லுங்க மாப்பிள்ளை! நீங்களே சைபர் க்ரைம் டிவிஷனில் போலீஸ் ஆபீசரா இருக்கீங்க. தினமும் எத்தனை விதமான கேஸ் பார்க்க வேண்டியதிருக்கும். எத்தனை விதமானக் குற்றங்களையும் குற்றவாளிகளையும் பார்த்திருப்பீங்க? ஊரு பேரு தெரியாதவங்களைத் தன் பெண் போய் பார்க்க போறதா சொன்னால்.... ஒரு தாயாய் நான் என்ன செய்திருக்கலாம் என்று நினைக்கிறீங்க? அந்த நேரத்தில், ஒன்று அவளைப் போக விடாமல் தடுத்திருக்கலாம்; இல்லை எப்படியோ போன்னு விட்டிருக்கலாம். எப்படியோ போன்னு என்னால விட முடியலை. போகவே கூடாதுன்னு சொன்னால்.... இன்றைய வாழ்க்கை முறையில் நம்மை மீறிட்டு செய்யறதுதான் அதிகமா இருக்கும்.



அதனால, எனக்கு அப்போதைக்கு தோன்றியதைச் சொன்னேன். அதை இப்ப தப்புன்னு நினைக்கிறீங்களா ராகவன்?''

மன்றாடும் குரலில் கேட்டவரின் முகத்தில் வேதனையும், அவன் என்ன சொல்வானோ என்ற பயமும் இருந்தது.

வளர்மதி அப்படி மகளிடம் சொல்லி அனுப்பிய பொழுது, ராகவன் முகமற்ற மனிதன். அறிமுகமில்லாதவன். இப்பொழுதோ, சமூகத்தில் மற்றவர் மதிக்கத் தக்கவர்; பெரியவர் சிறியவர் எல்லோரின் மரியாதைக்கும் உரியவர்; நல்ல பதவியில் இருப்பவர். அதுவுமில்லாமல் தனக்கு மருமகனாய் ஆகப் போகிறவர். அவரின் எண்ணம் வளர்மதிக்கு முக்கியமே அல்லவா?

ராகவன் என்னச் சொல்வான் பாவம்?

இது நாள் வரை மைதிலி செய்த வேலை மட்டுமே அவனுக்குத் தெரியும். அது அவளாகச் செய்தாளா, இல்லை வேறு யாரும் சொல்லி செய்தாளா என்று தெரியாது.

இப்பொழுது யோசித்து பார்க்கும் பொழுது, யார் சொல்லிச் செய்திருப்பினும் அவள் மேல் கோபம் வந்திருப்பது என்னவோ மாறப் போவது இல்லையென்றே தோன்றியது அவனுக்கு. ஆனால், வளர்மதியின் பேரிலோ, அவர் செய்யச் சொன்னதின் பேரிலோ கடுகளவு கோபம் கூட அவனுக்கு நிச்சயம் இல்லை.

அவன் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்து வந்து, வளர்மதி அமர்ந்திருந்த சோபாவில் தானும்

அமர்ந்து, அவர் வலது கரத்தை எடுத்து தன் இரு கரங்களுக்குள்ளும் வைத்து அழுத்தியவன்,

''இல்லை அத்தை. உங்க மேலே எந்தத் தப்புமில்லை. தப்பே இல்லாத போது, கோபம் எங்கேயிருந்து வரும்? எனக்கோ மைதிலிக்கோ உங்க மேலே எந்தக் கோபமு மில்லை. நீங்கச் சொன்னது போல, எங்க ரெண்டு பேருக் குமே அப்போ உலக அனுபவம் குறைவு. அதுனால வந்த பிரச்சனை தானே எல்லாம் தவிர, நீங்க சொன்னது இல்லை அத்தை. ப்ளீஸ், நீங்க நிம் னால எதுவுமே இல்லை அத்தை. ப்ளீஸ், நீங்க நிம் மதியா இருங்க.'' என்றான் ஆறுதலாக.

''அதுவும் போக உங்களுக்கு வேற ஒரு முக்கியமான வேலை இருக்கு.''

மனதிலிருந்த பாரம் பெரிதும் விலகியதும், முகம் பளிச்சென்று புன்னகையைப் பூசிக் கொள்ள, வளர்மதி, ''அது என்ன? முக்கியமான வேலை?'' என்றார்.

''எங்கக் கல்யாண வேலை இருக்கு இல்ல? அதைச் செய்யாமல் வேண்டாததை எல்லாம் நினைச்சுட்டு இருப்பீங்களா என்ன?'' என்று சிரித்த ராகவனுடன் இணைந்து சிரித்தவர், அப்பொழுதுதான் மணி பார்க்க, அது ஏழைத் தாண்டியிருந்தது.

வெளியே இருட்டு பரவியிருக்க வளர்மதிக்கு மனதில் லேசான கவலைச் சூழ்ந்தது. என்னது. இந்தப் பெண்ணை இன்னமும் காணவில்லையே?

வளர்மதி, ''நாம பேசிட்டு இருந்ததில் நேரம் போனதே தெரியலை! மைதிலி இன்றைக்கு சீக்கிரம் வந்துட றேன்னு சொல்லியிருந்தாளே... இன்னமும் அவளைக் காணலையே தம்பி?'' என்று ராகவனைக் கலவரத்துடன் ஏறிட்டார்.



அப்பொழுது அதையே நினைத்துக் கொண்டிருந்த ராகவனும், எதையோ சொல்ல வாயெடுத்துவிட்டு, வளர்மதியை எண்ணி வாளாதிருந்தான்.

''என்னையும் வீட்டுக்கு வேற வர சொல்லியிருந் தாளே, எங்கே போயிருக்க போறா? திடீர்னு ஏதாவது முக்கியமான வேலை வந்திருக்கும் அத்தை. இருங்க! போன் செய்து பார்க்கலாம்,'' என மைதிலியின் செல் லிற்கு அழைத்தான்.

அழைப்பு முடியும் வரை போய்க் கொண்டிருந்ததே தவிர, அது எடுக்கப்படவில்லை. மீண்டும் மீண்டும் அழைக்க, ரிங் போய்க் கொண்டே இருக்க, ராகவனின் நெற்றியில் யோசனை முடிச்சுக்கள் விழுந்தன.

''என்ன ராகவன்? எடுக்கலையா? என்னாச்சோ தெரி யலையே? எப்பவும் வர்றேன்னு சொன்ன நேரத்துக்கு கரெக்டா வந்துடுவாளே? எங்கேயாவது போயிருப் பாளோ? நம்மக்கிட்ட சொல்லிட்டு போக மாட்டாளா ஒரு பொண்ணு?'' பயத்தை எரிச்சலாகக் காட்டிய வளர்மதி வாசலில் ஒரு கண்ணும், ராகவன் கையிலிருந்த செல்லில் ஒரு கண்ணுமாக இருந்தார்.

தன் மனதில் எழுந்த பயத்தை அவரிடமிருந்து மறைத்த ராகவன், ''வந்துடுவாள் அத்தை. போனில் சார்ஜ் இல்லாமல் இருந்திருக்கும்.'' என்று பொருத்தமாக சாக்கு சொன்னவனுக்கு சார்ஜ் போயிருந்தால் எடுத்தவுடனே மெசேஜிற்கு போகுமென்று தெரியுமே!

''நான் அவள் ஆபீஸ் வரை போய் பார்த்துட்டு வந் துடறேன் அத்தை. இது தான் என்னுடைய செல் நம்பர். குறிச்சுக்கோங்க. அவள் வந்துட்டால் உடனே எனக்கு

கூப்பிட்டு சொல்லுங்க. ஒண்ணும் பயப்படற மாதிரி இருக்காது.'' ஆறுதலாகக் கூறியவன் வளர்மதியின் செல்லிற்கு மிஸ்ட் கால் கொடுத்துவிட்டு அவசரமாக கிளம்பினான்.

ஆனால் மைதிலியின் வங்கிக்கு சென்றவனைப் பூட்டியிருந்த இரும்பு கேட்டும், வாசலிலிருந்த செக்யூ ரிட்டியும் தான் வரவேற்றார்கள்.

தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, காவலாளி யிடம் விவரம் கேட்டதற்கு, ராகவனுக்கு ஒரு சல் யுட்டை வைத்துவிட்டு, ''தெரியலையே சார்! நான் நைட் டியூட்டி தான் சார். பகலில் இருந்தவங்களிடம் கேளுங்க சார்!'' என்று தன்னுடைய கம்பெனிக்கு தொடர்புபடுத்திக் கொடுத்தான்.

பகலில் இருந்தவரின் போன் எண்ணைத் தேடிப் பிடித்து கேட்டதற்கும் சரியான பதில் வரவில்லை.

''இன்றைக்கு மைதிலி மேடம் எப்போதையும் விட சீக்கிரமே கிளம்பிட்டாங்களே சார். எப்பவும் அவங்க வண்டியில் போவாங்க. ஆனால் இன்றைக்கு காரில் போனாங்க. அது மட்டும்தான் சார் பார்த்தேன். கார், கலர் எல்லாம் நோட் செய்யலையே சார்!'' என்று பயத்துடனே தான் சொன்னான்.

''இல்லை சார்... கால் டாக்ஸி இல்லை. கார் தான்.'' என்றவனிடமிருந்த வேறு உருப்படியான தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

இப்போதைக்கு வேறு எந்த வழியும் தெரியாமல் அடைத்துக் கொள்ள, முதலில் ஏற்பட்ட பயம் இப் பொழுது அவனுக்கு பல மடங்காக அதிகரித்திருந்தது.



காரில் போனாளா? யாருடைய வண்டி? தெரிந்த வர்கள் வண்டியா இல்லை தெரியாதவர்கள் வண்டியா? போகும் வழியில் காருக்கு ஏதும் விபத்து...? கட வுளே!

மைதிலியின் வீட்டிற்கு திரும்பப் போகும்போதே, போலீஸ் கண்ட்ரோல் ரூமிற்கு அழைத்து, சென்னை ஆயிரம் விளக்கு பகுதியிலிருந்து சைதாப்பேட்டை வரை கார் விபத்து ஏதும் நடந்திருக்கிறதா என்று கேட்டறிந்தான்.

நெற்றியைத் தேய்த்து விட்டுக் கொண்டு, ''பைக் ஆக்சிடெண்ட் தானா? சென்னையில் வேற எங்காவது? அப்படி ஏதும் இல்லையா? தாங்க் காட்! ரொம்ப தேங்க்ஸ்!'' என்றவன் வளர்மதிக்கு என்ன பதில் சொல்வதென்று தவித்தான்.

அன்பழகனும் அந்த நேரத்திற்கு வீட்டிற்கு திரும்பி யிருக்க, இருவரிடமும், ''மைதிலி எங்கேயோ பத்திரமா தான் இருக்காள்... இருப்பாள் மாமா. நான் இங்கே வரும் போதே எங்க டிபார்ட்மெண்டில் எல்லா விரமும் கேட் டிருக்கேன். அவங்க விவரம் சொன்னப் பிறகு நமக்கும் அவள் எங்கேயிருக்காள்ன்னு தேட வசதியா இருக்கும். இப்போதைக்கு பயப்படாமல் இருங்க.'' என்றவன்,

''உங்க ரெண்டு பேருக்கும் மற்ற ஏதாவது விவரம் தெரிந்தாலும் சொல்லுங்க. சின்ன விஷயமா இருந் தாலும் பரவாயில்லை. கொஞ்சம் நினைவு படுத்திச் சொல்லுங்க.'' என்றான்.

மனைவியின் கையை ஆறுதலாகப் பிடித்திருந்த அன்பழகன், ''வளர்! மைதிலிக்கு டைரி எழுதற பழக்கம் இருக்கு இல்ல? எல்லாத்தையும் மாப்பிள்ளையிடம்

கொண்டு வந்து கொடு. அதிலிருந்து ஏதாவது அவருக்கு உபயோகமா இருக்கான்னு பார்க்கலாம்.'' என்றார்.

"வெரி குட் மாமா! அதைக் கொண்டு வாங்க அத்தை! பார்க்கலாம்.'' என்ற ராகவனுக்கு பயத்துடன் இப்பொழுது சிறிது நம்பிக்கையும் பிறந்தது.

# 20

மைதிலியின் டைரிகளை அவள் அலமாரியில் இருந்து எடுத்துக் கொடுத்துவிட்டு அவளது தோழிகள் வீட்டிற்கு எங்கேனும் சென்றிருக்கிறாளா என்று விசாரிக்கச் சென்றுவிட்டார் வளர்மதி.

தங்க நிறத்திலிருந்த குறிப்பேடு ராகவனின் கவனத்தை ஈர்க்க, அதை முதலில் திறந்து பார்த்தவனுக்கு அது அவன் ஐ.பீ.எஸ் தேர்வு எழுதிய வருடத்திற்குரிய டைரி என்பது கூடுதல் சுவாரஸ்யத்தை ஏற்படுத்தியது.

மிகுந்த கவனத்துடன் அதைத் திறக்க எம்.எம் என்று முதல் பக்கத்தில் எழுதியிருந்த எழுத்துக்கள் அவனை வரவேற்றன. அதன் மீது பல தடவை எழுதி பார்த்திருப்பாள் என்பது அதைப் பார்க்கும் பொழுது நன்றாகவே தெரிந்தது.

டைரியின் எந்த பக்கத்தில் குறிப்பு எழுதியிருக்கிறாள் என்று துரிதமாக அதை விசிறி போல் புரட்டியவனின்



காலடியில் சில செய்தி பிரசுரங்கள் அடங்கிய காகிதங்கள் வந்து விழுந்தன.

அவற்றை எடுத்துப் பார்த்தபோது ராகவன் ஐ.பீ.எஸ். தேர்ச்சி பெற்றிருந்த வருடத்தில் 'தமிழகத்தில் இருந்து தேர்ச்சி பெற்ற சிவில் சர்வீஸ் வெற்றியாளர்கள்' என்ற செய்தி வெளியாகியிருந்த பேப்பர் கட்டிங்க்ஸ். அனைத்து பத்திரிகைகளிலும் அதைப் பற்றி வெளியாகியிருந்தவற்றை எடுத்து வைத்தது மட்டுமில்லாது அதில் அவனது பெயரை ஹை-லைட் செய்தும் வைத்திருந்தாள்.

ராகவனே கூட மெனக்கட்டு தன் பெயர் அடங்கியிருக்கும் குறிப்பு இத்தனையையும் சேர்த்து வைத்திருப்பானா என்பது சந்தேகம் தான்!

நெஞ்சத்தில் மைதிலியை இன்னமும் காணவில்லை என்ற பாரம் இப்பொழுது இன்னமும் அதிகமாய் அவனை அழுத்தியது.

அதே வருட டைரியில் ஆங்காங்கே ஒற்றை வரியில் 'டுடே இஸ் யுவர் எக்ஸாம்-டூ வெல்', ஹாப்பி பர்த்டே', மிஸ் யூ ஆன் திஸ் ஸ்பெஷல் டே', 'கடவுளே! நல்ல படியா ரிசல்ட் வரணும்', 'ஆல் தி பெஸ்ட் ஃபார் யுவர் இன்டர்வ்யூ' என்று அவள் கைப்பட எழுதி வைத்திருந்தாள்.

ஒரு வேளை ராகவனிடமே நேரில் பேசுவதாக நினைத்துக் கொண்டு எழுதி வைத்திருந்தாளோ என்னவோ?

ராகவனும் மைதிலி பற்றிய செய்திக் குறிப்பை தன் பர்சில் பத்திரப்படுத்தி வைத்திருந்தான்தான். இல்லை என்று மறுப்பதற்கில்லை. ஆனால் மைதிலியுடைய

தேர்வைப் பற்றியோ, அவளது போட்டித் தேர்விற்கான முடிவு வந்த தினத்தையோ கவனத்தில் கொண்டதில்லை!

இந்த அளவிற்கு மைதிலி ஒவ்வொன்றையும் குறித்து வைத்திருக்கிறாள் என்றால் அவன் மீது அவள் எத்தனை ஆழமான நேசம் கொண்டிருப்பாள்!

ராகவனுக்கு அவன் சமீப காலமாக மைதிலியிடம் காட்டிய பாராமுகத்தையும், குத்தல் பேச்சையும் நினைக்க நினைக்க மூச்சு முட்டும் போலிருந்தது.

ஐ லவ் யூ மைதிலி!

மனதிற்குள் இத்தனை அன்பை வைத்திருந்தும் ஏன் மைதிலி நாம் இருவருமே எதிரெதிர் துருவங்களாய் நின்றுக் கொண்டு வேதனைப்படுகிறோம்?

இன்று போனில் பேசும் போது கண்ணாமூச்சி விளையாட அழைப்பதாக நீ எந்த வாய் முகூர்த்தத்தில் சொன்னியோ... கண்ணில் படாமலேயே அலைக்கழிக்கிறாய். எனக்கு நீ வாழ்நாள் முழுக்க வேண்டும் மைதிலி!

எங்கே போனாய்? செல்போனும் எடுக்கலை; வீட்டிற்கும் போன் செய்யலை; வங்கியிலும் இல்லை; பிரண்ட்ஸ் வீட்டிலும் கேட்டாச்சு. வேற ஏதாவது பிரச்சனை என்றாலும் இரவு பத்து மணி வரை எந்த தகவலும் தராமல் இருக்க மாட்டியே?

ஏதோ அசம்பாவிதம் என்பது புலப்பட, கடத்தலாக இருக்குமோ என ராகவன் கலவரமடைந்தான். ஆனால் எங்கிருந்தாலும் உன்னைத் தேடி கண்டுபிடிக்காமல் ஓய மாட்டேன் என்ற உறுதியுடன் தேடுதல் வேட்டையைத் தொடர்ந்தான்.



மனதிற்குள் பிரவாகமெடுத்த எண்ண ஊற்றை தற்காலிகமாக நிறுத்தி வைத்தவன், மீதியிருந்த டைரிகளை புரட்டினான். இடைப்பட்ட மற்ற மூன்று வருடங்களில் ராகவனைக் குறித்து எதையும் குறிப்பிட்டு வைத்திருக்கவில்லை என்றாலும் நடப்பு ஆண்டில் இருவரும் சந்தித்த தினங்களிலும், போன் செய்திருந்த தினங்களிலும் ஸ்மைலிகளை வரைந்து வைத்திருந்தாள்.

நடப்பு மாதத்தில் ஒரு நாளில் மட்டும் நுணுக்கி நுணுக்கி எதையோ மைதிலி குறித்து வைத்திருக்க, அதை ராகவன் உற்று நோக்கும் போது, ஏதோ கணக்கு போடப்பட்டு அதன் அருகில் ஒன்றன் பின் ஒன்றாக குறிப்பு வார்த்தைகளாய் பட்டியலிடப்பட்டிருந்தது.

அந்நேரத்தில் கவலை தோய்ந்த முகத்துடன் அங்கே வந்த வளர்மதி, ''எல்லா பிரண்ட்ஸ்கிட்டேயும் கேட்டேன்பா. ஆனால் மைதிலி பற்றி தான் எந்த தகவலும் தெரியலை,'' என்று தொண்டை அடைக்க தெரிவித்தார்.

''கவலை வேண்டாம் அத்தை!'' என்று முதலில் தைரியம் சொன்ன ராகவன், ''இந்த மாசம் பத்தாம் தேதி மைதிலியைப் பார்க்க யாராவது வந்திருந்தாங்களா?'' என்று விசாரித்தான்.

''பத்தாம் தேதி.... என்ன கிழமை?'' என்று அந்த அறையில் மாட்டி வைக்கப்பட்டிருந்த மாதாந்திர காலண்டரை பார்த்தவர்,

ஞாயிற்றுக் கிழமையா? அன்றைக்கு எங்கேயும் வெளியே போகலையே?!'' என்றவர் சிறிது யோசனைக்குப் பின், ''ஆனால்... அன்றைக்குப் படம் பார்த்துட்டு இருக்கும் போது திடீர்னு ஏதோ ஞாபகம் வந்த மாதிரி

எழுந்து வந்தாள். நானும் பின்னாடியே வந்தப்போ அவ ளுடைய பேங்க் பாஸ் புக். சேலரி ஸ்லிப் எல்லாத் தையும் வைச்சு ஏதோ கணக்கு போட்டுட்டு இருந்தாள் ராகவன். அதுக்கு அப்புறம் நான் வேலை இருந்ததுன்னு போயிட்டேன்.''

'சேலரி ஸ்லிப்' என்றதும் மைதிலியுடன் நடந்த உரையாடல் அவன் நினைவிற்கு வர, இப்பொழுது அந்தக் குறிப்பிலிருந்த கணக்கைக் கூர்ந்து பார்த்தவ னுக்கு ஏதோ விளங்குவது போல் தோன்றியது.

பட்டியலிட்டிருந்த குறிப்புகளில் 'பிட்டிங் ஃபைல் மிஸ்ஸிங்' என்பதிலிருந்து இரண்டு அம்புக் குறி இட்டு வீடியோ, சாஃப்ட்வேர் என்று எழுதி வைத்திருந்த அத்தனையுமே இப்பொழுது துல்லியமாக ராகவனுக்குப் புரிந்தது.

அப்பொழுது ராகவனின் அலைபேசிக்கு அழைப்பு வர அதை எடுத்தவன், ''ம்! சொல்லுங்க சேகர்! செல்போனை ட்ராக் செய்தீங்களா? தேனாம்பேட் பக்கத்திலா லொகேட் பண்ணி இருக்கீங்க? ம். சீக்கிரமே அங்கே இருக்கிற போலீஸ் பூத்தை காண்டாக்ட் செய்து அலெர்ட் பண்ணுங்க.'' என மறுமுனையில் கூறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் துரிதமாக உத்தரவுகளைப் பிறப்பித்தான்.

''அப்புறம், இப்போ ரீசண்டா என்ன கால்ஸ் வந் திருக்குன்னு செக் பண்ண சொன்னேனே? நம்பர்ஸ் கிடைச்சதா சேகர்?'' என்று விசாரித்த ராகவன் தன் னுடைய பையிலிருந்த பாக்கெட் டைரியில் மறுமுனை யில் சேகர் சொன்ன தொடர்பு எண்களை குறித்து கொண் டான்.



அழைப்பைத் துண்டிப்பதற்கு முன், ''ம்.... எல்லா செக் போஸ்டையும் அலெர்ட் பண்ணிட்டீங்களா? குட்....'' என்றுவிட்டு, ''ஏதாவது தகவல் கிடைத்தால் மறுபடியும் என்னைக் கூப்பிடுங்க.'' என முடித்தான்.

அருகிலிருந்து ராகவனின் பரபரப்பையும், விசா ரணையையும் பார்த்துக் கொண்டிருந்த வளர்மதியின் கண்களில் முன்னைவிட கலவரம் கூடியிருந்தது.

இதுவரையில் கிடைக்கப் பெற்றிருந்த துப்புகளையும், குறிப்புகளையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புப்படுத்தி கண்களை மூடி யோசித்த ராகவனுக்கு ஒரு சிறு துரும்பு ஆதாரமாக கிடைத்திருப்பது போன்று தோன்றியது.

வளர்மதிக்கு வார்த்தைகளால் தைரியம் கொடுப்பதை விட, தன் செயல்கள் மூலம் நம்பிக்கையைத் தருவதே சால சிறந்தது என்று அந்தக் கணத்தில் முடிவெடுத்து ராகவன் ஆதாரத்தை விளக்கினான்.

உறுதியான குரலில், ''மைதிலி கட்டாயம் யாராவது தெரிஞ்சவங்க கூட தான் அத்தை இருக்கணும். அவங் களாலதான் அத்தை இந்த வேலையைச் செய்திருக்க முடியும். தேனாம்பேட்டையில்தான் மைதிலியோட செல்லை லொகேட் செய்திருக்காங்களாம். அவளோட செல்லுக்கு அங்கே தான் கடைசியா கால் வந்திருக்கு. ஒண்ணு அந்த செல் இருந்த இடம் மைதிலி கடத்தப்பட்ட இடமாவோ இல்லை அதுக்கு ரொம்ப பக்கமாவோ இருக்க வாய்ப்பு ஜாஸ்தியா இருக்கு. அப்படி பார்க்கும் போது இவ்வளவு பிசியான இடத்தில் இந்த மாதிரி ஒரு சம்பவம் ஸ்மூத்தா நடக்கணும்னா யாராவது தெரிஞ்ச வங்களா இருக்க நிறைய சான்ஸ் இருக்கு. அப்படி இல்லாட்டி இந்நேரம் பப்ளிக் யாராவது போலீசுக்கு

இன்ஃபார்ம் செய்திருப்பாங்க. அதோட அவங்க பேங்க் செக்யூரிட்டி அவளா காரில் ஏறினதா வேற சொல்றான். சோ அவளைக் கடத்தி இருக்காங்க, அதுவும் அது அவளுக்கு தெரிஞ்சவங்க என்ற கண்ணோட்டத்திலேயே நாம முதலில் பார்க்கலாம்.'' என்றான்.

ராகவன் சொல்லச் சொல்ல, 'கூட இருந்தவர்களே செய்த சதியா?' என்ற இப்பொழுதைய சூழ்நிலை வயிற்றில் புளியை கறைத்தது வளர்மதிக்கு.

''அதோட அத்தை... மைதிலியோட செயல்பாடுகள் பற்றி விசாரிச்சால் யாரா இருக்கும்னு க்ளூ கிடைக்க நிறையவே வாய்ப்புகள் இருக்கு. அதோட கடைசியா மைதிலியைத் தொடர்பு செய்த நம்பருக்கும் விசாரிக்கலாம்னு இருக்கேன். சீக்கிரமே உங்களுக்கு மைதிலி கிடைச்சுட்டாள் என்ற நல்ல செய்தி சொல்றேன் அத்தை.'' என்றுவிட்டு விடைபெற்றான்.

மைதிலியைத் தொடர்பு கொள்ள முயன்ற இரண்டு எண்களில் ஒன்று அவளுடைய காரியதரிசி கவிதாவினுடையது; மற்றொன்று மென்பொருள் வடிவமைத்த சாஃப்ட்வேர் சம்பெனியில் இருந்து வந்திருந்த அழைப்பு!

கவிதாவை முதலில் அழைத்த ராகவன், அன்றைய நாளில் மைதிலி சந்தித்த நபர்களைப் பற்றியும், பணி நிமித்தமாக அவளது செயல்பாடுகளைப் பற்றியும் ஒவ்வொன்றாக கவனமாகக் கேட்டுக் கொண்டான்.

ப்யூன் மாணிக்கத்தின் தொடர்பு எண், அவனது விலாசம் மற்றும் விடுமுறைக்கான காரணம் என மைதிலி கேட்டிருந்த விவரங்கள் அனைத்தையும் ராகவன் கவிதாவிடமே கேட்டுப் பெற்றுக் கொண்டான்.



அடுத்ததாக கம்பெனியிலிருந்து மைதிலியை தொடர்பு கொண்டிருந்த எண்ணை அழைத்து பேசிய ராகவனுக்கு முதலில் எந்த பயனுள்ள தகவலும் கிடைக்கவில்லை.

காவல்துறை அதிகாரி என்று தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு கேஸ் சம்பந்தமாக விசாரிப்பதாக சொல்லியும் கூட, ''சார்! ப்ளீஸ் அண்டர்ஸ்டேன்ட்! ரொம்ப கான்ஃபிடன்ஷியல் விஷயமெல்லாம் எல்லார் கிட்டேயும் பேச முடியாது சார். நீங்க ஏ.சி.பி-ன்னு சொல்றீங்க. இன்னமும் கொஞ்ச நேரத்தில் யாராவது கமிஷனர்ன்னு சொன்னால்...?'' என்று ராகவனிடம் நல்லமுறையில் விளக்கம் சொல்லி முடிக்க முயன்றார்.

''அதுக்காக என்ன சார் இப்போ போன் மூலமா என்னுடைய ஐ.டி கார்டையா காண்பிக்க முடியும்?'' குரலில் காட்டத்தை வெளிக்காட்டினான் ராகவன்.

மறுமுனையில் காவல்துறைக்கே உரிய விசாரணை குரலைக் கேட்டு மிரண்டவர், ''ஓ.கே சார். நான் இப்போ ஆபீசிலிருந்து கிளம்பறேன். நம்ம நேரில் மீட் பண்ணினால் பெட்டரா இருக்கும்னு நினைக்கிறேன். எங்கேன்னு சொல்லுங்க. நான் வந்து பார்க்கிறேன்.'' என ஒரு வழியாக இறங்கி வந்தார்.

''தேங்க்ஸ். நான் உங்களை மறுபடியும் தேவைப் பட்டால் கூப்பிடறேன் சார்.'' என்றுவிட்டு வைத்த ராகவனுக்கு நேரில் சந்திப்பதற்கான கால அவகாசம் இப்பொழுது அவனிடத்திலில்லை என்பது நன்றாகவே விளங்கியது.

மேலும் இப்பொழுது தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் மைதிலியை எந்த ஆபத்துமின்றி மீட்பதில்

இருக்கும் வெற்றி வாய்ப்பு குறைந்து கொண்டே வரு கிறது என்பதையும் அவன் உணராமலில்லை.

எனவே, இதுவரையில் நடந்த நிகழ்வுகளையும், விசா ரணையையும் வைத்து சில யூகங்களின் அடிப்படையில் முன்னேறினான்.

முதல் வேலையாக வளர்மதியை அழைத்தவன், ''அத்தை! உங்களுக்கு மைதிலியுடைய பாஸ் மோகன சுந்தரத்துடைய நம்பர் தெரியுமா?''

நம்பிக்கையான குரலில், ''குற்றவாளி அவரா இருக் கலாம் அல்லது அவர்கிட்டே ஏதாவது விசாரிச்சால் உபயோகமா இருக்கும்னு நினைக்கிறேன். இன்றைக்கு மைதிலியுடைய ஆக்டிவிடீஸ் வைச்சு மட்டும் பார்க்கும் போது இன்றைக்கு சந்தித்த நபர்களில் சாப்ட்வேர் ஆளு, கவிதா ரெண்டு பேருமே நம்ம மைதிலியை வேலை விட்டு வந்தும் கூட ஏதோ ஒரு விஷயமா தொடர்பு கொள்ள முயற்சி செய்திருக்காங்க. அவங்களுக்கு மைதிலி காணாமல் போன விஷயம் இதுவரையில் தெரியலை... மீதியிருக்கிறது ஒரே ஒரு ஆள் தான்.''

தொடர்ந்து, ''அதோட அவர் மேலே சந்தேகப்பட இது மட்டும் காரணமில்லை...'' என்று ஆரம்பித்து சில வாரங் களுக்கு முன் தொலைந்து போன 'பிட்டிங்' ஃபைல் பற்றியும், அதைத் தொடர்ந்து நடந்த நிகழ்வுகளையும் சுருக்கமாக விளக்கி, பொது மேலாளரின் எண்ணை பெற்றுக் கொண்டு அழைப்பைத் துண்டித்தான்.

அடுத்ததாக தனக்கு வந்த அழைப்பை எடுத்தவன், ''சேகர்! தேனாம்பேட்டையில் இருந்து பேசறீங்களா? குட்... குட்!''



''செல்போன் மட்டும் இல்லை சார். கூடவே அவங்க கைப்பையும் கிடைச்சது.''

''என்ன? கைப்பையும் இருந்ததா? யாரும் இவ்வளவு நேரம் எடுக்காமலா இருந்திருக்காங்க?''

''இல்லை சார்! ரெஸ்டாரண்ட்டுக்கு ஒரு வயசானவர் கூட அவங்க வந்திருக்காங்க. அப்போ கிளம்பும் போது இதை மிஸ் பண்ணிட்டு போயிட்டாங்கன்னு சர்வர் சொன் னார். ஆனால், அங்கே ஏற்கனவே ஒருத்தர் இருந்ததாக வும் அந்த சர்வர் சொன்னான் சார்!''

ஏற்கனவே அங்கே ஒருத்தனா? கூட்டாளியோ? 'வயசானவர்' என்று சேகர் குறிப்பிட்டது ஒரு வேளை அந்த மோகனசுந்தரத்தைத்தானோ? தனது சந்தேகம் மீண்டும் உறுதிபட, தொடர்ந்து பேசினான்.

''ஓ! அந்த ப்யூன் பற்றி விசாரிக்க சொன்னீங்களா?''

''அதை நம்ம பாலுவை ஃபாலோ பண்ண சொல்லி யிருக்கேன் சார்.'' என்ற சேகரிடம்,

ராகவன், ''ஓகே! அப்போ நீங்க நான் சொல்ற நம்பரை ட்ராக் பண்ணுங்க.'' என சற்றுமுன் வளர்மதியிடமிருந்து பெற்றுக் கொண்ட ஜி.எம் எண்ணை பின்பற்றச் சொல்லி, அடுத்த வேலையைத் தந்தான்.

அடுத்து செய்ய வேண்டிய வேலைகளில் முதன்மை யாக மோகனசுந்தரத்தின் வீட்டிற்குச் சென்று அவரிடம் விசாரிப்பது என்று முடிவு செய்தான்.

அவர் தான் இந்த சம்பவத்தின் பின்னணியில் இருந்து செயல்படுகிறார் எனும் பட்சத்தில் கட்டாயம் அவரது வீட்டில் அன்று தங்க வாய்ப்பில்லை. மைதிலி எங்கே

அடைத்து வைக்கப்பட்டிருக்காளோ அங்கேயே தான் இவரும் காவலுக்காக இருப்பாராய் இருக்கும்.

வெளிச்சத்திற்கு வராமலிருக்கும் இந்தத் திருட்டு இன்னும் ஒரு வாரத்தில்.... அதாவது சுந்தரத்தின் பணிக்காலம் முடிவடையும் வரையில் இந்த குட்டு வெளிவராமலேயே சரிசெய்து விடலாம் என்று திட்டம் போட்டிருக்கான் போல.... ராஸ்கல்!

மைதிலிக்குத் தெரிந்திருக்கிறது என்றதும் அவளைக் கடத்தியிருப்பானோ?

ஆனால், அதற்கு பிறகு அது வெளிச்சத்திற்கு வந்தால் மட்டும் அவரை விட்டுவிடவா போகிறார்கள்? என்ன முட்டாள்தனம்?

பல்வேறு வகையான சிந்தனையுடன் அவரது வீட்டை அடைந்த ராகவனை பூட்டியிருந்த கதவே வரவேற்றது. இத்தகைய தருணத்தைக் கருத்தில் கொண்டு தான் சேகரிடம் அலைபேசி எண்ணை தந்து, அதன் மூலம் சுந்தரத்தின் நடவடிக்கையை கண்காணிக்கும் ஏற்பாட்டை ராகவன் செய்து வைத்திருந்தான்.

அந்த ஏற்பாட்டின் மூலம் செங்கல்பட்டு செல்லும் வழியில் இருக்கும் அவரின் பண்ணைவீட்டு விலாசமொன்று ராகவனுக்குக் கிடைக்கப் பெற, அந்த விலாசத்திற்கே சேகரை நான்கு காவலாளிகளுடன் வருமாறு பணித்தான்.

காவலாளிகள் வருவதற்கு முன் ராகவன் அந்த இடத்தை அடைந்திருந்தான். அவன் சரியான இடத்தைத் தான் அடைந்திருக்கிறான் என்பதற்குச் சான்றாக, வங்கி செக்யூரிட்டி குறிப்பிட்டிருந்த பழைய ஃபியட் கார் வாசல் முன் நின்றிருந்தது.



செக்யூரிட்டி இப்பொழுது தான் வேலையில் சேர்ந்திருக்கிறான் என்பதால் அவனால் பொது மேலாளரின் கார் என்று உறுதியாகச் சொல்ல முடியவில்லை. அப்படி மட்டும் சொல்லியிருந்தால்... இந்நேரம் மைதிலியை மீட்டிருக்கலாம்!

அதன் பிறகு சேகர் தன் குழுவினருடன் வந்து சேர்ந்ததும், மோகனசுந்தரத்தை தப்பவிடாமல் சுற்றி வளைத்துப் பிடித்தான் ராகவன்.

வங்கியிலிருந்து பணத்தை நூதனமாகத் திருட திட்டமிட்ட மோகனசுந்தரம், அந்த தப்பை மறைக்க வழி தெரியாமல் தான் வசமாக மாட்டிக் கொள்வோமோ என்ற பதட்டத்தில் மைதிலியைக் கடத்தி அடுத்த தப்பையும் செய்ய துணிந்து, ராகவனின் கைகளில் பரிதாபமாக சிக்கிக் கொண்டார்.

# 21

தேடலுடனும், பரபரப்புடனும் கண்கள் அலைபாய வந்து நின்ற ராகவனைக் கண்டதும், மற்றவை எல்லாம் மறந்து அனிச்சையாய் ஓடி வந்து தன் மனதை கொள்ளைக் கொண்டவனை இறுகக் கட்டிக் கொண்டாள் மைதிலி.

'பிக்சர் இஸ் வொர்த் தௌசண்ட் வோர்ட்ஸ்' என்பது மாதிரி இங்கே ' ஆக்ஷன் இஸ் வொர்த் தௌசண்ட் எக்ஸ்ப்ளநேஷன்ஸ்' என்றே குறிப்பிடலாம்.

அந்த மாலை பொழுது முழுவதும் மைதிலியைக் காணவில்லை என்ற பதட்டத்தில் இருந்த ராகவனுக்கு, இப்பொழுது அவளை நேரில் கண்டதே ஆனந்தம் என்றால்... அவள் அடைக்கலமாய் தன்னிடம் தஞ்சம் புகுந்தது பேரானந்தமே!!

இதயங்கள் நழுவுது இதுவென்ன மாயம்!

சுகமாய் வலிக்குது இது என்ன காயம்!!

காதல் இங்கே அதிசய உலகம்..

உள்ளங்கையில் பூமிகள் சுழலும்....

தன் மார்பில் கண்ணீர் உகுப்பவளை ஆறுதல்படுத்தும் விதமாய் மிகவும் கனிவாக, "மைத்துமா! மை....த்...தி! குட்டிம்மா! செல்லம்..." என்று வெவ்வேறு விதமாக அழைத்தபடி அவளது முதுகை வருடிக் கொடுத்தான்.

அவனது அழைப்பும், வருடலும் அவளை மேலும் உருக்க, அதன் விளைவாக மேலும் கண்ணீரைச் சொறிந்தாள் மைதிலி.

அவளது நடுக்கம் சிறிது சிறிதாகக் குறையவும், "இன்னமும் ஏன்டா அழறே மௌஸ்? இவன்கிட்டே காச்-மூச்ன்னு திட்டு வாங்கறதுக்கு முன்னாடி முன்னெச்சரிக்கையா அழுதுட்டால் திட்டு கம்மியா விழும்னுப்ளானா?" என அவள் காதோரம் ரகசியமாய் வினவி செல்லமாக குத்துக்களையும், அடிகளையும் காதலியிடமிருந்து இலவசமாக பெற்றுக் கொண்டான்.

அவளது சிவந்த கண்களில் வழிந்த நீரை தன் கைக்குட்டைக் கொண்டு துடைத்தவன், அவளது கண்ணீர் அடங்கியதும், "லவ் மீ..?" என்று காதலுடன் மொழிந்து தன் வலது கரத்தை அவள்புறம் நீட்டினான்.



"லவ் பண்ணி டைம் வேஸ்ட் பண்ணாமல் டைரக்ட்டா மேரேஜ் என்றால் மட்டும்தான் கையைக் கொடுப்பேனாக்கும்!' என்று செல்லமாக மிரட்டினாலும் தன் கரத்தை அவனுடன் இணைக்க எந்தத் தயக்கத்தையும் மைதிலி காட்டவில்லை.

"ஆமாம்... ஆமாம்..! வாயால் சண்டை போட்டதெல்லாம் போதும்பா. கல்யாணம் செய்துட்டு இனி மேல்..." என்று கண்சிமிட்டியவனை தன் ஆள்காட்டி விரல் காட்டி மைதிலி மிரட்ட,

குறும்பாக, "அடிதடி சண்டை தான் அலுக்காமல் இருக்கும்னு சொல்ல வந்தேன். நீ என்ன நினைச்சே?" என சீண்டினான்.

அவனது காதை வலிக்காமல் திருகிய மைதிலி, "நினைப்ஸ் தான் நம்ம பொழப்பை கெடுக்கும்னு நினைச்சேன்!" என்று சற்றுமுன் இருந்த கலக்கமெல்லாம் மறைந்து பதிலுக்குச் சீண்டினாள்.

"மை செல்ல மௌஸ்! அத்தையும், மாமாவும் வீட்டில் நமக்காக காத்திட்டு இருப்பாங்க. நீ கிடைச்சுட்டதா தகவல் மட்டும்தான் மைதிலி சொல்லியிருக்கேன். உன்னைப் பார்க்கிற வரையில் அவங்க கவலையோடதான் இருப்பாங்க. கிளம்பலாமா?" என்றவன் அவளையும் அழைத்துக் கொண்டு காரில் கிளம்பினான்.

"பச்! இந்த மாதிரியெல்லாம் நடக்கும்னு எதிர்பார்க்கவேயில்லை. அதுவும் எங்க ஜி.எம்.மே இந்த வேலையை..." என்று இழுத்த மைதிலி அந்த வாக்கியத்தை முடிக்காமலேயே, "நினைச்சு கூட பார்க்கலை." என்றாள் கவலை தோய்ந்த முகத்துடன்.

கோர்வையில்லாமல் வார்த்தைகள் மைதிலியிடமிருந்து வரும்போதே எத்தகைய மனநிலையில் அவள் இருக்கிறாள் என்பதை ராகவன் தெளிவாக உணர்ந்தான்.

தன் கரத்தைப் பற்றியிருந்த அவளது கரத்தை ஆறுதலாக அழுத்தியவன், ''ஒருவேளை..... அந்த ஃபைல் தொலைஞ்சு போகும்போது நான் சண்டை போடாமல் இருந்திருந்தால்... பச்! இப்போ பொண்ணு பார்க்க வந்த இடத்தில் கூட எல்லாம் ஸ்மூத்தா போயிருந் தால்... நீ என்கூட டிஸ்கஸ் செய்திருப்பே மைத்து. அதனால் இந்த களேபரம் வராமல் தடுத்திருக்கலாம். தெரிஞ்சோ, தெரியாமலோ நானும் இதுக்கெல்லாம் ஒரு காரணமாயிட்டேன் மைதிலி. ஐ அம் ரியலி சாரி.'' என வருந்தினான்.

அவனது பெருந்தன்மையை உணர்ந்தவள், ''நீங்க இந்த விஷயத்தில் எந்த வருத்தமும் படத் தேவையே இல்லை ராகவ்! சொல்லப் போனால், கடத்தி வைச் சிருந்த என்னைக் கண்டுபிடிச்சு எனக்கு சகாயம்தான் செய்திருக்கீங்க. தேங்க்ஸ்! தேங்க்ஸ் ஃபார் எவ்ரிதிங்!!'' என மனப்பூர்வமாக நன்றியுரைத்தாள்.

அன்பில் நெஞ்சம் அள்ளித் தந்தாய்

காயங்கள் எல்லாம் பூக்கள் ஆனது!

நீதானே அன்பே என்றும் எந்தன் ஆகாயம்

நீயின்றி போனால் எந்தன் வாழ்வே பொய்யாகும்!

''யூ ஆர் மைன் மைதிலி. எதுக்கு தேங்க்ஸ் எல்லாம்?''

''உங்களை மாதிரி ஒருத்தர் கிடைக்க நான் உண்மை யிலேயே புண்ணியம் செய்திருக்கணும் ராகவன். ஐ அம் ரியலி கிஃப்டட்.'' மைதிலியின் குரலில் கனிவும், காதலும் போட்டி போட்டன.



காரை ஒரு ஓரத்தில் நிறுத்திய ராகவன் அவள் முகத்தைத் தன் உள்ளங்கைகளில் ஏந்திக் கொண்டு, ''சோ அம் ஐ மைத்தி...'' என்று உருகியபடி அவள் நெற்றிப் பொட்டில் தன் இதழ்களால் பட்டும் படாமலும் ஒற்றி எடுத்தான்.

இரவில் ஒளிர்ந்த நிலவு வெளிச்சமும், இருவருக்கு மான ஏகாந்தமும் மனதை நிறைக்க சில நொடிகள் அங்கே மௌனம் தொடர்ந்தது.

ராகவனின் கலைந்திருந்த கேசத்தை கோதியவாறே மெல்லிய குரலில், ''ஐ லவ் யூடா!'' எனக் கொஞ்சினாள்.

நேரில், முதன்முறையாக மைதிலியிடமிருந்து வந்த அந்த மூன்று வார்த்தைகளும் ராகவனை எல்லையில்லா மகிழ்ச்சியில் ஆழ்த்த, தன்னருகில் இருந்தவளை இறுக கட்டிக் கொண்டான்.

உன்னுடன் வாழும் ஓர் நாள் போதும்

காலங்கள் யாவும் காதல் வாழும்

நீ தந்த அன்பில் வாழ்வேன் இன்றே எப்போதும்..

வாழ்வினில் என்றும் உந்தன் நினைவே சங்கீதம்!!

''ஹப்பா... மூச்சு முட்டுது! விடுங்க.. ப்ளீஸ்.'' என்று கெஞ்சி கொஞ்சியவள் ராகவனின் கவனத்தை மீண்டும் பேச்சின் பக்கம் திருப்பும் பொருட்டு, ''அதென்ன மௌஸ்?'' என வினவினாள்.

''மை-தி-லி!மை-எலி!மை-மௌஸ்!மௌஸ்....'' என்று ஒவ்வொன்றாகச் சொல்ல சொல்ல, மைதிலி என்ற பெயர் மருவி மௌஸ் ஆன காரணம் விளங்கிற்று.

''அய்யே! நீங்களும், உங்க பெயர் காரணமும்... வழியுது துடைச்சுகோங்க!'' என்று அழகு காண்பித்தாள்.

காரை கவனத்துடன் செலுத்தியவன், ''எப்போதும் வண்டியில் தானே போவே மைதிலி? அப்புறம் எப்படி?'' என்று மாலை நடந்த சம்பவத்தைப் பற்றி பேசத் தொடங்கினான்.

''இன்றைக்கு காலையில் வண்டியில்தான் வேலைக்குப் போனேன் ராகவ். ஆனால்... ஈவ்னிங் கிளம்பும் போது டயரில் சுத்தமா காத்தே இல்லை. பஞ்சர் ஆகியிருக்கும் போல... நாளைக்கு அதை சரி பண்ணிக்கலாம்ன்னு ஆட்டோவில் வீட்டுக்கு வர நினைச்சேன். ஆனால் ஜி.எம் என்னை ட்ராப் பண்றதா சொல்லி அழைச்சுட்டு வந்தார்.''

ராகவனுக்கு அந்த நயவஞ்சகனின் குள்ளநரி தனத்தைக் கேட்கவே பிடிக்கவில்லை என்றாலும் பொறுமையாக மைதிலி சொல்வதை கேட்டான்.

''அப்படியே வந்துட்டு இருக்கும் போது தேனாம் பேட்டையில் ஏதோ ரெஸ்டாரண்ட் வாசலில் நிறுத்தி 'இங்கே சாப்பிட்டுட்டு வீட்டுக்கு போகலாம்; வீட்டில் வைஃப் என்னுடைய பிபீ ஜாஸ்தி ஆனதில் இருந்து சாப்பாட்டில் உப்பே போடாமல் படுத்தறாள்' என்று காரணம் சொல்லி என்னையும் கூப்பிட்டு போனார். உங்களை மீட் பண்றது டிலே ஆகிட கூடாதேன்னு டென்ஷன் வேற எனக்கு. ஆனால் அங்கே காபி சாப்பிட்டதுமே



ஏதோ தலையை சுத்தி வாந்தி வர்ற மாதிரி இருந்தது ராகவ்....''

''ராஸ்கல்...! ஏதாவது தெரியாமல் கலந்திருப்பான். அவனுக்கு.... இருக்கு...'' பல்லைக் கடித்தான்.

அவனது நெற்றி நரம்புகள் புடைப்பதைக் கண்டு அடுத்து சொல்வதா வேண்டாமா என தயக்கத்துடன் நிறுத்தினாள்.

மைதிலியின் முகம் வெளிறியிருப்பதைக் கண்டு, ''எப்போதுமே கொஞ்சம் அலெர்ட்டா இருக்கிறது நல்லது மைதிலி, என்றைக்கும் இல்லாத திருநாளா வீட்டில் ட்ராப் பண்றேன்னு சொல்லி ரெஸ்டாரண்டுக்கு அழைச்சுட்டு போறானே.... யோசிக்க வேண்டாமா கண்ணம்மா?'' சிடுசிடுக்காமல் தெளிவுபடுத்தினான்.

''நம்பிக்கைக்கு உரியவங்களை சந்தேகப்பட்டு ஒருமுறை சூடு பட்டதாலே எல்லாரையும் நம்பறேன் போல ராகவன்..?'' என சொல்லியவளின் குரலில் வேதனையும், குற்ற உணர்வும் வெளிப்பட்டது.

முதல் சந்திப்பை மனதில் வைத்து பேசுகிறாள் என்று தெளிவாக புரிய, ''அதுவுமே கேட்பார் பேச்சைக் கேட்டு தான் வந்த சூடு போல இருக்கே? தானா பட்டுகிட்டது கிடையாது போல?'' என வினவி மைதிலியை வியப்பில் ஆழ்த்தினான்.

'உங்களுக்கு யார் சொன்னா...?' என்பது போல் அவளது கண்கள் கொட்டைப் பாக்காய் விரிய, ''உங்க அம்மாகிட்டே ஈவ்னிங் பேசிட்டு இருந்தேன் மைதிலி. நடந்ததையெல்லாம் சொன்னாங்க.'' என்று ஒரு செய்தி போல் எந்த உணர்ச்சியுமின்றி அறிவித்தான்.

''ஓ! ஆனால் நடந்ததுக்கு நான் தான் பொறுப்பேத்துக்கணும் ராகவன். அவங்க மேல் பழியைப் போட்டு என்னை நானே நியாயப்படுத்திக்க விரும்பலை.'' என்று கம்மிய குரலில் இயம்பியவளை ராகவனின் பேச்சு தடை செய்தது.

''அதை நியாயமாகவும் ஏத்துக்க முடியாதே மைதிலி!'' என்று தன் ஸ்தானத்திலிருந்து இறங்கி வர மறுப்பது போல் சொன்னவன்,

''ஆனால்.... நடந்தது நடந்தவையா இருக்கட்டும்; இனி நடப்பது நல்லவையாய் இருக்கட்டும் அப்படின்னு ப்ரொசீட் பண்ண முடிவு செய்துட்டேன். அவங்கவங்க நிலையில் இருந்து பார்க்கும் போது ஒவ்வொரு செயலுக்குப் பின்னாடியும் தக்க நியாயமும், விளக்கமும் ஆயிரம் இருக்கும் மைதிலி...''

''பட் ராகவ்...'' என்றவளை இடை மறித்து, ''முன்னாடி மட்டும் ஏன் அவ்வளவு கோபப்பட்டேன்னு கேட்கப் போறியா? இந்த பக்குவம் வர்றதுக்கு நிறைய ஸ்டேஜஸ் தாண்டியாகணுமே?'' அவனது பேச்சில் தெளிவும், நிதானமும் நிறைந்திருந்தது.

''இல்லை ராகவ். நீங்க என்ன சொன்னாலும் சரி! என்னுடைய செய்கைக்குப் பின்னாடி ஆயிரம் விளக்கம் இல்லைன்னாலும் பரவாயில்லை. அட்லீஸ்ட் ஒரேயொரு விளக்கத்தையாவது சொல்லி உங்களை சமாதானம் செய்ய முயற்சி செய்திருக்கணும். தப்பை சரி செய்யாமல் போனதுதான்... அடுத்தடுத்து பிரச்சனைக்கு பிள்ளையார் சுழி போட்ட மாதிரி ஆகிடுச்சு.''

''நான் தான் என்னுடைய ப்ரொஃபைல், ஈமெயில் என்று எல்லாத்தையுமே இன்-ஆக்டிவ் பண்ணிட்டேனே? அப்புறம் நீ எங்கிருந்து என்னை சமாதானப் படுத்த வழி....?'' கண் சிமிட்டியபடி வினவியவனைப் பார்த்து புன்னகைத்தாள் மைதிலி.



''இப்படி மர்மமா சிரிச்சால் நான் எங்கிருந்து வண்டி ஓட்றது?'' கிறக்கமாய் பேசினான்.

ராகவனின் பேச்சை தொடர்ந்து உற்சாகப்படுத்தாமல், ''நீங்க எப்படி ஜி.எம் தான் இந்த வேலையை செய்திருப்பார்னு முடிவு பண்ணி வந்தீங்க?'' என பேச்சை மாற்றினாள்.

''பேச்சை மாத்தறீங்களாக்கும்...?! ஏற்ற இறக்கத்துடன் கேட்டவன், ''odd man out என்பார்களே...? அந்த கான்செப்ட் தான் இங்கே மைதிலி...'' என்று விசாரணை மற்றும் டைரியில் இருந்த குறிப்புகளின் அடிப்படையில் அவன் மேற்கொண்ட யூகங்களையும், பல வகைகளில் மைதிலியைக் கண்டறிய செய்த முயற்சிகளையும் பகிர்ந்தான்.

''அதில் நீயே பாதி வேலை செய்துட்டே மைதிலி. நீ போட்ட புள்ளியை இணைக்கிறது மட்டும்தான் என் வேலையா இருந்தது. ஃபைலை மாணிக்கம் எடுத்ததா உங்க ஜி.எம் தானே வந்து உன்னிடம் சொன்னாருன்னு சொன்னே? நம்ம சட்டத்துக்கு வேணும்னா ப்ரூவ் ஆகிற வரை எல்லோரும் நிரபராதிகளா இருக்கலாம். ஆனால் போலீஸுக்கு நிரபராதின்னு ப்ரூவ் ஆகிற வரை எல்லோருமே குற்றவாளிகள்தான். அது தான் சந்தேக லிஸ்டில் இவரும் இருந்தார். இங்கே மட்டும் நீ இல்லாமல் இருந்திருந்தால்... ஹப்பா... நினைச்சு பார்க்கவே முடியலை மைத்திம்மா!'' என்றான் தோளைச் சில்லிட்டவன் போன்று குலுக்கி.

''கண்டுபிடிக்க ரொம்ப கஷ்டப்பட்டீங்களா ராகவ்?'' காதல் நிறைந்த கண்களுடன் மைதிலி வினவ,

''உன்னைக் காணாமல் தான் ரொம்ப தவிச்சு போயிட்டேன் மைதிலி. அந்தக் கஷ்டத்துக்கு முன்னாடி எதுவுமே எனக்கு கஷ்டமா தெரியலை....''

''ராகவ்!'' என்று அன்புடன் அழைத்தவள் அவனது இரு கன்னங்களையும் தன் விரல்களால் கிள்ளி, ''உம்மா...'' அழுத்தமாக முத்தம் கொடுத்தாள்.

''இதென்ன மெசெஞ்சர் முத்தம்? அப்படி கூட சொல்ல முடியாது... என்னைக் கிள்ளிட்டு உன் விரலுக்கு நீயே முத்தம் கொடுத்துக்கிறே? இதெல்லாம் தப்பு...'' என சீண்டும் போது அவளுடைய வீட்டை வந்தடைந் திருக்க, அங்கே வளர்மதியும்-அன்பழகனும் வாசலி லேயே காத்திருந்தார்கள்.

மைதிலியைக் கண்டதும் அவளை அணைத்து தன் அன்பை வளர்மதி வெளிப்படுத்த, கலங்கிய கண் களுடன் நின்றிருந்த அன்பழகன் ராகவனின் கரங்களைப் பற்றிக் கொண்டு நன்றி கூறினார்.

''தேங்க்ஸ் எல்லாம் எதுக்கு மாமா? இது என் கடமை இல்லையா?'' என்று இயல்பாய் ராகவன் பேச, அங் கிருந்த கணத்த சூழல் கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்து சகஜநிலை மீண்டது.

பத்து நிமிடம் மைதிலி வீட்டில் அனைவருடனும் பேசிக் கொண்டிருந்த ராகவன், ''ரொம்பவே லேட் ஆகிடுச்சு மாமா. நான் கிளம்பறேன்'' என்றான்.



''கல்யாண தேதி முடிவு பண்ண சீக்கிரமே வீட்டுக்கு வர்றோம் மாப்பிள்ளை!'' என்று நிறைந்த மனதுடன் மைதிலியின் பெற்றோர்கள் அவனுக்கு விடை கொடுத் தனர்.

# 22

ராகவன் - மைதிலி திருமண வைபவம் பந்து மித்ரர்கள் நல்லாசிகளுடனும், வாழ்த்துக்களுடனும் இனிதே நிறைவேற, திருமணத்தை ஒட்டிய அன்றைய சடங்குகளும் முடிந்த அன்று இரவு, ரேகாவின் கை வண்ணத்தில் அழகே வடிவாகத் திகழ்ந்தாள் மைதிலி.

''அச்சோ.... எதுக்கு அத்தை இத்தனை ஹெவியான நகை எல்லாம்?'' அத்தை ஜெயலக்ஷ்மி ராசியான நகை என்று எதையோ எடுத்து மைதிலியின் கழுத்தில் பூட்டியிருக்க, சிணுங்கலாக வெளி வந்தது மைதிலியின் குரல்.

''ஆமாமா... கழட்டப் போறதுக்கு எதுக்குத்தான் இத்தனை அலங்காரமோ? சொன்னால் யாராவது கேட்கிறாங்களா?'' மைதிலியின் தலையில் சூடியிருந் தப் பூவைச் சரி செய்யும் சாக்கில் அவள் செவியருகே குனிந்து ரேகா முணுமுணுக்க, அந்தி வானச் சிவப்பை மைதிலியின் முகம் பூசிக் கொண்டது.

உதட்டை மடித்து முகச் சிவப்பை அடக்கப் பார்த்த வளைக் கண்ணுற்ற ஜெயலக்ஷ்மி, ''என்ன மைதிலி? ரூம் ரொம்ப சூடா இருக்கா என்ன? முகமெல்லாம் சிவப்பா ஆயிடுச்சே? அந்த டேபிள் பேனை இப்படி பக்கத்தில் வைம்மா ரேகா,'' என்று பெரிய மருமகளுக்கு உத்தரவு பிறப்பித்தார்.

''ஷு....ஷப்பா... சூடா தான் இருக்குன்னு சொன்னால் விடப் போறீங்களா?'' மறுபடியும் முணுமுணுத்து மைதிலியிடம் கண்சிமிட்டியவள், மீதி அலங்காரத்தைச் செய்யும் போதே, ''உங்க பழைய ஜி.எம் என்ன ஆனாரு மைதிலி?'' என்று விசாரித்தாள்.

இந்த இனிமையான சூழலைக் கலைக்கும் வண்ணம் அவளுடைய பழைய ஜி.எம் பற்றி பேச மைதிலிக்கு விருப்பமில்லை என்றாலும், விவரங்களைப் புகுந்த வீட்டினருடன் பகிர்வதில் எந்தத் தயக்கமின்றி, ''அவரோட ரிடையர்மென்ட் பணத்தை எல்லாம் சீஸ் செய்துட்டாங்களாம். மோசடி, அப்புறம் கடத்தல் ரெண்டு வழக்கிலும் கைதாகி ஜெயிலில் கம்பி எண்ணிட்டு இருக்கார் அக்கா. ஒய்ட் காலர் கிரைம் செய்துக்கிட்டு இருந்தவர், ப்ளூ காலர் கிரைமும் செய்து மாட்டிக்கிட்டார். பாவம்! பிளஸ் அந்தச் சாஃப்ட்வேர் கம்பெனியும் அவருடையது தான் போல, அதனால தான் எப்பவும் பிட் அவங்களுக்கே போகணும்னு ஒவ்வொரு வருஷமும் என்னத்தையோ சரிக்கட்டியிருக்கார். இந்த வருஷம் அவரோட போறாத காலம் ராகவனோட ரூபத்தில் வந்திருக்கு.'' என்று முழு விவரமும் தந்தாள்.

வேறு ஏதாவது நகை போட்டுக் கொள்கிறாளா என்று விசாரித்த தன் அத்தையைப் பார்த்த ரேகா, ''இன்னமும் கொஞ்ச நேரம் இங்கே நாம மைதிலியைப் பிடிச்சு வைச்சிருந்தால் ராகவனிடம் என்னால பாட்டு வாங்க முடியாது அத்தை...'' என்று சிரித்தாள்.



அப்பொழுதுதான் லேசாக தெரிய ஆரம்பித்திருந்த வயிற்றுடன் மைதிலியைக் கை பற்றி எழுப்பிய ரேகா, ''நீ லேட்டா போனால் ராகவனிடம் திட்டு வாங்கறியோ இல்லையோ, அங்கே பாரு ராஜீவ் எனக்காக வெளிட் செய்துக்கிட்டு இருக்கார்.'' என்ற கேலியுடன், அவளை அங்கேயிருந்து கிளப்பிக் கொண்டுச் சென்றாள்.

பெரிய மருமகளின் கேலி கிண்டல்களைத் தானும் ரசிக்காமல் ரசித்தவாறே,அங்கிருந்த வளர்மதியின் புறம் சிரிப்பை வீசினார் ஜெயலக்ஷ்மி.

தங்கள் ஒரே மகளின் முகத்தில் நிறைந்திருந்த பூரிப்பும் சந்தோஷமும் வளர்மதி - அன்பழகன் தம்பதியரின் மனதையும் நிறைத்து குளிர்வித்திருந்தது.

ராகவனின் அறை வாயிலில் அவளை விட்ட ரேகா, ''நான் சொன்னதை மனசில் வைச்சுக்கோ மைதிலி! ஆல் தி பெஸ்ட், போத் ஆஃப் யூ !'' என்ற கண்சிமிட்டலுடன் விடை பெற்றாள்.

முகத்தில் வெட்கச் சிவப்பும், கரு விழிகளில் நாணமும், கூந்தலில் மல்லிகைச் சரமும் என அழகே பெண் வடிவம் கொண்டு வந்தது போன்று வந்த தன் புத்தம் புது மனைவியைப் பார்த்த ராகவனது நெஞ்சு ஒரு நொடி நின்று, பின்னர் அதிவேகமாகத் துடித்தது.

தொண்டையைச் செருமிக் கொண்டு, ''வா மைதிலி! உனக்காகத்தான் நானும் இந்த என் ரூமும் ரொம்ப வருஷமா காத்திருக்கோம். வாங்க மேடம்! உங்கள் வரவு

நல்வரவாக!'' என்று வரவேற்றவனின் கைகள் அவளின் இடையை ஆவலாக சுற்றி வளைத்தது.

கணவனின் மார்பில் வாகாகச் சாய்ந்துக் கொண் டவள், ''ஏனாம்? எதுக்கு காத்திருக்கணுமாம்? உங்களுக்கு உரிமையான பொருளை எடுத்துக்க யார் உங்களுக்கு தடை விதிக்கப் போறாங்களாம்?'' நிமிர்ந்து அவனைப் பார்த்து கொஞ்சினாள்.

''அப்படியா சொல்றே? அப்போ எடுத்துக்கவா?'' என்று அவள் செவியில் கிசுகிசுத்தவனின் பார்வையில் சிவந்தவள்,

''ம்ம்ம்....''. என்ற போது அவளின் குரல் கிசுகிசுப் பாய் மாற, அதில் மயங்கிய ராகவன், அவனின் முதல் முத்திரையை மனைவியின் இதழ்களில் அழுந்தப் பதித்தான்.

சற்று பின்பு மெல்ல கிறக்கத்துடன் கண் திறந்து பார்த்த மைதிலியிடம், ''ஐ லவ் யூ எம்.எம்!'' என்றவ னின் குரலில் கரை காணாத காதல் இருந்தது.

தன் இணையின் இறுகிய அணைப்பை ரசித்து அனுபவித்தவாறே இருந்தவர்கள் மெல்ல முகத்தை நிமிர்த்தி, நெற்றியோடு நெற்றி வைத்து அழுத்தி ஒருவரைப் பார்த்து ஒருவர் மெதுவாக புன்னகை பூத்துக் கொண்டார்கள்.

உன்னை உன்னை தாண்டி செல்ல

கொஞ்ச காலம் கொஞ்ச தூரம்

கொஞ்ச நேரம் கூட என்னால் ஆகுமோ

உன்னை உன்னை தேடி தானே



இந்த ஏக்கம் இந்த பாதை இந்த

பயணம் இந்த வாழ்க்கை ஆனதோ

அன்பே எந்தன் நெஞ்சம் எங்கே?

பூவின் உள்ளே நிலவின் மேலே

தீயின் கீழே காற்றின் வெளியே இல்லையே...

உந்தன் கண்ணில் உந்தன் மூச்சில்

உந்தன் இரவில் உந்தன் நெஞ்சில்

உந்தன் கையில் உந்தன் உயிரில் உள்ளதே...

''மிஸ் மீ ஸ்வீட் ஹார்ட்?'' மைதிலியின் செவியோரம் விளையாடிய குழல் கற்றைகளை ஊதி விட்டுவிட்டு கணவன் ரகசியமாக கேட்க,

கணவனின் இடுப்பை வளைத்திருந்த மைதிலிக்கு, அது முன்பொரு ஒரு முறை இருவருக்கும் மத்தியில் நடந்த இணையதள பேச்சுவார்த்தையை நினைவூட்ட, ஆமென்றும் இல்லாமல், இல்லையென்றும் இல்லாமல் தலையை எல்லாப்புறமும் ஆட்டி வைத்தாள்.

''ஏதாவது ஒண்ணு சொல்லு டா!'' மனைவியின் மூக்கைப் பிடித்து ஆட்டி செல்லமாக ராகவன் சொல்ல, ''ஐ மிஸ்ட் யு பிஃபோர்! ஆனால் இனியும் மிஸ் செய்ய மாட்டேன்.'' என்றாள் மைதிலி தெளிவாக.

''ஹா ஹா... தேறிட்டே எம்.எம்! சமத்து செல்லம் என் எம்.எம்.!'' என்று கொஞ்சிக் கொண்டான் ராகவன்.

அவனின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, ''அது என்ன எம்.எம்? நானும் உங்களை எத்தனை தடவை

கேட்டிருப்பேன்? இப்ப கூட சொல்ல மாட்டீங்களா ராகவ்?'' என்றாள் சிணுங்கலாக.

மனைவியைக் கைகளில் ஏந்தியவாறே சென்று மஞ்சத்தில் கிடத்தியவன், 'ஹா ஹா! அது தெரியாமலேயா நீ உன் டைரியில் 'எம்.எம்' என்று திரும்ப திரும்ப எழுதி வைச்சிருந்தே? நீ இவ்வளவு பெரிய அறிவாளியா மைத்தி செல்லம்? இது தெரியாமல் போச்சே?'' என்று கேலியாக சொல்லி அவளின் மூக்கோடு தன் மூக்கை வைத்து உரசினான்.

''ம்க்ஹும்! சொல்லாட்டி போங்களேன்! நானும் 'என்.ஆர்' என்றால் என்ன? அதனோட அர்த்தம் என்னனு சொல்ல மாட்டேன்.'' பொய் கோபத்துடன் சிணுங்கியவள் திரும்பிப் படுக்க முயற்சிக்க,

அவளின் தோளில் தன் தாடையை வைத்து அழுத்தி, ''கெட்டது குடிப்போ! இன்றைக்கு நீ கோபிச்சுக்கிட்டால் என் பாடு திண்டாட்டம் ஆகிடும். நான் பாவமில்லை?'' என்று அவள் காதுகளில் ரகசியம் பேசியவனின் ஒற்றை விரல் அவளின் நெற்றியில் தொடங்கி, காது, கன்னம், உதடு என்று மெதுவாக கோலமிட ஆரம்பித்தது.

மீண்டும் தன் ஊர்வலத்தைக் கீழிருந்து மேலாக தொடங்கிய விரலைப் பற்றி லேசாக கடித்தவள், ''ஒன்றும் வேண்டாம். எனக்கு தூக்கம் வருது. குட் நைட்.'' என்று முறுக்கிக் கொண்டு கண்ணை மூடிக் கொண்டாள்.

மூடிய இமைகளுக்குள் முயல் குட்டிகளாய் உருண் டுக் கொண்டிருந்த மைதிலியின் மான் விழிகளின் மீது மிருதுவாக மீது மிருதுவாக முத்தமிட்ட ராகவன்,



அவளைத் தன் புறம் திருப்பி, ''எம்.எம்-ன்னா' மை மைதிலி'ன்னு அர்த்தம். அதிலிருக்கும் இங்கிலீஷ் லெட்டர்ஸ் தான் எம்.எம்! யூ ஆர் மை மைதிலி! இப்ப புரிஞ்சதா எம்.எம்?'' என்றான் உணர்ச்சியுடன்.

ராகவனின் முகத்தைக் கைகளில் ஏந்திய மைதிலி, ''அப்பவே வா ராகவ்?'' எனக் கண்களில் மையலுடன் கேட்டாள்.

''இப்பவும் எப்பவும்!'' என்று அவளை இன்னமும் இறுக்கி அணைத்து கொண்டான்.

''ஐ லவ் யூ ராகவ்! லவ் யூ சோ மச்!அவனின் கன்னத் தோடு தன் கன்னத்தை வைத்து இழைத்தவள், ''நான் தான் எல்லாத்தையும் சொதப்பிட்டேன் இல்ல? எத் தனை இனிமையா கழிந்திருக்க வேண்டிய நாட்கள்.... என்னால் எல்லாம் பாழ்! சாரி டா கண்ணா! என்று கண வனின் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டாள்.

''ஷூ! ஏன் அதைப் பற்றி இப்ப பேசிக்கிட்டு? இப்ப நமக்கு சந்தோஷமான நினைவுகளே இருக்கணும். விடு. மைத்தி. நானே அதை மறந்துட்டேன்.'' அவளின் முதுகை வருடியபடி ஆறுதல் சொன்னவனிடம்,

''ஆனால்.... நமக்கு சந்தோஷமான நினைவுகளே இல்லையே ராகவ்? எல்லாத்தையும்தான் நான் கெடுத்து வைச்சிருந்தேனே! நாம திரும்ப மட்டும் பார்க்காமல் போயிருந்தால்.... கடவுளே! அதை நினைக்கவே எனக்கு குலை நடுங்குது ராகவ்!'' என்றவள், அவனுள்ளே புதைந்து போகிறவள் போல் மேலும் மேலும் அவன் மார்பில் புதைந்தாள்.

அவளின் கலங்கிய குரலை உணர்ந்தவன், அவளின் நெற்றி முடியை அன்போடு விலக்கி, ''அந்த மாதிரி எதுவும் ஆகியிருக்காது மைதிலி. என்னோட கோபம் எல்லாம் போனப் பிறகு உன்னைப் பார்க்க வரலாம் என்று நினைச்சுகிட்டு இருந்தப்பதான் நீயா என் எதிரில் வந்தே. ஐ வாஸ் நாட் கோயிங் டு லெட் யூ கோ! உன்னை என்னால் விட முடியாதுடா கண்ணம்மா!'' என்று அவளைத் தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

''ம்க்ஹ்ம்! நீங்க எதைத் தான் விட்டீங்க ராகவ்?'' செல்லமாக முறுக்கிக் கொண்டவள், ''அப்புறம் ஏன் ராகவ் திரும்ப என்னைப் பார்த்ததும் கோபமா இருந் தீங்க?'' என்று விளக்கம் கோரினாள்.

ஒரு பெருமூச்சை வெளியிட்டு, ''இது தான் கடைசி தடவை இதைப்பற்றி நாம பேசறது, சரியா?'' என்றவன் தொடர்ந்து,

''நீ வேற ஒரு பெண்ணை உன்னை மாதிரி அறிமுகப் படுத்தின கோபம், எனக்கு அப்போ குறைஞ்சு இருந்தது தான். இல்லைன்னு சொல்லலை. ஆனால், திரும்ப உன்னைப் பார்த்த அந்த நொடியில், முன்பு நான் எந் தளவு வேதனை அனுபவிச்சேனோ.... அது அப்படியே திரும்ப ஞாபகம் வந்துடுச்சும்மா... என்னை என்னச் செய்ய சொல்றே? சாரி டா மைத்தி!'' என்றான்.

இதுவரை ஒரு தடவை கூட அவளாக ராகவனிடம் சரியாக மன்னிப்போ, இல்லை.... அந்தச் சந்தர்ப்பத்தில் அவன் எப்படி உணர்ந்தான் என்றோ கேட்டதில்லை என்பது தலையில் அடித்தது போன்று அப்பொழுது உரைக்க, அவனின் கன்னத்தை வருடியவாறே,



''நான் தான் ராகவ் உங்களிடம் சாரி சொல்லணும். நாம திரும்ப பார்த்தப் பிறகு கூட, ஒரு தடவையாவது உங்களிடம் நான் சாரி சொல்லியிருப்பேனா? நான் ரொம்ப மோசம் ராகவ்!'' என்றாள்.

தன் காது கேசத்துடன் விளையாடிக் கொண்டிருக்கும் அவளின் கரத்தை எடுத்து தன் உதட்டில் பொருத்திக் கொண்டு, ''நீ மோசமோ இல்லையோ நான் ரொம்ப மோச மானவனாக்கும் மௌஸ்!'' என்றவன் கண்களை உருட்டிக் கொண்டு அவள் முகத்தருகே குனிந்தப் போது,

அவன் முகத்தைத் தடுத்து, ''வெயிட்டிஸ்! வெயிட் டிஸ் ப்ளீஸ்!'' என்று சிரித்தாள்.

''அதெல்லாம் வருஷக் கணக்கில் வெயிட் செய் தாச்சு! போதும்! முடியலை!'' என்று கண்சிமிட்டினான்.

''என் செல்லக் குட்டி இல்ல? ப்ளீஸ்?'' ராகவனின் தாடையைப் பிடித்துக் கொஞ்சியவள், ''இன்னமும் கொஞ்சமே கொஞ்ச நேரம்தான் ப்ளீஸ்?'' என்றாள்.

''ம்க்ஹ்ம்! 'ப்ளீஸ், கொஞ்ச நேரம், வெயிட்டிஸ்' எல்லாம் ஒரே வாக்கியத்தில் வந்தால் ஒரு மனுஷன் என்னத் தான் செய்வான் பாவம்?''

சிரிப்பை அடக்கியவள், ''இன்னமும் நீங்க, 'அப்போ' எப்படி ஃபீல் செய்தீங்கன்னு சொல்லவே இல்லை.'' என்று கூறியவள் ராகவனின் முறைப்பைப் பார்த்து, ''இது தான் லாஸ்ட் டைம். இந்த ஒரு தடவை பேசிட் டால் அப்புறம் இந்தச் சாப்ட்டர் க்ளோஸ். ப்ராமிஸ்! என் செல்ல ரகுவாம் நீங்க! என் ராகவ் இல்ல? நான் கேட்டால் செய்வீங்க தானே?'' கணவனின் தாடையில் இதழ்ப் பதித்து கொஞ்சினாள்.

''இங்கே ஒண்ணு! இங்கே ஒண்ணு! இங்கே...'' என்று வரிசையாக மாற்றி மாற்றி தன் முகத்தை மனைவியிடம் காட்டிக் கொண்டேயிருக்க,

ஒரு நிலையில், ''இது தான் லாஸ்ட் டைம்.'' என்று சொல்லி ராகவனின் கன்னத்தை நறுக்கென கடித்து வைத்தாள் மைதிலி.

''ஆ ராட்சசி! சொல்லாமல் நீ விட மாட்டே!'' என்ற வனின் முகம் அத்தனை நேரமிருந்த விளையாட்டுத் தனம் போய் அமைதியானது.

''உன் மேலேயோ உன்னை அப்படிச் செய்யச் சொன்ன உங்க அம்மா மேலேயோ எனக்கு இப்போ கொஞ்சம் கூட கோபமில்லை மைத்தி. இதை முதலில் நல்லா புரிஞ்சுக்கோ. ஆனால், அந்தச் சமயத்தில் உன் மேலே எனக்கு ரொம்பவே கோபம். வெறுப்புன்னு கூட சொல்ல லாம். அந்தக் கோபத்தில் தான் என்னுடைய எல்லா ஐ-டியையும் உடனே மாற்றிட்டேன்.''

''நீங்க என்ன நினைச்சு ஆள் மாறாட்டம் செய்தீங் களோ தெரியலை? மைதிலி-ன்னு வேற ஒரு பொண்ணை என் முன்னாடி நிறுத்தினால்.... நீ தான் அவள்ன்னு நினைச்சு நான் அவளுடன் ஏதும் சிரிச்சு, பேசி, பழகி இருந்தால் என் மேலே ஒரு தப்புமிருந்து இருக்காது. அது இயற்கையும் கூட? இல்லையா? எனக்கு நீ எப்படி இருப்பேனே தெரியாது. ஒரு வேளை... மைதிலி-ன்னு நீ அறிமுகப்படுத்தின பெண்ணிடம் எனக்கு காதலே தோன்றியிருந்தால்... அதை நீ நினைச்சு பார்த்தியா? அப்புறம் அப்படி நடந்திருந்தால்... நீ யாரைக் குற்றம் சொல்லியிருப்பே மைதிலி? யாரைக் குற்றம் சொல்ல முடியும் மைதிலி?'' என்றான் மென்மையாக.



ராகவன் பேச பேச, அவனையே வைத்தக் கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு கண்ணில் கண்ணீர் நிறைந்தது.

அப்படி மட்டும் நடந்திருந்தால்....? கடவுளே! கற்பனை செய்துக் கூட பார்க்க முடியவில்லையே!

ராகவனின் கை, அதன் பாட்டிற்கு மைதிலியின் முதுகைத் தடவிய படியே இருக்க, ''அந்தக் காபி ஷாப்பில், நீ யாருன்னு தெரியாமலே உன்னை விட்டு என்னால் கண்ணை அங்கே இங்கே எடுக்க முடியலை மைதிலி. ஜானகின்னு சொன்னப் பெண் மேலே கண் அலைபாய்ந்த என் மேலேயே எனக்கு அத்தனை வெறுப்பு. ஆனால், அது ஜானகி இல்லை மைதிலி தான்னு தெரிஞ்சப்புறம் அந்த வெறுப்பு எல்லாம் உன் மேலே வந்துடுச்சு.'' என்று கூற, அவனின் மார்பில் சாய்ந்து கண்ணீர் பெருக்கியவளை அணைத்துக் கொண் டான்.

''ஐ ஆம் சாரி ராகவ்! சோ சாரி ராகவ்!'' மீண்டும் மீண் டும் சொன்னதையே சொன்னவளின் குரல் கண்ணீரில் மிதந்து தத்தளித்தது.

''ஷ் .....மைதிலி! மைத்தி! இதுக்கு தான் இதைப் பற்றி பேச வேண்டாம்னு சொன்னேன்.'' அவளைச் செல்ல மாகக் கடிந்துக் கொண்டவன், கேலியாக,

''ஆனால்.... அதுக்கு பிறகு நான் பல நாள் **யோசிச்சு** இருக்கேன். அப்படி ஒரு சூப்பர் ஃபிகர் **என்னைத் தேடி** வந்த போது விட்டுட்டு, இப்படி சப்பை **ஃபிகர்**

மைதிலியைப் போய் செலக்ட் செய்து இருக்கியே ராகவான்னு...?'' என்று சிரிக்காமல் சொல்லி முடிப்ப தற்குள் அவனின் முதுகில் பலமான அடி விழுந்தது.

''சப்பை ஃபிகரா? சொல்லுவேடா சொல்லுவே! இரு உன்னை....'' அவன் மீது கிட்டத்தட்ட படர்ந்த மாதிரி யிருந்தவள், ராகவனின் தோள், மார்பு என்று அடிகளாகக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

''ஹா.....ஹா! இதோ பாருடா... உண்மையைச் சொன்னால் அடி விழுது!'' மேலும் மேலும் அடி விழ, அடித்தக் கைகளைப் பிடித்து அவளின் பின் புறமாக சிறை செய்தவன்,

''கொடுத்த ஒவ்வொரு அடிக்கும் உனக்கு தண்டனை காத்துக்கிட்டு இருக்குடி கண்ணம்மா!'' என்று மனை வியை மெல்ல... மெதுவாக தன் புறம் இழுத்தவன், அதற்குரிய தண்டனையை ஒரு நல்லக் கணவனாக அவளுக்கு வஞ்சகமேயில்லாமல் வாரி வழங்கினான்.

அவளிடமிருந்து மெதுவாக விலகியவன், ''என் னையா அடிக்கிறே? உன்னைதான் அடிக்கணும். உன் டைரியில் 'if he is stupid enough to walk away... be smart enough to let him go.' ன்னு நீ தானே எழுதி வைச்சிருந்தே? உன்னை...'' என்று அவளுக்கு குறுகுறுப்பு மூட்ட,

''ஹா ஹா! ஹே! கூசுதுப்பா! ஷ்..... சும்மா இருங்க ராகவ்!'' கட்டிலில் துள்ளியவளை, போனால் போகு தென்று விட்டவன், ''இருந்தாலும், உனக்கு கொழுப்பு தான்!'' என்றான்.



''இங்கே ஒருத்தன் உன்னையே நினைச்சுகிட்டு இருக்க.... இந்தம்மா இதுவும் எழுதுவாங்க. மேட்ரி மோனியலில் விளம்பரமும் கொடுப்பாங்க.'' என்று குறைப்பட்டுக் கொண்டவன்.

''இந்த சதீஷ் வேற நேரம் காலம் தெரியாமல், நம்ம கல்யாண ரிசப்ஷனில்' நான் தாங்க இவனை உங்களை சூஸ் செய்யச் சொன்னதுன்னு' உன்னிடம் நெஞ்சை நிமிர்த்திக்கிறான். நானே அதை மறக்கணும்ன்னு நினைச் சால் கூட விட மாட்டேங்கறாங்க மைத்தி!'' என்றான் உதட்டைப் பிதுக்கி.

அவனின் பிதுங்கின உதட்டை மேலும் இழுத்துப் பிடித்து விளையாடிய படியே, ''என் சமத்து சக்கரைக் கட்டியாம் நீங்க! அதெல்லாம் கோபத்தில், திரும்ப உங்களைப் பார்க்கிறது முன்னாடி எழுதினது, செய்தது. தெரிஞ்சுக்கிட்டே கேட்பீங்களே!'' என்றவள்,

அதற்கும் அசராமல் ராகவன் இருக்கவே, ''நீங்க மட்டும் எந்தப் பொண்ணுனாலும் உங்களுக்கு சரின்னு சொல்லலையா?! அப்புறம் எங்க வீட்டுக்கு வந்த அன்றைக்கு, அப்படியே பல்டி அடிச்சு அத்தையைக் காய்ச்சு எடுக்கலை? அது மாதிரி தான்! அதெல்லாம் எச்சு வைச்சு அழிச்சுடுங்க ராகவ்,'' என்று கண்சிமிட்டி னாள்.

அவள் காதருகில் குனிந்து, ''எச்சு வைச்சு...'' என்று எதையோ ராகவன் சொல்ல, நாணத்தில் சிவந்த முகத் தோடு, ''சீ... நீங்க சமத்தே இல்லை! கேடி!'' என்றாள்.

''வீட்டில் கேடி! வெளியில் போலீஸ்!'' நல்லா இருக்கு இல்ல மைதிலி?''

''நல்லாவே இல்லை. உவ்வே...''

''ஹா ஹா! 'களவும் கற்று மற!' சொல்லியிருக்காங்களே? மறந்துட்டியா?'' என்றான் உல்லாசத்துடன்.

''மறந்துடுவீங்களோ? எங்கே மறங்க பார்ப்போம்?'' என்று கேட்டபடி அவனின் அணைப்பில் இருந்து விலகி, அவனின் இரண்டு கன்னத்தையும் கிள்ளி வம்பிழுத்தாள்.

''ஆங்.... மறக்க மனம் கூடுதில்லையே... மறக்குமா மாமன் நெஞ்சம்... மயக்குதே மைதிலி வர்ணம்! மடியிலேயே ஊஞ்சல் போட மானே வா...'' பாட்டு பாடியபடியும், மனைவியின் இடையில் விரல்களால் தாளம் போட்ட படியும், ஆசையுடன் அவளை நெருங்க,

''திருடா! பாடியே மயக்குறதைப் பாரு!'' ராகவனின் நெஞ்சில் தாடையை வைத்து அழுத்தி கொஞ்சினாள்.

''மயக்குறது நீயா நானா? என்.ஆர் என்றால் என்னன்னு நீ இன்னமும் சொல்லவே இல்லை.''

''என்னைச் சொன்னீங்க? இப்ப நீங்க ரொம்ப பெரிய அறிவாளியாக்கும்?'' அவனை மடக்கி சிரித்தவள், ''உங்க இனிஷியல் என்ன? என் ஃபார் நம்மாழ்வார். ஆர் ஃபார் ராகவன். சேர்த்து சொன்னால் என்.ஆர். என்னுடைய ராகவன். இப்ப புரிஞ்சதா என்.ஆர்?'' என்று சற்று எம்பி, அவன் தாடையில் இதழ் பதித்தாள்.

''புரிஞ்சது எம்.எம்! புரிஞ்சது! நானும் நீயும் ஒண்ணுன்னு புரிஞ்சது.'' மைதிலியின் உதட்டை தன் பெரு விரலால் மெல்ல வருடிக் கொண்டே பெருமையாகச் சொன்னவனிடம்,



''இப்ப தான் என் கூட சேர்ந்து சேர்ந்து நீங்களும் கொஞ்சம் அறிவாளியாகிட்டே வர்றீங்க. கீப் இட் அப்!'' கிளுக்கிச் சிரித்தாள் மைதிலி.

''ஹ்ம்ம்.... என்னத்தைச் சேர்றது? இப்படி பேசி பேசியே நாம வைகுண்ட ஏகாதேசி கொண்டாட வேண்டியது தான்.'' ராகவன் அலுத்துக் கொள்ள,

மைதிலி வெட்கத்துடன், ''என்னமோ நான்தான் பேசியே பொழுதைக் கழிக்கணும்ன்னு சொன்னது போல? பேசியே பேசியே பாதி ராத்திரியை நீங்க தீர்த்துட்டு என்ன அலுப்பு?'' என்று கணவனது காதில் ரகசியம் பேசி, ''இந்த அழகில் ரேகா அக்கா சொன்னதை வேற நான் நினைவு வைச்சுக்கணுமாம்.'' என்று கணவனின் மார்பில் தன் முகத்தைப் புதைத்தாள்.

தன் மனைவி வெட்கப்படும்படி அண்ணி என்ன சொல்லியிருப்பாள் என்று குறுகுறுக்க, ''பாட்டியம்மா அப்படி என்ன சொன்னாங்க?'' என்றான் ஆர்வமாக.

கணவனின் பிடரிக் கேசத்தில் கைகளை விட்டு அளைந்துக் கொண்டே, ''ம்ம்... அவங்க குட்டிப் பாப்பாக்கு விளையாட்டுத் துணைக்கு சீக்கிரம் நாமும் ஒன்றை ரிலீஸ் செய்யணுமாம். நீங்க பேசியே காலத்தைக் கடத்தறவங்கன்னு அவங்களுக்கு எங்கே தெரியப்போகுது?'' என்றாள் கண்ணில் பளீரிட்ட குறும்புடன்.

''ஹா ஹா.... அப்படியா சொன்னாங்க அண்ணி? ராஜீவும் எனக்கு அதே அட்வைஸ்தான் செய்தான். எனக்கு தானே தெரியும்.... எங்க வீட்டம்மா 'கொஞ்சம் வெயிட்டீஸ் ப்ளீஸ்' என்று சொல்லிச் சொல்லியே

கொஞ்ச விட மாட்டாங்கன்னு.'' என்று ராகவனும் பதிலுக்கு வார, அவனது மனைவிக்கு ரோஷம் பொங்கிக் கொண்டு வந்தது.

அதன்பிறகு வாய் பேச்சு அங்கில்லை. கணவன் மனைவி இருவரும் வெறும் வாய் சொல் வீரர்கள் மட்டு மில்லை என்று நிரூபிக்க, அங்கே ஒரு காதல் போரே நடந்துக் கொண்டிருந்தது. போரில், வெற்றி தோல்வி மாறி மாறி வந்தாலும் காதல் யுத்தத்தில் ஜெயித்த தென்னவோ இருவருமேதான்!

நினைக்கத் தெரிந்த அந்தக் காதலர் இருவருக்குமே மறக்க மனம் கூடவில்லை! கணவன் மனைவி கூடி களித்திருக்கையில், இனி எப்பொழுதுமே மறக்க மனம் கூடுதில்லையே தான்!